# காவேரி




8/அணா
விஜய - ஐப்பசி
October - 1953.

289
289/4.53.
2488
26 OCT 1953
199343




ACL-TNAC 034 TA



"ஆலயம் தொழுவது
சாலவும் நன்று"

ஔவையார் பார்ப்பது
யாவர்க்கும் நன்று

ஜெமினி
# ஔவையார்

நடுக்கும் குளிர் ஜுரம் மேலும் உடலில் வலி இவற்றுடன் ஆரம்பமாகும்

# மலேரியாவை

# 'பாலுட்ரின்'

# நீக்குகிறது



மலேரியாவின் சின்னங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

முதலில் குளிரால் நடுக்கும் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும்.
இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.

வயதுவந்தவர்களுக்கும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை

6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை

6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.

ICI

ICP 177



மேற்கு இந்தியக் கொத்து: மிகவும் கெட்டியானது. ஆயினும் வேலை செய்ய சுலபமானது. உறுதிவாய்ந்ததால் நீடித் துழைக்கக்கூடியது.



மைசூர் மண்வெட்டி: கூராகவெட்டும் முனைகள் நன்ருக வேலை செய்கின் றன. சீரான அமைப்புள் ளதால் வேலை செய்ய சுல பமானது.



டாங்க் மண்வெட்டி: ஆழமாக வெட்டுவதற்கு உகந்தது. நீடித்துழைக் கக் கூடியது.

# லாபகரமான பண்ணை வேலைகளுக்கு அக்ரிகோ கருவிகளை நம்பலாம்




இந்தியாவின் ஆயிரக்கணக்கான பண்ணை களில் அக்ரிகோ கருவிகள் அற்புதமாக வேலைசெய்து வருகின்றன. ஹை-கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டு நீடித்து உழைப்பதற்காக பரிசீலனை செய்யப்பட்டி ருப்பதால் அக்ரிகோ கருவிகளையே எல்லா விவசாயிகளும் விரும்புகிருர்கள்

## டாடா அக்ரிகோ கருவிகள்

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பனி லிட்.,
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்:
23-B நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா-1
கிளை ஆபீஸ்கள்:
பம்பாய், மதருஸ், நாக்பூர்,
அஹமதாபாத், ஸெகந்திராபாத்,
விஜயநகரம் கன்டோன்மென்ட்,
ஜலந்தர் கன்டோன்மென்ட், & கான்பூர்

AG. 3867




# வலி வேதனையா?

# "நோபெய்ன்"

அதை உடனே குணப்படுத்தும்

**ஓர் கல்கத்தா கெமிகல் தயாரிப்பு**

# பொருள் அடக்கம்

விஜய மலர் 13 | ஐப்பசி இதழ் 3


| | |
|---|---|
| எதிரொலி ... ... ... ... <br> கோமதி சுப்ரமண்யம் | 7 |
| பாபு மறுபடியும் சுடப்பட்டார் ... ... ... <br> ராமகுமார் | 11 |
| அழகுக்கன்னி ... ... ... ... <br> இளம்பாரதி | 19 |
| தந்தச் சிலை ... ... ... ... <br> ஸி. ஆர். ராஜம்மா | 24 |
| திரு உள்ளம் ... ... ... ... <br> எஸ்ஜி | 29 |
| கண்டதும், கேட்டதும் ... ... ... ... <br> கே. சுந்தராம்பாள் | 36 |
| டில்லித் தபால் ... ... ... ... <br> கே. ஸ்ரீநிவாஸன் | 46 |
| நீரோட்டம் (தொடர்கதை) ... ... ... ... <br> தி. சேஷாத்திரி | 49 |
| செலவில்லாச் சீதள விளக்கு ... ... ... <br> அ. ராம்கோபால் | 57 |
| நிலா அடுப்பு ... ... ... ... <br> என். சுப்ரமண்யம் | 62 |
| விஞ்ஞானத் துணுக்குகள் ... ... ... ... <br> நா. கி. நாகராசன் | 66 |
| கட்டிடத் தொழிலாளி ... ... ... ... <br> D. ராஜன் | 69 |
| வான வெளியினிலே ... ... ... ... <br> கிருஷ்ணன் பாலா | 74 |
| வனரோஜா ... ... ... ... <br> கி. சேஷாத்திரி | 83 |


குறிப்பு :

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

## சிறந்த அன்பளிப்பு

புத்தபிரானுக்கு உகந்த காணிக்கை எது என்ற பிரச்னை ஓர் நகர மக்களை வாட்டியது. புத்தரின் பிரதம சீடர் நகரை வலம் வந்தார். தங்கம், வெள்ளி, ஆடைகள், ஆபரணங்கள் இவைகளை மக்கள் சீடரிடம் அளித்தனர். அவை புத்தருக்கு ஏற்றவையல்லவென்று ஏற்க மறுத்துவிட்டார்.

நகரின் எல்லையைக் கடக்குங்கால் கந்தல் அணிந்த ஓர் இளம் மாது சாலை ஓரமுள்ள செடிகளில் மறைந்து நின்று, தன் கிழிந்த மேல் அங்கியை அகற்றி, பிக்ஷுவிடம் அளித்தார். புத்தருக்கு இதுதான் சிறந்த அன்பளிப்பு என்று கூறி அதை ஏற்றார் பிக்ஷு.

இச் சம்பவத்தைத்தான் நமது சைத்ரிகர் அட்டைப் படத்தில் தீட்டியுள்ளார்.

199343


# ஸ்டாண்டர்ட் வான்கார்ட்

**... நாளைய தேவைக்கேற்ற புதுமோஸ்தரில் அமைந்தது**

★ ஆறுபேர் சௌகரியமாக அமரலாம்
★ சொகுஸான ஓட்டம்
★ எளிதில் வேகம் அதிகரிக்கலாம்
★ பராமரிக்க சிக்கனமானது
★ சாமான் வைக்க தாராளமான இடம்



எமது ஷோரூம்களில் 1953 மாடலைப்
பரிசீலித்துப் பாருங்கள்
சென்னைத் தொழிற்சாலையில் விலை

**ரூ 13,950**

**தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிமிடெட்**
மதராஸ் - பெங்களூர் - உதகமண்டலம்

# காவேரி

விஜய ஹு
மலர் 13

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

ஐப்பசி
இதழ் 3


## எதிரொலி


கோமதி சுப்ரமணியம்


குழந்தை கண்ணனை வள்ளியிடம் கொடுத்து விட்டுச் சமையலறைக்குச் சென்றேன். அடுப்பை மூட்டிப் பாத்திரத்தில் தண்ணீரைக் கொட்டி, கொதிக்க விட்டிருந்தாள் வள்ளி. பில்டரில் பொடி அழுத்தித் தண்ணீரைக் கொட்டிவிட்டு, பாலை அடுப்பில் வைத்த பின் அவரை எழுப்புவதற்காக மாடிக்குக் கிளம்பிய போது அவரே வந்துகொண்டிருந்தார்.

'ஏது இன்று அத்தி பூத்தாற்போல் அதி காலையில் எழுந்து விட்டீர்கள் 'என்றேன். தின மும் நான் போய் எழுப்பாமல் இறங்கி வருவதே இல்லை.

'ஆபீசில் ஒரே வேலை. சீக்கிரம் கிளம்ப வேண்டும்' என்று கூறிக் கொண்டே பல் பிரஷ் சகிதம் விரைந்தார்.

வாடைக் காற்று லேசாக வீசிக் கொண்டிருந் தது. பல் தேய்க்கும் படலம் முடிந்ததும் அடுத்ததாகத் தண்ணீரை எடுத்துத் தலையில் கொட்டிக் கொள்வார். 'காலை நேரத்திலே குளிர்ந்த ஜலத்தில் குளிக்க வேண்டாம். இதோ வெந்நீர் காய்ச்சித் தருகிறேன்' என்று கூறி விட்டு வெந்நீர் அடுப்பண்டை சென்றேன்.

'அவசியமில்லையே. ஒரு வாளி தண்ணீர் நிரப்பி உன் விரலால் தொட்டால் போதுமே. கொதித்து விடாதா...' என்றார்.

'நானென்ன அத்தனை கொதிப்படைந்தவளா? என்பதற்குள், 'அப்படிச் சொல்லவில்லையே முன் காலத்துப் பத்தினித் தெய்வங்கள் 'மழை பெய் யென்றால் பெய்யுமாம் மழை. அதுபோல் உனக்கு என்மீதுள்ள பக்தியில் வெந்நீர் காய்ந்து விடும் என்று கூறினேன்,' என்றார் குறும்பாக.

'போதுமே...இப்போ சாப்பாடு தேவையோ இல்லையோ...' என்று கேட்டுப் பதிலுக்குக் காத்திருந்தேன்.

'அவ்விடத்து அருள் உண்டானால் உண்டு. இல் லையானால் மாமனார் வீடு இருக்கவே இருக்கிறது. (ஹோட்டலைத்தான் அப்படிக் குறிப்பிட்டார்)

'அதற்கென்றே காத்திருக்கும் போது ஓட்ட லுக்கு எதற்காகப் போக வேண்டும்' என்று கூறிவிட்டு டிபன் தயாரிக்கத் தொடங்கினேன்.

சாப்பாடு முடிந்து ஆபீஸ் போகும்போது 'பவானி இன்று மாலை சீக்கிரம் வந்துவிடுவேன். கடை வீதிக்குப் போக வேண்டும். தீபாவளி கொள்முதல் செய்ய வேண்டாமா?' என்றார்.

தீபாவளி என்றதும் என் நெஞ்சில் சாட்டை கொண்டு தாக்குவது போலிருந்தது. என் தடுமாற்றத்தைச் சமாளித்துக்கொண்டு, 'பணத் துக்கெங்கே போவதாம்' என்றேன்.

'இன்று போனஸ் வருமென்பதை மறந்து விட்டாயா? இந்த வருஷம் பயல் பிறந்திருக் கிறான். பண்டிகை ஜமாய்ச்சிப்பிட வேண்டும்.' என்று கூறிவிட்டு ஆபீஸிற்குப் போய்விட்டார்.

அவர் சென்றதும் வாசற்கதவைச் சாத்தித் தாழிட்டேன். என் மனக் கதவு தானாகவே திறந்துகொண்டது.

* * *

பண்டிகை கொண்டாடும் ஆசை இந்த ஜன்மத்தில் இல்லை யென்பதை எப் பொழுதோ தீர்மானித்துவிட்டேனே. குத்து விளக்குப்போல் பத்து வயதுப் பெண்ணை வாரிக் கொடுத்துவிட்ட எனக்குப் பண்டிகை கொண் டாட மனம் துணியுமா? அதுவும் தீபாவளி சந் தர்ப்பத்தில் நேர்ந்துவிட்ட பேரிடியை இப் பொழுது நினைத்தாலும் என் நெஞ்சம் குமுறு கிறது.

நினைக்கும்போதெல்லாம் நேற்றைய சம்பவம் என் நெஞ்சத்தைத் தீய்க்கிறது.

உலகத்தின் சுகபோகங்களை அனுபவிக்கப் பிறந்த பணக்காரர்களைப் போல் வாழ முடியா விட்டாலும், அன்றாடக் கஞ்சிக்காவது திண்டா டாத நிலையில் வயிறார உண்ண உணவிற்கும் உடுக்க உடைக்கும் ஓரளவு சம்பாதித்து வந்தார் அவர். நாலைந்து என்று குழந்தைகளின் எண் ணிக்கை அதிகமில்லாததால் கஷ்டமில்லாத வாழ்க்கை வாழ ஓரளவு உதவியாக இருந்தது.

பெண்ணுக்குப் பெண்ணாகவும் ஆணுக்கு ஆணாகவும் ரமா ஒருத்தியே எங்கள் ஆசையைத் தீர்த்து வந்தாள். எங்களிருவரின் அன்பு ஆர்வம் எல்லாவற்றையும் அனுபவிக்கப் பிறந்த அவள் மீது எங்கள் உயிரையே அர்ப்பணித்திருந்தோம் என்று சொன்னாலும் பொருந்தும். 'குழந்தை கேட்டது இல்லை என்று சொன்னோம்' என்ற பேச்சுக்கு இடமில்லாதபடி எதோ அவள் கேட் பதை ஓரளவு வாங்கிக் கொடுப்பதில் அவளுக்குப் பரம திருப்தி.

வருஷா வருஷம் பண்டிகையின்போது அவள் விரும்பிக் கேட்கும் துணிமணியை எடுத்துக் கொடுத்துவிடுவது. அந்த வருஷம் தீபாவளிக்கு ஒருமாத முன்பாகவே பிளான்போட ஆரம்பித்து விட்டாள் ரமா.

நவராத்திரி கொலுவிற்கு அழைக்கச் சிநேகிதர் பெண் வந்தாள் எங்கள் வீட்டிற்கு. அவள் தினமும் அழைக்க வருவது வழக்கம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேஷத்தில் அழைக்க வருவாள். ஒரு நாள் கோபிகள் சூழும் கிருஷ்ணனாக வருவாள். மறுநாள் கிருஷ்ணனைச் சூழும் ராதையாக மாறுவாள். பின்னும் ஓர் தினம் பைஜாமா சட்டைக்குள் புகுந்துகொண்டு வருவாள். இப்படியாக ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு வகை அலங்காரம்.

அன்று சாதாரண தமிழ்ப் பெண்ணின் உடையில் வந்தாள். தாமரை மொட்டு வர்ணக் கலரில் கெட்டிக்கரை போட்ட பட்டுப் பாவாடையும் சட்டையுமாகக் காட்சியளித்தாள். தாமரை மொட்டுக் கலரில் கறுப்பு வர்ணப் பார்டர்களுக்கு இசைவாகப் பார்டரில் மயில் தோகை விரித்தாடுவது போன்று ஜரிகை வேலைப்பாடு அமைந்திருந்தது. கலரும் பார்டரும் இசைந்து கெட்டியாகக் கண்ணுக்கு ரம்மியமாகக் காட்சியளித்தது அந்த டிரஸ். அழைக்க வந்தது முதலே அந்தப் பெண்ணின் மீது கண்ணாக இருந்த ரமா அவள் அப்பால் நகர்ந்ததும் என்னிடம் முறையிட்டுக்கொண்டாள்.

'அம்மா, எனக்குத் தீபாவளிக்கு இதுமாதிரி பாவாடைதான் வேண்டும்.'

இதுவரை இல்லாத பழக்கமாக இந்தத்தடவை சக்திக்கு மீறிக் கேட்டுவிட்டாள். பாவாடையின் விலை குறைந்தது ஐம்பது அறுபது இருக்கும். கிடைக்கும் போனஸ் பணமே மொத்தம் எண்பதுக்குள் வரும். அதில் அவள் பங்கு அறுபதானால் அவர், நான், வேலைக்கார வள்ளி, அவள் குழந்தை செல்வி இத்தனை பேருக்கும் துணிமணி எங்கிருந்து எடுப்பது. பலகார பட்சண மற்ற வகைச் செலவுகளுக்குப் பணத்திற்கெங்கே போவது... எனக்கு வெண்டுமானால் குறைத்துக்கொள்ளலாம். மற்ற எந்தச் செலவைக் குறைப்பது... எப்படிச் சமாளிப்பது என்று சிந்தித்தேன்.

மாலையில் அவர் வந்ததும் விஷயத்தைச் சொன்னேன். வேண்டுதல் சற்றுப் பாரமானதுதான். அதற்காகக் குழந்தையின் மனதை முறிக்க முடியுமா? வாங்கிக் கொடுக்க வேண்டியதுதான் என்றார்.

'எப்படி' என்ற கேள்வியை என்னுள் அடக்கிக் கொண்டேன். பின்னும் ஒருவாரத்தில் எப்படியோ வாங்கியும் வந்து விட்டார். குழந்தை விரும்பிக்கேட்ட அதே கலர், அதே பார்டர். கண்ணைக் கவர்ந்த அந்த உடையைக் கண்டதும் ரமா குதியாகக் குதித்தாள். நினைத்தது கிடைத்துவிட்ட பெருமையில் அவளது பிஞ்சு உள்ளம் பொங்கிப் பூரித்தது.

பதினைந்து ரூபாயில் எனக்கு ஒரு புடவை. வள்ளிக்குப் பத்து ரூபாய்... அவள் குழந்தைக்கு ஐந்து ரூபாய்க்குள் பாவாடை சட்டை எல்லாம் முடிந்தது. என் குழந்தைக்கு ஐம்பது ரூபாயிலும் தன் குழந்தைக்கு ஐந்து ரூபாயிலும் எடுத்திருந்த வேற்றுமையை நினைத்து வள்ளியின் மனம் என்ன பாடு பட்டதோ அதைப் பற்றி நான் நினைத்தால் தானே? என் மனமெல்லாம் என் குழந்தையின் சந்தோஷத்தில் மட்டுமே லயித்துப்போயிருந்ததால் மற்ற எதையும் நினைக்கவோ சிந்திக்கவோ நேரமிருந்தால்தானே.

பண்டிகைக்கு ஒரு வாரமிருந்தது. நானும் வள்ளியுமாகப் பலகாரங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தோம். செய்ததை முழுவதும் செய்து முடிக்கவில்லை. காலன் அவளுக்கு நாலு நாள் சுரத்தில் வந்து ரமாவை என்னிடமிருந்து பிரித்துப் போய் விட்டான். இல்லை,- என் உயிரைப் பறித்துப் போய் விட்டான்.

அழுதேன்-விழுந்தேன்–அலறினேன். போனவள் போனவள்தான். குழந்தை வேண்டுமென்று விரும்பி ஆசைப்பட்டுத் தைத்த பாவாடை சீந்துவாரின்றி மூலையில் சுருண்டு கிடந்தது. அவளது ஆசையைக் கவர்ந்த பாவாடை அவிந்து கிடந்தது போலவே அவளிடம் ஆசை வைத்திருந்த நானும் குன்றிக் குனிந்தேன். அது முதல் பண்டிகை என்றாலே குலை நடுக்கம்.

அதையும் தூக்கி அடிப்பதாயிருந்தது அதைத் தொடர்ந்து நடந்த பல்வேறு சம்பவங்கள்.

என் குழந்தை ரமாவின் பிரிவினால் நான் அடைந்த துயரைவிட வள்ளியின் குழந்தை செல்வி அடைந்த ஏமாற்றமே மிகப்பெரிதாயிருந்தது. ஒரே வயதையுடைய அக்குழந்தைகளிருவரும் அந்தஸ்தால் வேறு பட்டிருந்தனரே தவிர, மனதால் ஒன்று பட்டும் போயினர். வீட்டிலும் வெளியிலும் ஒன்றாகவே திரியும் அவ்விருவருக்கும் உடை வித்தியாசமட்டும் இல்லையானால் ஒரு வீட்டுக் குழந்தையென்றே பார்ப்பவர்கள் கருதுவார்கள். அவர்கள் அப்படித் திரிவது அந்தஸ்திற்குப் பங்கம் என்பதை என் உள் மனம் கருதினாலும் வாய் விட்டுச் சொல்லமுடியாத நிலையில் மனம் புழுங்குவேன். நான் பலமுறை தடுத்தும் கேட்காத ரமா என் மறுப்பினால் மனம் புழுங்குவதைக் கண்டேன். குழந்தையின் மனதைச் சிதற அடிக்கக்கூடாதென்ற நோக்கந்தான் என் கட்டுப்பாட்டைச் சற்றுத் தளர்த்திக் கொண்டேன்.

தன் ஜோடியைப் பிரிந்ததில் ஒரேயடியாய் அதிர்ந்துவிட்ட செல்வியைக் கண்டபோது ஏனோ என் மனம் என்னையறியாமல் அவள்பால் இளகியது. கள்ளம் கபடமற்ற அக்குழந்தையின் அன்பைக்கண்டு வியந்த என் உள்ளம் அவள் பால் சென்றதில் வியப்பில்லை. ரமா விடுத்துச்சென்ற இடத்தை ஓரளவு பூர்த்தி செய்தாள் செல்வி.

அன்பு என்பது உள்ளூர வட்டமிட்டதே தவிர, வெளிப்படையாகக் கொப்பளித்ததை அன்பென்பதா? இல்லை ஆவலென்பதா—இல்லை அசூயை என்றேதான் சொல்வதா என்று புரியமுடியாத நிலையில் வெளிப்புறப்படும். ஓரொரு சமயம் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்து விடுவேன். அந்தக் குழந்தையின் உருவில் என் ரமாவின் அம்சத்தைக் காண்கிறேன் என்பதைப் பார்ப்பவர்கள் எப்படி உணரமுடியும்.

தன் குழந்தை போய்விட்ட அசூயையில் உன் குழந்தையை வெறிக்க வெறிக்கப் பார்க்கிறாளேடி என்று என் வள்ளியிடம் யாரோ மூட்டிக்கொடுத்திருக்கின்றனர். உள்ளடங்கிப் போரிட்ட என் அன்பினால் நேரிடும் செய்கை வள்ளியின் கண்களுக்குப் பிறர் கூறும் காரணம் சரியென நினைக்கத் தூண்டியது. அதன் பலன் தன் குழந்தையை என் கண்ணில் படாதவாறு கூடியவரை மறைக்க முயன்றாள்.

எனது அன்பை இரு குழந்தைகளிடம் அடைக்கலம் கொடுத்திருந்தேன். அவற்றுள் ஒன்றை ஆண்டவன் பிடுங்கிகொண்டான். மற்றொன்றை மனிதர்கள் மறைத்துவிட்டார்கள். எதிர்பாரார்த ஏமாற்றத்தின் விளைவால் அடிக்கடி என் நினைவிழந்து மயங்கும் நிலை அடைந்தேன்.

அப்படித்தான் அன்றும் எதையெதையோ நினைத்து மயங்கும் நிலையில் கிடந்தேன். வள்ளி முற்றத்தை அலம்பி விட்டுக் கொண்டு இருந்தாள். 'அம்மா' என்ற செல்வியின் குரலைக் கேட்டு வள்ளி திரும்பிப்பார்க்குமுன் நான் எழுந்து பார்த்தேன். வெகு நாட்களுக்குக் கண்ணில் படாமலிருந்து அன்று கண்டதும் என் ஆவல் அடங்க அவளை நோக்கி நின்றேன். நான் நின்றதை யாரும் அறியாவண்ணம் சற்று மறைவாகவே நின்றேன். 'அம்மா' என்று மீண்டும் தயங்கிய குரலைக் கேட்டு ஏறிட்டுப் பார்த்த வள்ளி அவளை எரித்து விடுவது போன்று நோக்கினாள். இந்தப் படுபாவி வீட்டிற்கு ஏன் வந்தாய் என்று கேட்பது போலிருந்தது அவளது பார்வை.

'பள்ளிக்கூடத்திற்குப் போனவள் ஏனிங்கே வந்தாய்.' என்று கடுமையாகக் கேள்வி எழுந்தது.

'அம்மா இன்று எங்கள் பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டரம்மா வாராங்க. நல்ல பாவாடை கட்டியாரச் சொன்னாங்க' தயங்கித் தயங்கி வெளி வந்தன வார்த்தைகள்.

'நல்ல பாவாடை.. நீ கெட்ட கேட்டுக்கு நல்ல பாவாடை வேறு வேண்டுமா? இதுக்கென்ன கொள்ளையாம், வேறு பாவாடை ஒண்ணுமில்லே போ...போ...' என்று வெருட்டினாள். எங்கே என் கண்களில் குழந்தை பட்டு விடப் போகிறதோ என்னவோ என்கிற பயம் போலும்.

'அடிப்பாங்கம்மா. வேறு புதுசாக் கட்டியாரச் சொன்னாங்கம்மா.'

'பிடிவாதம் பிடிச்சுக் கிட்டு நின்னியோ விறகுக் கட்டையாலே போட்டுடுவேன். மரியாதையாக இங்கிருந்து போய்விடு' என்று அருகே கிடந்த விறகுக் கட்டையைக் கையிலெடுத்து ஓங்கினாள்.

வள்ளி விறகுக் கட்டையை ஓங்கவும் குழந்தை பயத்தினால் ஓடத் தொடங்கியது. இந்தக் காட்சியைக் கண்ட என் மனம் பதறியது. 'செல்வி, ஓடாதே நில்...வள்ளி குழந்தையை வெருட்டாதே...' என்று கூவியபடியே அறையை விட்டு எழுந்து வெளியே வந்தேன்.

என்னால் ஏதாவது உதவி கிடைக்காதா என்று நினைத்த குழந்தை மீண்டும் திரும்பி வந்தது. என் முன்னிலையில் எதுவும் சொல்ல முடியாத வள்ளி மரக்கட்டையாகி நின்றாள்.

விடுவிடுவென்று உள்ளே போனவள் கண்ணாடி பீரோவில் கேட்பாரற்றுக் கிடந்த பட்டுப் பாவாடையை எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன். என் அன்புத் தெய்வத்திற்குக் காணிக்கையாகத் தைத்த பாவாடையை ரமாவின் அம்சமாகக் கருதும் செல்விக்கு அர்ப்பணம் செய்தேன். அதிலே ஓரளவு மன அமைதியைக் கண்டேன். அந்த அமைதியெல்லாம் சிறிது நேரத்திற்குத்தான்.

சற்றே தோன்றியிருந்த அமைதியைக் குலைப்பதெனவே கங்கணம் கட்டியிருந்தாளோ என்னவோ பக்கத்து வீட்டிலுள்ளவள்.

வேலையை முடித்த வள்ளி வீட்டிற்குப் போகக் கிளம்பினாள். பாதி வழி சென்றவளை இடைமறித்துத் தன் வீட்டிற்கழைத்தாள் அம்புஜம். அவள் அழைத்தபோதே என் மனம் சுறுக்கென்றது. என் யூகம் சரியென நிலைநாட்டினாள் அடுத்த வீட்டுப் பெண்.

'ஏண்டி வள்ளி, உங்கம்மாவுக்கென்ன திடீரென்று கருணை பிறந்து விட்டது உன் மேலே' என்று குத்தலாகத் தொடங்கினாள்.

'என்னிக்குமே அவுங்க மனசு தங்கந்தான்...'

'ஆமா, உன்னைப் போல வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கும் உனக்கு அவ தங்கம் தான். பாவம் வெகுளி..அவ உண்மை மனசு தெரியாம.'

'ஏம்மா...இத்தனை விலை உசந்த பாவாடையை மனசு கோணாம தூக்கிக் கொடுக்கணுமின்னா எத்தனை பெருந்தன்மை இருக்கணும்...'

'நீயே சொல்லு; விலையுயர்ந்த பொருளை அலட்சியமா கொடுக்கணுமின்னா அதுக்குக் காரணம் இல்லாம இருக்குமா?

'நீங்க சொல்லறது புரியலேயம்மா...'

'அடி பயித்தியமே...உன் குழந்தையும் அவ குழந்தையும் ஒன்றாகத் திரிந்தது. அந்தப் பாவாடை தைத்த வேளை அவள் குழந்தை போய் விட்டது. அதே பாவாடையை உன் குழந்தைக்கு எதற்காகக் கொடுக்கவேண்டும் ... இதிலிருந்தே புரியலையா அவ மனசு...'

'அம்மா.........'

'உன் பொண்ணு வந்ததும் அந்த பாவாடையைச் சுருட்டி அவ மூஞ்சிலேயே வீசியெறி...'

அதற்குமேல் நான் அங்கு நிற்கவில்லை. அட ஈசுவரா. அன்பிற்கு என்றுமே......எங்குமே களங்கமா?'

மாலையில் பாவாடை சகிதம் வந்து சேர்ந்தாள் வள்ளி. நல்லவேளை அடுத்த வீட்டுக்காரி கூறியது போல என் மூஞ்சியில் வீசியெறியவில்லை. என் அருகில் வந்து பாவாடையைக் கீழே வைத்தாள்.

'குழந்தைக்காகக் கொடுத்ததை ஏன் கொண்டு வந்தாய் வள்ளி. வீணைப் பெட்டியில் தூங்குவதை உன் குழந்தையாவது கட்டி அனுபவிக்கட்டுமே' என்றேன். 'அதெற்கல்லாம் நமக்கு அந்தஸ்து ஏதம்மா' என்று கூறி எடுத்துப் போக மறுத்து விட்டாள்.

மறுதினம் வள்ளி வேலைக்கு வரவில்லை. ஏன் வரவில்லை என்று கேட்க, அவர் சென்றபோது முகத்திலறைந்தாற் போல் பதில் கொடுத்தனுப்பினள்.

'தன் குழந்தை இறந்தது மல்லாமல் என் குழந்தையையும் சாக அடிக்கும் எண்ணம் கொண்ட அந்த மனுஷியிடம் எனக்கென்ன வேலை' என்று கூறி அனுப்பிவிட்டாளாம்.

அது முதல் யாரையுமே வேலைக்கு வைத்துக் கொள்ள என் மனம் துணியவில்லை. என்னருமை ரமாவைப் பார்த்துக் கொள்வதற்காகவே ஆள் போட்டிருந்தேன். அவளும் போய் விட்டாள். அவளுக்காகக் கொண்டுவந்த வேலைக்காரியும் போய்விட்டாள். வாழ்வே சூனியமாக ஓடியது.

ஒருநாள் கடை வீதிக்குச் சென்றிருந்த அவர் துயர் தரும் சேதி ஒன்றைக் கொண்டு வந்தார். செல்விக்குப் பத்து நாட்களாக உடம்பு சுரமாம். படுத்த படுக்கையிலிருக்கிறாளாம். வியாதிக்கார குழந்தைக்குப் பால் ரொட்டி வாங்கிக் கொடுக்கக் கூட காசில்லாமல் தவிக்கிறாளாம். வேறு எங்கும் வேலையும் கிடைக்கவில்லையென்பதையும் அறிந்து வந்து சொன்னார். இந்தச் சமயத்தில் எப்படியாவது உதவி செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தில் அடுத்த வீட்டு வேலைக்காரி மூலம் பத்து ரூபாய் பணம் கொடுத்து அனுப்பினேன். ஏதோ நம்மாலியன்ற உதவி செய்து விட்டோம் என்று ஓரளவு திருப்தியில் திளைத்துப் போயிருந்த சமயம் பணத்தோடு திரும்பி வந்தாள் நான் பணம் கொடுத்தனுப்பியவள்.

'என்ன சொன்னாள்...... ஏன் பணத்தைக் கொண்டு வந்து விட்டாய்......குழந்தை எப்படியிருக்கிறது' என்று பதறிப்போய்க் கேட்டேன்.

'அம்மா, நீங்க இந்தப் புத்தி படைக்க வேண்டாம். அவளுக்கிருக்கிற ராங்கி யாருக்கு வரும்? என்ன அலட்சியம்... என்ன மமதை... குழந்தை கண்ணை முழிக்காம கிடக்கு...ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லக்கூடக் கையில் காசில்லை. அப்படியிருந்தும் அகம்பாவத்தில் குறைச்சலில்லை. அந்தக் கொடும்பாவியின் பணம் எனக்கு வேண்டாம். அவளிடமே வீசியெறி. அவள் கண் பட்டுப் பட்டுத்தான் என் குழந்தை எமனுடன் போராடுகிறது' என்று என்னை வெருட்டி அடித்துவிட்டாளம்மா' என்று கூறினள்.

அவள் என்ன சொன்னாலும் என் மனம் பொறுக்கவில்லை. அவர் வந்ததும் விஷயத்தைச் சொல்லி எப்படியாவது குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

'உனக்குச் சரியான பயித்தியம்' என்றார்.

'எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். அந்தக் குழந்தையிடம் என் ரமாவின் அம்சம் காணுகிறேன். இழந்துபோன என் ரமாவின் நினைவை ஓரளவு மறந்திருக்க என் மன அமைதிக்காக நீங்கள் அந்தக் குழந்தையைக் காப்பாற்றித்தாருக வேண்டும்' என்றேன். என் வேண்டுகோள் அவர் மனதைக் கரைத்திருக்கவேண்டும்.' அக்கணமே வள்ளியின் வீட்டிற்குச் சென்று யார் என்ன தடுத்தும் பொருட்படுத்தாமல் குழந்தையை எடுத்துச் சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு வந்தார். பணத்திற்குப் பொறுப்பான ஆள் இருந்தபோது ஆஸ்பத்திரியில் கவனித்துப் பார்க்கக் கேட்பானேன். அவர்களுடைய முயற்சியும் எனது பிரார்த்தனையும் வீண் போகாமல் செல்வி பிழைத்து மறுபிறவி எடுத்துவிட்டாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையானதும் வீட்டிற்குச் செல்லாமல் வள்ளி நேராக என்னிடம் வந்து குழந்தையை என் பாதங்களில் அர்ப்பணித்து வணங்கினள். 'அம்மா, உங்க தங்கமான குணத்தை உணர்ந்து கொள்ளாம கேட்பார் பேச்சைக்கேட்டு மதி கெட்டுத் திரிந்த என்னை 'மன்னித்தேன்' என்று ஒருமுறை சொல்லுங்க அம்மா. இந்த அறிவிலியைப் பொருட்படுத்தாமெ என் குழந்தைக்கு உயிர் கொடுத்த நீங்களிருவரும் என் தெய்வம் அம்மா. பால் போன்ற மனதை நோகச் செய்த இந்தப் பாவியைக் கைவிட்டு விடாதீர்கள் அம்மா. என் மீது இரக்கம் காட்டி என்னை, மீண்டும் உங்கள் வள்ளியாக ஏற்றுக் கொள்ளவேண்டும் அம்மா.' என்று கதறினள்.

'வள்ளி நீ என்றும் என் வள்ளிதான். இனி நீயும் செல்வியும் என் வீட்டோடு இருந்து விடுங்கள். அதுவே என் மனதிற்கு ஆறுதல் என்று என் ஆசையை வெளியிட்டேன். அது முதல் அவர்களிருவரும் என்னுடனே வாசம்.

* * *

'அம்மா கண்ணனைத் தொட்டிலிலிட்டு விட்டேன். அவன் தூங்கும்போது நீங்கள் ஆகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாதா?' என்று தட்டி எழுப்பவே சாப்பாட்டிற்குச்சென்றேன்.

மாலையில் அவர் வந்து கடை வீதிக்கு அழைத்தபோது எவ்வித மறுப்பும் கூறாமல் புறப்பட்டுச் சென்றது அவருக்கே வியப்பாகத் தானிருக்கவேண்டும். கண்ணனுக்கும் அவருக்கும் வேண்டிய துணிமணிகள் எடுத்து முடிந்ததும் எனக்கும் வள்ளிக்கும் புடவை எடுத்துக் கொண்டேன். விலையுயர்ந்த பட்டுத் துணிகள் வைத்திருந்த பக்கம் என் பார்வையைச் செலுத்தியபோது வியப்புடன் நோக்கினர் என்னை. பண்டிகையையே கொண்டாட விரும்பாத நான் பட்டுத் துணியின் மீது பார்வை செலுத்தியதும் அவருக்கு ஓரளவு மகிழ்ச்சியைக் கொடுத்ததென்றே சொல்லலாம். புடவைகள் இருந்த அடுக்கை நோக்காமல் பாவாடைத் துண்டை எடுத்து விலை பேசியபோது கேள்விக் குறியை வீசினர் பார்வையில். 'முன்பு செல்விக்குக் கொடுத்த பாவாடைக்கு ஜோடியாக இது' என்று நான் கூறியபோது அவர் எதுவுமே மறுத்துக் கூறவில்லை.

செல்வியிடம் ரமாவின் அம்சம் காணுகிறேன் என்கிற என் மனப்போக்கைப் புரிந்து கொண்ட அவர் ஏன் மறுத்துக்கூறப்போகிறார்? ●

# பாபு மறுபடியும் சுடப்பட்டார்

***ராமகுமார்***

**ம**ணி ஐந்தரை அடித்து விட்டது. நான் மாலைச் செய்தித் தாளைப் படித்து முடித்து விட்டு அறைக் கதவைத் திறப்பதற்காக எழுந்திருந்தேன். அதற்குள்ளாக யாரோ கதவைத் தட்டினார்கள். நான் கதவைத் திறக்கலாம் என்று சிறிது வேகமாக முன்னேறினேன். அதற்குள்ளாக ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அதைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு ஓர் எல்லையில்லை. தாழ்ப்பாளை நான் திறப்பதற்கு முன்னால் கதவு தானாகத் திறந்துகொண்டுவிட்டது. அடுத்த கணம் என்னெதிரே ஒருவர் வந்து நின்றார். அவர் வயதான கிழவர். மெலிந்த தேகம் படைத்தவர். ஒற்றைச் சுற்று வேஷ்டியை மூலைக் கச்சமாகக் கட்டிக்கொண்டிருந்தார். அவருடைய மார்பில் குண்டு பட்ட வடுக்கள் மூன்று இருந்தன. அதிலிருந்து ரத்தம் இலேசாகக் கசிந்துகொண்டிருந்தது. அவர் வேகமாக எட்டுக்கள் எடுத்து வைத்து வந்து, என் அருகே உட்கார்ந்துவிட்டார். நான் அதிசயத்தில் அகல விரிந்த கண்களுடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அதைக்கண்ட அவர் முகத்தில் முறுவலை வரவழைத்துக் கொண்டு. "என்னை அடையாளம் தெரியவில்லையா? என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று கேட்டார்.

"தெரியாமல் என்ன?—நான் வந்து கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தேன்!"

"என்ன கணக்கு?"

"சென்ற மூன்று ஆண்டுகளில் தொழிலாளிகளின் மார்பில் எத்தனை துப்பாக்கி ரவைகள் பாய்ந்தன என்பதைப்பற்றித்தான்!" என்றேன்.

கிழவர் சிரித்தார். "என் மார்பில் பாய்ச்சப் பட்ட மூன்று ரவைகளையும் நீ மறந்துவிடவில்லையல்லவா? அவற்றையும் உன் கணக்கில் சேர்த்துக்கொள்!" என்றார்.

"உங்கள் மார்பில் பாய்ச்சப்பட்ட ரவைகளா? அவற்றை இந்தக் கணக்கில் சேர்த்துக் கொள்ளமுடியாது. ஆனால்......ஆனால்...நீங்கள் சொல்வதும் சரிதான். உங்கள் மார்பில் பாய்ந்த ரவைகளையும் சேர்த்துக்கொள்ளாவிட்டால், என் இந்தக் கணக்குப் பூர்த்தியானதாக ஆகாதுதான். அதனால் அவற்றையும் சேர்த்துக்கொண்டுவிட வேண்டியதுதான்!" என்றேன்.

அவர் முன் மாதிரியே சிரித்தவாறு. "பேஷ் நீ கெட்டிக்காரன்தான்! . புரிந்து கொண்டு விட்டாயே! சரி, கொஞ்சம் சீக்கிரம் எழுந்து என்னுடன் வா. நான் நம் நாட்டைப் பார்க்க விரும்புகிறேன்!' என்றார்.

'தாங்கள்தான் எல்லாத்துயரங்களிலிருந்தும் விடுபட்டுவிட்டீர்களே! இனி ஒரு பொழுதுமே தான் துயரம் உங்களை அண்டாதே! அப்படியிருக்கும் உங்களுக்கும் எங்கள் துயரத்துக்கும் என்ன சம்பந்தம்? எதற்காகப் பார்க்க விரும்புகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"உண்மையில் நான் நிம்மதியாகப் படுத்துக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் திடீரென்று கீழேயுள்ள இந்த உலகத்திலிருந்து ஏகக் கூச்சல் கேட்டது. என்னால் அதற்குமேல் பேசாமல் சும்மா படுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. என்ன நடக்கிறது? எதற்காக ஜனங்கள் என் பெயரை இழுக்கிறார்கள்? பார்ப்போமே! என்று எண்ணித்தான் வந்தேன்;" என்றார் கிழவர்.

"உங்களுக்குக் கிடைத்த செய்தி தவறானது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் சொர்க்கத்தில் உள்ள செய்தி அறிவிப்பு இலாகா சரிவர வேலை செய்யவில்லை என்று தோன்றுகிறது. இப்பொழுது இங்கே யாருக்கும் தங்கள் நினைவு வருவதில்லை. முன்பெல்லாம் மக்கள் வெள்ளித் திரையில் தங்கள் படத்தையாவது பார்த்துக் கை தட்டி ஆர்ப்பரித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் மந்திரிகளின் படங்களைப் பார்த்துப் பார்த்து, தங்களைக் காண வேண்டும் என்ற அவர்களுடைய ஆசையும் ஆர்வமும் அடங்கிவிட்டன," என்றேன்.

"அதெல்லாம் இல்லை. என் நாட்டு மக்களின் பெருமூச்சு புகைப்படலமாக எழும்புவதை நான் என் இந்தக் கண்களாலேயே கண்டேன்." என்றார் அவர். "ஸ்வாமி, அப்படியல்ல விஷயம். அந்தப் புகைப்படலம் பெரிய பெரிய மில்களின் புகைக் கூண்டுகளிலிருந்து எழும்பும் புகையாக்கும்! மில் முதலாளிகள் அந்தப் புகைப்படலங்களின் உதவியைக் கொண்டுதான் தங்கள் இரும்புப் பெட்டிகளை நிரப்பி வருகிறார்கள். வைப்பது கன்னம் இடிப்பது பிள்ளையார்கோவில் என்னும் கதையாக அவர்கள் உங்கள் பெயரை உச்சரிக்கிறார்கள். அடுத்த கணமே தொழிலாளிகளின் கழுத்தையும் திருகிவிடுகிறார்கள். கசாப்புக்கடைக்காரர்கள் கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஆடுகளைவெட்டுவதில்லையா? அதைப் போலத்தான் இருக்கிறது. அவர்களுடைய காரியங்கள்!" என்றேன்.

அவர் இலேசாகச் சிரித்தார். 'இப்படி தொட்டில் பழக்கமல்லவா? அது உன்னை விட்டு இன்னும் போகவில்லை போலும்! விதண்டையாகப் பேசுவது உன் பழைய வழக்கம். 'சுயராஜ்யம் கிடைத்த ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்' என்று ஒரு கட்டுரை எழுதியிருந்தாயே, அதை நான் வார்தாவில் படித்தேன். அதைப் படித்தபின் உன்மேல் எனக்கு எத்தனை கோபம் வந்தது, தெரியுமா!" என்று கேட்டார்.

"அந்தக் கட்டுரையை நான் 1940-ல் அல்லவா எழுதினேன்? அப்பொழுது சுயராஜ்யத்தின் நிழல் கூட நம் நாட்டில் தட்டுப்படவில்லையே! ஆனால் இப்பொழுது சுயராஜ்யம் கிடைத்து ஆறு ஆண்டுகள்தானே பூர்த்தி ஆகியிருக்கின்றன. அதனால் என்னுடைய கட்டுரையில் சொன்ன விஷயங்கள் நடப்பதற்கு இன்னும் வேண்டிய காலம்......... சரி, அது போகட்டும். நான் என்னையே புகழ்ந்துகொண்டால் நன்றாயிருக்குமா?" என்றேன் நான்.

அவர் சிரித்துவிட்டு, "அது அப்புறம் ஆகட்டும். நீ சீக்கிரம் என்னுடன் வருகிறாயா, இல்லையா? நான் என் நாட்டின் நிலையைக்காண வேண்டும். எனக்குத் துணையாக நீ வரவேண்டும், உம், எழுந்திரு!" என்றார்.

"எப்படிப் போகிறது? பஸ்ஸில் போகலாம் என்றால் கூட்டம் ஏகமாகக் 'க்யூ'வில் நிற்குமே!" என்றேன்.

அதைக் கேட்ட அவர் "நான் வாழ்ந்த காலத்தில் மக்கள் என்னைப் பார்க்கக் கியூவில் நின்றார்கள். உன் பேச்சைக் கேட்டால் இப்பொழுது நான் அவர்களைப் பார்க்கத் தவம்கிடக்க வேண்டும்போலத் தோன்றுகிறதே! சரி, அதற்கு என்ன செய்வது? காலத்தின் கோலம் அப்படி! நின்றுவிட்டால் போகிறது!" என்றார்.

* * *

வீட்டிலிருந்து நாங்கள் புறப்பட்டுப் பஸ் நிற்கும் இடத்தை அடைந்தோம். பஸ்ஸை எதிர்பார்த்து நின்ற மக்கள் வரிசையில் நாங்களும் போய் நின்றோம். எங்களுக்கு முன்னால் ஒரு சிந்து மாகாணத்துப் பெண்மணி நின்றுகொண்டிருந்தாள். அவள் கையில் மண்ணெண்ணெய் தகரம் ஒன்றிருந்தது. அவளுடைய முகம் சிடு சிடு என்றிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் ஏதோ முணுமுணுத்தாள். நான் காதுகொடுத்துக் கேட்டேன்.

"பஸ்ஸில் மண்ணெண்ணெய் தகரத்தை எடுத்துக்கொண்டு போகக்கூடாதாமே! ரேஷன் கடை வரை இதை நான் வேறு எப்படிக் கொண்டு போக முடியும்? ரேஷன் கடை இங்கிருந்து இரண்டுமைல் தூரத்திலிருக்கிறது. நாங்கள் இருக்கும் முகாமிலோ மின்சார வசதி கிடையாது! மண்ணெண்ணெய் வாங்குவதற்கோ இத்தனை கஷ்டம்!

"நல்ல ராமராஜ்யம் கிடைத்தது நமக்கு! நாங்கள் சிந்து—கராச்சியில் இருந்த போது என்ன இதுமாதிரி கஷ்டப்பட்டுக் கொண்டா இருந்தோம்?

"அங்கிருந்த வீட்டை விட்டோம், வாசலை விட்டோம். கடையை விட்டோம், கண்ணியை விட்டோம். இங்கே இந்த அகதிகள் முகாமில் வந்து அடைந்து வேலையற்றுச் சோம்பிக் கிடக்கிறோம். இம்மாதிரி சுய ராஜ்யம் வேண்டும் என்று இங்கே யார் அழுதார்கள்? அகதிகளுக்குக் கொடுக்கும் ரேஷனைக்கூட நிறுத்திவிடப் போகிறார்களாம். இப்பொழுதே இப்படி இருக்கிறது! அப்புறம் என்ன ஆகுமோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்! என்ன வேலை. மரம் நாட்டு விழாவாம். எங்கே பார்த்தாலும் மரம் நடுகிறார்களாம். வேலையற்ற வேலை! ரேஷனை நிறுத்தப் போகிறார்களாம். பஸ்ஸில் எண்ணெய் தகரம் எடுத்துக்கொண்டு போகக் கூடாதாம். இங்கே இந்தமாதிரி சுய ராஜ்யம் வேண்டும் என்று யார் அழுதார்கள்?" இவ்வாறு தன்பாட்டுக்கு அவள் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள்.

என்னைப்போலவே இதையெல்லாம் ஒரு மகாராஷ்டிர குமாஸ்தாவும் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் "ஆமாம், அம்மா! மரம் எதற்கு நடுகிறார்கள், தெரியுமா? நம் பாரத நாடு ஓரே காடாகிவிட வேண்டும் என்பதற்காக: அப்படிக் காடு வளர்ந்து விட்டால் மரத்துக்கு மரம் குரங்குகள் வாசம் செய்ய ஆரம்பித்து விடும். அப்படிக் குரங்குகள் கூடிவிட்டால் ராமராஜ்யம் ஸ்தாபிதமானது மாதிரிதானே? ராமராஜ்யத்தில் குரங்குகள் தானே அதிகம்!" என்று சிறிதும் சிரிக்காமல் சொன்னான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. இருந்தாலும் கிழவரை நினைத்துக்கொண்டு சிரிக்காமல் இருந்தேன். எத்தனை நாழிகைதான் நிற்பது?

நான் நின்று நின்று அலுத்துப்போய் விட்டேன். "நான்கு பஸ்கள் போய்விட்டன. ஐந்தாவது பஸ்ஸும் நிறைந்தேதான் வந்திருக்கிறது. ஒரு ஆளுக்குக்கூட அதிலும் இடம் இல்லை!" என்றேன்.

"ஏன் இப்படி?" என்று கேட்டார் அவர்.

"இங்கே பக்கத்தில்தான் அகதிகள் முகாம் இருக்கிறது. அதனால் இப்பொழுது இவ்வூரில் ஜனத்தொகை அதிகரித்துவிட்டது. ஆனால் பஸ்கள் பழைய மாதிரியேதான் குறைவாக இருக்கின்றன. அதனால்தான்......!" என்றேன்.

"அப்படியானால் வா! நாம் நடந்தே போய்விடுவோம். எப்படியும் நம்நாட்டைப் பார்த்துவிட்டுப் போவதாகத்தான் தீர்மானம்!" என்றார் கிழவர் உறுதியான குரலில்.

இருபது நிமிஷங்கள் நடந்து நாங்கள் பக்கத்திலிருந்த ஸ்டேஷனை அடைந்தோம். நான் அவரைப் பார்த்து, "ஆமாம், நீங்கள் சொர்க்கத்திலிருந்து முதல் வகுப்பில் வந்தீர்களா அல்லது மூன்றும் வகுப்பில் வந்தீர்களா?" என்று கேட்டேன்

"இரண்டிலும் வரவில்லை. நான் என் ஸ்டேஷன் வாகனிலேயே வந்துவிட்டேன். அதை இறங்கியதும் திருப்பி அனுப்பிவிட்டேன். பாதகமில்லை, வா, நாம் மூன்றும் வகுப்பிலேயே போவோம்!" என்றார் அவர்.

"ஆனால் உண்மையைக் கேட்கப்போனால் இந்தக் காலத்து மூன்றும் வகுப்பு வண்டி, தாங்கள் அந்தக்காலத்தில் பிரயாணம் செய்த மூன்றும் வகுப்பு வண்டிக்கு ஈடு ஆகாது. அதில் மின்சார விசிறி இணைக்கப்பட்டிருந்தது. இரண்டு பக்கத்து ஆசனங்களும் தங்கள் சௌகரியத்தை உத்தேசித்து ஒழித்துவிடப்பட்டிருந்தன. அவற்றில் தாங்கள் சாய்ந்துகொள்வதற்காகத் திண்டுகள்கூட வைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது என்னடாவென்றால் நீங்கள் நிஜமாகவே மக்கள் பிரயாணம் செய்யும் மூன்றும் வகுப்புப்பெட்டியில்தான் பிரயாணம் செய்யவேண்டியிருக்கும். அதில் மின்சார விசிறி இராது. திண்டு இராது. மனிதர்கள் கிட்டங்கியில் மூட்டைகள் அடுக்கி வைத்திருப்பதுபோல் ஒருவருக்குமேல் ஒருவர் சுமையாக உட்கார்ந்திருப்பார்கள். அந்தக்காலத்து வசதி இந்தக் காலத்தில் வராது, தெரியுமா" என்று கேட்டேன்.

"நீ டிக்கட் வாங்கப்போகிறாயா அல்லது இப்படியே வெட்டிப் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கப்போகிறாயா? நான் உன்னைக்காட்டிலும் அதிகமாக என் நாட்டு மக்களிடையே சுற்றியிருக்கிறேன் என்பதை நினைவு வைத்துக்கொள். அதனால் உன்னைவிட எனக்கு அதிகம் தெரியுமாக்கும்!" என்று வீறாப்பாகப் பேசினார் அவர்.

"நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். இந்த நாட்களில் எந்தக் காங்கிரஸ் தலைவரும் மந்திரியும் மூன்றும் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்வதில்லை. முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்வதாகத்தான் கேள்வி. அதுவும் முதல் வகுப்பு என்றால் எப்படிப்பட்ட முதல் வகுப்பு, தெரியுமா? விஞ்ஞானரீதியில் காற்று வசதி செய்யப்பட்டதாயிருக்கும்! இல்லாவிட்டால் பொறுக்கி எடுக்கப்பட்ட நல்ல சார்டட் ஆகாயவிமானத்தில்தான் அவர்கள் பிரயாணம் செய்வார்கள். அதனால்..." என்று இழுத்தேன்.

அவருக்கு என் பேச்சு ரஸப்படவில்லை. எனவே, நீ வாய் ஓயாமல் வீண் பேச்சுத்தான் பேசுவாய் போலிருக்கிறது. உன்னால் முடியாது என்றால் சொல்லிவிடு நான் வேறு யாருடைய உதவியையாவது நாடுகிறேன்!" என்றார் குரலில் கடுமையை வரவழைத்துக்கொண்டு.

"கோபப்படாதீர்கள், பாபூஜி! எந்த ஊருக்கு டிக்கட் வாங்கவேண்டும், சொல்லுங்கள்!" என்றேன்.

"தில்லிக்கு வாங்கேன்!" என்றார் அவர்.

* * *

தில்லிக்குச் சென்றதும் நாங்கள் ராஷ்டிரபதி வசிக்கும் வைசிராய் மாளிகையை நோக்கி நடந்தோம். அவருடைய மெய்க்காப்பாளர் ராஜாங்கத்துக்குள்ள ஆடம்பரத்துடன் எங்களைச் சந்தித்தார். நான் அவரைப் பார்த்து, "இவர் என் நண்பர். தேசத்தின் மிகப்பெரிய, மிகப்பழைய ஊழியர், தலைவர். ராஷ்டிரபதியைப் பார்க்க விரும்புகிறார்" என்றேன்.

மெய்க்காப்பாளர் இந்தியர்தான். பேச்சும் இந்திய மொழியில்தான் பேசினார். ஆனால் அவர் பேசின முறைதான் முற்றிலும் மாறாக இருந்தது. அதாவது அடி முதல் தலை வரை ஆங்கில மயமாக இருந்தது. அவருடைய பேச்சைப் பார்த்த எனக்கு அவருடைய—கழுத்தில் அல்ல; தொண்டையில் லினோ டைப் மிஷின் கட்டித் தொங்குகிறதோ என்று கூட எண்ணத் தோன்றியது. அப்படி எண்ணத் தோன்றியதற்குக் காரணம், அவர் ஒவ்வொரு இந்திய மொழி வாக்கியத்தையும் ஆங்கில அச்சில் வார்த்துத் தொண்டை வழியாக இறக்கிக்கொண்டிருந்ததுதான். அவர் சொன்ன ஹிந்தி வாக்கியம் சற்றேறக்குறையக் கீழே உள்ள தமிழ்ச் சம்பாஷணைபோல் தான் இருந்தது.

"நாம்பள் ரொம்ப வருத்தப்படறான். ராஷ்டிரபதி இப்பொழுது சந்திக்கமாட்டான். தர்பார் நடக்கிறான்!"

"ஐயய்யோ! தர்பார் நடக்கிறதா?" நான் என் வருத்தத்தைத் தெரிவித்தேன், அவருடைய மொழிக்கொலையைக்கேட்கச் சகியாமல்.

"ஆமாம், ஆமாம். தர்பார் நடக்கிறான்!" என்றார் மெய்க்காப்பாளர்.

"என்ன?"

மெய்க்காப்பாளருக்குக் கோபம் வந்துவிட்டது. அவருடைய முகம் காது வரை சிவந்துவிட்டது. ஆத்திரத்துடன், "என்ன, நான் பொய்யா சொல்கிறான்? நிஜமாக சொல்கிறான், இப்பொ தர்பார் நடக்கிறான். ராஷ்டிரபதிக்கு ரொம்ப வேலையிருக்கிறான். அதனால் தர்பாருக்குள் யாரையுமே சந்திக்கமாட்டான்!" என்றார்.

"யாரையுமே சந்திக்கமாட்டானா? தர்பாருக்குள்ளே போக ஏதாவது உத்தரவு இருக்கிறதா? நிபந்தனை இருக்கிறதா?" என்று அவன் பேசுவது போலவே கேட்டேன்.

"இருக்கிறது என்று அவன், அரசகுமாரனாயிருக்கிறான். இல்லை, கவுன்சிலராயிருக்கிறான். அதுவும் இல்லாட்டிகாங்கிரஸிலே பெரியதலைவராயிருக்கிறான். அப்பொழுதுதான் உள்ளே போக உத்தரவு கிடைக்கிறது!" என்றார் மெய்க்காப்பாளர்.

"அப்படியானால் இவர் உள்ளே போகலாமே!" என்றேன் நான்.

கிழவரும் மெய்க்காப்பாளரைப் பார்த்து, இனிமையான குரலில், "ராஷ்டிரபதியிடம் கொண்டுபோய் இந்தக் கடிதத்தைக் கொடு. அவரே வந்து என்னை அழைத்துக்கொண்டு போவார்!" என்றார்.

மெய்க்காப்பாளர் கடிதத்தை உள்ளே கொண்டுபோனார். கொஞ்சநேரம் கழித்து வெளியே வந்து, உன்னை யாரோ கேலிசெய்திருக்கிறான் என்று ராஷ்டிரபதி சொல்கிறார். 'இந்தப் பெயருள்ளவன் எப்படி இங்கே வர முடியும்? அவன்தான் ராஜகட்டத்தில் சமாதி இருக்கிறானே என்றும் சொல்கிறார்!" என்றார்.

"ஐய்யய்யோ!" என்றேன் நான்.

"ஐயய்ய! என்ன ஐய்யய்ய?"—மெய்க்காப்பாளருக்கு மெய்மீறிய கோபம் வந்துவிட்டது. "ராஜகட்டத்திலே இந்தப் பெயருள்ள மனிசன் சமாதியிருக்கிறான். நான் கண்ணாலே பார்த்தான் என்று சொல்கிறேன்—அப்புறம் 'ஐய்யய்ய!' என்கிறாயே, என்ன அர்த்தம்?" மெய்க்காப்பாளர் சீறி விழுந்தார்.

"அடேடே!"

"என்ன டொடேடே டொடே!"—மெய்க்காப்பாளருக்கு மேலும் கனகோபம் வந்துவிட்டது. "நாம்பள் சொல்கிறான். உனக்குப் புரியவில்லை? இந்தப் பெயருள்ள ஆசாமி ராஜகட்டத்திலே சமாதியிருக்கிறான். நான் என் கண்ணாலே பார்த்தான். நீயும் போய் உன் கண்ணாலே பாரு!" என்றார்.

"ஐய்யய்யோ!"- நான் கிழவரைப் பார்த்துக் கேட்டேன். "என்ன யோசிக்கிறீர்கள்? ராஜகட்டத்துக்கு வருகிறீர்களா? இல்லை, இங்கேயே சத்தியாக்கிரஹம் செய்வதாக உத்தேசமா?"

அவர் நகைத்தார். "சுயராஜ்யம் கிடைத்த பிறகும் வைசிராய் மாளிகையின் நிலைமை பழையபடியேதான் இருக்கிறது;" என்றவர் சட்டென்று மெய்க்காப்பாளரைப் பார்த்து, "ஒரு நிமிஷத்துக்கு நான் உள்ளே போய் வரலாமா? இங்கே எத்தனையோ பொருள்களை எனக்குத் தெரியும். எனக்கென்று எத்தனையோ நினைவுச் சின்னங்கள்கூட இங்கே இருக்கின்றன;" என்றார்.

மெய்க்காப்பாளர் தலையை அசைத்து, "ஸாரி! உங்களுக்கு இங்கே அழைப்புக் கிடைத்தான் இல்லை. அதோடு நீங்கள் டிரஸோடு வந்தானுமில்லை! அதனால் நாம்பள் உள்ளே விடமாட்டான்?" என்றார்.

"டிரஸ்ஸா? என்ன டிரஸ் அது?"

"ஆங்கில டிரஸ். அதில்லாவிட்டால் கறுப்பு நீலக்கோட்டு!"

அவர் வருத்தம் தொனிக்கும் குரலில், "மிஸ்டர்! நான் இதே உடையில் சக்கரவர்த்தியின் பக்கிங்ஹாம் மாளிகைவரைகூடப்போய் வந்திருக்கிறேனே!" என்றார்.

"அது சுயராஜ்யம் கிடைப்பதற்கு முந்தியுள்ள விஷயம். இப்பொழுதெல்லாம் நீங்கள் இந்த உடையை உடுத்திக்கொண்டு, பக்கிங்ஹாம் மாளிகைக்குள் என்ன, சாதாரண நியாயஸ்தலத்துக்குள்கூட நுழைய முடியாது!" என்றேன் நான்.

"அப்படியா? சரி, வா! போவோம்!"

"எங்கே போகலாம்?"

"போய் ஜவாஹர்லால்நேருவைப் பார்க்கலாம்" என்றார் அவர்.

* * *

நாங்கள் நேருஜியின் வீட்டை அடைந்தோம். அங்கே போனபின்தான் அவர் பம்பாயில் உள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரி ஒன்றைப் பார்வையிடப் போயிருக்கிறார் என்னும் விஷயம் தெரிந்தது. சரி, பட்டேலையாவது பார்த்து விடுவோமே என்று புறப்பட்டோம். அவர் மாளிகையை அடைந்தால், அகில பாரதிய மார்வாடி சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் சபைக்குத் துவக்க விழா நடத்துவதற்காகப் பீகார் நகருக்குப் போயிருக்கிறார் என்பது தெரியவந்தது. அங்கிருந்து முன்ஷியின் மாளிகையை அடைந்தோம். உணவுக்குறையைப் போக்கும் நோக்கத்தில் அவர் புஸாவல் மன்மாட் ஆகிய இரு இடங்களுக்கும் இடையே உள்ள ஒரு இடத்தில் பேரீச்சைச் செடி ஒன்று நடுவதற்காகப் போயிருப்பதாக அறிந்தோம். அன்றைக்கே ஜகஜீவன்ராமுக்கு நாஸிக்கில் கோலோகோலோ கம்பெனியின் சார்பில் உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்படவிருக்கிறது என்றும் அதற்

# ரூ. 1000 ரொக்க இனம்!

## நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி. இந்த மாயா ஜாலா மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே



நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள்மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீகளுக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும். லாட்டரி, ஆட்டப்பந்தயம் சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள். பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவற மாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்குக் காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள். விவரங்களுக்குஎழுதவும்.

**MAHALUXMI JYOTHISH ASHRAM**

**KUTCHERY ROAD (C. M. K.) MEERUT (U. P.)**

---

**ரிஜிஸ்டர் நெ. 1904.** **தசரா ஸ்பெஷல் பம்பர்** **தந்தி: "காஸ்மோபாலிடன்"**

# சிறந்த பரிசுகள்

## நீங்கள் கட்டாயம் ஒரு பரிசு அடைவீர்கள்!

**எல்லாப் பரிசுகளும் காரண்டியுள்ளவை:**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

எல்லா சரியான விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 2000/- முதல் இரண்டு வரிசை சரியான விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 200/- முதல் வரிசை சரியான விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 20/-

4-லிருந்து 19 வரையுள்ள எண்களை கட்டங்களில் உபயோகித்து நேராக, குறுக்காக, கீழ்மேலாக எந்தவிதமாக கூட்டினாலும் 46 தொகைவர வேண்டும். ஒரு எண்ணை ஒரு தடவைதான் உபயோகிக்கலாம்

**முடிவு தேதி:-30-10-53, விடை 10-11-53 பிரவேசக் கட்டணம்:- ஒரு கூப்பனுக்கு ரூ. 1/-; 3 ரூபாய்க்கு 4 கூப்பன்கள் அல்லது ரூ. 5/க்கு 8 கூப்பன்கள்.**

சென்ற கூப்பனின் சரியான விடை

| | | | |
|---|---|---|---|
| 4 | 12 | 17 | 9 |
| 5 | 13 | 8 | 16 |
| 15 | 7 | 14 | 6 |
| 18 | 10 | 3 | 11 |

மொத்தம் 42

**விதிகள்:—** மேல் குறிப்பிட்ட கட்டண விகிதப்படி அவரவர்களுக்கு தேவைப்பட்ட கூப்பன்கள் வெள்ளைக் காகிதத்தில் எழுதி அனுப்பலாம். மணியாடர் ரசீதோ, போஸ்டல் ஆர்டரோ அல்லது பாங்க் டிராப்டோ கூப்பன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். விடை அல்லது வரிசைகளின் சரியான கூபன் அவைகளின் சரியான வரிசைகள் சீல் செய்து மீரத்திலுள்ள பெரிய பாங்கில் வைக்கப்பட்டுள்ளது. ஆங்கில எண்கள்தான் உபயோகிக்க வேண்டும். தபால் போக்குவரத்துகளும் ஆங்கிலத்தில்தான். விரைவான பதிலுக்கு அட்ரஸ் எழுதப்பட்ட ஸ்டாம்புடன் கூடிய கவர் அனுப்பவும். மானேஜரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுவதும் ஆகும். உங்கள் கூபன்களை கட்டணங்களுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்புங்கள்

**COSMOPOLITAN CORPORATION REGD., (K. C.) P. B. 85**

**Sadar MEERUT (U. P).**

காக அவர் அங்கே போயிருக்கிறார் என்பதும் தெரியவந்தது. கித்வாய் சாஹப் செல்லாபாலிப் பட்டினத்தில் புதிய டெலிபோன் எக்ஸ்சேஞ்சு காரியாலயத்தை ஆரம்பித்து வைப்பதற்காகப் போயிருந்தார். ஹரிகிருஷ்ணமேத்தாப் சத்திய நாராயண கதைபற்றி உபன்யாசம் செய்து கொண்டிருந்தார். ஸர்தார் பலதேவ் சிங் காஷ்மீருக்குக் காற்று வாங்க அதாவது உல்லாசப் பிரயாணத்துக்குப் போயிருந்தார். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அமெரிக்கத் தூதுவர் காரியாலயத்து விருந்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார். இதெல்லாம் எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், மந்திரிமார்கள் அனைவரும் ஆளுக்கொரு மூலையாக எங்கெங்கோ சென்றிருந்தார்கள். நான் கிழவரைப் பார்த்து, "என்ன செய்யலாம், சொல்லுங்கள்! யாராவது உப மந்திரியை வேண்டுமானால் பேட்டி கண்டு விடுவோமா?" என்று கேட்டேன்.

"உபமந்திரியா? அப்படியென்றால்...?" என்று வியப்புடன் கேட்டார் அவர்.

"உபமந்திரி என்றால் தெரியாதா? வேடிக்கையாக இருக்கிறதே! மந்திரிகளைக் காட்டிலும் கொஞ்சம் கீழே. டிப்டி செக்கரட்டிரிகளைக் காட்டிலும் கொஞ்சம் மேலே. அதாவது ஏணியில் இரண்டு மூங்கில்களையும் இணைப்பதற்காக இடைப்பழு என்று ஒன்று உண்டல்லவா? அம்மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்களேன்!" என்றேன்.

"இடைப்பழுவா? எனக்கு இந்த இடைப் பழுக்களைக் கண்டாலே சிறிதும் பிடிக்காதே! உனக்குத்தெரியாது?" என்று கேட்டார், அவர் தமது மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக்கொண்டே.

"நீங்களா இப்படிப் பேசுவது? உங்கள் கொள்கைகளே இம்மாதிரி இடைப் பழுக்களில் உருவானவைதானே? ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி ஒரு புறம்; பம்பாய்த் தொழிலாளிகளின் மீது குண்டு மாரி மறுபுறம். ஹிந்திக்கும், உருதுவுக்கும் இடைப் பாலமாக ஹிந்துஸ்தானி. இது இடைப் பழு இல்லாமல் என்ன? கிலாபத் இயக்கமும் கோ சேவையும், மசூதி-கோயில் ஐக்கியமும் என்ன? பூனா அவார்டு, இர்வின் ஒப்பந்தம், மவுண்ட்பாட்டன் சமரஸம்—ஏன்? புதிய சுயராஜ்யத் திட்டத்தின் அமைப்பு ஆகிய உங்கள் காரியங்கள் அனைத்துமே ஏணியின் இடைப்பழுவின் வேலையைத் தானே செய்து வந்திருக்கின்றன? ஆங்கிலேயர்களின் உப மந்திரிப்பதவி, காங்கிரஸின் உப மந்திரிப்பதவி இவ்விரண்டின் காரணமாக மக்கள் மோதுண்டு அடிபட்டனர். பெண்களின் மானம் பறி போயிற்று. ரிவால்வார்கள் நிர்ப்பயமாக நிர்த்தாட்சிண்யமாக நடமாடின. அதன் பலனாக ஒன்று, இரண்டு, மூன்று. ஆமாம் உங்கள் மார்பில் உள்ள இந்த மூன்று வடுக்களும், பாரதத்தின் இருதயத்திலிருந்து எப்பொழுதுமே ஆறாத மூன்று அடையாளங்களாக உருத்தரித்துவிட்டனவே!" என்றேன்.

"உன் மூளை வரவரத் தறி கெட்டுப்போகத் தான் தொடங்கிவிட்டது. நீ இங்கிருந்து வேறு எங்கேயாவது போகலாம்!" என்றார் அவர்.

"எங்கே போவோம்? அகதிகள் முகாமைப் பார்வையிடலாம். வருகிறீர்களா?" என்று கேட்டேன் நான், அதைத் தொடர்ந்தாற் போலவே வாருங்கள்? பம்பாயில் உள்ள கோலிவாடா முகாமைக் காட்டுகிறேன். அங்கே ஐந்நூறுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரே ஒரு கக்கூஸ்தான் இருக்கிறது. எப்படி நரகமாயிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். ஹிட்லரின் கடுங்காவல் சிறையில் கூட இதைக் காட்டிலும் எவ்வளவோ மடங்கு சுத்தமாக இருந்தது. இந்தக் கஷ்டம் தாளாமல் மக்கள் முறையிட்டனர். அமைதி ஊர்வலம் நிகழ்த்தினர். அதற்காக அவர்கள் மீது குண்டு மாரி பொழியப்பட்டது. இந்த நாட்களில் குண்டு மாரி எப்படிப் பொழிகிறது, தெரியுமா? கோட்டையடுப்பில் கடலை வறுப்பது போலாக்கும்!" என்றேன்.

அவர் கிறிது நேரம் யோசித்துவிட்டு, "வா, சம்பாரனுக்குப் போய் வருவோம். முதன் முதலில் அங்கேதானே நான் கிஸான்கள் கிளர்ச்சியை நடத்தினேன்!" என்றார்.

"மூன்றாம் வகுப்பு டிக்கட் மறுபடியும் வாங்கவேண்டுமா? ஐய்யய்யோ! இந்த மூன்றாம் வகுப்புப் பலகையில் உட்கார்ந்து உட்கார்ந்து என் முதுகெலும்பெல்லாம் முறிந்து விட்டது. மூல ரோகம் வந்து விடும்போலிருக்கிறது!" என்றேன் உள்ளூரப்பீதியுடன்.

"அப்படியானால் சற்றுப்பொறு. நான் சொர்க்கத்திலிருந்து ஸ்டேஷன் வாகனையே வரவழைத்து விடுகிறேன். எனக்குப் பசிக்க வேறு ஆரம்பித்து விட்டது!" என்றார் அவர்.

"அப்படியே உங்கள் ஆட்டையும் வரவழைத்து விடுங்கள்! இங்கே தில்லியில் எங்கேயுமே தங்களுக்கு ஆட்டுப்பால் கிடைக்காது, என்ன கஜகர்ணம் போட்டாலும்!" என்றேன் நான்.

"அப்படியானால் இப்பொழுதெல்லாம் இங்கேயுள்ள மக்கள் என்ன வளர்க்கிறார்கள்?"

"அவர்கள் எல்லோரும் பணக்காரர்கள். பர்மிட்டும் அல்லாட்மெண்டும் வாங்குகிறார்கள்.;

வளர்க்கிறார்கள். கோடீசுவர சேட்டுகள் அமெரிக்கர்களுடன் நட்பை வளர்க்கிறார்கள்; அமெரிக்க டாலர்களாக வளர்த்துக் குவிக்கிறார்கள். லஞ்சம் வாங்கும் ஆபீஸர்கள் வெள்ளை நிறம் படைத்த காதலிகளையும் கறுப்பு நிறம் வாய்ந்த பேகார்டுகளையும் வளர்க்கிறார்கள், என்னைப் போன்ற மடச்சாம்பிராணிகள் உங்கள் மண்டையை உருட்டுகிறார்கள். ஊக்கத்துடன் தங்கள் மூளையையும் முட்டிக்கொண்டு உடைத்துக் கொள்கிறார்கள்!" என்றேன் ஆத்திரம் தீர.

'இதோ பார், குழந்தாய்! உன் மூளை சரியாகத்தான் இல்லை. இன்று நான் அதைச் சரி செய்து விட்டு மறுகாரியம் பார்க்கிறேன். கவலைப் படாதே! அப்புறம் நல்ல வெள்ளாட்டின்பாலாக இன்று உனக்குத் தர ஏற்பாடு செய்கிறேன், பால் என்றால் சாமான்யப்பட்ட பாலாயிராது. ஒருதடவை சாப்பிட்டுவிட்டால் உன் வாழ்நாளில் நீ ஒரு நாளும் அதை மறக்க முடியாது!.

"இந்த உலகத்தில் இருந்தபொழுது உங்கள் ஆட்டுக்கு நல்ல தீவனம் கொடுக்கப்பட்டது என்று நான் கேள்விப்பட்டேனே! பாதாம் பருப்பு அரைத்து வைப்பார்களாமே! விடாமின் இன்ஜெக்ஷன்கள்கூட ஏற்றுவார்களாமே! இப்பொழுது அது சொர்க்கத்தில் என்ன தீனி தின்கிறது?" என்று கேட்டேன்.

"அது ஒன்றும் தீனியே தின்பதில்லை. வேண்டியமட்டும் அமிழ்தத்தைத்தான் குடிக்கிறது!" என்றார் அவர்.

அதைச் சொன்னதும் அவரும் சிரித்தார். நானும் சிரித்தேன். நாங்கள் இருவரும் சிரித்தோம். இதற்குள் சொர்க்கத்திலிருந்து ஸ்டேஷன் வாகன் வந்துவிட்டது. அதில் ஏறி உட்கார்ந்ததுதான் தாமதம். நாங்கள் சம்பாரனை அடைந்துவிட்டோம்.

என்னைப் பார்த்ததும் எதிர்ப்பட்ட ஜம்பு சொன்னான்: "உன்னுடைய இந்தத் தோழரைப் போலவே வெகுகாலத்திற்கு முன்னால் எங்கள் ஜில்லாவுக்கு ஒரு ஆசாமி வந்திருந்தார். அவருடைய சிரிப்பும் இவருடைய சிரிப்பே அச்சாக இருந்தது. அந்த நாட்களில் நான் வாலிபனாக இருந்தேன். அந்த முறுக்கில் நான் செய்த காரியங்களுக்காக எனக்கு இரண்டு வருஷம் சிறைத் தண்டனைகூட கிடைத்தது."

"அப்படி என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று கேட்டேன்.

"எங்களுக்குச் சர்க்கார் விதித்திருந்த வரி அதிகமாயிருந்தது. எங்கள் ஜமீந்தார் கூலி கொடுக்காமல் வேலை வாங்கிவந்தார். ஆங்கிலேய அதிகாரி எப்பொழுதும் எங்கள் மீது கொடுமை புரிந்து வந்தான். உன் தோழரைப் போலவே அப்பொழுதுதான் ஒருவர் இந்தப் பக்கம் வந்திருந்தார். அவர் பேச்சில் மயங்கி அவர்மீது நாங்கள் நம்பிக்கை வைத்தோம். அவர் சொல்லைக் கேட்டுத்தான் சிறைக்கூடம் சென்றோம். செக்கு இழுத்தோம். சவுக்கடி பட்டோம். வெளியிலே வருவதற்குள் எங்கள் நிலம் பறிமுதல் ஆயிற்று. வீடு வாசல் கொள்ளை போயிற்று..." என்றான் அவன்.

"இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது?" என்று ஜம்புவைக் கேட்டார் கிழவர். "இப்பொழுது ஆனந்த வாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பீர்களே! ஏனெனில் இப்பொழுதுள்ள அரசாங்கம் உங்கள் சொந்த அரசாங்கம் அல்லவா?" என்றும் சொன்னார்.

"சொந்த அரசாங்கம்தான்! யார் இல்லையென்கிறார்கள்?" என்று சொன்ன ஜம்பு நீண்ட பெருமூச்சு விட்டான். அரசாங்கம் நம்முடையதுதான். ஆனால் நாங்கள் பயிரிடும் நிலம்தான் எங்களுக்குச் சொந்தமானதல்ல. இன்றும் அது அதே ஜமீன்தாருடையதாகத்தான் இருக்கிறது. பழைய கொடுமை பழைய கொடுமையாகவே தான் இருக்கிறது. அவருக்கும் மேலே பெரிய தாகச் சர்க்கார் இருக்கிறதே என்று நீங்கள் கேட்கலாம். பெயருக்குத்தான் அது நம்முடைய அரசாங்கமாக இருக்கிறதேயொழிய அதனால் ஒருவிதப் பயனும் இல்லை. 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற கதைதான் இன்னும் நடக்கிறது. சுதந்திரம் ஏற்படுவதற்கு முன் அரசாங்கம் எப்படி நடந்து கொண்டிருந்ததோ அப்படியேதான் இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கிறது. குல்லாய் மாறியிருக்கிறதே ஒழிய தலை அதுவாகவேதான் இருக்கிறது. முன்னால் ஆங்கிலக் குல்லாயாக இருந்தது. இப்பொழுது வெள்ளைக் குல்லாயாக இருக்கிறது. வெள்ளைக் குல்லாய் ஆட்சி செய்யும் இந்தக் காலத்தில்தான் சில மாதங்களுக்கு முன் நாட்டில் பஞ்சம் தலை விரித்தாடலாயிற்று. அதன் பயனாக மக்கள் உண்ண உணவின்றிப் பசியால் வாடி மரித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் குடிகளால் குடிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் அரசாங்க மந்திரிகள் அதைக் காதில் வாங்கிக் கொள்வதில்லை. "நாட்டிலாவது, பஞ்சமாவது?" என்று கேட்கிறார்கள். இப்பொழுதுதான் நேற்று நடந்தது ஒரு சம்பவம். எங்கள் கிராமத்துக் குயவர்கள் குடும்பம் ஒன்று பூண்டோடு பட்டினியால் வாடி அழிந்து விட்டது. ஆனால் நம் மந்திரிகள் அதை ஒப்புக்கொண்டால்தானே? "பஞ்சமும் இல்லை, பட்டினியும் இல்லை" என்று பேசிவிட்டார்கள். கிராமமே கூண்டோடு கைலாசம் போனாலும் நம் மந்திரிமார்கள் பஞ்சம் என்று ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பஞ்சத்தைத் தீர்க்க வழியைக் காணோம். தாசில்தார், "மரம் நடு. உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடும்"

என்று உத்தரவு போடுகிறார். நெற்பயிர் விளையாத பூமியில் பெரிய மரங்கள் எங்கே வளரும் என்ற அறிவு அவர்களுக்கு இல்லை. ஏதோ தோன்றுகிறது செய்கிறார்கள். சொன்னதைக் கேட்காவிட்டால் எங்கள் பாடு திண்டாட்டம்!" என்றான். அவன் ஆதங்கத்தை என்னவென்று சொல்வது?

"ஏன் நீங்கள் சத்யாக்கிரஹம் செய்யக் கூடாது!" என்று கேட்டார் கிழவர்.

ஜம்பு ஒருமுறை நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். பிறகு மெதுவான குரலில், "கொஞ்சம் மெதுவாகப் பேசுங்கள், ஐயா! அதிகாரிகள் காதில் விழுந்துவிட்டால் அனர்த்தம் விளைந்துவிடும். ஒரு துப்பாக்கியை! சுடு இவனை! என்று உத்தரவு போட்டுவிடுவார்கள்! அவர்களுக்கென்ன? வாயில் உத்தரவு இருக்கிறது, போட்டுவிடுகிறார்கள். ஆனால் நம் வாழ்வோ நாலு நாள் வாழ்வு. எப்படியோ கழித்து விட்டால் போகிறது! நமக்கு எதற்கு வீண் வம்பு? அந்தக் கோவணாண்டியை ராமர் தான் காப்பாற்றவேண்டும். அவருடைய தோழர்களே அவரை எப்படி ஏற்றிவிட்டார்கள், தெரியுமா? அவர் சுற்றத்தார்கள், சீடர்கள் எல்லோரும் இன்று ஆனந்த வாழ்வு வாழ்கிறார்கள். குடியானவர்களும், தொழிலாளிகளுமாகிய நாங்கள்தான் எப்பொழுதும் போல் சக்கையாக வாட்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். நல்ல ராமராஜயம் நமக்குக் கிடைத்தது! இதைக் காட்டிலும் அந்த ராவணனுடைய ராஜ்யமே எவ்வளவோ மேலாயிருந்திருக்கும் என்று தோன்றுகிறது!" என்றான். அதைச் சொல்லிமுடிப்பதற்குள் அவன் கண்களில் நீர் துளித்துவிட்டது.

"ஜம்புவிடம் ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் இன்னும் சற்றுத் தங்குங்கள். இல்லாவிட்டால் வேறு எங்கேயாவது போவோம்!" என்றேன் நான் கிழவரிடம்.

"போதும், வா! வேறு எங்கேயாவது போவோம்!" என்றார் அவரும் துயரத்தினால் தழு தழுத்த குரலில்.

"வேறு எங்கே போகலாம்? சேலம் ஜில்லாவுக்குப் போவோமா? இருபத்தொரு அரசியல் கைதிகள் குண்டுக்கிரையானார்களே!" என்று கேட்டேன்.

"வேண்டாம்!"

"அப்படியானால் திருவனந்தபுரத்துக்கு வாருங்கள். ஆறுகள் எப்படி வெட்டப்படுகின்றன என்று பார்த்துவரலாம். அதற்குக் குத்தகை எடுத்துக்கொண்டிருக்கிறவர், யார் தெரியுமா? ஒரு பெரிய காங்கிரஸ்காரர்தான்! அவரைப்பார்த்து வரலாம்!" என்றேன்.

"வேண்டாம், வேண்டாம்!"

"சரி, ஆச்சாரிய கிருபளானியையே தான் சந்தித்துப் பேசலாமே! மந்திரிகள் சபை எப்படித் தடுமாடுகிறது, எப்படித் தலை தூக்குகிறது என்பதையெல்லாம் சாங்கோபாங்கமாக அவர் எடுத்துச் சொல்லுவார். கேட்டு வரலாம்!" என்றேன்.

"வேண்டாம், வேண்டாம், வேண்டாம்!"

"சரி! அப்படியானால் காஷ்மீருக்கு வாருங்கள். அங்கே இந்திய சேனையும், பாகிஸ்தான் சேனையும் ஒன்றுக்கொன்று எதிராகப் போருக்கு எப்படித் தங்களைத் தயார் செய்துகொள்கின்றன என்பதையாவது பார்க்கலாம்!"

"வேண்டாம், அப்பா! வேண்டாம்! நான் நாட்டின் உண்மை நிலையைத்தான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றார் அவர்.

"இது என்ன பிரமாதம்! அரசாங்கம் ஏராளமான பொருள் செலவிட்டு அறிக்கைகள் தயாரித்திருக்கிறது. அவற்றை வாங்கிப்பார்த்தால் போகிறது! தாங்கள் இறந்தபின் வாழ்க்கைப் புள்ளி விவரம் முந்நூறு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

# அழகுக் கன்னி

**இளம்பாரதி**

1

தலைக் குடுமியை அவிழ்த்துவிட்டு நவநந்தர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட சபதம் அன்றோடு நிறைவேறி விட்டது. ஒவ்வொரு நாளும்—ஒவ்வொரு விநாடியும் சிந்தித்துச் சிந்தித்துச் செயலாற்றி அநேகமாக முழு வெற்றியும் கிடைத்துவிட்டது.

'இனி நடக்க வேண்டியது என்ன?'

இதுதான் கௌடில்யரின் சிந்தனையில் கேள்விக் குறியாக நின்றது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு பர்வதகேசுவரனுக்கு 'சமாதி' கட்டுவதே முதல் வேலையாக ஏற்றுக் கொண்டார். அந்தச் சமாதியைக் கட்டி முடிக்கச் செங்கற்கள் வேண்டுமே! எப்படிக் கொண்டு வருவது; யார் கொண்டு வருவது?

2

'ஜீவசித்தி, மீண்டும் சொல்கிறேன். இந்தக் காரியத்தில் உன் முழுச் சாமார்த்தியத்தையும் காட்டினையானால் நிச்சயம் வெற்றி நமக்குத்தான். அதில் சந்தேகமே இல்லை. வேலை முடிய இன்னும் எத்தனை நாட்களாகும்?'

'இன்னும் இரண்டே நாட்களில் முடிந்துவிடும், மகாராஜ்!'

'ஆமாம், அதுதான் சரி. அரண்மனைக்குள் புகுவதற்குள் சந்திரகுப்தனை ஒழித்துவிட வேண்டும்.'

'சாணக்யன் அவனுடன் இருப்பதை மறந்துவிடக் கூடாது, பிரபு. அவன் துணை இருக்கும் போது நாம் எதையும் கொஞ்சம் யோசித்தே செய்யவேண்டும்.'

'உனக்கேன் வீண் சந்தேகம், ஜீவசித்தி? உலகில் ஒரு அழகிய நங்கைக்கு அடிமைப் படாதவன் எவனாவது இருக்க முடியுமா? அதுவும் போக ஜைன மந்திரங்களைக் கரை கண்ட நீ ஆரம்பித்த எந்தக் காரியமாவது இதுவரை தோல்வி அடைந்ததுண்டா?'

'அதற்காகச் சொல்லவில்லை, பிரபு. உங்கள் முயற்சி முழு வெற்றி அடையும்படி நான் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.'

'ஜீவசித்தி, இன்னொரு விஷயம்; அவர்களுடன் பர்வதகேசுவரனும் இருக்கிறானல்லவா? அவனையும்...'

'...ஒரு முடிவிற்குக் கொண்டு வரத்தானே யோஜனை செய்கிறீர்கள். அதற்கென்ன, இரண்டு உருவங்களைச் செய்து முடித்தால் நம் திட்டம் முடிவடைந்துவிடுகிறது. அவ்வளவு தானே; அதற்கேன் உங்களுக்கு இவ்வளவு யோஜனை?

'அது கூடாது ஜீவசித்தி! ஒரு சமயத்தில் ஒன்றைத்தான் குறி வைக்கவேண்டும்; இல்லாவிட்டால் இரண்டுமே கைவிட்டுப் போய்விடும். முதலில் சந்திரகுப்தனுக்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்வோம்.'

'அதுவும் சரிதான் மகாராஜ்!'

நவ நந்தர்களுக்கும் சாணக்கிய – சந்திரகுப்தனுக்கும் நடத்த போரில் நவநந்தர்கள் கொல்லப்பட்டார்கள். சந்திர குப்தனுக்கு வெற்றி கிடைத்து விட்ட போதிலும் பாடலிபுரத்து அரண்மனைக்குள் புகுவதற்குக் கௌடில்யரின் மனம் ஒப்பவில்லை. அந்த அரண்மனைக்குள் ஏதேனும் புது ஆபத்துக்கள் சந்திரகுப்தனை ஒழிக்க உருவாகிக்கொண்டிருக்கலாமல்லவா, அதுதான் கௌடில்யரின் அப்படிப்பட்ட மனப் போக்கிற்குக் காரணம். பாடலிபுரத்திற்கு அடுத்திருந்த சீதாவனத்தில் கூடாரமடித்திருந்தார்கள்.

கௌடில்யர் நினைத்ததும் சரியாகத்தான் இருந்தது. மாண்டுபோன நந்தர்களின் மந்திரியான ராக்ஷஸனும், அரசாங்க மாந்திரீகனான ஜீவசித்தியும் ஒன்று சேர்ந்து மௌரியத்தை ஒழித்துவிடச் சதித்திட்டமிட்டார்கள். ராக்ஷஸனின் மூளை தீவிரமாக வேலை செய்தது. பிராமணர்களுக்கும் ஜைனர்களுக்கும் அளவிற்கு மிஞ்சின மன வேற்றுமை உண்டு என்ற உண்மையை அடிப்படையாக வைத்துத் திட்டம் உருவாக்கினார் ராக்ஷஸன். ஜைன மாந்திரீகன் ஜீவசித்தி அவர் சொன்னபடியே சிறிதும் பிசகாமல் காரியங்களைச் செய்ய ஒப்புக்கொண்டான்.

3

மந்திரியாருக்குச் சொன்ன வாக்குத் தவறாமல், ஜீவசித்தி பெண்ணுருவில் ஒரு மாயத்தைச் சிருஷ்டித்தான். விபரம் தெரியாதவர்கள் அவளை நிச்சயம் பண்புப் பெண்ணாகவே மதித்துவிடுவார்கள். படைத்துவிட்ட ஜீவசித்தியே அசைப்பிலே மயங்கிவிட்டானென்றால்...! அவ்வளவு தத்ரூபமாக அமைந்துவிட்டது அந்த விஷக் கன்னிகையின் உருவம்.

'ஜீவசித்தி, நீ மாந்திரீகன் மட்டுமல்ல; பயிற்சி பெற்ற கலைஞனும் கூட!'

'ஒரேயடியாக என்னைப் புகழ்கிறீர்கள், மகாராஜா!'

'இல்லை ஜீவசித்தி, உண்மையாகத்தான் சொல்லுகிறேன். இந்த அழகுக் கன்னிகையைக் கண்டு நானே திகைத்துவிட்டேன், நம்மையே மயக்கி நம் உயிரையே குடித்துவிடுவாளோ என்று. அவ்வளவு பிரமாதமாக முடித்து விட்டாய், ஜீவசித்தி, இந்த மாய உருவத்தை. காளிதாஸனின் சகுந்தலைகூட இவளிடம் அழகுக்காகப் பிச்சை எடுக்கவேண்டியது தான்!'

'அதிகமாகப் புகழ்கிறீர்கள்; இது செய்ய வேண்டிய வேலை இனிமேல்தான் இருக்கிறது. என் திறமையின் எதிரொலியைக் காணும் போது இதைவிடப் பன்மடங்கு ஆச்சரியப்படு வீர்கள் மகாராஜ்!'

'இவளைக் கண்டு மயங்காத ஆண் மகன் எவனாவது உலகத்தில் இருக்கமுடியுமா, ஜீவ சித்தி? சந்திரகுப்தன் இன்றோடு ஒழிந்தான் என்றே வைத்துக்கொள்.'

'நீங்கள் எப்போது சந்திரகுப்தனுடைய கூடாரத்திற்குப்போக நிச்சயித்திருக்கிறீர்கள்?'

'ஏன், நாளைக்கே போக வேண்டியதுதான். எவ்வளவுக்கெவ்வளவு நாம் சீக்கிரம் முயற்சி எடுக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்குப் பலனும் சீக்கிரமாகக் கிடைக்கும்'

'அது உண்மைதான், பிரபு!'

4

சீதாவனத்தில் கூடாரமடித்திருந்த சந்திர குப்தன் சிக்கலான அரசியல் விஷயங் களைப்பற்றிச் சாணக்யனோடும், பர்வதகேசுரவ னோடும் விவாதித்துக் கொண்டிருந்தான். அப் போது நந்தர்களின் மந்திரி ராக்ஷஸன் வந்திருப்பதாக ஒரு சேவகன் வந்து செய்தி அறிவிக்கவே ராக்ஷஸனை உள்ளே அழைத்து வரும்படி உத்தரவிட்டான். ராக்ஷஸனின் வருகையை அறிந்தவுடன் கூடாரத்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. எதிரியின் மந்திரி தானே வலியவந்து காலில் விழுவதென்றால் லேசான காரியமா?

ராக்ஷஸன் அழகுக் கன்னியுடன் அரசவை யில் நுழைந்ததும் விநாடி நேரத்திற்குள் சபை பேச்சற்றுப் போயிற்று. கன்னியின் எழி லுருவம் கருத்தையே கவர்ந்துவிட்டபோது வாய்ப் பேச்சிற்கு அங்கே என்ன அவசியம்?

பர்வதகேசுவரனும் சந்திரகுப்தனும் சரிசம மான ஆசனங்களில் அமர்ந்திருந்தனர். கௌடில் யர் சந்திரகுப்தனின் அருகில் அமர்ந்திருந்தார்.

'என்ன, ராக்ஷஸரே, நின்று கொண்டிருக்கி றீரே, இப்படி இவ்வாசனத்தில் அமரும்!' என்று பர்வதகேசுவரன் சொன்னதும் ராக்ஷஸன் குறிப் பிட்ட ஓர் ஆசனத்தில் அமர்ந்தார். அழகுக் கன்னிஅவருக்குப் பின்னால் நாணத்தால் தலை குனிந்து நின்றுகொண்டிருந்தாள். கட்டிளைஞன் சந்திரகுப்தன் ஒரு வார்த்தைகூட வாய்திறந்து பேசவில்லை: அவன் தன் விழியால் அப்பாவை யுடன் காதல் மொழி பேசிக்கொண்டிருந்தான். கடைக்கண்ணால் கன்னியும் அவன் மனதைத் தன் வசமாக்கிக்கொண்டிருந்தாள். காலம் கடந்து கொண்டிருந்தது.

'மகாராஜா, நான் தங்களை எதிர்த்துப் போரிட்டதென்னவோ உண்மைதான். அது என்மேல் குற்றமில்லை. உங்களை எதிர்த்துப் போரிடும் சூழ்நிலையில் அப்போது நான் இருந் தேன். அப்போது எனக்குப் பிரபுக்களாக இருந்தவர்கள் நந்தர்கள். இனி தாங்கள்தானே பாடலிபுரத்திற்கு மகாராஜா? எங்கள் வம்சம் பரம்பரையாக இந்த நாட்டில் மந்திரி பதவி வகித்தது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான். ஆகவே செய்த குற்றங்களை மன்னித்து என்னை அனுக்ரகிக்க வேண்டுகிறேன்' என்று ராக்ஷஸன் சந்திரகுப்தனை நோக்கிச் சொன்னதும் சந்திர குப்தன் எழுந்து நின்ற ராக்ஷஸனை உட்காரும் படி சொன்னான்.

'பழைய விரோதத்தை மறந்து சிநேகபாவமாகத் தங்கள் மனம் மாறியது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன், ராக்ஷஸரே! உமது ராஜ விசுவாசம் எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே நீர் இனி என் சபையிலேயே மந்திரியாக இருக்க லாம்!' என்று சொல்லிவிட்டு, கௌடில்யரை நோக்கி, 'இந்த ஏற்பாடு சரிதானே?' என்று சந்திரகுப்தன் கேட்டான். அதற்கு ஒப்புக் கொள்ளும் வகையில் தலையை ஆட்டினார் கௌடில்யர்.

'மௌரியத்தை நாட்ட வந்த தங்களுக்கு இந்த மகிழ்ச்சிச் சம்பவத்தின் அறிகுறியாக ஒரு பரி சளிக்க விரும்புகிறேன், மகாராஜா! நாட்டின் அரிய பொக்கிஷங்களெல்லாம் நாட்டைக் காக் கும் மன்னனுக்குரியவை அல்லவா! இந்த அழ குக் கன்னி கிடைக்க இயலாத பொருள். இது நாட்டில் வேறொருவருடைய சொத்தாக இருப் பதைவிடத் தங்கள் சொத்தாக இருப்பதே நல மல்லவா?'

ராக்ஷஸனின் இந்த மொழிகளைக் கேட்டதும் சந்திரகுப்தனின் நெஞ்சம் குளிர்ந்தது. பேசும் வகை அறியாது செயலற்று இருந்துவிட்டான். விநாடிக்கு விநாடி அவனிதயம் காதல் வீணையை மீட்டுவதில் முனைந்துவிட்டது.

ஆனால் பர்வதகேசுவரன்...!

விநாடிக்கு விநாடி அவன் முகம் கறுத்துக் கொண்டே வந்தது. உரிமை பறிபோகிற தென்று பொறுமைப் புயலைக் கிளப்பி விட்டது அவனது இளமை நெஞ்சம். கன்னல் மொழியாளின் காதல் மாற்றானுக்குப்போய்ச் சேருவதா? அதுவும் தன்னுதவியால் வெற்றி அடைந்த சந்திரகுப்தனுக்குப் போய்ச் சேருவதா? பொங்கி வந்த ஆக்ரோஷம் அவன் முகத்தில் பிரதிபலித்தது. இதைச் சூசகமாக அறிந்துகொண்ட கௌடில்யர் தமக்குள் சிரித்துக்கொண்டார்.

'பெண்ணின் பெயரென்ன?' என்று கேட்டான் சந்திரகுப்தன்.

'வஸந்தசேனா!' என்று பதிலளித்தார் ராக்ஷஸன்.

'அழகான பெயர்!' என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான் சந்திரகுப்தன்.

'பொருத்தமற்ற பெயர்' என்று குறுக்கிட்டான் பர்வதகேசுவரன். சந்திரகுப்தனுக்கு அவனுடைய கூற்று விளங்கவில்லை; 'ஏன்?' என்ற கேள்வியைக் கிளப்பிவிட்டுப் பதிலுக்காகப் பர்வதகேசுவரனைப் பார்த்தான்.

'இந்தப் பெண்ணிற்குள்ள இனிமை அந்த வசந்தத்திற்கேது?'

'ஓஹோ, அதற்குச் சொல்கிறீர்களா?' என்று சொல்லிவிட்டுக் கள்ளங்கபடமில்லாது சிரித்தான் சந்திரகுப்தன்.

'சந்திரனோடு வசந்தம் சேர்ந்துவிட்டால் அதனால் எல்லோருக்குமே ஆனந்தமல்லவா?' என்று ராக்ஷஸன் சொன்னபோது, 'முக்கியமாக உங்களுக்கு அதிக ஆனந்தம், இல்லையா?' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் பர்வதகேசுவரன். அந்தச் சிரிப்பில் விஷமமும், ஏளனமும் கலந்திருந்தது.

'நான் தரும் இப் பரிசை ஏற்றுக்கொண்டு என்னைக் கௌரவிக்க வேண்டுகிறேன், மகாராஜா!' என்று ராக்ஷஸன் தலை வணங்கிச் சொன்னதும் சந்திரகுப்தனின் முகம் மேலும் பிரகாசமடைந்தது.

'உமது வேண்டுகோளை நிராகரிக்க நான் விரும்பவில்லை ராக்ஷஸரே! உமது பெண்ணை நான் ஏற்றுக்.........'

சந்திரகுப்தன் முடிக்கும் முன்னரே, அதுவரை வாய்திறவாமலிருந்த சாணக்கியர் குறுக்கிட்டார்.

'சந்திரா, ஒரு வார்த்தை. நன்றி மறந்த துரோகியாக நீ மாறிவிடக்கூடாது என்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன். நம் வெற்றிக்கெல்லாம் காரணம் பர்வதகேசுவரர் அல்லவா? ஆகவே முதன் முதலாகக் கிடைக்கும் நற்பரிசு


# நீரிழிவு

## ஏழு நாட்களில் குணமாகும்

●

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் நீரிழிவு (**DIABETES**) என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக்கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ளவரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரி மிதமான தாகம், பசி, அடிக்கடி சிறுநீர் சர்க்கரையுடன் போதல் எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப்பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். **வீனஸ்சார்ம்** நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

**வீனஸ்சார்ம்** உபயோகித்த 2வது அல்லது 3வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறுநீரும் குறைகிறது. 3வது அல்லது 4வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது. இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

**50 வில்லைகள் கொண்ட புட்டி 1க்கு ரூ. 6-12-0**

( பாக்கிங், தபால் செலவும் இனம் )

**வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (C.R)**

**தபால் பெட்டி நெ, 587, கல்கத்தா.**

அவருக்கே உரிமையாகவேண்டும். இதுதான் சரியான தர்மமுங்கூட!'

சந்திரகுப்தனுக்குச் 'சுருக்'கென்றது. தன் நன்மைக்கே அதுநாள்வரை உழைத்து வந்த கௌடில்யரா அப்படிச் சொல்கிறார் என்று அவனுக்கு நிலைபுரியவில்லை. சம்பவங்களின் திடீர் திருப்பத்தைக் கண்டு, பர்வதகேசுவரன் உள்ளம் நெகிழ்ந்தான். சாணக்கியரின் மேல் அவனுக்கிருந்த மதிப்பு மேலும் ஒருபடி உயர்ந்தது. வஸந்தசேனை தன் கைக்கே வந்துவிட்டதாக முடிவு செய்துவிட்டான். ஏனென்றால் சாணக்கியரின் பேச்சுக்கு மறு சொல் சொல்லும் வழக்கம் சந்திரகுப்தனிடம் என்றுமே இருந்ததில்லையே!

'நீங்கள் சொல்வது சரிதான் கௌடில்யரே! ஆனால் சந்திரகுப்தனின் மனம் நோக நான் எப்படிச் சகிப்பது?' என்று சந்திரகுப்தனைக் குத்திப் பேசுவதுபோல் வார்த்தையாடினான் பர்வதகேசுவரன்.

'அதற்காக வருத்தப்படாதீர், பர்வதகேசுவரரே! சந்திரன் செய்நன்றி மறப்பவனல்ல. நான் சொல்வது சரிதானே, சந்திரா?' என்று சொல்லிக் கண்ணைச் சிமிட்டினார் சாணக்யர். அந்தக் கண்சிமிட்டலுக்கு 'ஆமாம்' என்று தலையசைப்பதைத் தவிர சந்திரகுப்தனால் வேறெதுவும் செய்ய இயலவில்லை.

'பர்வதகேசுவரரே, வஸந்த சேனையை உமது அந்தப்-புரத்திற்கு அழைத்துச் செல்லும். சபை இத்துடன் கலைய வேண்டியதுதானே?' என்று சாணக்யர் சொன்னதும் சபை கலைந்தது. வஸந்த சேனையுடன் அந்தப்புரத்திற்குச் சென்றான் பர்வதகேசுவரன். வாடிய முகத்தோடு திரும்பிச் சென்றார் ராக்ஷஸன். பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததே என்று அவருக்கு முகவாட்டம்.

5

சந்திரா, என்மேல் உனக்குக் கோபமா?'

பதிலில்லை.

'விஷயமறிந்தால் நீ இப்படி என் மீது கோபப்படமாட்டாய் சந்திரா! சந்தோஷப்பட வேண்டிய இந்த விஷயத்தில் என் மீது கோபம் கொள்கிறாய் அல்லவா?'

'என் மனதை வருத்துவதில் உங்களுக்கு அவ்வளவு மகிழ்ச்சி; அல்லவா?'

'அந்தப் பெண் மாயையப்பா; அவளை நம்பினால் உன் வாழ்வு கனவாகிவிடும்!'

'இந்த வேதாந்தங்களை எல்லாம் பூசை அறைக்குள்ளேயே வைத்துக் கொள்ளுங்கள். பெண் என்பது மாயை என்று சொன்னவர்களெல்லாம் பெண்ணோடு வாழ்ந்தவர்கள்தானே! அந்திமக் காலத்தில் இந்த மாதிரி வேதாந்தங்கள் பேசுவது உலக வழக்கமாகி விட்டிருக்கும்போது நீங்கள் மட்டும் விதிவிலக்கா? நன்றாய்ப் பேசுங்கள்!'

'சந்திரா, இப்போது நீயா பேசுகிறாய்! இல்லை, இல்லை; உன் பருவம் அப்படிப் பேசுகிறது. இளமைத் துடிப்பிலே நாம் எத்தனை தகாத செயல்கள் செய்துவிடுகிறோம்! எதையும் யோசித்துச் செய்வது நல்லதல்லவா?'

சாணக்யரோடு மேலும் பேசச் சந்திரகுப்தனுக்கு விருப்பமில்லை. ஆனால் அந்த நிலையிலேயே விட்டுச்செல்லச் சாணக்யருக்கு விருப்பமில்லை.

'உண்மை என்னவென்று தெரியுமா? அந்த அழகுக் கன்னி உன் வாழ்வை வளமாக்க வந்தவளல்ல. சந்திரா, உன் வாழ்விற்குக் குழி தோண்ட வந்தவள்! இதை நம்ப நீ இப்போது தயாராக இல்லை என்பது எனக்குத் தெரியும்; இப்போது பாதி இரவு கழிந்து விட்டது; விடிந்தால் உண்மை புலனாகும். விடிந்தால் உண்டாகும் வெளிச்சத்தை உன்னால் தடுக்க முடியாதல்லவா?'

'என்ன சொல்கிறீர்கள், குருதேவா?'

'ராக்ஷஸன் கொடுத்தது பரிசல்ல, சந்திரா. படுகுழியில் தள்ளத் திட்டமிட்டுச் செய்த மாயா உருவம். அந்தப் பெண்ணைத்தொட்டவர்கள் யாருமே பிழைக்க முடியாது.'

'உண்மையாகவா?'

'ஆமாம். ராக்ஷஸன் அந்தப் பெண்ணை ஏறெடுத்தும் பார்த்தானா? நிலை தவறி எங்கே தொட்டுவிடப்போகிறோமோ என்று ஒதுங்கியே இருந்தான். அதைக் கவனித்தாயா?'

'இல்லையே!'

'அதிருக்கட்டும் சந்திரா, இன்று காலை என்ன நடந்ததென்று உனக்குத்தெரியுமா?'

'மறைத்து வைத்தே பேசுகிறீர்களே, விளக்கமாகக் கூறுங்கள், குருதேவா!'

'சொல்கிறேன் கேள். இந்த விஷக்கன்னியைச் சிருஷ்டித்தது யார் தெரியுமா? தக்ஷசிலத்தில் என்னோடு கல்வி பயின்ற நண்பன் இந்து சர்மாதான். நந்தர்கள் தோல்வியடைவதற்கு நமக்கு உதவிசெய்தவர்களில் அவன்தான் முக்கியமானவன். மௌரியத்தை அழிக்க ராக்ஷஸன் போடும் திட்டங்களில் இது முதலாவது. இந்துசர்மா, ஜீவசித்தி என்ற மாற்றுப் பெயரில் நந்தர்களின் அரண்மனையில் வசித்து வருகிறான். அவன் அதர்வண வேதத்தை நன்கு கற்றவன். எனவே அங்கே அவன் இட்டதே சட்டம். ஜைன மாந்திரீகனாக அவன் அங்கு நடித்து வருகிறான். எல்லாம் உன் நன்மைக்காகத்தான், சந்திரா;'

'இந்துசர்மாவைப்பற்றி என்னிடம் நீங்கள் இதற்கு முன் ஒன்றுமே சொல்லவில்லையே?'

'காலம் வரும்போது நானே சொல்ல மாட்டேனா? அவசரப்படுகிறாயே! இன்று காலை பகவத்கீதை படித்துக் கொண்டிருந்த போது இந்துசர்மா அனுப்பி வைத்த உளவாளி

ஒருவன் வந்தான். மாயக் கன்னியைப் பற்றியும், ராக்ஷஸனின் சதித்திட்டத்தையும் ஆதியோடு அந்தமாகச் சொல்லிவிட்டுப் போனான் அந்த உளவாளி'!

'பாவம், ஜீவசித்தி யாரென்று கூடத்தெரியாமல் திட்டம் உருவாக்குகிறானே!' என்று தன் அனுதாபத்தைக் கேலியாக்கிச் சிரித்தான் சந்திரகுப்தன்.

6

பொழுது விடிந்தது.

கூடாரத்திலுள்ளவர்கள் எல்லோரும் காலைக் கடன்களை எல்லாம் முடித்துவிட்டுச் சபைக்குச் செல்லத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். ஆனால் விடிந்து வெகு நேரமாகியும் பர்வதகேசுவரனின் அறைமட்டும் திறக்கப்படவில்லை. கதிரவனின் கதிர்களில் சூடேறிய பின்னும் கதவு திறக்கப்படாமலிருந்ததால் பர்வதகேசுவரனின் மந்திரிகள் அறைக்கதவைத் தட்டினார்கள். ஆனால் பதிலில்லை. பின்னும் சிறிது நேரம் கழித்துக் கதவைத் தட்டினார்கள். அப்போதும் பதிலில்லை. சந்தேகப்பட்டு அவர்கள் சேவகர்களைக்கொண்டு கதவை இடித்துத் தள்ளினார்கள். அவர்கள் சந்தேகப்பட்டது வீண்போகவில்லை.

வாய் வழியே இரத்தம் சிந்தக் கட்டிலில் உயிரற்றுக் கிடந்தான் பர்வதகேசுவரன். அவன் உடல் நீலம் பூத்திருந்தது. கலவரத்தால் முகம் வெளிறிப்போயிருந்தது. வஸந்த சேனாவைத் தேடினார்கள். அவள் அங்குக் காணப்படவில்லை. இந்தச் செய்தி உடனே சாணக்யருக்கும், சந்திரகுப்தனுக்கும் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து பர்வதகேசுவரனின் பிணத்தைப் பார்வையிட்டார்கள். அதன் பிறகு அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். நடந்தவை ஒன்றுமே தங்களுக்குத் தெரியாது என்ற பாவம் அந்தப் பார்வையில் கலந்திருந்தது.

'இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டாமா, சந்திரா?'

'ஆமாம், நிச்சயம் செய்ய வேண்டியதுதான்' என்று சொல்லிவிட்டு, 'ராக்ஷஸன் பாடலிபுரத்தில் எங்கிருந்தாலும் கைது செய்து வாருங்கள்!' என்று வீரர்களுக்கு உத்தரவிட்டான் சந்திரகுப்தன். வீரர்கள் ராக்ஷஸனைத் தேடிப் புறப்பட்டார்கள்.

மாலையில் வீரர்கள் திரும்புகையில் வெற்றி கிட்டவில்லை என்பதற்கறிகுறியாகத் தலையைத் தாழ்த்தியபடி சந்திரகுப்தனின் முன் வந்து நின்றார்கள்.

'என்ன, ராக்ஷஸன் அகப்படவில்லையா?'

'பாடலிபுரத்திலிருந்து தப்பிவிட்டார், மகாராஜா!' என்று வீரர்கள் பதிலளித்ததும் சந்திரகுப்தன் சாணக்கியரைப் பார்த்தான். சாணக்யர் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருந்தார். 'நீ நினைப்பதுபோல் ராக்ஷஸன் அவ்வளவு சாமானியமானவனல்ல, சந்திரா!' என்று சொல்லும் தோரணையில் இருந்தது அவரது அந்த இளஞ்சிரிப்பு.



# தந்தச் சிலை

ஸி. ஆர். ராஜம்மா

திக்குறிச்சி என்று சொன்னாலே இயற்கையன்னை தான் கண்முன் நடம்புரிவாள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சையாடை போர்த்திய வயல்கள் செழுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும். இந்தப் பக்கம் திரும்பினால் ஓங்கி உயர்ந்த அடர்ந்த தென்னஞ்சோலைகள். மறுபுறம் மா மரங்களும், மற்ற மரங்களுடன் பலா மரமும் சேர்ந்து பெரிய சோலை தென்படும். நான்காவது பக்கம் கரை புரண்டோடும் நீண்ட ஆறு. தன்னை வாய்க்கால் என்ற பெயரில் பிரித்துச்சென்று இத்தனைக்கும் ஜீவநாடியாக இருப்பது அதுதான். எந்தக் கோடைக்கும் வற்றாதது. இந்த நான்கு பக்கங்களுக்கும் நடுவே கம்பீரமாக விளங்குவதுதான் திக்குறிச்சி.

பாளையக்காரனான வீரத்தேவனுக்கு திக்குறிச்சியில் நல்ல செல்வாக்குண்டு. முன்னோர்கள் வைத்துவிட்டுப்போன ஏராளமான ஆஸ்தி இருந்தது. அதன் ஒரே வாரிசான அவன் கண்ணின் கருமணி என வளர்க்கப்பட்டான். வலுவுள்ள கம்பீரமான உடற்கட்டு. நிமிர்ந்த நடை: தீக்ஷண்யமான கண்களும், எடுப்பான நாசியும் யாரையும் அச்சமடையச் செய்வனவாக அமைந்திருந்தன. சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்ட ஒரு குறைவைத் தவிர வேறெவ்விதக் குறைவும் கிடையாது அவனுக்கு, மாமன், பெரிய தந்தை, அத்தை கணவன் என்று சுற்றிலும் வேண்டிய பந்துக்கள் அவனுடைய க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

திக்குறிச்சியின் பிரதான கோவில் ஒன்றில் வருஷந்தோறும் வெகு அழகாக உற்சவம் நடக்கும். ஸ்வாமி ஊர்வலம் வரும்போது விக்ரகத்தின் அருகாமையில் ஒரு நடன மாது நடந்து வருவாள். ஸ்வாமி கோவில் போய்ச் சேர்ந்தவுடன் அவளுடைய நாட்டியம் நடக்கும். அந்த நாட்களில் திக்குறிச்சியில் பிரசித்தமானவளாக விளங்கிய நடன மாது வேதவதி என்பவள். அவளுக்குத் தேவஸ்தானத்திலிருந்து மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட அளவு பணம், நெல், இவைகள் கொடுக்கப்படும். வேதவதியைக் காலதேவன் குருபவதியாக்கிக்கொண்டு வந்தான். அவளால் முன்னைப்போல் நாட்டியமாட முடிவதில்லை.

வேதவதிக்குச் சந்திரிகா என்றொரு பெண் இருந்தாள். வேதவதியின் ஸ்தானம் அவளுக்குக் கிடைத்தது. சந்திரிகா உருவத்தில் தாயை மிஞ்சிவிடக் கூடியவளாக இருந்தாள். அவளுடைய நாட்டியம் முதல் முதல் கோவிலில் நடப்பதாக இருந்தது. இதற்காகத் திக்குறிச்சியின் பாளையக்காரனான வீரத்தேவனுக்கு அழைப்பு வந்தது. இன்னும் ஊரிலுள்ள சில பெரிய மனிதர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தாள் வேதவதி. இது ஆதிநாளிலிருந்தே அவள் குடும்பத்தில் பரம்பரையாக வந்த வழக்கம். ஊரிலுள்ள பெரிய தனக்காரர்கள் நிறைந்திருக்கும் சதஸில் நாட்டியமாடி அவர்களிடமிருந்து பொன்னும், மணியும், பட்டும், பணமும், பெற்றபின்பே மற்ற இடங்களில் நடனமாடலாம். சாதாரணமாக நடனத்துக்குத்தான் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்துக் கவனிப்பார்களேயன்றி நடனமாதின் எண்ணமே அப்பெரியார்களின் மனதில் எழாது.

வீரத்தேவன் அழைப்புக்கிணங்கி தன் மாமனுடன் நடனம் நடக்கும் இடத்திற்குச் சென்றான். சந்திரிகா நடனம் ஆடினாள். தேவமாதரைப்போன்ற அவள் நடனம் யாவரையும் தம் நிலை இழக்கச்செய்தது. கட்டிளம் காளையான வீரத்தேவன் மனம் கட்டை அறுத்தெறிந்து அவள்பால் சென்று சரணாகதியடைந்தது. கடலலையைப்போன்ற சுருள் சுருளான கேசத்தின் முகப்பில் பட்டமும், சுட்டியும் கட்டியிருந்தாள். வகிட்டின் இருபுறமும் சந்திரப்பிரபை. சூரியப்பிரபை பளபளத்தன. கூர்மையான மூக்கில் புல்லாக்கசைய, காதில் குடக்கடுக்கன் அசைய. சுற்றிச் சுழன்று, துள்ளி, தாளம் பிசகாமல் ஆடினாள் சந்திரிகா. அவளுடைய மைதீட்டிய கயல் விழிகளைக்கண்டு மயங்கினான் வீரத்தேவன். அந்தக் கண்ணாடிக் கன்னங்களில் தன்னுடைய உருவம் தோன்றுவது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது அவனுக்கு. மாதவியைக்கண்ட கோவலனைப்போன்ற மனநிலை எய்தினான் வீரத்தேவன்.

இளம் மனைவி பூங்கோதை வீட்டிலிருந்தாள். வீரத்தேவனை மகிழ்விக்கக் குடும்ப பெண்ணான அவளிடம் சந்திரிகாவைப்போலத் தன் கணவனைக் கவரக் கூடிய சக்தி ஏதும் இருக்கவில்லை. சந்திரிகாவின் மினுக்கலிலும். காந்த சக்தி போன்ற நாட்டியத்திலும் தன் மனதைப் பறிகொடுத்த வீரத்தேவன் மெள்ள மெள்ள அவள் வீடு செல்லத்துவங்கினான். பதினெட்டு வயதான சந்திரிகா வீரத்தேவனின் கம்பீரத்தைக் கண்டு மலைத்தாள். தன் கன்னி உள்ளத்தில் அவனை ஏற்றுக்கொண்டாள். இப்படி நடக்குமென்று

வேதவதி சிறிதும் எதிர்பார்க்கவில்லை. திக்குறிச்சியின் பாளையக்காரர்கள் குடும்பம் ஒழுக்கத்திற்குப் பேர்போனது. வீரத்தேவனின் முன்னோர்கள் ஏகபத்னி விரதத்தில் ஸ்ரீ ராமனை ஒத்தவர்கள் என்று சொல்லுவார்கள். அந்த வழியில் வந்த வீரத்தேவன் தன் மகளை நாடி வருவதைக்கண்ட வேதவதிக்குப் பெருமை பிடிபடவில்லை. அதே சமயம் பயமும் மனதில் தலைதூக்கியது. அவள் தன் மகளிடமும் சொன்னாள்.

‘சந்திரிகா, வீரத்தேவனின் குடும்பத்தார்களின் பொல்லாப்புகளுக்கு ஆளாகக்கூடாது. இன்று வீரத்தேவன் உன்னிடம் சிநேகமாக இருக்கிறான். நாளையே அது கசப்பாக மாறினாலும் மாறிவிடும். அப்புறம் நமக்குத் தீவினை வேறு வேண்டாம். சினகிதமுமல்ல, விரோதமுமல்ல என்ற நிலையில் இப்பொழுதே நல்லதனமாக அவனைப் பிரிந்துவிடு’ என்றாளவள். தாயின் சொல் கேட்ட மகள் பெண்புலிபோலச் சீறினாள். அவரைப் பிரிந்தபின் என் உயிர் உடலில் தரியாது என்றாளவள்.

வீரத்தேவன் சந்திரிகாவை விரும்பினான். அவள் வீடு சென்று வந்தான். ஆனால் பகிரங்கமாக இதை வெளிக்காட்டிக்கொள்ள அவன் அஞ்சினான். குடும்பத்திலுள்ள பெரியவர்களும், குடும்பக்கட்டுப்பாடுமாகச் சேர்ந்து அவனை அவ்விதம் ஆக்கிவிட்டன. ஊருக்கு ஒதுக்குப்புறமான பெரிய தோட்டமொன்றில் சந்திரிகாவுக்கு வீடமைத்துக் கொடுத்தான் வீரத்தேவன். பெரும்பாலான நாட்கள் சந்திரிகாவின் வீடே கதிஎன்று இருப்பதில்லை அவனென்றாலும், அவள் வீட்டிற்கு ஒரு நாள்கூட அவன் போகாமல் இருந்ததே இல்லை. ஆனாலும் இந்த விஷயம் யாருக்கும் தெரியாமல் இல்லை. ஊரறிந்த ரகசியமாகவே இருந்துவந்தது. வீரத்தேவன் மனைவி பூங்கோதைக்குத் தன் கணவன் இப்படி இருப்பதில் மிகவும் துயரமேற்பட்டது. அவள் வெளிப்படையாகத் தன் கணவனிடம் இதைக் காட்டிய போது அவன் அதை அசட்டை செய்ததோடு, அவளையே அசட்டை செய்தான். இதனால் வெகுண்டெழுந்த பூங்கோதை, சந்திரிகாவின் வைரியானாள். ஆனால் அவள் விரோதபாவத்தைக் காரியாம்சத்தில் காட்டமுடியவில்லை.

முதல் முதல் பலர் கூடியிருந்த சபையில் நடனம் ஆடினபின் அவள் மறுமுறை சபையில் நடனம் ஆடவே முடியவில்லை. சாதாரண நாட்டியக் கச்சேரிகளுக்கு அவள் போகக்கூடாது என்று வீரத்தேவன் சொல்லிவிட்டான். கோவில் உத்சவத்தின்போதும் அவள் நடனம் ஆடக்கூடாது என்று அவன்தான் தடுத்திருக்கவேண்டும். அதற்குப்பின் எத்தனையோ முறை உத்சவம் வந்துபோயின. சந்திரிகா ஆடவில்லை. வேதவதி எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்தாள். தனம் படைத்தவர்கள் நட்பு நீர்க்குமுழி போன்றது. வீரத்தேவன் சொல்லைக் கேட்டுக் கொண்டு, நமக்குப் பரம்பரையாகத் தொடர்ந்து வரும் அந்தஸ்தை விடுவதா? என்றாள். மகள் மசியவில்லை. உத்சவம் வந்த ஒவ்வொரு வருஷமும் வேதவதி தன் மகளுக்கு உடம்பு சரியில்லை என்று வெளியில் சொல்லிக்கொண்டு தன் உறவினர்கள் பெண்கள் யார் யாரையோ வெளியூரிலிருந்து அழைத்து வந்து நடனமாடச் செய்து, தன் அந்தப் பதவி போகாமல் காப்பாற்றி வந்தாள். சந்திரிகா தினம் தினம் நடனமாடத்தான் செய்தாள். ஆனால் கண்டு களித்தவன் வீரத்தேவன் ஒருவன்தான்.

திடீரென்று ஒரு நாள் வீரத்தேவன் சந்திரிகாவின் வீட்டிற்கு வராமல் நின்றான். சந்திரிகா மனது துடித்தாள்; பதறினாள்; அல்லிக்கொடி போலத் துவண்டு மஞ்சத்தில் வீழ்ந்தாள். ஆதவனைக்கண்ட ஆம்பல் போலச் சாம்பியது அவள் வதனம். அந்த ஒரு நாளே இரண்டாகி, மூன்றும் நாளும் வந்து, நான்காவது நாளும் ஆயிற்று. வீரத்தேவன் வரவில்லை. சந்திரிகா பதற்றமடைந்த தன் மனதைச் சிரமத்துடன் தேற்றிச் சிந்தித்தாள். வீரத்தேவன் தன்னை மறந்துவிடுவான்—அல்லது, தன்னிடம் அவனுக்கு வெறுப்பேற்பட்டுவிடும், என்பதெல்லாம் நடக்கக்கூடாத விஷயங்கள். வீரத்தேவனுக்கு உடம்புதான் சரியில்லாமல் இருக்கவேண்டும். தன் வீட்டைவிட்டு எழுந்து வெளிவரக்கூடிய தெம்பு சிறிதளவேனும் இருந்திருந்தால் தன் வீடு தேடி அவன் வராமலிருக்கமாட்டான். இவ்வாறெண்ணிய அவள் மனம் முன்னைவிடக் கலக்கமடைந்தது. வீரத்தேவன் உடல் நலம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமே என்று தன் இஷ்ட தெய்வங்களையெல்லாம் பிரார்த்தித்தாள். நிலைகொள்ளாமல் தவித்த அவள், கடைசியில் அவனுக்கு ஒரு கடிதமெழுதி வேலையாள் மூலம் கொடுத்தனுப்பினாள். வீரத்தேவனைத் தவிர இந்தக் கடிதத்தை வேறு யாரிடமும் கொடுக்கக்கூடாது என்று அவனுக்குக் கட்டளை.

சந்திரிகாவின் வேலையாள் சென்றபோது தோட்டத்தில் பூக் கொய்துகொண்டிருந்தாள் பூங்கோதை. தயங்கித் தயங்கிவந்த அவனை அவள்தான் முதலில் கவனித்தாள். சந்திரிகாவிடமிருந்து அவன் கடிதம் கொண்டுவந்திருக்கிறான் என்று அறிந்தபோது அவள் மனம் பலவேறு உணர்ச்சிகளுக்கு உள்ளாயிற்று. அவனிடம் ஒரு சிறு பண்முடிப்பைக் கொடுத்துக் கடிதத்தைப் பெற்ற அவள் வேகமாக உள்ளே சென்று படபடத்த இதயத்தோடு படித்தாள்.

அன்பா,

நான்கு நாட்களாகத் தங்கள் வரவு காணாமல் மழையில்லாப் பயிரைப்போலும், நிலவில்லா இரவைப்போலும் தெம்பிழந்து கிடக்கிறது என்னுள்ளம். தங்கள் உடம்புக்கென்ன? என்னவாக இருந்தாலும், சீக்கிரத்தி

லேயே குணமாகி அடிமையின் அன்பை ஏற்றுக்கொள்ளவரும் நாளை எதிர்பார்க்கிறேன்.

சந்திரிகா.

முத்து, முத்தான நான்கே வரிகள் கொண்ட இந்தக் கடிதம் ஆயிரமாயிரம் விஷப் பூச்சிகள் சேர்ந்து தன்னைக் கடிக்க வருவது போன்ற பிரமை உண்டாக்கியது பூங்கோதைக்கு. இத்தனை நாட்களும் அவள் கொண்டிருந்த பொறாமைத்தீ எரிமலை போலக் குமுறி வெடித்தது. தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பம் வந்துவிட்டது என்பதை அறிந்த அவள் அதற்கு மறு கடிதம் எழுதிக்கொடுத்தனுப்பினாள். பலாத்காரமாக என்னிடமிருந்து கடிதம் பறித்துக்கொள்ளப்பட்டது. வீரத்தேவன் மனைவி சிறிது நேரத்தில் இந்தக் கடிதத்தை எழுதித் தந்தார். தலைதப்பினால் போதுமென்று எடுத்துக்கொண்டு ஓடிவந்தேன் எனக்கூறினான் வேலைக்காரன். பூங்கோதைதான் இப்படிச் சொல்லும்படி சொல்லிக் கொடுத்திருக்கவேண்டும். கடிதத்தைப் படித்த சந்திரிகாவின் கண்களிலிருந்து கட்டுக்கடங்காமல் கண்ணீர் வெள்ளம் வெளிப்பட்டது. அதைத் துடைக்கவும் மறந்தவள்போலச் சிந்தனைச் சிலையாகச் சமைந்தாளவள்.

என் சுக வாழ்வுக்குத் தீங்கு விளைவிக்க வந்த நாசகாரியே, என் கணவருக்கு என் வீட்டிற்கே கடிதமனுப்ப உனக்கெவ்வளவு துணிச்சல் வேண்டும். என் கணவர் உடல் நலமில்லாமலிருந்தாலும் நாட்டியப் பெண்ணான உன் வீட்டிலா படுத்துக்கொண்டிருப்பார். எங்கள் குடும்ப வைத்தியனும், சுற்றத்தாரும், ஏறெடுத்துப் பார்க்கவும் அஞ்சும் உன் வீட்டையா அவர் இருப்பிடமாகக்கொள்வார். புத்தியற்ற பதரே, திக்குறிச்சியின் பாளையக்காரர் மனைவி என்று என்னைத்தான் ஊரார் சொல்வார்கள்; உன்னையல்ல. சுற்றத்தார் சூழ்ந்த பெரிய விசேஷங்களில் என்னுடன்தான் அவர் இருப்பார், உன்னுடனல்ல. க்ஷணகாலம் தன்நினைப்பிழந்து, மோக வலையில் சிக்கிய அவரை, கணவன் என்ற முறையில் என்றென்றும் நீ உரிமை பாராட்ட முடியுமா? என்னை அவர் வெறுத்தாலும் எனக்கந்த உரிமை இருக்கிறது. இதை உனக்கு உணர்த்தும் தருணம் எனக்கு இப்பொழுது கிடைத்தது. இனி மேலாவது இதைத் தெரிந்துகொண்டு அவர்மேலுள்ள பிடியை விடு.

பூங்கோதை.

வேதவதி அங்கே வந்தாள். தன் மகளின் மன நிலையையும் கடிதத்தின் விஷயங்களையும் அறிந்தாள். இனிமேலாவது வீரத்தேவனின் மேல் தன் மகள் கொண்ட அன்பு விட்டுப் போய், தன் சொற்படி நடக்கமாட்டாளா என்ற எண்ணம் எழுந்தது அவளுக்கு. அன்புடன் அவளை அணைத்து அழைத்துச்சென்று ஊஞ்சலில் உட்கார்த்திய அவள் வெகுவாகத் தேறுதல் மொழிகள் கூறினாள். தாயின் மடியில் படுத்து, விம்மி விம்மி அழுதாள் சந்திரிகா. ‘அழாதே சந்திரிகா. இந்தப் பாளையக்காரரின் உறவு உனக்கு இனி வேண்டாம்’ என்றாள் வேதவதி. ‘அம்மா, அவருடைய மனைவி துவேஷத்தினால் என்னை இகழ்மொழிகள் கூறி இருக்கலாம். அவருக்கு என்னிடம் ஒருநாளும் அன்புமாறாது என்றாள் சந்திரிகா. மகளின் இந்த பிடிவாதம் வேதவதியைச் சினம் கொள்ளச் செய்தது.’ ‘பயித்தியக்காரப் பெண்ணே, நீ தான் உன் குல கௌரவத்தைக் கை கழுவ விட்டுவிட்டாய், வீரத்தேவனுக்காக வேண்டி. ஆனால் வீரத்தேவன் ஒரு நாளும் உனக்காக வேண்டி, தன் குல கௌரவத்தைப் பாழ்படுத்த விரும்ப மாட்டான். நான்கு பெரிய மனிதர்கள்கூடி இருக்குமிடத்தில் உன்னை அழைத்துக்கொண்டு வீரத்தேவன் ஒருகாலும் போக மாட்டான். என்னுடைய அன்புக்குப் பாத்தியமானவள் இவள் என்பதைத் தன் உற்ற நண்பனுக்குக்கூடத் தெரிவித்துக் கொள்ளமாட்டான் வீரத்தேவன். இந்த உரிமை எல்லாம் அவன் மனைவி பூங்கோதைக்குத்தான் உண்டு. அவள் எழுதியிருப்பதில் ஒருவிதமான தவறுமில்லை’ என்றாள் வேதவதி.

சந்திரிகா மனப்பாரம் சிறிது நீங்கப் பெற்றபின் சிந்தித்தாள். பூங்கோதை சொல்வதிலும், வேதவதி சொல்வதிலும் உண்மை இருக்கலாமோ, என அவள் மனம் ஐயமுற்றது. வீரத்தேவனை நினைத்தபோது அந்த ஐயப்பாடு பெருங்காற்றிலகப்பட்ட பஞ்சைப்போலப் பறந்துபோனது. ‘உனக்காக உயிரையும் கொடுக்கிறேன்.’ என்று சொன்ன வீரத்தேவன்மேல் சந்தேகம் கொள்வது தவறு என உணர்ந்தாளவள். எதற்கும் வீரத்தேவன் வந்தவுடன் இதைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வர எண்ணினாள் சந்திரிகா.

அருகிலுள்ள ஒரு கிராமத்தில் தனக்குச் சொந்தமான நிலமொன்றில் வேலை செய்துகொண்டிருந்த உழவர்களிடையே சண்டை மூண்டு அது பலமாகி விட்டது. இந்தச் செய்தி வரும்போது வீரத்தேவன் தன் வீட்டிலிருந்தான். அவனே நேரில் சென்று நிலைமையைச் சமரசத்துக்குக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அதனால் சந்திரிகாவுக்குத் தகவல் தெரிவிக்கக்கூட அவகாசமில்லாமல் போய்விட்டது. போன இடத்தில் நான்கு நாட்கள் தவக்கமும் ஏற்பட்டுவிட்டது. வேலை முடிந்து திரும்பிய வீரத்தேவன் ஆவலே வடிவாகச் சந்திரிகாவைக் காண விரைந்தான்.

அணைபோட்டு வைத்திருந்த தன் அன்பைத் திறந்து காட்டி அவனை வரவேற்றாள் சந்திரிகா. நான்கு நாட்களுக்குப் பிறகு ஜல்...ஜல்...என்ற சதங்கை ஒலியும், தம்...திம்...என்ற மிருதங்க ஒலியும் அந்த வீட்டில்

கேட்டன. அதி அற்புதமாக நடனமாடி வீரத் தேவனைக் களிப்பித்தாள் அவள். அவன் சற்று ஓய்வு எடுத்துக்கொண்டபின்பே தன் எண்ணத்தை வெளியிட்டாள். அவள் வார்த்தையைக்கேட்டு அதிர்ச்சியடைந்து போனான் வீரத்தேவன். தன் நிலைக்கு வரச் சிறிது நேரம் பிடித்தது. 'சந்திரிகா, இத்தனை நாளுமில்லாமல் இப்பொழுது அன்பின் மேல் உனக்குச் சந்தேகம் விழுவானேன்? நான் பல பேர் முன்னிலையில் உன்னை வெளியே அழைத்துக்கொண்டு போனால்தான், உன்னிடம் எனக்கு உண்மையான நேசமிருக்கிறது என்று அர்த்தமா?' சற்றுக் கோபத்தோடும், பரிவோடும், கலந்து பேசினான் வீரத்தேவன்.

'நான் அப்படிச்சொல்லவில்லை. ஒரே ஒரு முறை என்னை உங்களுடன் வெளியே அழைத்துச் செல்லுங்கள். அப்படிப்போக வேண்டுமென ஆசையாக இருக்கிறது.' என்று தன் எண்ணத்தை மறைத்துக் குழைந்து பேசினாள் சந்திரிகா.

'முடியாது சந்திரிகா. இந்த அசட்டுத்தனமான ஆசையை விட்டுவிடு.'

'முடியாதா,'

'முடியாது. பலபேர் முன்னிலையில் உன்னுடன் செல்வதால் எனக்கும் மதிப்பில்லை. உனக்கும் மதிப்பிருக்காது.'

தனக்குத் தீங்கு விளைவிக்க முற்படும் எதிரியைக் கண்ட சர்ப்பம்போலச் சீறி எழுந்தாள் சந்திரிகா. கோபத்தினாலும், துயரச் சம்பவம் நடப்பதற்கறிகுறியாலும் அவள் உடலின் வலது பக்கம் முழுவதும் துடித்தன. கண்கள் ரத்தமெனச் சிவந்தன. 'உனக்காக என் உயிரையும் கொடுக்கத் தயார்.' என்று நீங்கள் ஒருமுறை சொன்னீர்களே. மறந்துவிட்டீர்களா,' என்றாளவள்.

'இல்லை, சந்திரிகா இப்பொழுதும் சொல்கிறேன். ஆனால் அதைவிட மேலானது என் குடும்ப கௌரவம். நான் மறைந்தாலும், திக்குறிச்சியின் பாளையக்காரன் வீரத்தேவன் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் ஒரு நாட்டிய மாதுடன் சுற்றினான் என்ற சொல் மறையாது. அதை நான் விரும்பவில்லை சந்திரிகா'

'ஐய்யோ! உங்களை நம்பி என் வாழ்வைக் கெடுத்துக் கொண்டேனே! என்று விம்மியழத் துவக்கினாள் சந்திரிகா. அவளுடைய இந்தப் பேச்சு வீரத்தேவனின் கோபத்தை மலைபோல வளரச் செய்தது. 'உன் வாழ்வு எந்த விதத்தில் கெட்டுப் போய்விட்டது சந்திரிகா? என் முன்னோர்களின் விலை உயர்ந்த வைர நகைகளையும், விலை மதிப்பிட முடியாத நவரத்தினங்களையும் உனக்காகக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறேனே. ஒரு ராணியைப்போல நீ வாழ வழி செய்து தந்திருக்கிறேனே; உனக்கு எதில் குறைவு?' என்று கர்ஜித்தான் வீரத்தேவன்.

அவனுடைய பேச்சுக்குச் சிறிதும் பின்வாங்கவில்லை சந்திரிகா. 'உங்களுடைய இந்தப் பொருள்கள் இல்லாவிட்டால் நான் பிச்சைதான் எடுக்க வேண்டியிருக்கும் என்பது உங்கள் எண்ணம்போலும். என் தாயார் வழியில் எனக்குப் போதுமான ஆஸ்தி இருக்கிறது. பொன்னைக்காட்டி என்னை ஏமாற்றி விட்டதாக எண்ண வேண்டாம். என் குடும்பத்தினர் பரம்பரையாகக் கற்று, புகழ்பெற்றுவந்த நாட்டியக் கலையை உங்கள் ஒருவருடைய மகிழ்ச்சிக்காக வேண்டி, தியாகம் செய்தேன். எனக்குக் கிடைக்க வேண்டிய புகழைக் காற்றில் பறக்க விட்டேன். எதற்காக வேண்டி. உங்களுடைய நயவஞ்சகப் பேச்சுகளுக்காக வேண்டி........' சந்திரிகா பேசிமுடிக்குமுன் தன்னிருப்பிடத்தை விட்டு வெகுவேகமாக எழுந்த வீரத்தேவன், 'சந்திரிகா நீ உன் இஷ்டப்படி நடக்கலாம். நான் எந்தவிதத்திலும் உன்னை இனிக்கட்டுப்படுத்த மாட்டேன். என்னை நீ இங்கே எதிர்பார்க்காதே.' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறிவிட்டு வாசல்புறம் விரைந்தான். 'இது நான் எதிர்பார்த்ததுதான். புது மலரில் தேன் ஆகிவிட்டால் அங்கே வண்டுக்கு வேலை என்ன?' என்று சந்திரிகா ஆத்திரத்தோடு கூறுவது அவன் காதில் கேளாமல் போகவில்லை.

பஞ்சமி சந்திரன் வானத்தில் தோன்றினான். மெள்ள மெள்ள நாளுக்கு நாள் வளர்ந்து வட்டவடிவமானான். வீரத்தேவன் சந்திரிகாவின் வீட்டிற்குப்போகாமலேயே பதினைந்து நாட்கள் வந்துபோய் விட்டன. அவன் மனம் பலவித உணர்ச்சிகளினால் திக்கித் திணறிக்கொண்டிருந்தது. கடைசியில் சந்திரிகா தன்னை இப்படிச் செய்துவிட்டாளே. தான் தன் சொத்தை எல்லாம் இழந்து கடனாளியாகிக் கொண்டு வருவது சந்திரிகாவுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதனால் ஏதோ ஒருவிதமாகச் சண்டை போட்டுத் தன்னுடைய சிநேகத்தைத் துண்டித்துக்கொண்டுவிட்டாள் என்ற எண்ணம் எழுந்தபோது அவன் நெஞ்சமெல்லாம் பற்றி எரிந்தது. ஒரு வாரத்திற்குப் பின் இந்த எண்ணம் மெல்ல மெல்ல மறைந்தது. சந்திரிகா ஒருநாளும் எனக்குத் துரோகம் செய்யமாட்டாள். அவள் சொல்வதில் என்ன குற்றமிருக்கிறது? குடும்ப கௌரவம்' வீணாகிவிடுமே என்பதற்காக அவளுடைய அற்ப ஆசையை நிர்த்தாக்ஷண்யமாக நிராகரித்தது எவ்வளவு தவறு. இவ்வாறு எண்ணிய அவன் கடைசியில் சந்திரிகாவின் வீட்டிற்குச் செல்வது என்ற முடிவுக்கு வந்தான். இந்த முடிவுக்கு வந்த அன்றைய தினமே பேரிடிபோன்ற ஒரு விஷயம் அவன் காதுகளில் விழுந்தது.

திக்குறிச்சியில் பெயரும் புகழும் பெற்றவன் நந்தனன். அமரத்தன்மை ரக அற்புத சிற்பங்

களைப் படைப்பதில் அவனுக்கு நிகர் திக்குறிச்சியில் யாருமே கிடையாது. தந்தத்தினாலான அனேகவிதமான சிற்பங்களைப் பாளையக்காரர் வீட்டில் அழகழகாகச் செதுக்கி, அங்கங்கே வைத்திருக்கிறான் அவன். நந்தனன் இப்பொழுது பெரும்பாலானநேரத்தைச் சந்திரிகாவின் வீட்டிலேயே கழிக்கிறான் என்ற விஷயம்தான் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது வீரத்தேவனுக்கு. தனக்குரிமையான சந்திரிகா இன்னொருவனை நினைக்கிறாள் என்ற எண்ணமே ஆத்திரத்தைக் கிளப்பியது அவனுக்கு. உதட்டைக் கடித்துக் கைகளைத் தேய்த்துக் கோபத்தை அடக்க முயற்சித்தான் அவன். சந்திரிகாவின் உருவத்தை — அவள் நினைவை, அவளுடைய இனிய குரலொலியைத் தன் மனதை விட்டு மறக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டான். அவள் தன் அன்புக் காணிக்கையாகக் கொடுத்த பொருள்களை எல்லாம் தன் கண்பார்வையிலிருந்து அகற்றினான்.

வளர்மதி கழிந்து தேய்பிறை ஆரம்பமாகி விட்டது. கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமியன்று இரவு வீரத் தேவனுக்கு வேதவதியிடமிருந்து அழைப்பு வந்தது. தன்னையழைக்கவந்த வேலைக்காரனை விரோதியாகப் பாவித்து வெகுண்டெழுந்தான் அவன். வேதவதியின் கடிதத்தைப் படித்த அவன் கனல் கக்கும் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. சூரியனைக்கண்ட பனிபோல அவன் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. 'சந்திரிகா உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கிறாள். கடைசி முறையாகத் தங்களைக் காண ஆவல் கொள்கிறாள்.' இரண்டே வரிகள்கொண்ட இந்தக் கடிதம் வீரத்தேவனை ஆவேசம் கொள்ளச் செய்தது. ஏதோ ஒருவித சக்தி உந்தித் தள்ள வண்டியிலேறி அமர்ந்த அவன் அதி வேகமாகச் சந்திரிகாவின் வீட்டிற்கு விரைந்தான்.

வேருடன் பறிக்கப்பட்ட கொடிபோலத் துவண்டு படுக்கையில் படுத்திருந்தாள் சந்திரிகா. அருகில் நந்தனனும், வேதவதியும் கவலையே உருவாக நின்றிருந்தனர். அதி வேகமாகச் சென்ற வீரத்தேவன் சற்றே தயங்கி இரண்டடி பின்னுக்கெடுத்து வைத்தான். பழைய சந்தேகம் திடீரென்று மனதில் பளிச்சிட்டது. 'வாருங்கள்.' என்று மெல்லிய ஈனஸ்வரத்தில் வரவேற்புக் கூறினாள் சந்திரிகா. வீரத்தேவனுக்கு வணக்கம் செலுத்திய நந்தனன் அவ்விடம் விட்டகன்றான். முகத்தில் தோன்றிய அருவருப்பை மறைக்க முயன்று கொண்டே அவளருகில் வேண்டா வெறுப்பாக அமர்ந்தான் வீரத்தேவன்.

சந்திரிகா மெல்லச் சிரித்தாள். 'நான் தெரியாத்தனமாக ஏதேதோ உங்களிடம் பேசிவிட்டேன். அதற்காக என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களுடைய அன்பில்லாமல் என்னால் ஜீவிக்கமுடியாது. இதோ என் உயிர் போய்க்கொண்டிருக்கிறது. மனைவி என்ற உரிமை பூங்கோதை யவர்களுக்குத்தான் உண்டு. அவரை அன்புடன் நடத்துங்கள். நந்தனனைப் பற்றியும், என்னைப்பற்றியும் ஊரில் பேசுவது எனக்குத் தெரியாததல்ல. கலையுள்ளத்தை, கலையுள்ளம்தான் அறியமுடியும். அதோ நந்தனன் வெகு சிரமப்பட்டுச் சிருஷ்டி செய்திருக்கும் அந்தச் சிலையைப் பாருங்கள். இதற்காக வேண்டியே இரவு பகல் என் வீட்டிலேயே அவர் தங்கியிருந்தார். காலத்தால் அழிக்க முடியாத அந்தப் பதுமை தூய்மையான அன்புக்கோர் எடுத்துக்காட்டாக இருக்கட்டும். என் சொத்துக்களை முழுதும் உங்கள் பெயருக்கு மாற்றியிருக்கிறேன்...' மேற்கொண்டும் பேசமுடியாமல் சந்திரிகாவின் நாக் குழறியது. அன்புடன் அவள் தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்ட வீரத்தேவன் அவள் சுட்டிக்காட்டிய திசையைப் பார்த்தான். அங்கே வெகு அழகாக அருமையான வேலைப்பாடுகளுடன் தந்தத்தினால் செதுக்கப்பட்ட வீரத்தேவன் சிலை இருந்தது. அவன் பாதத்தில் சந்திரிகாவின் உருவச்சிலை கரம் குவித்துச் சிரம் தாழ்த்தி அமர்ந்திருந்தது. சந்திரிகா நீ தூய்மையானவள் என்று கதறினான் வீரத்தேவன். ஆனால் சந்திரிகா இந்த உலகத்தை விட்டே போய்விட்டாள்.

பூங்கோதையின் பூஜையறையில் பிரதானமான பீடத்தில் சிலை ஸ்திரமாக இருக்க ஆரம்பித்தது. தன் வாழ்வை வளமாக்கிய அந்தத் தெய்வீக நாட்டியப் பெண்ணை அவள் தினமும் வணங்கி வருகிறாள்.



# திரு உள்ளம்

எஸ்ஜி

ஆடி மாதத்துக் காற்று அந்தச் சின்னஞ்சிறு கிராமத்திலே கூட அந்த நள்ளிரவில் ஒரு தனிப்பட்ட கலகலப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. பேராசிரியர் பஞ்சாபகேச சர்மா எவ்வளவோ தூங்க முயன்றும்கூட இயலாமல் எல்லையில்லாச் சிந்தனைக் கடலுக்கு ஊடே தவித்துக்கொண்டிருந்தார். ஐந்து மைல்களுக்கப்பால் இருந்த காலேஜில் மனோ தத்துவப் பேராசிரியராக இருந்த அவருக்கே இந்த நிலையென்றால்? மனிதனுடைய சிந்தனைகள் அவனுடைய உள்ளத்தின் உறுதியை அடிப்படையாகக்கொண்டவை என்று எத்தனையோ பேர்களுக்குச் சொல்லிக்கொடுத்திருந்த போதிலும்கூட அவருடைய மனமென்னும் புறா இஷ்டப்படி ஆடிக் காற்றிலே பறந்துகொண்டிருந்தது.

சை! என்ன பாழும் யோசனை வேண்டிக் கிடக்கிறது? என்று எழுந்திருந்தார். ஒரு துண்டை மட்டும் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரையை நோக்கி நடந்தார். அங்குப் போனாலாகிலும் இந்தக் குழப்பம் தொலையாதா? அவர் அங்குச் செல்ல விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவரது கால்கள் அவரை அறியாமலேயே ஆற்றங்கரையை நோக்கி இழுத்துச் சென்றன.

அழகான சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து ஆற்றங்கரையிலே ஒய்யாரமாக அமைந்திருந்தது அந்தப் பாழடைந்த சிவன் கோவில்.

உருக்குலைந்து அழிந்துவிட்டால் தெய்வத்தைக்கூட மனிதன் அலக்ஷியப்படுத்துகிறான் என்று மனத்திற்குள்ளே சிந்தித்துக்கொண்டார் சர்மா. இடிந்த வாயில்களின் வழியே பிள்ளையார் சந்நிதியை அடைந்தார். தம்மை மறந்து ஒரு கண நேரம் அங்கே நின்றுவிட்டு அப்படியே ஒரு ஓரத்தில் துண்டை விரித்துவிட்டுப் படுத்துக்கொண்டார். சிந்தித்துச் சிந்தித்து மூளையைக் குழப்பிக்கொண்டதாலோ என்னவோ சற்று நேரத்தில் அயர்ந்து தூங்கிவிட்டார். பக்கத்து மண்டபத்தில் தலைகீழாகத்தொங்கும் வௌவால்கள் அவரை ஆச்சரியத்துடன் தான் நோக்கியிருக்கவேண்டும். அந்தக் கோவிலுக்குக்கூட ஒரு பிரயாணி வருவது ஆச்சரியமே அல்லவா?

'உங்களைத்தானே, சௌக்கியமா?' என்று யாரோ அழைப்பது கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் சர்மா.

ஆம்! சாக்ஷாத் பிள்ளையார் சிரித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். சர்மா சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார்.

'பிரச்னைக்கு முடிவு கண்டீரா?' இது பிள்ளையாரின் கேள்வி.

சர்மாவுக்குச் சந்தேகம் பிறந்துவிட்டது. தம் உள்ளத்துப் போராட்டம் இந்தப் பொல்லாத பிள்ளையாருக்கு எப்படித் தெரிந்தது?

அவருக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். அவரது திடமான உடல் அவருடைய அகண்ட அறிவுக்கு அணிகலனாக அமைந்திருந்தது. ஆனால் அவருக்குத் திருமணம் ஆகாதது அக்கம்பக்கத்துச் சுற்று வட்டாரத்திலே ஒரு பரபரப்பை உண்டாக்கியிருந்தது. அரட்டை மேடைகள் அவரைப்பற்றி மனம் போனபடியெல்லாம் பேசின.

'அவர் ,ஐடியா'வே தனி ஐயா, தனி! அவர் ஒரு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அது முடிந்தபோதுதான் கலியாணம் செய்து கொள்வாராக்கும்!' என்று மிராசுதார் மகாதேவய்யர் சரடு விடுவார்.

ஆனால் அந்தச் சரட்டிலும்கூட ஒரு உண்மை இருக்கத்தான் செய்தது. மனிதன் திருமணம் செய்துகொள்ளுவதால் ஏற்படும் விளைவுகளையும் பந்தத்தையும், சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்படவிருக்கும் தடைகளையும், சம்சாரியின் சஞ்சல வாழ்வினையும் எண்ணிப்பார்த்த சர்மா 'மனிதன் திருமணம் செய்துகொள்ளத்தான் வேண்டுமா?' என்ற தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். படைப்பின் நோக்கம், வாழ்வின் சித்தாந்தம் இவற்றையெல்லாம் துருவித் துருவி ஆராய்வதிலேயே அவர் தம் காலத்தைச் செலவிட்டார். அவரை இந்த ஆராய்ச்சிக்கு அனுமதியாமல் உலகம் அவர்மீது ஜாதக அம்புகளை எய்தவண்ணம் இருந்தது. கலியாண மார்க்கட்டுக்கு அவர்மீதும் ஒரு கண்தான்.

சர்மாவுக்கு ஒரே எரிச்சல். யாரைப் பார்த்தாலுமா 'எப்போ கலியாணம்' என்ற அசட்டுக் கேள்வி? இந்தப் பாழும் கல்யாணம் இல்லாமல் மானிட ஜாதி வாழமுடியாதா? இந்த விவாதம் அவரை மற்ற தத்துவ விசாரங்களுக்குச் சிந்தனை செலுத்த இடம் கொடுக்கவில்லை.

பிள்ளையார் சிந்தனையைக் கலைத்தார்:

'ஓய் சர்மா, நான் சொல்வதைக் கேளும். நித்திய பிரமசாரியாக வாழும் நான் எவ்வளவு மகிழ்ச்சியுடன் வாழ்கிறேன் தெரியுமா? ஏன் அவசியமில்லாத ஒன்றைப்பற்றி அலட்டிக்கொள்கிறீர்? ஊரார் கிடக்கிறார்கள். கல்யாணத்தன்று கூடிச்சிரித்து, கும்மாளமடித்து விட்டுப் போகும் ஆசாமிகள் தானே அவர்கள்? பிறகு திருமணம் என்பது வாழ்வுப் பாதையிலே போடப்பட்ட மாய முட்டுக்கட்டை. அதைப் பார்த்து மயங்காமல் கடந்து சென்றால்தான் உண்மையான உலகத்தைக் காணமுடியும். ஆம், அதைக் கண்டவன் நான், புரிகிறதா?

சர்மாவின் புருவம் நெரிந்தது.'

'பிள்ளையாரே, நீர் இப்படி இருப்பதால் என்ன மகிழ்ச்சியைக் கண்டுவிட்டீர்?'

'என்ன மகிழ்ச்சியா? நல்ல போடு போட்டீர்! என்னுடைய தம்பியைப் பற்றி ஊர்



உலகமெல்லாம் என்னவெல்லாமோ கதைகள் சொல்லவில்லே? என்னைப் பற்றி ஒரு வார்த்தை, ஊஹூம், மருந்துக்குக்கூட இல்லே. கோவிலில் முதலில் என்னை வைத்து என்னை வணங்குவதன் தத்துவம் உமக்குத் தெரியாவிட்டால் நான் சொல்கிறேன். நான் பிரமசாரி; வாழ்வின் உன்னத தத்துவத்தை முதலில் கண்டு வெற்றிபெற்ற வீரன், ஆக, முதலிடம் எனக்கு.'

சர்மா மிரள மிரள விழித்தார்.

'சிந்தித்துப் பாரும் மனிதனுக்குச் சிந்தனையும் சக்தியும், பொருளும் வாழ்வும் கொடுத்து இஷ்டப்படி இருக்க ஆண்டவன் வசதி அளிக்கிருன். இவ்வளவையும் வைத்துக்கொண்டு மனிதன் இன்னும் துன்பம் என்ற சொல்லேத் துடைக்க முடியாமல் தவிக்கிருன். ஏன் தெரியுமா? திருமணந் தான் இதற்குக் காரணம். அவ்வளவு தூரம் போவானேன்! இதோ இந்தக் காலத்து அறிவுலகமெல்லாம் கடைசியில் மனித அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற் குத்தானே வந்து நிற்கிறது?'

சர்மாவுக்கு இருப்புக்கொள்ளவில்லே. எழுந்திருந்து பிள்ளேயாருக்கருகில் செல்ல



முயன்ருர். தடால் என்ற பேரிடி. தலேயில் பலத்த காயம். எங்கோ முட்டிக் கொண்டு விட்டார். பாழும் தூண் ஒன்று அவர் முன் நின்றது. அங்கே பழைய பிள்ளேயார் சிலே அசையாமல் நின்று கொண்டிருந்தது.

கண்ணேக் கசக்கிக்கொண்டு துண்டை எடுத்துக்கொண்டார். ஊஹூம் இன்னும் இடத்தை மாற்றிப்பார்த்தாலாவது தூக்கம் வராதா? வேலன் சந்நிதிக்கு மேற்கூரையில்லே. பக்கத்தில் ஆலமரம். சரி, இது தான் தக்க இடமென்று படுத்துக்கொண்டார்.

புது வெள்ளம் நுரையுடன் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்தது. ஆற்றின் சல சலப்பு, ஆலமரத்து இலேகளின் கல கலப்பு – இவைதான் அங்கு எதிரொலித்துக்கொண்டிருந்தன.

அட! திடீரென்று அங்கே ஏது பெண்ணின் வெண்கலச் சிரிப்பொலி? சர்மா ஆச்சரியத்தால் துள்ளிக்குதித்தார். வெகு நாளேய காதலர்கள் ஆற்றோரத்து ஆலமரத்துக்குப் பக்கத்தில் வேலன் சந்நிதியில் சந்திப்பதாக ஒப்பந்தம் செய்துள்ளார்களோ?

அசட்டுச் சபலம் சர்மாவை எட்டிப் பார்க்கத் தூண்டியது. என்ன இருந்தாலும் மனித உள்ளந்தானே? இவர் பார்த்த கணமே அந்த அழகனும் அழகியும் இவரைப் பார்த்து விட்டனர்.

'ஓஹோ! சர்மாவா, வாருமையா வாரும்; என்ன, உங்கள் பிரச்னேக்கு உருக்கொடுத்தீர்களா, சொல்லுங்கள் பார்க்கலாம்!'

சர்மா உற்றுக் கவனித்தார். நெற்றியில் விபூதி. கையில்வேல். மயக்கும் திருமேனி. சாக்ஷாத் வேலனேதான்!

'வள்ளி, நீ அடிக்கடி கேட்பாயல்லவா? இரண்டு மனேவியைக் கட்டிக்கொண்டு இரண்டு பேருக்கும் நல்லவனுக இருப்பதைக்காட்டிலும் கலியாணம் செய்து கொள்ளாதவன் இருக்கிருனே, அவன் யாரையும் விட மேலான புத்திசாலி தானே' என்று. அப்படிப்பட்டவர்தான் சர்மா. அவரையே கேட்டுப்பாரேன்.' இவ்வாறு கூறிவிட்டு வேலன் குறுநகை பூத்தான்.

சர்மா கொஞ்சம் திகைப்பிலிருந்து விடுபட்டுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டார். கனைத்துவிட்டு, 'அப்பனே, வேலா' என்றார்.

'என்ன ஓய்!'

'அடியேனுக்கு ஒரு சிறு சந்தேகம்!'

'பெரிய சந்தேகமாகப்போடும்!'

'சிறு வயதிலே துறவறம் பூண்டு கோவணாண்டியாகக் காட்சியளித்த நீர் இரண்டு மனைவியரை மணம் செய்து கொண்டீரே, இதற்குக் காரணம் என்னவோ?'

வேலன் கலகலவென்று சிரித்தார். "சர்மா, நீர் பைத்தியக்கார மனிதர். உலகில் இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாடுவான் என்று யாரோ சொல்வதைக் கேட்டுவிட்டு என்னை இந்தக் கேள்வி கேட்கிறீர். இந்த உள்ளம் இருக்கிறதே, அது உணவு தேடுகிறது. அந்த உண்வுதான் திருப்தி."

'உள்ளம் கோட்டை கட்டுகிறது ஒருத்தியைப்பற்றி. திருமணம் ஆனபின் அந்தக் கோட்டை இன்னும் முடிவுறாததைக் காண்கிறது. இந்த நிலையை அப்படியே விட்டுவிட்டால் பழைய கோட்டைக்கே ஆபத்து நேர்கிறது. கோட்டையின் மறுபாகமும் பூர்த்தி அடைய இரண்டாவது பெண் வருகிறாள்.'

'சண்டை. பொறாமை, கலகம் இவைகளுக்கா?' சர்மா ஒரு போடு போட்டார்.

'திரும்பவும் பழைய கண் கொண்டே பார்க்கிறீரே, என்னைப்பாரும். இருவருக்கும் என்னிடம் எத்தனை அன்பு? வள்ளி, தேவயானை எனது இரு கரங்கள். உலகம் இந்த உருவத்திலேயே என்னைப் போற்றுகிறது. மணமகன் கோழையானால் அவனுக்கு இருப்பது ஒருத்தியோ இருவரோ, சண்டை, பொறாமை, கலகம் எல்லாம் ஏற்பட்டே தீரும்.'

வள்ளி கணவனை ஒரு மாதிரியாக நோக்குவதை, சர்மா கடைக்கண்ணால் கவனித்தார்.

'அவ்வளவு தூரம் போவானேன்? என் மாமா கண்ணன் இருந்தானே, அவன் ஆயிரம் கோபியருக்குக் காதலனாக இருந்தான். சண்டையா போட்டுக்கொண்டனர் கோபியர்?'

'அப்படியானால் உங்கள் தமையனார் மகிழ்ச்சியைப்பற்றி என்ன சொல்கிறீர்?'

'வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர் ஐயா நீர்! அவனுக்கு மனைவி இருப்பது உலகில் சிலருக்கே தெரியும். ஏனய்யா அவனை உமக்கு.........?'

சர்மாவுக்கு ஞாபகம் வந்தது. அவர் பூஜை செய்யும் வல்லப கணபதி மனைவியை மடியில் வைத்துக்கொண்டுள்ளாரல்லவா? இந்த அனுவசிய யோசனை அவருக்குக் குழப்பத்தை அதிகமாக்கியது. வேலனையே உற்றுப்பார்த்தார். படார் என்ற பேரிடி. எழுந்து வெறித்து நோக்கினார். பெருச்சாளி ஒன்று அவர் மீது விழுந்து ஓடிக்கொண்டிருந்தது.

சை! பைத்தியக்காரக் கனவுகள் காண்பது நம் உள்ளம் பேதலித்துள்ளதைத்தான் காண்பிக்கும். இனி ஓர் உறுதி. கனவு காணக்கூடாது. கண்டாலும் கடவுளுடன் பேசக்கூடாது.

கொஞ்சம் கொஞ்சமாக விடிய ஆரம்பித்தது. ஆலமரத்துக் கிளைகளிலே பக்ஷி ஜாலங்கள் சல சலப்பை உண்டாக்கின. சர்மா எழுந்திருந்தார். சிவன் சந்நிதிக்குச் சென்று நிஷ்டையில் இருந்தால் கொஞ்சம் புண்ணியமும் உண்டு, பொழுதும்போகும் என்று நினைத்தாரோ என்னவோ, சிவன் சந்நிதிக்குச் சென்று உட்கார்ந்து மோனியானார். ஆனால் விடியற்காலையில் வீசின அந்த இளங்காற்று அவரைக் கண்ணயரச் செய்தது.

அட! இங்கே என்ன சிலம்புச் சத்தம்? பொழுது விடிந்தாலே இந்தக் கஷ்டந்தான். இது ஏதாவது நாடக மேடையா? பகல் வேஷக்காரர்கள், குறவர்கள் எவரேனும் முகாம் போட்டிருக்கிறார்களோ? என்ன இருந்தால் என்ன? நிஷ்டை கெடுகிறது.

'சர்மா!'

'அட! கனவுகளுக்கு முடிவே இல்லையா? இதை நம்பவே கூடாது. ஊஹூம்!'

# லோத்ரா



**தாயும் சேயும்**

இருவரும் தங்கள்
ஆனந்தத்தின்
'காரணம்'
இவ்வௌஷதம்
என்கிறார்கள்

கர்ப்பாசய ரோக நிவாரணி



**கேஸரி குடீரம் லிமிடெட்**
**மதராஸ்-14.**

தமிழ்நாடு ஏஜண்டுகள்
**சீதாராமா ஜெனரல்**
**ஸ்டோர்ஸ்**
மேலகோபுரவாசல்
**மதுரை.**




*Retail Branches:*

**285, China Bazaar Road,**
**MADRAS.**

**71, Pondy Bazaar, T. NAGAR**

'உம்மைத்தான் சர்மா!'

விழித்துப் பார்த்தார். ஆமாம். சந்தேகமில்லாமல் சாட்சாத் சிவபெருமான் நின்று கொண்டிருந்தார். ஜடாமுடி. சாம்பல் பூசிய உடல். சலங்கை பொருந்திய கால்.

'மன்னிக்கவேண்டும் பிரபோ!'

அது இருக்கட்டுமையா, உமக்கு யோசனை சொல்லி நல்ல வழி காட்டவே வந்தேன்.'




'எனக்கு ஒன்றுமே புரியவில்லை பிரபோ!'

'புரிவதற்கு என்ன இருக்கிறது? நான் ஒரு மனிதனைப் படைக்கிறேன். அவனுக்கு உறுதுணையாக அவனுடைய வாழ்க்கையைப் பூர்த்திசெய்ய ஒருத்தியையும்தான் படைக்கிறேன். இது சிருஷ்டியின் நோக்கம். இதைப் பூர்த்தி செய்தால் உலகவாழ்வில் இன்பம் காணமுடியும். இதை ஏற்றுக்கொள்ளா விட்டாலோ, அல்லது ஒருத்தியை விட்டுப்பலரை நாடுவதாலோ இயற்கையின் நியதி மீறப்படுகிறது. நாசம் விளைகிறது.'

'திருமணம் என்பது நீங்கள் சொல்வதுபோல மனிதனுக்கு நிம்மதியை அளிக்கிறதா?'

பேராசிரியரே, நீர் படித்ததெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்க்குத்தானே? நிம்மதியில்லை என்கிறீரே அதுதான் இன்பம். வாழ்வு முழுதும் சகல சுக போகத்தையும் குறைவில்லாமல் அனுபவிக்கும் எவனையும் நீர் போய்க் கேட்டுப்பாரும். அவனுக்கு அது பிடிக்கிறதா என்று. ஜன்ம ஜன்மத்திற்கும் இந்தப் போக வாழ்க்கை தேவையில்லையென்றுதான் சொல்வான். இதைக் காட்டத்தானே ராமாவதாரம். சீதையை மணந்து கொண்ட ராமன் என்ன சுகத்தைக் கண்டான்! சொல்லுமேன்.'

சர்மா ரொம்பவும் புரிந்ததுபோலத் தலையை ஆட்டினார். அவர் கண் முன்னே பிள்ளையார் சொன்ன தத்துவமும் வேலனின் அநுபவ வாதமும் வந்து நின்றன.

'என்னைக் கடைசியில் என்னதான் செய்யச் சொல்கிறீர்கள் பிரபோ!'

'ஏக பத்னி விரதம்!'

'ஏக பத்னி விரதமா?'

கேள்விக்குப் பதில் இல்லை. எதிரில் யாரையும் காணோம். பார்வதி சமேதராகச் சிவபெருமான் அமர்ந்திருந்தார். கோயில் குருக்கள் பழைய அகல் விளக்கில் எண்ணெயை விட்டுத் திரியைத் தூண்டினார். அவர் கண்களில் சர்மா தட்டுப்பட்டார்.

'அட! சர்மாவா? இங்கே என்ன தியானத்தில் ஈடுபட்டு விட்டீர்? எத்தனை காலமாக இதெல்லாம்? ஏதாவது காஷாயம் வாங்கிக் கொண்டு சந்நியாச ஆச்ரமத்தில் ஈடுபடுவதாக உத்தேசமோ?' அவர்சர்மாவுக்குத் தெரிந்தவர். உரிமையுடன்தான் பேசினார்.

பேராசிரியரிடமிருந்து பதில் இல்லை.

'அதுவும்தான் நல்லது ஐயா, சந்நியாச ஆச்ரமமே உலகோரின் மதிப்புக்கு உகந்தது. சங்கர பகவத்பாதாள் கதை தெரியாது உமக்கு?'

"வாயை மூடுமையா!" என்று எரிந்து விழுந்தார் சர்மா. துண்டை எடுத்துக் கொண்டு ஆற்றை நோக்கிச் சென்றார். ஸ்நானம் செய்ய.

தெறிக்கத் தெறிக்க ஓடி வந்தான் அவர் தம்பி வேணு.

"அண்ணா!"

"என்னடா?"

'எங்கேயெல்லாம தேடுவது உன்னை? அவர் கூப்பிடுகிறார் உடனே.'

'எவர்?'

'கோடி மங்கலட் மிராசுதாரர் கோபாலன் வந்திருக்கிறார்.'

'எதற்கடா?'

'ஜாதகம் வேணுமாம் அண்ணா. உன்னையும் அவசியமாகப் பார்க்கவேணுமாம்!'

சர்மா உடனே திரும்பினார் வீட்டுக்கு. அவர் போகும்போது வேலன் சந்நிதியையும், பிள்ளையாரையும் தாண்டித்தான் சென்றார். ஆனால் வேலனையும் பிள்ளையாரையும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

ஏனென்றால் அவர் உள்ளந்தான் தீர்மானத்திற்கு வந்துவிட்டதே!


# பிரதி தினமும் தீபாவளி!

உங்கள் ஜல சப்ளைக்கு ஒரு மயர்ஸ் பம்பைப் பொருத்துவதின் மூலம் வருஷம் பூராவும் தீபாவளியைக்கொண்டாடிக் களியுங்கள்.




## மயர்ஸ் பம்பில்

- தண்ணீர் ஏராளமாய்க் கிடைக்கிறது.
- தண்ணீர் குழாய்களில் மிகுதியான ப்ரஷருடன் ஸப்ளை செய்கிறது.
- தண்ணீர் சகல உபயோகத்திற்கும் கிடைக்கிறது.

இந்தியாவில் ஸோல் ஏஜண்டுகள்

**வாட்டர் சப்ளை ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிமிடெட்,**

45, தம்புசெட்டி தெரு, தபால் பெட்டி நெம். 1707-மதராஸ்.

# கண்டதும், கேட்டதும்

கே. சுந்தராம்பாள்



'மப்பும் மந்தாரமும்' என்பார்களே அந்த நிலைமை. பிசுபிசுவென்ற தூறல். உலகமே மந்தமாகத் தோன்றினது. விழிப்பு, தூக்கம் இரண்டிற்கு மத்தியிலிருந்த என்னை, 'மணி இரண்டாகப்போகிறது எழுந்திருங்கள். உங்கள் நண்பர் வந்துவிடப்போகிறார். மூன்று மணிக்கெல்லாம் போகவேண்டுமல்லவா. இதோ போய் காப்பி கொண்டு வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்றாள் என் மனைவி.

'எழுந்திருக்க வேண்டுமென்று ஒரு புறம் தோன்றுகிறது' என்றாலும், படுக்கையைவிட்டு எழுந்திருக்க மனமில்லாமல் கண்களை மூடிப் படுத்திருக்கும் இந்த இன்ப நிலையைவிட்டுப் பிரிய மனமில்லாமல் படுத்திருந்தேன். பிசுபிசுவென்று வெளியில் தூறிக்கொண்டிருந்தது. சுகமான குளிர்ந்த வாடைக் காற்று, இந்தச் சூழ் நிலையில் என் மனம் அமைதியாகப் படுத்திருக்க விரும்பியது. சற்று நேரத்திற்கெல்லாம் கை வளை குலுங்கும் சப்தம் கேட்கவே, எழுந்து கட்டிலில் காலைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். சூடான காப்பியைச் சாப்பிட்டதும் ஒரு மாதிரி தெம்பு வந்தது. எழுந்து பால்கனியில் போட்டிருந்த ஈஸிச்சேரில் வந்து சாய்ந்து கொண்டேன்.' என்னைத் தொடர்ந்து வந்த மனைவி,

'இது என்ன உட்கார்ந்து விட்டீர்களே, உடுத்துக்கொண்டு தயாராக வேண்டாமா?' என்றாள்.

'நீ தயாராகு. நான் ஒரு நொடியில் உடுத்துப் புறப்பட்டு விடுவேன்'.

'நான் மட்டும் என்னவாம், அரை நொடியில் தயாராகிவிட மாட்டேனா?'

'ஆஹா! அச்வத்தம்மா அல்லவா?'

'என்ன வேண்டுமானாலும் கூப்பிடுங்கள் எனக்கென்ன வந்ததாம்.'

'அப்பா அருமையாக பைரவமே' என்றார். ஊராரின் வாக்கியத்தைக் கடைப்பிடித்து நான் அச்வமே என்றேன். உனது மகன் என்ன சொல்லுவான். கர்த்தபமே என்றா? என்றேன் சிரித்தவாறு.

'போங்கோன்னா?' என்றாள் முகம் சிவக்க. தொடர்ந்து என் முகத்தருகில் குனிந்து ஆசையைப் பார். மணமாகி இன்னும் இரண்டு மாதம் முழுசாகவில்லை' என்று லேசாகக் கன்னத்தில் தட்டிவிட்டு நான் அவளைப் பிடிக்கு முன் மானெனத் துள்ளி ஓடி மறைந்து விட்டாள். அவள் சென்றதும் என் மனம் இதே மாதிரி ஓர் சூழ் நிலையில் இருந்த நாளை நோக்கித் தாவிச் சென்றது.

ஆறு மாதத்திற்கு முன்பு இண்டர்வ்யூ நிமித்தம் இவ்வூருக்கு வந்தவன் என் நண்பன் வீட்டில் தங்கினேன். நண்பனின் மனைவி பிரசவத்திற்குச் சென்றிருந்தபடியினால் சமையல்

செய்ய ஒரு சிறு பையனை வைத்துக்கொண்டு நண்பன் தனிக் குடித்தனம் நடத்திக்கொண்டிருந்தான். அவன் ஆபீஸ் சென்ற பின்பு, பிரயாண அலுப்புத்தீர படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவனை, சார்! 'போஸ்ட்' என்ற தபால்காரனின் சப்தம் எழுந்திருக்கும்படி செய்துவிட்டது. ஏதோ அவன் கொடுத்த காகிதங்களை வாங்கி மேஜை மீது வைத்து விட்டு, பால்கனிப்பக்கம் வந்தேன். உடம்பு ஒரு மாதிரி சோம்பலாக இருந்தபடியினால் அங்குக் கிடந்த சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டேன். லேசான தூறல். குளிர்ந்த காற்று, பக்கங்களிலுள்ள புஷ்பங்களின் மணத்தை அள்ளிக் கொடுத்தது. அதோ தெரிகிறதோ அடுத்த பால்கனி அதில்தான் இன்றுபோல் தூக்கம் விழிப்பு இரண்டிற்கும் மத்தியிலுள்ள நிலைமையில் கண்களை மூடிப் படுத்திருந்தேன். அந்தச் சமயம் தெருப் பக்கத்திலிருந்து ஜிம்மி! ஜிம்மி! என்று யாரோ கூப்பிட்டார்கள். யாரோ தனது நாயை,'கமான் கமான்' என்று அழைக்கிறார்கள் போலும் என்று நினைத்த சமயம், 'இரண்டு நிமிஷம் நில் இதோ வந்து விட்டேன்' என்ற சப்தம் வந்த திக்கை நோக்கினேன். அடுத்தபால்கனியில், பதினெட்டு வயது மதிப்பிடலாம், மாநிறம், அதிகப்பருமனுமில்லாமல், ஒல்லியாகவுமில்லாமல் வாட்டமான சரீர அமைப்பு, தலையைப் பாப் 'செய்துகொண்டு, அழகி' என்று சொல்லும்படியான ஓர் யுவதி நின்றாள். காலில் சாக்ஸ் பூட்ஸ். மேலே கவுன். அரைப்படி அரிசி வடிக்கும் வெண்கலப் பானையில் முக்கால்படி அரிசியைப் போட்டால் எப்படிப் பாத்திரத்திற்கு மேலே தூக்கிக்கொண்டு வருமோ அது போல் அவள் அங்கமெல்லாம் பிதுங்கிக்கொண்டு நின்றது. ஒரு வினாடியில் மறைந்துவிட்டாள். கீழே பார்வையைச் செலுத்தினேன். துவிசக்ரவண்டி சமேதனாகப் பதினெட்டு வயது மதிக்கத்தகுந்த இளைஞன் நின்றுகொண்டிருந்தான். இவள் சட்டென வண்டியைக் கையில் வாங்கி லாவகமாக ஒரு துள்ளில் ஏறி உட்கார்ந்தாள். பின் காரியரில் அவன் உட்கார்ந்துகொண்டான் கையைக் கட்டியவண்ணம். வெகுவேகமாக வண்டி ஓட்டிக்கொண்டு மறைந்தாள்.



'இப்பொழுது இவளை என் அம்மா பார்த்தால்? என் நண்பனொருவன் என்னைத் தேடிவந்தான். நான் வந்ததை அறியாத பதினைந்து வயதுடைய என் தங்கை நிருபமா வாசலில் நின்றபடியே நான் இல்லையென்று சொன்னதற்கு, நண்பன் இல்லைவீட்டிற்குப் போவதாகச் சொல்லி வந்தான் என்று சொல்ல, வந்தால் இந்த வழிதானே உள்ளே சென்றாகவேண்டும். விமானத்தில் வந்து மாடியிவிறங்கிவிட்டானோ என்று சிரித்தவாறு பதில் சொன்னாள். என் நண்பன் என்னுடன் பேசிச் சென்றபின்பு, 'நிருபமா! இனிமேல் சிறுபிள்ளைகளுடன் இந்தமாதிரி பல்லிளித்துக் கொண்டுபேசினாயானால் வெட்டி மடைவாயில் வைத்துவிடுவேன்' என்றாள் என் தாயார். அதற்கு அப்படியானால் இவளை வைக்க எங்கம்மாவிற்கு என்ன பதம் கிடைக்கும்? அணைக்கட்டா, மேட்டூர் டாமா? பாபநாசம் அணைக்கட்டா?' என்று யோசித்தவாறு இருந்தவனை?

'சார்! காப்பி ஆறிப்போகிறது சாப்பிடுங்கள்' என்ற பையனின் குரல் திரும்பச்செய்தது. காப்பியை வாங்கிக்கொண்டதும், சைக்கிளில் போகிறாளே குதிரை, அவளைப்பற்றி ஆச்சர்யப்படுகிறீர்களா? அவள் பழக்கமே இப்படித்தான். அடக்கமே கிடையாது. இப்படி அலைவதைப் பார்த்துவிட்டுத்தான் தெருக்காரர்கள் குதிரை என்று பெயர் வைத்துவிட்டார்கள்' என்றான்.

'ஏன்? தாயார் தகப்பனார் இல்லையா?'

'ஜாம்பவான் போலிருக்கிறார்கள்' செல்லப் பெண். இஷ்டப்படி நடக்கவிட்டிருக்கிறார்கள்' என்று ஏதேதோ சொல்லிக்கொண்டு போனான். ஏனோ அவைகளைக் கேட்க எனக்குப் பொறுமை ஏற்படவில்லை.

'சரி. அதைப்பற்றி நமக்கென்ன? வேலையைப் பார் போ' என்றேன்.

'சாயங்காலம் நண்பனுடன் பால்கனியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபொழுது,

'அண்ணா! உங்கள் வீட்டிற்கு, கெஸ்ட் வந்திருக்காப்போலிருக்கு. அதுதான் தங்கையைப் பற்றிய நினைவேயில்லே' என்ற குரலைக்கேட்டுத் திரும்பினேன். என்ன ஆச்சர்யம்! மத்யானம் பாப்வெட்டிக்கொண்டு கவுனுடன் காட்சியளித்த பெண்மணி, இரட்டைப் பின்னல் இருபுறமும் தொங்க, பாவாடை மேலாக்கு அணிந்துகொண்டு நின்றாள்.

'நினைவில்லாமல் போய்விடுமா ஜிம்மி? சற்றுப் பொறுத்து நண்பனுடன் உன்னைக் காண வரலாமென்றிருந்தேன். உத்தியோக நிமித்தம் இண்டர்வியூவிற்கு வந்திருக்கிறான். ஒரு மாதத்திற்குள் வேலை கிடைத்துவிடும். அதுவரை இவ்விடமிருப்பான். மத்யான வேளைகளில் நீதான் பொழுதுபோக செஸ், கேரம், ஏதாவது விளையாடிக்கொண்டிருக்கவேண்டும்' என்றான் என் நண்பன்.

'அதற்கென்ன அப்படியே. ஆனால் உங்கள் நண்பருக்கு......' என்று நிறுத்தினாள்.

'ஓ! அறிமுகம் செய்யவில்லையோ! மிஸ்டர் சேகர் இவள் புரொபசர் அர்த்தநாரியின் பெண் ஸ்மிருதிரேகா ஜிம்மி' இவன் எனது ஆத்ம நண்பன் சந்திரசேகர் **B. S. C., M. S. C.** என்றான். இருவரும் பரஸ்பரம் நமஸ்தே என்று கை குவித்தோம்.

'மன்னி எப்பொழுது வரப்போகிறாள்?' என்றாளவள்.

'இந்த மாதத்திற்குள் வந்துவிடுவாள்' என்றான் நண்பன்.

'உங்கள் பேச்சின் குறுக்கே வந்ததற்கு மன்னிக்கவும், நான் வருகிறேன்' என்று உள்ளே சென்றுவிட்டாள்.

'ஏனப்பா, நான் உன் வீட்டிலிருப்பதில் இஷ்டமில்லையென்றால் நேரே சொல்லிவிடலாமே' என்றேன்.

'என்னடாது, என்ன உளறுகிறாய்? என்ன நடந்துவிட்டது' என்றான்.

மத்யானம் நான் கண்டகாட்சியை விவரித்து வேலைக்காரப் பையனின் விமர்சனத்தையும் சொல்லிவிட்டு, 'அவளை என்னுடன் கேரம் விளையாடச் சொல்லுகிறாயே, அதற்குத்தான் சொன்னேன்.'

'அட முட்டாளே வேலைக்காரப் பையன் விமர்சனத்திற்கு அவ்வளவு மதிப்பா? 'ஆண் பெண் சமத்துவம்' என்று போராடும் சமூகத்தின் சூழ்நிலையில் வளர்ந்தவளை இப்படிப் பேசுகிறாய்? அவள் தங்கமான பெண். நல்லகுணம். படாடோபமே கிடையாது. யாவரிடத்தும் சரளமாகப் பழகும் சுபாவம். என் மனைவிக்கு அவள் மீது அளவற்ற வாஞ்சை. ஆண் மகனுடன்கூட ஸைக்கிளில் உட்கார்ந்து கொண்டு போனதினால் அவள் கெட்டுப்போனவள் என்று தீர்மானம் செய்துவிடுவதா? மேல் நாடுகளின் பழக்க வழக்கங்களைக் காணாவிட்டாலும் கேட்டும் படித்துமிருக்கிறாயல்லவா?

'மேனாட்டு வழக்கத்திற்குத் தகுந்தவாறு நம் நாட்டில் மனம் பண்படவில்லையே; அதனால் தான் நமதுபழக்கமே சிறந்ததென்றாகிவிடுகிறது. இந்த மாதிரி பழக்க வழக்கங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதைவிட, மேனாடுகளில் புராதனமாக நடந்துவரும் சில பழக்கங்கள் இக்கால முறைக்கு முரணாகவிருந்தும் அதை விடாமல் நடத்தி வருகிறார்களே. அதைப் பார்த்து நடக்கப் பிரயத்தனப்பட்டால் என்ன?' என்றேன்.

தாராளமாக நடக்கலாம். இதைப்பற்றி நாமிருவர் மட்டும் விவாதித்துத் தீர்மானம் கொண்டு வருவதில் என்ன பலனிருக்கப் போகிறது. இதை விட்டுவிட்டு நடக்கக் கூடியதைப் பார்ப்போம். அப்பெண் அப்பழுக்கற்றவள். இதை எங்கு வேண்டுமானாலும் வந்து கூறுவேன்' என்றான்.

'அந்தப் பெண் எப்படிப் போனால் நமக்கென்ன? நம்முடன் பழகும் பொழுது ஜாக்கிரதையாக, எச்சரிக்கையாக இருந்தால் போகிறது?' என்று பேச்சை வேறு திசையில் திருப்பினேன்.

'இண்டர்வ்யூவிற்குப் பிறகு ஒரு மாதம் வெட்டிப் பொழுதாகக் கழிக்கவேண்டியிருந்த படியினால் நண்பன் ஆபீஸிற்குச் சென்றதும், தூக்கம் போடுவது, அல்லது புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு பால்கனியில் உட்காருவது, அப்படி உட்கார்ந்திருக்கும்பொழுது ஜிம்மியின் திருவிளையாடல்களில், என்னையறியாமலேயே ஈடுபட்டுவிடுவேன். அவளுக்குக் காலேஜ் பன்னிரண்டு மணியுடன் சரி. பிறகு அவள் அநேகமாக தெருவில் காட்சியளிப்பாள். சற்றுநேரம் என்னுடன் செஸ் கேரம், ஏதாவது விளையாடுவாள். அப்பொழுதெல்லாம் அவள் என்னிடம் மிக்க அடக்கமாகவும், கள்ளமில்லாமலும் நடந்து வந்தாள். நாளாக நாளாக அவள் குணம் எனக்குப் புரிந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். முதலில் அவளைப் பார்த்தபொழுது ஏற்பட்ட அருவருப்பு எவ்விதம் விருப்பாக மாறியதென்று எனக்கே புரியவில்லை.

ஒரு சமயம் தெருவில் அவளைச் சுற்றி மூன்று வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலுள்ள குழந்தைகளாக இருபதுக்கு மேற்பட்ட குழந்தைகள் நின்றுகொண்டிருக்கும். அவைகளுடன் குழந்தையாக விளையாடுவாள். பெப்பர்மெண்ட், சாக்லெட் முதலிய வஸ்துக்களை அவர்களிடம் கொடுப்பாள். அன்று பாவாடை மேலாக்கு இரட்டைப் பின்னலுடன் காட்சியளிப்பாள். ஒரு சமயம் அவளையொத்த பெண்களுடன் கலகலவெனப் பேசிச் சிரித்துக்கொண்டு நிற்பாள். அப்பொழுது புடவை உடுத்தி தலையைப் பிச்சரை போட்டு வளைவு புஷ்பம் வைத்துக் கொண்டு நாகரிகமாக நகையும் அணிந்திருப்பாள். ஒருசமயம் காலேஜ் மாணவர்களுடன் ஏதோ சர்ச்சை செய்துகொண்டு நிற்பாள். அப்பொழுது, ஒரு சமயம் பாண்டும் ஷர்ட்டும் போட்டுக்கொண்டு தலையைப் பாப் வெட்டிக் கொண்டிருப்பாள். ஒருசமயம் கவுன், புடவை, இப்படியாகக் கூடுவிட்டு கூடு பாயும் கதையைப் போல் காட்சியளிப்பாள். நன்றாகப் பெண்மைக் கேற்றவாறு உடுத்துக்கொண்டு கால் நடையாகத் தனியே சென்று கொண்டிருப்பாள், ஜிம்மி ஜிம்மி, என்ற குரல் கேட்கும் அடுத்த நிமிஷம் அவளுடன் ஒரு மாணவன் செல்லுவான். இவையெல்லாவற்றையும்விட, ஞாயிறு தோறும் எவனாவது மாணவன் ஒருவன் ஸைக்கிளில் வருவான். பாண்ட் ஷர்ட்டுடன் கிளம்பி விடுவாள். எப்பொழுதும் இவள்தான் வண்டியை ஓட்டுவாள். அவன் காரியரில் உட்கார்ந்து விடுவான். 'இது பெண்மைக்கு உகந்ததல்ல, இப்படிச் செய்யக் கூடாது' என்று சொல்லவேண்டுமென்று நினைப்பேனே தவிர, அவள் என் எதிரிலிருக்கும் பொழுது ஒன்றுமே தோன்றாது. அவள் அப்படிப் போகும்பொழுது மனதில் ஆத்திரமாகத் தோன்றும். சற்றுப் பொறுத்துத்தான் அவளைக் கடிந்துகொள்ள நான் யார்? என்ற விஷயம் தோன்றும். இப்படி மனஅமைதியை இழந்து திண்டாடிக் கொண்டிருக்கையில் நண்பனின் மனைவி குழந்தையுடன் வந்து சேர்ந்தாள். குழந்தையினிமித்தம் பாதிபொழுதை இவ்விடமே கழிக்கலானாள். நண்பனின் மனைவி ராஜியும் அவளைப்பற்றி அபாரமாகப் புகழ்ந்து பேசினாள். 'அவளுக்கு' என்று ஒருவன் ஏற்பட்டுவிட்டால் பிறகு இப்படியெல்லாம் சுற்ற முடியுமா?' என்றும் சொன்னாள்.



'ஏன் மன்னி! அவள் ஒரு சமயம் பின்னல் போடுகிறாள், ஒருசமயம் பாப் வைத்துக் கொண்டிருக்கிறாளே அது எப்படி?' என்று வெகு நாட்களாக என் மனதில் உறுத்திக் கொண்டிருக்கும் விஷயத்தைக் கேட்டுவிட்டேன்.

'அடடா இது கூடவா தெரியவில்லை? பாப் மாதிரி இருப்பது ஒரு டோபா. தலை முழுவதும் அதற்குள் அடக்கிவிட்டு, கட்டிக் கொள்ளுவாள் இதெல்லாம் ஒரு தமாஷ். நீங்கள் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறீர்களா? என்ன? மிகவும் அக்கறையாகக் குற்றங்களைக் கவனிக்கிறீர்களே?' என்றாள்.

'என்ன மன்னி, கேலி செய்கிறீர்கள். போயும் போயும் இவளைத்தானா வரிக்கவேண்டும்?'

'ஏன் அவளுக்கென்னவாம். அழகில்லையா? படிப்பில்லையா? பாட்டில்லையா? ஒரே பெண் சீரும் சிறப்புமாக இருப்பாள்' என்றாள்.

'எல்லாமிருக்கிறது. பெண்களுக்கு முக்யமாக உள்ள 'அடக்கம்' என்பதைத்தான் காணும்.'

'உங்களிடம் அப்படி என்ன அடக்கமில்லாமல் நடந்துகொண்டாள்?'

'என்னிடம் நடந்துகொள்ளாவிட்டால்? சைக்கிள் பவனி ஒன்றே போதாதா? வாரந்தோறும் எங்கேதான் செல்லுவாளோ?' என்றேன்.

‘அறிய வேண்டுமானல் ஒரு வாரம் பின் தொடர்ந்து பார்ப்பதுதானே?’ என்ருள்.

எனக்கு வேலை கிடைத்துவிட்டதினுல் தினசரி வேலைகளைக் கவனிக்க முடிவதில்லை. ஸைக்கிள் பவனி ஒன்றுதான் கண்ணில் படும். அதுதான் மனதைக் குழப்பும். ராஜி சொன்னதும், அப்படிச் செய்தால் என்ன? என்ற ஆவலெழுந்தது. வாடகைக்கு ஸைக்கிளெடுத்துக்கொண்டு, அவளுக்குத் தெரியாமல் பின் தொடரலானேன். எங்கெல்லாமோ சந்து பொந்தெல்லாம் நுழைவாள். ஒவ்வொரு ரவுண்டாணுவும் ஒரு மாணவனும் மாணவியும் நின்றுகொண்டிருப்பார்கள். ஜிம்மி ஓ கே’ என்று கோஷமிடுவார்கள். கடைசியில் காலேஜ் பக்கத்திலுள்ள மைதானத்திற்கு வருவாள். வழியில்கண்ட மாணவ மாணவிகளுடன் முப்பது நாற்பது பேர் நின்று கைதட்டி இவர்களை வரவேற்பார்கள். கொஞ்ச நேரம் ஏதோ பேசிக் கும்மாளமடிப்பார்கள். பிறகு அந்த மாணவன் ஸைக்கிளிலேயே வீட்டிற்கு வருவாள்; நானும் வாரந்தோறும் அவளுக்குத் தெரியாமலேயே பின்தொடர்ந்தேன்

அவளுடன் நெருங்கிய நண்பர்கள்போலப் பழகி வரலானேன். எங்கள் சிநேகிதத்தைப் பலப்படுத்த நண்பனின் மனைவி முயற்சி எடுத்துக்கொண்டாள் என்றே சொல்ல வேண்டும். என்னை மிஸ்டர் சேகர் என்றே அழைப்பாள். அவள்வீட்டுப் பால்கனியில் அவளும் எங்கள்வீட்டுப்பால்கனியில் நானுமாகநின்று, பத்திரிகை. அரசாங்கங்கள், காங்கிரஸ், கம்யூனிஸ்ட்’ என்ற விஷயங்கள் பற்றி மணிக்கணக்காய் விவாதிப்போம். ஆனலும் அப்போதெல்லாம் ஸைக்கிள் பவனிபற்றிக் கேட்கவேண்டுமென்று நினைப்பேனே தவிர, கேட்கமுடியாதபடி ஏதோ ஒரு உணர்ச்சி என்னைத் தடுத்துவிடும்.

வழக்கப்படி ஒரு நாள் பின்தொடர்ந்தேன். அன்று காலேஜ் மைதானத்தில் வழக்கத்தைவிடக் கூட்டம் அதிகமாகத் தென்பட்டது. மாணவிகள் ஜிம்மிக்கு மாலைபோட்டு வரவேற்ருர்கள். மாணவர் முகங்களில் அசடு வழிந்தது. என்னவென்றே எனக்குப் புரியவில்லை. மனதில் மாத்திரம் ஒரு வித ஆத்திரம் தோன்றினது. வீட்டிற்கு வரட்டும் இன்று இவ்விஷயம்பற்றி நன்ருக எடுத்துரைத்து அவளை மட்டம் தட்டவேண்டும் என்று சபதம் செய்து கொண்டேன். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் வழக்கத்திற்கு மாருக, மாணவன் ஸைக்கிளை ஓட்ட, ஜிம்மி காரியரில் உட்கார்ந்தாள். வீட்டிற்கு வராமல் வேறு எங்கேயோ சென்ருன். கொஞ்சநாழி சென்றதும், ஜிம்மி ஸைக்கிளை நிறுத்தும்படி சொன்னுள். அவன் நிறுத்தாமல் வேகத்தை அதிகமாக்கிக் கொண்டே சென்ருன். ஜிம்மி ஏதோ கோபமாகப் பேசுவது தெரிந்ததே தவிர புரியவில்லை. அவனே, வாய்மூடி மௌனியாகவே சென்ருன். ஏதோ ‘விபரீதம்’ என்று என் உள்ளுணர்வு சொல்லிற்று. நானும் விரைந்தேன். ஜன நடமாட்டமற்ற ஒரு தோட்டம் போலிருக்கும் இடத்திற்கு வந்ததும் இடிந்து புல் பூண்டு முளைத்த ஒரு கட்டடத்தின் முன் ஸைக்கிளை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கியவன், நிறுத்துவதற்கு முன் ஜிம்மியின் கையை எட்டிப் பிடித்தான். அவள் திமிறவே ஸைக்கிள் தடாலென்று கீழே விழுந்தது. கூடிய மட்டும் அவர்கள் அறியா வண்ணம் பின் தள்ளிவந்த நான் தோட்டத்தின் வெளியே சுவர் மறைவில் நின்று கொண்டேன். ஒரு மரமொன்று உதவி செய்தது. சட்டென ஓடிச் சென்று அவன் கன்னத்திலறைய வேண்டும் என்ற ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டேன். ஜிம்மியின் மனப் போக்கை அறிய.

‘வாயில் வந்த விதம் பிதற்றிய வண்ணம் ஜிம்மியைச் சீர்கெட்ட கட்டிடத்தினுள் இழுத்தான்.’

‘கையை விடு. நானே வருகிறேன்’ என்ருள் ஜிம்மி.

‘ஜயித்தவளே, உன் பேச்சை நம்பலாமா?’

‘நிச்சயமாக நம்பு. எல்லாரிடத்திலும் ஜயித்தேன்; உன்னிடம் தோற்றேன். கையை விடு’ என்ருள். நான் பல்லைக் கடித்துக்கொண்டேன்.

‘கையை விட்டான். ஹ ஹ ஹா வென்று பேய்ப்போலச் சிரித்தாள்.

‘எதற்காகச் சிரிக்கிருய்?’ என்ருனவன்.

‘சூரப்புலியே. விஷயத்தைக் காதும் காதும் வைத்தாற்போல் சொல்லாமல் இவ்வளவு தூரம் அழைத்து வந்திருக்கவேண்டாமே என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது.’

‘அப்படியானல்...’ என்று வாயைப் பிளந்தானவன்.

‘ஊம் இப்படி உட்கார்’ என்று சாய்ந்து கிடந்த கருங்கல் தூண் மீது உட்கார்ந்தாள். அவனும் உட்கார்ந்த பிறகு இப்பொழுது என்ன செய்யவேண்டும் சொல்லு’ என்ருள்.

‘நீ என்னை...’ என்று நிறுத்தினுன்.

‘கல்யாணம் செய்து கொள்ளவேண்டும், அவ்வளவு தானே?’ என்ருள் சிரித்தவாறு.

‘சே சே, கல்யாணமா? அது சுலபத்தில் நடக்கக்கூடிய விஷயமா? காலேஜ் ஜாலி லைப்பாக நாம் தமாஷாக, சமயங் கிடைத்தபொழுதெல்லாம்’ என்ருன்.

‘ஓகோ! அப்படியா?’ என்றவாறு பாண்ட் பாக்கெட்டிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்த

வள் இடது கையை அவன் கழுத்தில் போட்டாள். எனக்கு அவள் மென்னியைத் திருக வேண்டுமென்ற ஓர் ஆத்திரம். ஆத்திரம் ஆச்சர்யமாக மாறக்கூடிய நிகழ்ச்சி நடந்துவிட்டது. வலது கையினால் அவன் கண்களை மூடினான். அவ்வளவுதான் ஐயோ! அப்பா! அடி பாவி, என் கண் போய்விட்டதே' என்று துடி துடித்தான்.

'சமயங் கிடைத்தபொழுது தமாஷா? எப்படி இருக்கிறது மிளகாய்ப்பொடி!' நான் யாரென்று நினைத்தாய் பதரே! பெண்கள் என்றால் உங்களுக்கு அவ்வளவு கிள்ளுக் கீரையா? பாட விஷயத்தில் விட்டுக் கொடுக்கவில்லையென்றால் இவ்வளவு அகம்பாவச் செயலா? கிடந்து கதறு' என்று விழுந்துகிடந்த ஸைக்கிளை எடுத்து ஏறப்போனாள். ஐயோ அப்பா என்று அலறிக்கொண்டிருந்தவன் 'எப்படியோ அவள் காலைப்பிடித்து இழுத்துவிட்டான். அவ்வளவுதான் தடாலெனச் சைக்கிளுடன் விழுந்துவிட்டவள், 'மிஸ்டர் சேகர்! சீக்கிரம் வந்து என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள்' என்று கத்தினாள். ஆச்சர்யத்தினால் என் ரத்த ஓட்டமே நின்றுவிட்டதுபோலிருந்தது. என்றாலும் அந்தச் சமயம் சிந்தனைசெய்ய நேரமில்லை யென்பதை என் உணர்வு மறக்கவில்லை. ஒரே தாவலில் ஓடிச்சென்று ஸைக்கிளை அப்புறப்படுத்தினேன். சட்டென எழுந்து உட்கார்ந்தாள். நெற்றியில் கல் அடிபட்டு ரத்தம் வடிந்தது. என் கைக்குட்டையை எடுத்துக் கட்டினேன். அதற்குள் கண்களைத் தேய்த்தவண்ணம் 'யாரடி அவன்? உன் கள்ளக் காதலன்?' என்று கத்தினவன்'

'சீ, வாயை மூடு. கள்ளக் காதலனல்ல. கல்யாணம் செய்த கணவன். ஜாக்ரதை எழுந்திருந்தாயானால் மண்டை உடைபட்டுவிடும்' என்றுசொல்லிவிட்டு 'வாருங்கள் போகலாம்' என்று ஸைக்கிளை உருட்டியவண்ணம் நடந்தாள்.

'உன்னால் ஸைக்கிள்விட முடியுமா?' என்றேன்.

'முடியாமல் போனால் என்ன செய்வது? எப்படியாகிலும் வந்துவிடுவேன்'

'அவன் ஸைக்கிளை இவ்விடமே விட்டுவிடு, பிழைத்துப் போகட்டும். என் ஸைக்கிளில் காரியரில் இன்று உட்கார்ந்து வா' என்றேன் ஸ்வாதீனமாக.

'வழியில் பேச்சுக் கொடுக்கக்கூடாது' என்று நினைத்தாலும் நான் வந்தது அவளுக்கு எப்படித் தெரிந்தது' என்ற விஷயத்தைக் கேட்காமலிருக்க முடியவில்லை. அதற்கு அவள் சொன்ன பதில்:

'வாரந்தோறும் தாங்கள் பின்தொடருகிறீர்களென்பதும் எனக்குத் தெரியும். இன்று நீங்கள் வருவது தெரிந்ததினால்தான் 'இவனுடைய எண்ணம் எந்த மட்டிலென்பதை அறிந்துவிடலாம்' என்றே தோட்டம்வரை பொறுமையுடன் வந்தேன். இல்லாது போனால் அவன் வழி விலகினதுமே காரியரைவிட்டுச் சட்டெனக் குதித்து ஓடியிருப்பேன். மிளகாய்ப்பொடி ஏது என்பீர்களோ, காலேஜில் சேர்ந்ததுமே எங்கள் நிலைமை ஒரு மாதிரியாகப்போகவே நாங்கள் முப்பது மாணவிகள் எங்கள் தற்காப்பு ஆயுதமாக எப்பொழுதும் கைவசம் வைத்திருப்பது வழக்கம்' என்றாள். அதற்குமேல் பேசித் தொந்தரவு கொடுக்க மனமில்லாமல் மௌனியாகச் சென்றவன் வீடு சமீபிக்கவே 'ஆஸ்பத்திரிக்குச் செல்லுவோமா' என்றேன்.

'வேண்டாம். சிறு காயம்தான். வீட்டிலேயே மருந்திருக்கிறது. டாக்டரின் கேள்விக்



குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க எனக்கு இஷ்டமில்லை. வீட்டில் அம்மா, அப்பா ஒருவருமில்லை. கல்யாணத்திற்குச் சென்றிருக்கிறார்கள், இரவு பத்து மணிக்கு மேல்தான் வருவார்கள். அதற்குள் மருந்து போட்டுக் கட்டிக்கொண்டு. காரணம் ஏதாவது கற்பித்துக் கூறிவிடலாம்' என்றாள்.

'பால்கனியில் நின்றுகொண்டிருந்த நண்பனின் மனைவி ராஜி, எங்களைக் கண்டதும் முதலில் கை தட்டினாள். ஜிம்மியின் தலைக் கட்டைப் பார்த்துவிட்டு என்ன நடந்தது. என்று கேட்டவாறு பதறிப்போய் ஓடி வந்தாள்.

'ஒன்றுமில்லை மன்னி! சிறு காயம், என்றாள். தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தவளிடம், மருந்து போட்டுக்கொண்டு எங்கள் வீட்டிலேயே படுத்துக்கொள்ளுகிறேன். உன் வேலைகளை முடித்துக்கொண்டு பிறகு நீ வரலாம்' என்றாள்.

நானும், ராஜியுமாக அவளுக்கு மருந்து போட்டுக் கட்டினோம். நான் காப்பிகொண்டு வருகிறேன். அதுவரை நீங்கள் அவள் பக்கத்திலிருங்கள்' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் ராஜி.

அவள் கட்டிலுக்குப் பக்கத்தில் நாற்காலியை இழுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தவன் 'வலி எப்படியிருக்கிறது?' என்றேன்.

'பரவாயில்லை. ''என்றவள் என்னையே சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு 'உங்கள் மனதில் எழும் பிரச்னை என்னவென்று எனக்குத் தெரியும்; சொல்லிவிடுகிறேன் கேளுங்கள்.' என்றாள்.

கேட்கவேண்டுமென்ற ஆவல் இருந்தாலும், உபசாரமாக, 'இப்பொழுது ஒன்றும் அவசரமில்லை. உடம்பை அலட்டிக்கொள்ளாதே. பேசாமல் தூங்கு' என்றேன்.

'எனக்கு ஒன்றுமில்லை. சொன்னால்தான் தூக்கம்' வரும். என்று ஆரம்பித்தாள், அவள் சொன்ன விஷயம்: நாங்கள் பதினைந்து பேர் (பெண்கள்) முதல் வகுப்பிலிருந்து S. S. L. C. வரை ஒன்றாகவே படித்து, பாஸ் செய்தோம். நல்ல மார்க் வாங்கினதினால் காலேஜில் நாங்கள் கேட்ட பாடத்திற்கு உடனே இடம் கிடைத்து விட்டது. தட்டித்தடவிக்கொண்டு காலேஜ் வந்தவர்களும், மார்க்கு வாங்கியிருந்தாலும் எங்களைவிடக் குறைவாகவும், வயதில் இரண்டு அதிகமானவர்களுமான எங்களுக்குத் தெரிந்த மாணவர்களுக்கு எங்களுக்குக் கிடைத்த பாடம் கிடைக்கவில்லை. பிரின்ஸ்பாலிடம் பெண்களுக்கு மட்டும் கொடுக்கக்கூடாது' என்று வாதாடியிருக்கிறார்கள். ஆண் பெண் என்ற பாகுபாடே கிடையாது. மார்க் அதிகமுள்ளவர்களுக்கு உண்டு. 'நாம் உத்யோகம் செய்யப்போவதில்லை; நமக்கு இது வேண்டாம்' என்று பெண்களாக விட்டுக் கொடுத்தால் ஒரு சமயம் உங்களுக்குக் கொடுக்க முடியும்' என்று சொல்லிவிட்டார். அதற்காக ஒரு கூட்டம்போட்டு எங்களை விட்டுக்கொடுக்கும் படி சொன்னார்கள். ஓர் ஏழை மாணவனுக்காக நான் விட்டுக்கொடுத்துவிட்டேன். மற்றப் பேர்கள் கண்டிப்பாக 'முடியாது' என்றார்கள். அவர்களுக்கில்லாமல் அடிப்பதைத் தவிர வாழ்க்கையில் அதனால் எங்களுக்கு ஒரு உபயோகமுமில்லையென்று, வருங்காலத்தில் எங்கள் கடமை இன்னது என்பதுபற்றி ஒரு மாணவன் அழகாகப் பேசினான். இன்று வந்தவனும் இன்னும் இரண்டொருவர்களும் எங்களைத் தாறுமாறாக, சம்பந்தா சம்பந்தமின்றிப் பேசினார்கள். அப்படிச் செய்தும் இரண்டொருவர்தான் விட்டுக்கொடுத்தார்கள். சரி, உங்களிஷ்டப்படி நடவுங்கள். காலேஜைவிட்டு விட்டுக் கதறியோடும்படி செய்கிறோம் என்று இவ்விருவர்களும் சபதம் கூறினார்கள். நான் சமாதானமாகவே சொன்னேன்: வகுப்பிற்குள் துவேஷ மனப்பான்மையுடன் விஷயங்களை நடத்தினால் ஆசிரியரின் அவமதிப்புக்குள்ளாவதுடன், நமது பெயரும் கெடும். சிலசமயம் காலேஜ் வாய்ப்பே இல்லாமல் போனாலும் போய்விடும். நமக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்னைக்கு முடிவுகாண வெளியிலேயே விஷயங்களை வகுத்துக்கொள்ளலாம். நமக்குள் ஓர் போட்டி ஏற்படுத்துவோம். வெற்றி பெற்றவர்களுக்குக் காலேஜ். போட்டியைத்தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஆடவர்களுக்கே விடுகிறோம்' என்றேன்.

'இன்று வந்தவனுக்கும் இன்னொருவனுக்கும் சைக்கிள் கிறுக்கு மிக அதிகம். அதனால் இந்த அபூர்வமான யோஜனையைக் கண்டு பிடித்தார்கள். 'வாழ்க்கைப் பிரயாணத்தில் நாங்களின்றி நீங்கள் செல்லுவது கனவிலும் கடினம்' என்றானவன். 'தனித்தும் செல்லுவோம். உங்களுடனும் ஒத்துச் சென்று, பிரயாணத்தை இன்பமயமாக்குவோம். நாங்களின்றிப் பிரயாணம் இன்பப் பாதையில் செல்லுவது என்பது 'மலடி மகன்' என்ற சொல்லைப் போன்றது. நீங்கள் செய்யக்கூடிய எந்த வேலையையும் எங்களால் செய்ய முடியும். சிருஷ்டியின், தத்வத்திற்கு மதிப்புக் கொடுக்கவே சில காரியங்களை முடியாது என்ற பாவனையில் விட்டுக் கொடுக்கிறோம்' என்று பதில் கொடுத்தேன். இப்படி ஆண்மைக்கும் பெண்மைக்குமுள்ள முரண்பாடுகளை வைத்து வெகு நேரம் விவாதம் நடந்தது. பிறகு, அவர்கள் முப்பது பெயர்களுக்குப் பிரதிநிதியாக ஆறு நபர்கள், எங்களில் இப்போட்டியில் கலந்து கொள்ள அச்சப்பட்டுப் பின்தங்கினவர்கள்போக நாங்கள் இருவரே எங்கள் கக்ஷியின் பிரதிநிதியாக நின்றோம். நாங்கள் ஸைக்கிள் ஓட்ட வேண்டி

யது, இன்ன தெரு வழியாக இந்த இடம் போய்ச்சேர வேண்டும் என்ற நிபந்தனைப்படி. வழியில் ஏமாற்றம் ஏற்படாமல் இருக்க அங்கங்கே இரு கக்ஷியாட்களும் நின்று கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு மாணவனையும், வாரம் ஒரு முறையாக ஆறு வாரம் சுற்ற வேண்டும்' என்பதே. எங்கள் மீது அவர்கள் விரல் நுனி கூடப்படக்கூடாது' என்ற நிபந்தனையையும் ஏற்றுக்கொண்டார்கள். சாதாரணமாகவே, நான் பயமின்றி என் மனோதர்மப்படி நடப்பேன். அதற்கே சமூகம் என்னைத் திட்டிக் கொண்டிருந்தது. இந்த ஏற்பாட்டிற்குப்பின் என்னை யாவரும் எப்படி மதித்திருப்பார்களென்பதை உங்கள் கவனத்திற்கே விட்டுவிடுகிறேன்' என்றாள்.

'உங்கள் கக்ஷியை ஜயிப்பதற்கு உன் ஒருத்தி தீரம்தான் தேவையாக இருந்தது போலும். போட்டி இன்னும் எவ்வளவு நாள்?' என்றேன்.

'போட்டி இன்றுடன் முடிந்துவிட்டது. ஆனால் இந்த நீசனின் செய்கையினால் காலேஜில் என்ன வம்பு வளருமோ? இவனே என்னென்ன தந்திரங்களைக் கையாளுவனோ?' என்றாள்.

'பெண்களுக்கென்று தனிக் கலாசாலையிருந்து படித்தால் இந்த வம்பு வளர இடமே இல்லை' யல்லவா?' என்றேன்.

'நீங்கள் சொல்லுவது முக்காலுமுண்மை. ஆனால் இவ்வூரில் அவ்விதமில்லையே. அசலூரில் அனுப்பி ஹாஸ்டலில் வைக்க அம்மாவிற்கு இஷ்டமில்லை. என் விஷயம் இருக்கட்டும், எல்லோருக்குமே, அசலூருக்குப் பணம் அனுப்பும் வசதியிருக்க முடியுமா? சேர்ந்து படித்தால் இவ்விதமா நடக்கவேண்டும்? ஆனால் எல்லா மாணவர்களும் இவ்விதமிருக்கிறார்களா? எப்படி இருந்தாலென்ன? என் விஷயத்திற்கு ஒரு பிரச்னை காணவேண்டும். இனிமேல் காலேஜ் செல்வது நன்மையல்ல. செல்லாவிட்டால் பெற்றோர்களின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது'.........என்று நிறுத்தினாள்.

'பிரச்னை தீர ஒரு மார்க்கமிருக்கிறது' என்றேன்.

'என்ன?'

'கல்யாணம் செய்துகொண்டுவிடுவது'

'அது சுலபத்தில் நடக்கக்கூடிய விஷயமா? இந்தக் குதிரையை இவ்வூரில் ஒருவரும் கட்ட முன்வரமாட்டார்கள். அதனால் அப்பாவிற்கு லீவு கிடைத்தபொழுது ஊருக்குச் சென்றுதான் அந்த விஷயம்பற்றி யோஜிக்க முடியும். அதுவரை செய்யவேண்டிய விஷயத்தைப்பற்றித் தான் முடிவு செய்யவேண்டும்.'


SCISSORS




உயர்தர சிகரெட்டுகள்

'என்ன முடிவு செய்யப்போகிறும்?'

'என்ன முடிவைச் செய்வது? காலேஜில் ஏற் படும் சங்கடங்களை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்.'

'நான்சொல்லுகிறேனென்று வருத்தப்படாதே. நீ இவ்விதம் மனம் போனபடி உடை உடுத்தித் திரிந்ததினுல்தான் இச்சங்கடம். உன் தாயார் எப்படி அனுமதித்தாள்?

'அப்பொழுது அது எனக்குத் தமாஷாக இருந்தது. இப்பொழுதுதான் அதனுடைய வருத்தம் தெரிகிறது. என் தாயார் எடுத்துச் சொல்லுவாள். ஆண் பெண் சம உரிமைக் கக்ஷித் தலைவரான என் தந்தைதான் எனக்கு இவ்விதம் நடக்க ஊக்கமளித்தார். நான் கேட்டவைகளை மறுக்காமல் வாங்கிக் கொடுத்து விடுவார். இரண்டொரு சிநேகிதிவேறு உடை விஷயத்தில் 'பாண்ட் ஷர்ட்' என்று ஆரம்பித்தார் கள். நானும் அதில் கலந்துகொண்டேன். இனி மேல் இவ்விதமெல்லாம் நடக்க மனம் இடமளிக் காது. இவை போகட்டும். நீங்கள்தான் ஒருவழி கூறுங்கள்'

காலேஜை விட்டுவிடு. எஸ். எஸ். எல். ஸி வரையிலும்தான் பெண்களுக்கு முக்யமான படிப்பு. மேலே வேலைக்குச் செல்வதானுல்தான் காலேஜ் படிப்பு அவசியம். உனக்கு உத்யோகம் செய்தாகவேண்டுமென்பதில்லை.'

'நீங்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளு கிறேன். ஆனுல் கல்யாணமாகும்வரை படிப்பை நிறுத்த அப்பா சம்மதிக்கமாட்டார்.'

'அப்போ இப்பொழுதே கல்யாணம் செய்து கொண்டுவிடு'

'யாரை?' என்று சிரித்தாள்.

'தோட்டத்தில் மிளகாய்ப்பொடி நண்பனிடம் யாரைக் 'கணவன்' என்று சொன்னுயோ அவரை' என்றேன் தைரியமாக.

'என்னது? உண்மையாகவா? அல்லது என்னைக் கேலி செய்கிறீர்களா? என்னுடைய செயல்களைக் கவனித்துவந்த தாங்களா?'

'நானேதான். நான் உலகத்தின் மூலம் கண்ட ஜிம்மி வேறு. நான் நேரில் கண்ட ஜிம்மி வேறு' என்பதை உணர்ந்த பின்புதான் சொல்லு கிறேன். சகவாச தோஷமே மனிதனின் வாழ்க் கையை வகுத்துவிடுகிறது. இனிமேல் ஏற்படும் சகவாஸம் உன்னை, நீயாகவே ஆக்கிவிடும்'

'வந்தனம்'

'எதற்கு?'

'உங்கள் புத்திமதிக்கு' அதுசரி, உங்கள் பெற் ரோர் சம்மதிக்க வேண்டாமா?'

'நிச்சயம் சம்மதிப்பார்கள். ஆனுலும் என்னு டைய ஒரு வேண்டுகோளை நீ நிறைவேற்ற வேண்டும்'

'அவசியம் செய்வேன்'

'என் தாயாருடன் தங்கும் வரை அவர்கள் நடையுடை பாவனையைப் பின்பற்ற வேண்டும்'

'நீங்களே ஆச்சரியப்படும் விதம் நடந்து கொள்ளுவேன்'

'அப்படியானுல் நாளையே உன் தகப்பனுரிடம் சொல்லி நண்பன் மூலம் ஏற்பாடு செய்து விடு' காலேஜ் போகவேண்டாம்' என்று அவள் கையைப்பற்றியவண்ணம் சொல்லிக் கொண்டி ருக்கும் பொழுது,

'ஏண்டா பழிகாரா! உனக்கு என்ன தைரி யம். உன் அம்மா கேட்டால் வெட்டி மடைவாயில் வைத்துவிடுவாள்' என்று சொல்லிய வண்ணம் வந்தான் நண்பன்.

'மடைவாயில் வைக்கமாட்டாள் ஆல்வாயில் இருவரையும் சேர்த்து வைத்துவிடுவாள்' என்று அவள் கையை விட்டுவிட்டேன்.

'ஐயேடி, போயும் போயும் இவளையா கல்யாணம் செய்துகொளளவேண்டும் 'என்று கூறியபடி காப்பியுடன் வந்தாள் நண்பனின் மனைவி.

'எல்லாம் உன் திட்டப்படி நடந்துவிட்டது, சரிதானே மன்னி' என்றேன். பிறகு விஷயங்கள் துரிதமாக நடைபெற்று ஒரு மாதத்தில் ஜிம்மி எனது மனைவியாகிவிட்டாள். அவள் சொல்லிய படி நான் ஆச்சர்யப்படும் விதமே என் தாயா ரிடம் நடந்து அவளுடைய நன்மதிப்பையும் எங் கள் ஊர்க்காரர்கள், 'பட்டணவாசத்துப் படித்த பெண்ணுகவே இல்லையே! என்ன அடக்கம், கப்பலாகக் காரியம் செய்கிருளே?' என்ற பெய ரையும் வாங்கிவிட்டாள். எப்படி? என்று நான் கேட்டதற்கு உங்களைப் பார்த்ததுமே என் மன தில் தோன்றியிருந்த தீவிரப் புரட்சி மாறி, அன்பு உதயமாகிவிட்டது என்று சொல்லிவிட் டாள். ஒரே பெண், தங்களுடன் இருக்கவேண்டு மென்ற பேற்றேர்களுக்கு, இவ்விடமே இருந் தால் மாமியார் முதலியவர்கள் வர சங்கோஜப் படுவார்கள். அதனுல் தனி வீடு என்று 'ஒன்று இருக்கட்டும். முக்கால்வாசி நான் உங்களுடன் தான் இருப்பேன். பிறகு பேரன் பேத்திகளை நீங்களே வைத்துக்கொள்ளலாம்' என்று சொல்லி விட்டாள். என் மற்றொரு நண்பன் ஆல்வாய் என்ற இடத்தில் பெரிய வீடாக எடுத்திருந் தான். கல்யாணம் ஆவதற்கு முன்னமேயே என்னை, ஒரு போர்ஷன் எடுத்துக்கொள்ளச் சொன்னுன். நான் அப்பவே எடுத்துவிட்டேன். இன்று, அவ்விடம் போய் ஒழுங்குசெய்துவிட்டு மாமியார் மாமனுர் வாங்கிக்கொடுத்த சாமான் களைப் பரத்திவைத்துவிட்டு வருவதாகத் தீர் மானம். அதோ புதுப் புடவையின் சலசலப் பும் புஷ்பத்தின் வாசனையும் தெரிகிறது. எழுந்து உடுத்துக்கொள்ளாவிட்டால் நான் கண்டுகேட்ட ஜிம்மி என்னைக் கண்டு கேட்டுவிடுவாளல்லவா? ●


வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பினுல் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT
SOAP
SUNLIGHT SOAP

S. 202-50 TM

# டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

மூன்ருவது யுத்தம்? இந்தக் கேள்விக்குறி மிகவும் பலமாக அரசியல் வானில் சென்ற இரு வாரங்களாகத் தோன்றிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அமெரிக்காவின் கைப் பிள்ளையான ஸிங்மன்ரீயின் போக்கும் அதற்குக் குலாமான தென்கொரியாவின் சர்க்காரின் கோலமும் உலகத்தில் சமாதானம் நிலவாமல் இருக்க அமெரிக்கா என்ன வேண்டுமானுலும் செய்யும் என்று தோன்றுகிறது.

உலகம் நாசமாய்ப்போனுல் நமக்கென்ன என்ற நிலைமை இந்த நாளில் போய்விட்டது. உலக யுத்தங்களில் சிப்பாய்களைவிடப்பொது மக்கள் மடியும் இந் நாளில் அடுத்த யுத்தம் வந்தால் அது அணு—ஹைட்ரோஜன் குண்டு யுத்தமாகவே இருக்கும். உலகத்தின் பல பகுதிகள், சிறிதும் வல்லரசுகளின் விளையாட்டில் சம்பந்தமில்லாத பகுதிகள், நாசமடையும். இதை உணர்ந்துதான் இந்தியா தன் குரலை அடிக்கடி ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் எழுப்பி, கொரியாவில் தாற்காலிகமாக யுத்தத்தத்தையும் நிறுத்தியது.

இந்த யுத்த நிறுத்தம் தாற்காலிகம் என்பதை அமெரிக்கா தென் கொரியாவின் விதூஷகர் ஸிங்மன்ரீ மூலம் வற்புறுத்தி வந்திருக்கிறது. கொரிய யுத்தத்தில் இரு தரப்பிலும் கைதிகள் பிடிக்கப்பட்டனர். அவர்களுக்கு இரு தரப்பிலும் உள்ள முதலாளி பொதுவுடைமை ஸித்தாந்தங்கள் போதிக்கப்பட்டு, சில நூறு கைதிகள் மனமாற்றம் அடைந்திருக்கிருர்கள். கம்யூனிஸ்ட் என்ருல் கதிகலங்கும் அமெரிக்கா இது விஷயம் ஒரு விதண்டாவாதம் செய்கிறது. வடகொரியா செல்ல மறுக்கும் கம்யூனிஸ்ட் கைதிகளைப் பலவந்தமாகக் திருப்பியனுப்பக்கூடாதாம். சரி, ஆனுல் தென்கொரியா திரும்ப இஷ்டம் இல்லாதவர்களைப்பற்றியோ? இந்தக் கேள்வி அமெரிக்காவுக்கு அனுவசியம். ஏனென்ருல் அப்படி ஒருவரும் இருக்க மாட்டார்களாம்! இதைத் தீர்க்கவே நடுநிலைமைக் கமிஷன் ஏற்பட்டு அதில் நடுநிலைமை நாடுகளான ஸ்விட்ஸர்லாந்து, ஸ்வீடன் இந்தியா இடம் பெற்றன.

இந்தியாவின் நடுநிலைமையைக் குறை கூறியவர்கள்கூட அதை இப்பொழுது மெச்சுகிருர்கள். கைதிகளைப் பார்த்துக் கொள்ளக 'காவல் சேனை'யை இந்தியாவை, கொடுக்கும்படி ஐ. நா. கேட்டது, இந்தியாவின் பாரபட்சம் அற்ற நிலைமைக்குப் பெருமை தருவதாகும். ஐ. நா. வின் அழைப்பின் பேரில் தன்கடமையைச் செலுத்த இந்தியா ராணுவப்படையை அனுப்பியது. அதன் கௌரவம் குன்ருமல் பார்த்துக்கொள்வது ஐ. நா. அமெரிக்கா கடமை. அப்படிச் செய்யாமல் தென் கொரியக் கைதிகளை அட்டகாசம் செய்யும் படி தூண்டி விட்டு, கைக்கூலிகளை விட்டு இந்தியாவைத் திட்டச்செய்து தென்கொரிய கபோதி சர்க்காரின் குலாம் தவளைகளைக் கத்தச் சொல்வது அமெரிக்காவும் அதன் ராணுவத் தலைவர்களும். இதைக் கண்டு இந்தியா அஞ்சப்போவதில்லை. நேருவைப் பொறுத்தவரையில் இந்த அமெரிக்க நாடகத்தை அவர் அம்பலப்படுத்துவதுடன் உலகத்துக்குக் கொரியாவில் எவ்வளவு மோசடி நடக்கிறது என்பதையும் இந்தியா பகிரங்கமாக்கும் என்று அறிகிறேன். அமெரிக்கா தான் சில துறைகளில் இந்தியாவுக்கு ஒத்தாசை செய்கிறது என்பதற்காக அதற்குப் பிரதிபலன் அது செய்யும் அக்கிரமங்களுக்கு இந்தியா ஒத்துப்பாடவேண்டும் என்று எண்ணினுல் அது பெருந் தவறு என்பதை அறியவேண்டும்.

நேருவின் நடுநிலைமை, கேவலம் சிறிய விஷங்களுக்குட்பட்டது அல்ல என்பதை இங்கு இருக்கும் அமெரிக்க ஸ்தானீகர் ஜார்ஜ் அல்லன் அறிவார். தமக்கு முன் பதவி வகித்த செஸ்டர் பௌல்ஸ் (**Chester Bowles**) உண்டாக்கிய நல்லுறவு மறைந்து வருகிறது என்பதையும் இவர் அறிவார். ஆசியாவில் கம்யூனிஸம் பரவாமல் குடியரசு வலுப்படவேண்டுமென்ருல் அது இந்தியா எவ்வளவு தூரம் இந்த நோக்கத்தில் வெற்றியடைகிறது என்பதைப் பொறுத்தது. இந்தியாவை விரோதித்துக்கொள்வது எவ்வளவு பெருந் தவறு என்பதை வற்புறுத்த ஜார்ஜ் அல்லன் அமெரிக்கா செல்வார் என்று

அறிகிறேன். இவர் விஜயத்தின் விளைவாக அமெரிக்காவின் குருட்டுப் போக்கு மாறி, தென்கொரிய சர்க்கார் அதன் மூலையில் உட்கார்த்தப்படும்.

மூன்றாவது யுத்தம் கொரியாவில் உள்ள வியவகாரங்களை மாத்திரம் பொறுத்ததல்ல. யுகோஸ்லாவியாவின் பகுதியும் ஆங்கில அமெரிக்கர்களால் இதுவரை நிர்வாகம் செய்யப்பட்டு வந்த டிரியெஸ்ட் என்னும் பிரதேசம் மிகவும் ஆக்ஷேபகரமான முறையில் இத்தாலிவசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்லகாலமாக யுகோஸ்லாவியா இதை ஐ. நா. மூலம் விவாதம் செய்ய முற்பட்டிருக்கிறது. இந்தச் சமாதான முறையை அமெரிக்கா தன் மிருக பலம் மூலம் ஒடுக்க முயற்சிக்கலாம். அப்பொழுதும் மூன்றாவது மகா யுத்தத்திற்கு ஆயத்தம் ஏற்படும். இது விஷயமாகவும் இந்தியா சமரச முயற்சி செய்யும் என்று தெரிகிறது. மூர்த்தி சிறியதாயிருந்தாலும் அதன் கீர்த்தி பெரிது என்பதற்குச் சான்று இந்தியா.

* * *

சென்ற மாதம் இப்பொழுதுள்ள தேசிய விஞ்ஞான ஸ்தாபனங்களுடன் இன்னும் ஒரு ஸ்தாபனம் சேர்க்கப்பட்டது. அது பிலானியில் ஏற்படுத்தப்படப் போகும் எலக்ட்ரானிக்ஸ் இன்ஸ்டிடியூட். இது ஒலி அலைகள், அணு சம்பந்தப்பட்ட விஞ்ஞானப் பகுதியைச் சேர்ந்தது. இந்த நாளில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள ஆகாய மார்க்கமான ஒலிப் போக்கு வரத்துத்துறையில் இது மிகவும் முக்கியம். இதற்கு ஸ்ரீ நேரு சென்ற மாதம் அஸ்திவாரக்கல் நாட்டினார்.

பிலானி (Pilani) ராஜஸ்தானத்தில் உள்ளது. பிர்லா என்ற பெயர் பெற்ற தனிகர்கள் பிறந்த ஊர். பிறந்த ஊர் என்ற விச்வாசத்தால் ஸ்ரீ கனச்சியாம் தாஸ்பிர்லா அதில் பணத்தைக் கொட்டி, பல கல்லூரிகளை வளர்க்கிறார். பாலைவனத்தில் இருக்கிறது என்றாலும் பணத்தின் வேகம் அதை மிகவும் பசுமை நிறைந்த இடமாகச் செய்கிறது. ஒரு சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குக் கல்லூரியில் இடமில்லை என்று நம் மாகாணத்தில் சொல்லும் கொடுமை காரணமாக நம் 'மதராஸி'ப்பிள்ளைகள் பல நூறு பேர்கள் இங்கு வந்து கல்வி பயில்கிறார்கள். தவிர கல்லூரிகளில் நம்மவர்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். சாப்பாடு விஷயமாக நம் ஊர் மாணவர்களுக்குச் சௌகர்யம் குறைவுஎன்றுதான் சொல்லவேண்டும்-ஆனால் அவர்கள் தங்கள் வாழ்வில் இது சிறிய குறைபாடுதான் என்றுஎண்ணி, சிரமத்தைப் பாராட்டாமல் 'கருமமே கண்ணாயினார்' என்று படிக்கிறார்கள்.

மிகவும் குறுகிய நோக்கம் உள்ளவர்கள் பிர்லா முதலாளித்துவத்தின் பாவத்திற்குப் பிராயச்சித்தமாகக் கல்லூரிகள் நடத்துகிறார்கள் என்கிறார்கள். அப்படியே இருந்தாலும் நம் பக்கத்தில் உள்ள குட்டிமுதலாளிகளில் எவ்வளவு பேர் 'இந்தா' என்று சில ஆயிரம் ரூபாய்கள் கல்விக்குக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்? 'தஞ்சை ஜில்லா மிகவும் 'ஓசத்தி' என்று மார்தட்டுகிறார்களே, அங்கு இரண்டாந்தரக் கல்லூரிக்குக்கூட வழியில்லையே' என்று ஒரு நண்பர் இடித்துக்காட்டினார் பிலானியில். எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொள்ளலாம் போல் இருந்தது. வாஸ்தவம்தான் மன்னார்குடியிலும் தஞ்சையிலும் கல்லூரிகள் இருந்தது அந்தக் காலம். இந்த நாளில் நம் ஊர் பிரமுகர்கள் மனது வைத்தால் சில லக்ஷ ரூபாய் நிதி திரட்டி ஒரு கல்லூரியை ஏற்படுத்த முடியாதா?

நிற்க, பிலானிக்குசெல்ல, சிராவா, லொகாரு என்ற இரு இடங்களில் ரயிலிலிருந்து நடுநிசிக்கு இறங்கி, இரவு பூராவும் கண் விழித்துப்பஸ்மூலம் விடியற்காலையில் பிலானிபோக வேண்டியிருக்கிறது. தூரம் என்னவோ ஒன்பது, பதின்மூன்று மைல்கள்தான். பிலானியை உள்ளத்துக்குள்ளதாகச் செய்யத் தண்ணீர்தேவை. தற் சமயம் கிணறுகள் மூலம் தண்ணீர் வருஷத்துக்கு ரூ 12,000 மின்சாரச் செலவில் இறைக்கப்படுகிறது. மின்சாரமும் மிகவும் விலை ஜாஸ்தி, எலக்ட்ரானிக்ஸ் இன்ஸ்டிட்யூட் உருவாவதற்குள் பிலானிக்கே ரயிலைக்கொண்டுவந்து விடுவதாக நிர்வாகத் திறம் படைத்த டாக்டர் பட்நகர் சொல்கிறார். நங்கல திட்டம் அமலுக்கு வந்து மலிவான மின்சாரமும் கிடைக்கலாம். முதலாளி செலவு செய்கிறார் என்பதால் கல்வியும் முதலாளித்துவம் படைத்ததாகிவிடாது. பிலானிக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு உதவி செய்தாலும் தகும்.

* * *

தலை நகரத்திற்கென்று முழுதும் திட்டமிட்டு, காலி நிலத்திலிருந்து ஆரம்பம் செய்யப்பட்டுக் கட்டப்படும் இடம் சண்டிகட். இது பஞ்சாபின் தலை நகரமாகும். சென்ற வாரம் இதை ஜனாதிபதி டாக்டர்

ராஜேந்திரப் பிரஸாத் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

சண்டிகாடை நிர்மாணம் செய்பவர்கள் அந்நிய நாட்டுச் சிற்பாசாரியர்களான ப்ரை, ஜீனட் ஆண்ட்ரூ முதலியோர். பழைய நாள்பழக்கவழக்கங்களைப்புறக்கணித்து நல்ல காற்றோட்டம் உள்ள முறையில் ஜன்னல்கள் அமைத்து மேனாட்டு மோஸ்தரில் வீடுகட்டுகிறார்கள். பஞ்சாபில் பழைய நாள் வழக்கம் பலமுறை செங்கல்கள்கொண்ட ஜன்னல்கள் இல்லாத வீடு கட்டுவது. ஆகவே வெளிச்சத்திற்கும் காற்றோட்டத்திற்கும் இடம் மிச்சம் பிடிப்பதற்கும் வேண்டி, கட்டும் வீடுகள் பஞ்சாபிகளுக்குப் பிடிக்கவில்லை. 'பத்திரம் குறைவு. அனுசாரம் பிடித்தது' என்கிறார்கள்.

எப்பொழுதுமே புதிய எண்ணங்களை நம் நாட்டில் புகுத்துவது கடினம். ஆனால் இன்னும் இரண்டு வருஷங்களில் சண்டிகாட் பூராவும் கட்டப்பட்டு விளங்கும்பொழுதுதான் எவ்வளவு தூரம் முழுவதும் பிளான் மூலம் கட்டப்படும் தலைநகரம் தானாக வளர்ந்த தலை நகரத்தைவிடச் சிலாக்கியம் என்பது தெரியவரும். நிலங்கள் பூராவும்—சுமார் 9,000 ஏக்கர்—சர்க்கார் வசம் இருக்கிறது. நிலங்கள் சதுர கஜம் நூற்றைம்பது ரூபாய் வீதம் விற்பதிலிருந்து சண்டிகாட்டைப்பஞ்சாபிகள் விரைவில்அபிவிருத்தி அடையச்செய்வார்கள் என்பது நிச்சயம். சிற்பிகள் சொல்லும் முறையில் கட்டிடங்களுக்கு வருடா வருடம் வெள்ளை, கலர் அடித்து, சரியான முறையில் அபிவிருத்தி மராமத்து செய்தால் பத்துவருஷங்களில் சண்டிகாட் ஸ்விட்ஸர்லாந்தில் உள்ள நகரமோ என்ற பிரமிப்பை உண்டாக்கும்.

* * *

கடைசியாக மத்திய மந்திரிசபையை மாற்றியமைப்பதுபற்றித் திரும்பவும் ஹேஷ்யங்கள் கிளம்பியிருக்கின்றன. ஸ்ரீ. கித்வாய் ரயில்வே மந்திரியாகிவிடுவது என்று தீர்மானித்துவிட்டதாகத் தெரிகிறது. ஸ்ரீ. பர்கோஷியான் காலம் ஆகிவிட்டாரல்லவா, அவர் ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய ஒரு அஸ்ஸாமியரையே நியமிப்பதாகத்தீர்மானித்திருக்கிறார்களாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தஞ்சை தொகுதி பார்லிமெண்ட் மெம்பர் ஸ்ரீ ஆர். வெங்கடராமனை உபமந்திரி ஆக்குவார்கள் என்று அறிகிறேன். சென்ற தடவை நியமனம் செய்யும்பொழுதே இவருக்கு ஒரு சான்ஸ் இருந்தது. ஆனால் 'சில ராஜதந்திர காரணங்களால்' ஸ்ரீ அழகேசனை நியமித்தார்கள். இது தவிர, இந்திய தேசீய ராணுவத்தைச் சேர்ந்தவரும் மீரட் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவருமான மேஜர் ஜெனரல் ஷா நவாஸுக்கும் ஒரு சான்ஸ் கிடைக்கலாம். ●


# நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு வழி?



## பிரஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயில்

"நான் பிரஸிடெண்ட் வெஜிடெபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கியமளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம். என் அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன், தேகத்திற்குக் குளுமையையும் அளிக்கிறது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

**RATHOD TRADING Co.,**

SOWCARPET — MADRAS-1.






## 7. போட்டோவும் பிரச்னையும்

மறுநாள் காலையில் அந்தப் பெண் எல்லாச் சங்கடங்களையும் மறந்து எழுந்திருந்தாள். அவள் அவ்விதம் எழுந்திருந்த அதிசயத்தை ராக்காயியும் மூக்காயியும் பார்த்து விரல்வைத்தனர். எந்த ஆஸ்பத்திரியிலும் இந்தச் சிகித்சை நடைபெறாது. ரத்தம் அதிகம் போனதால் உடல் வெளுத்திருந்ததும், அதனால் களைப்பிட்டிருந்ததும் தவிர அந்தப் பெண் உடலில் வேறு எவ்வகை உபாதையும் இல்லை.

எழுந்திருந்தவுடன் அந்தப் பெண் "ஐயா இங்கே வருவார்களா? நான் அங்கே போகலாமா?" என்றாள்.

"ஐயாவா! யார்? சுவாமிகளையா சொல்கிறீர்கள்: நான் சென்று கேட்டு வருகிறேன்!" என்று மூக்காயி கிளம்பினாள். அவளுக்குத் தானே நேரில் சென்று பார்க்கவேண்டும் என்ற ஆத்திரம்.

அவள் வந்தபோது சுவாமிகள் எங்கேயோ கிளம்பிக்கொண்டிருந்தார். முகத்தில் ஒரு கலக்கமும் இல்லாமல் பழைய சாந்தம் ஒளிர அவரைக் கண்டதும் மூக்காயி பிரமித்துவிட்டாள். ராக்காயி சும்மா கதை திரித்துவிட்டாள் என்று எண்ணிக்கொண்டாள்.

இவளைப் பார்த்ததும் சுவாமிகள் நின்று, என்ன சமாசாரம்? என்றதும் மூக்காயி, அந்தப் பெண் சுவாமிகளைப் பார்க்க ஆதுரமாயிருக்கிறாள்!, என்ற விஷயத்தைத் தெரிவித்தாள். 'சரி போ, வருகிறேன்' என்று அவளை அனுப்பிவிட்டு, சுவாமிகள் ஆனந்தனைக் கூப்பிட்டு, 'ஆனந்தா, சில காரணங்களுக்காக நான் அவள் நரம்பு பலப்படும்வரை பார்க்கக்கூடாது. நீ சென்று அவளை இங்கேயே இருக்கச் சொல்லு. 'தாரிணி'ப் பச்சிலையை த்ருடகாரிணி, பந்தபாசிலை, சிரமநாசினி என்ற பச்சிலைச் சாறுகளுடன் சேர்த்து இரண்டு நாட்களுக்குக் கொடு. நல்ல வேளையாக மலையுச்சிக்குப் போகவேண்டிய வேலையும் வந்து இருக்கிறது. நேற்று அந்த வேடன் கொண்டுவந்த பச்சிலை தான் வெகு நாளாகவே அவசியமாயிருந்தது: T B வியாதிக்கு அது மிகவும் அவசியமான ஒரு மூலிகை. ஒரு வேரும் வேண்டும். அது தேடிக் கொண்டு வர இரண்டு நாள் ஆகும். அதுவரை அவள் இங்கே இருக்கட்டும்!' என்று சொல்லி வாசலில் வந்து நின்ற மோட்டாரில் ஏறிக் கொண்டார்.

மறுபடியும் ஆனந்தனைக் கூப்பிட்டு, 'இந்தா, இந்தக் கடிகாரம் அந்தப் பெண்ணுடையது தான். திருப்பிக்கொடுத்து விடு. அவள் ஒரு டாக்டர். மதராஸில் ப்ராக்டீஸ் செய்கிறாள். இங்கே வரவேண்டும் என்று வெகு நாளாக எழுதி வருகிறவள் அவள்தான். தங்கம் என்று பெயர். அவளிடம் நீங்கள் எண்ணுகிறபடி இங்கே ஆராய்ச்சி செய்யலாம்! என்று சொல். இன்று டவுன் மில் செட்டியார் வருவார். அவரிடம் நீங்கள் வாக்களித்த பணத்தை உடனேயே தரவேண்டியிருக்கும் என்று சொல்லிவை...என்ன யோசிக்கிறாய். அவர் தராவிட்டால் யாருக்கு நஷ்டம்? அரசாங்கத்தினிடம் பெற்றுக்கொள்வோம். நீ சொல், அவளிடம்; நடந்ததை எண்ணி வருந்தவேண்டாம்; இங்கேயே இருந்துவிட முடிவு செய்திருந்தால் இன்று முதலே இந்த ஆசிரமத்தை உங்களுடையதாகக் கொள்ளலாம் என்று சொல். வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து கொடு...' என்று உத்தரவு கொடுத்தார். ஆனந்தனும் பணிவுடன் அப்படியே! என்றான். கார் சென்றுவிட்டது.

ஆனந்தனுக்கு எல்லாம் புரிந்தது. ஆனால் இவளைக்கண்டு அவர் ஏன் ஓடி ஒளியவேண்டும் என்பது மட்டும் புரியவில்லை.

எப்படியானால் என்ன என்று எண்ணித் தனக் கிடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற ஆனந்தன் தங்கம் என்ற அந்தப் பெண் இருக்கும் குடிசையை நோக்கிச் சென்றான்.

வாசகர்களும் தங்கத்தை அறிவார்கள். தங்கம் என்ற பிறகு அவள் குறிப்பிட்ட ரெங்கநாதன் யார் என்றும் அறிந்து கொண்டிருப்பார்கள். கொஞ்சம் யூகமுள்ள வாசக அன்பர்களும் அம்மணிகளும் சுவாமிகள் யார் என்று கூடத் தெரிந்து கொண்டிருப்பார்கள். சுவாமிகள் ஏன் வருந்தியிருக்கவேண்டும் என்பதை மட்டும் நாம் சொல்லி விடுவோம்.

அந்தக் கடிகாரம் மிகவும் விந்தையான வேலைப்பாடமைந்த கடிகாரம். அதற்குப் பின் பக்கத்தில் இரண்டு மூடிகள் உண்டு. ஒரு மூடியைச் சாதாரணமாகத் திறந்தால் கடிகாரத்தின் உள் பாகங்களைக் காணலாம். அதற்கு மேலுள்ள மூடியைப் பிறகு ரகசியம் தெரிந்தவர்கள் திறந்தால் ஒரு கண்ணாடி வில்லை சிறிதாகக் காணப்படும். அது பூதக்கண்ணாடி. அந்தக் கடிகாரத்தை ஒருமுறை ரெங்கநாதன் தங்கத்தின் கையில் பார்த்திருக்கிறான். அன்று ஒரு நாள் அவன் தங்கத்தையே "இது என்ன?' என்று கேட்டான். அதற்கு அவள் அதன் ரகசியத்தை விளக்கி, அதற்குள் சிறிய அளவுள்ள போட்டோவை வைத்தால் பெரிதாகத் தெரியும்" என்றாள்.

"அதற்குள் யார் போட்டோ வைத்திருக்கிறாய்?"

"தற்பொழுது ஒருவர் போட்டோவும் இல்லை......"

"பிறகு..."

"பிறகு என்ன?"

"கணவன் போட்டோவை வைத்துக்கொள்வாய்! இல்லையா?"

"ஆம், நீ ஏன் கேட்கிறாய்? "

"இல்லை சும்மா கேட்டேன். கணவன் வரும் வரை கடிகாரத்தைச் சும்மாவா வைத்திருக்கப் போகிறாய்? "

'பின் என்ன செய்கிறது?'

'ஏதோ, காதலன் போட்டோவை வைத்துக் கொள்ளலாமே'

தங்கத்துக்கு ரெங்கநாதனைத் தெரியும். அவன் நாகரிகப் பெண்களிடம் கொண்டுள்ள கோபமும் தெரியும். அவர்களிடம் உள்ள அவநம்கையையும் அவள் அறிவாள். ஆனால் அவளுக்கு என்னவோ அவனிடம் கோபம் வந்ததேயில்லை. ஆகவே அவள் சாவதானமாய், ரெங்கா! உனக்குப் பெண்கள் உள்ளத்தைத் துளைப்பதில் ஒரு கொடுஞ்சந்தோஷம் இருக்கிறது. ஆனாலும் ஒன்று சொல்கிறேன் கேள். கணவன் யாரானாலும் காதலன்ஒருவன் தான் ஒரு பெண்ணுக்கு இருக்க முடியும். என் விஷயத்தில் கணவனும் காதலனும் ஒன்றாக இல்லாதுபோனால் அது காதலனுடைய கொடுமையினாலோ, கோழைத்தனத்தினாலோ தான் நேரும்.

"காதலர் பலரானால்?"

"தங்கத்துக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அழுதுகொண்டே அதற்கும் நீதான் காரணமாயிருப்பாய்!" என்று கத்திவிட்டு, திரும்பிவிட்டாள். அப்பொழுது அங்கே வந்த ரெங்கநாதன் தாய், "அம்மா, தங்கம், தங்கம்" என்று கூப்பிட்டாள். பிறகு பிள்ளையைக் கோபித்துக்கொண்டு, 'போடா, குழந்தையின் மென்மையுள்ளம் தெரியாமல் என்னடா சொன்னாய்?" என்று அதட்டவே தங்கமும் சிரித்துக்கொண்டே திரும்பி வந்தாள்.

அன்று அவள் தோல்வி மனப்பான்மையில் அவமரியாதைதான் ஏற்பட்டது.

இன்று அதே ரெங்கநாதன் இடையே பல வருஷப் பயிற்சி யிருந்தும்கூட இதயத்தின் இயற்கைத் துடிப்பை மறக்கமுடியவில்லை. கடிகாரத்தைத் திறந்தவுடன் உள்ளே ரெங்கநாதனுடைய போட்டோவே இருந்தது. உடனே சுவாமிகளுக்குப் பல வருஷங்களின் ஞாபகம் வந்துவிட்டது. அன்று அறியாத்தனத்தினால் செய்திருந்த பிழை இன்று குருதேவருடைய வார்த்தைகளின் வெளிச்சத்தில் கூர்மைகொண்டு தாக்கிற்று. மாமரத்தில் எறியும் கல் கிளையில் பட்டு, அடித்தவன் மண்டையைத் தாக்குவது போல் இன்று அவன் தங்கத்துக்கு இழைத்த தீமைகள் எல்லாம் அவன் உள்ளத்தைத் திருகி எடுக்க ஆரம்பித்தன. இரவு முழுவதும் சுவாமிகள் புதுப்புத்தி பெற்ற ரெங்கநாதனாக மாறியிருந்தார்.

கடைசியாகப் புத்தியை ஒருமுகப்படுத்தி குருவின் வார்த்தையை ஞாபகப்படுத்திக்கொண்டு தூங்கிவிட்டார். காரில் போகும்போது மீண்டும் சர்ச்சை செய்ய ஆரம்பித்தது மனம். கடைசியில் தாமரை இலைத் தண்ணீர்போல் அவசியமான எந்தவேலை செய்தாலும் துறவுக்கு இடையூறாகாது என்று முடிவுக்கு வந்த அதே சமயத்தில் தங்கத்துக்கும் சில முடிவுகள் செய்ய வேண்டியிருந்தன.

சுவாமிகளை எதிர்பார்த்த அவள் வாசலில் மிதியடிகளின் சப்தம் கேட்டதும் எழுந்திருக்கப் போன சமயத்தில் ஆனந்தன் உள்ளே வந்து

'அம்மணி, குருநாதர் வெளியே போயிருக்கிறார்' என்றான்.

ஏற்பட்ட ஏமாற்றத்தை அடக்கிக்கொண்டு மேலே கேட்கத் தயாரானாள் தங்கம். சுருக்கமாகச் சொல்ல வந்ததைச் சொல்லிவிட்டு ஆனந்தன் வெளியேறினான். போகும்போது கடிகாரத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அதை வாங்கியவுடன் மீண்டும் ஒரு முறை முகம் வெளுத்தது. திறந்து அதில் உள்ள போட்டோவை மீண்டும் ஒரு முறை பார்த்தாள். அறையில் ஒருவரும் இல்லாததால் 'ரெங்கநாதா, நீ இன்னம் என்னென்ன பாட்டுக்கு உள்ளாக்குவாயோ பார்க்கலாம்!' என்று சொன்னவள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அதே சமயம் மூக்காயியும் ராக்காயியும் உள்ளே வர, 'சுவாமிகள் வந்தார்களா?' என்றார்கள். உடனே ராக்காயி தொடர்ந்து 'வந்திருப்பார்கள் போல இருக்கிறது. கடிகாரம் இதோ இருக்கிறதே!' என்றாள்.

தங்கம் அழுகையை நிறுத்தி, 'ஏன் சுவாமிகள் இதை வைத்திருந்தார்களா?' என்று கேட்டாள்.

ராக்காயி கடிகாரம் பற்றிய எல்லாக் கதையையும் தானாகவே சொல்லிவிட்டாள்.

தங்கத்துக்கு ஆச்சரியமாகி விட்டது.

விதி என்ன மறுபடியும் சதி செய்கிறதா? சுவாமிகள் ரெங்கநாதன்தானா? அந்த நிலைமையில் சந்தித்தால் என்ன செய்வது? மீண்டும் இந்தப் பாழும் மனம் சும்மா இருக்குமா? ஏற்கனவே புரட்சி செய்த இந்த மனது மற்றதெல்லாம் கானல் நீர் என்று கண்டபிறகும் குதிக்காதா? அதுவும் ஏங்கி எதிர்பார்த்திருந்த உணவை எதிரே கண்டு, பசி அலறிக் கதற ஆரம்பித்து விட்டால்?

அவள் கண்ட முடிவு 'சரி பார்க்கலாம்!' என்றதுதான். அதுவும் தண்ணீரில் விழுந்த நிழல் போல் உயிரும் இல்லாமல் அலைகளாலும் காற்றாலும் ஸ்திரமும் நீங்கி இருப்பதுபோல் அடிக்கடி மனப் பதற்றத்தில் அசங்கிக் கொண்டிருந்தது.

## 8. சீறித் தூறும் மழையும் சுழற்றி அடிக்கும் புயலும்

இரண்டு நாட்கள் தங்கத்துக்கு மிகவும் சிரமத்துடன் கழிந்தன என்று சொல்ல வேண்டிய தேவை இல்லை. ரெங்கநாதன் மனக் கட்டுப்பாதையில் வெகு தூரம் போயிருந்தான். எதை வேண்டாம் என்று கருதினானோ, எதைச் செய்வதால் மோகமும், ஆத்மாவுக்குக் கட்டுப்பாடும், மீண்டும் மீண்டும் உலகில் பிறப்பும் அவதியின் அலறலும் அதிகமாகும் என்று எண்ணினானோ அதைச் செய்தால் மட்டும் செய்த உடனே அப்படி ஆகிவிடும் என்ற எண்ணம் மறைய ஆரம்பித்துவிட்டது. தேக தர்மத்தையும், சமூக தர்மத்தையும் செய்தாலுமே ஆத்ம விடுதலையை உள்ளத்துறவு தந்துவிடமுடியும் என்ற ஓர் அறிவும் அந்த நிலையிலும் முழுகி விடாமல் படகைச் செலுத்த ஆற்றலும் ஒருவாறு சம்பாதித்து விட்டான்.

ஆனால் தங்கம் நிலைமை அப்படி இல்லை. மணமே அவசியம் என்ற ஒரு கருத்தைக் குழந்தை முதலே ஊட்டி ஊட்டி வளர்த்த காரணத்தால் அவள் உடல் வேட்கைக்கும் உள்ளத்தின் சம்பந்தத்துக்கும் ஒரு சரியான சம்பந்தம் ஏற்படுத்த முடியாத நிலையில் வளர்ந்து விட்டாள். அதனால் அவள் சென்ற பாதை, சேற்றில் இறங்கியவன் காலில் அடிக்கு அடி சுற்றிக்கொண்டு சேற்றில் ஆழ்த்தும் தாமரைக் கொடிகள் போல் ஆவல்களும் பலவீனங்களும் சுற்றிக்கொண்டு விட்டன.

ரெங்கநாதன் மறுத்தே விட்டான் என்று அறிந்த பிறகு அவள் டாக்டருக்குப் படிக்க ஆரம்பித்தாள். உடற் கூற்றைக் கூச்சமில்லாமல் படித்த அவளுக்கு யௌவனம் என்ற சூறாவளிக் காற்றில் சிக்கி, பெண்மை ஆடும் ஆட்டத்தைச் சமாளிக்கச் சிரமமாயிருந்தது. கலியாணம் வேண்டாம் என்று தாய் தந்தையரிடம் சொல்லி விட்டாள். தாய் ஏங்கியே இறந்து விட்டாள். தந்தை நீ போன போக்குப் போ என்று சொல்லி விட்டு மற்றொரு பெண்ணிடம் போய்விட்டார்.

தங்கம் டாக்டர் பரீட்சை முடித்துவிட்டு, ப்ரைவேட் ப்ராக்டீஸ் ஆரம்பித்தாள்.

மதராஸில் மாம்பலம் சமீபத்தில் அவள் ஆஸ்பத்திரி ஆரம்பமாயிற்று. தொழில் சுமாராக நடந்தாலும் மனது என்ற ஒன்றுக்கு உயர்ந்த பயிற்சி கிடைக்காதபடியால் அவள் பெண்மைக்கு ஊனம் வரும் வழியில் நடந்துகொண்டு விட்டாள்.

அந்த எண்ணங்கள் எல்லாம் ஒரேயடியாகப் பத்து வருஷங்கள் அடிக்கவேண்டிய புயல் ஒரே நாளில் அடிப்பதுபோல் வந்து அவள் உள்ளத்தைச் சூழ்ந்து கொண்டன.

மூலிகைச் சிகித்ஸாலாயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டபோது அவள், நடத்துபவர் ரெங்கநாதனாக இருக்கமுடியும் என்று எண்ணவேயில்லை. கடிதங்களிலும் ரெங்கநாதன் கை எழுத்தோ ஒரு பொழுதும் காணப்படவில்லை. தன்மை ஒருமையை அவர் உபயோகப்படுத்துவதில்லை. 'ஊழியன்' என்ற கை எழுத்தில் ரெங்கநாதன் உருவத்தை அவள் எப்படிக் கண்டு பிடிப்பாள்?

இப்பொழுது அவரை எப்படிச் சந்திப்பது? திரும்பிப்போய்விடலாம் அவர் வருவதற்குள்

199343

என்றால் முடியவும் முடியாது, மனதும் வரவில்லை, இங்கே இருக்கும் தன் முடிவை வெகு நாளாகவே அவள் வெளியிட்டுக்கொண்டும் அதற்குத் தன்னைத் தயாராக ஆக்கிக்கொண்டும் விட்ட படியால் இனி அவளுக்கு மதராஸில் வேலை இல்லை.

ஆனால் ஒன்று. இனி அவளால் தனித்திருக்க முடியாது. மீண்டும் மீண்டும் சறுக்கி விழுந்து விடுவாள் அதே குழியிலே. அவள் அப்படி வெகுவாகத் தப்பினாலும் கூட அந்தப் பழம் காதலக் காதகர்கள் சும்மாவிடமாட்டார்கள். அவர்களுள் ஒருவன் இவளைக் கொல்லவே துணிந்து விட்டான். அந்தப் பாவி மீண்டும் வந்தால் அவனுடைய உருட்டல், மிரட்டல், கொஞ்சல், கெஞ்சல் பாணங்களுக்கு அவள் இலக்காகி மீண்டும் அதே குழியில் அடிபட்டு விழமாட்டாள் என்று என்ன நிச்சயம்? ஆகவே அவளுக்கு இந்த மாதிரி ஒரு இடத்தில் இருப்பது நல்லதுதான். வேறு பற்றுக்கோடு இருந்தால் தான் அந்த எண்ணங்களை மறக்கமுடியும். ரெங்கநாதன் துணையும் கிட்டினால் மனக் கட்டுப்பாட்டுப் பயிற்சியும் கிடைக்கும். ஆனால் ரெங்கநாதன் சகவாஸம், என்ன, நினைத்த பலனைக் கொடுக்குமா?

அவளால் ஒன்றும் யோசிக்க முடியவில்லை. ஒரு வேலையிலும் அவளால் ஈடுபடவும் முடியவில்லை.

எப்படியோ இரண்டு நாள் கடத்தி விட்டாள்.

மூன்றாம் நாள் காலை ஏழு மணி இருக்கும். சுவாமிகள் வருவதாகச் சொல்லிச்சென்ற நேரம் அதுதான். முதலில் வரும்போது நேரே முதலில் சந்திக்கவேண்டும் என்று எண்ணுவாள். பிறகு நாம் ஒதுங்கி விடுவோம் அவர் வந்து கூப்பிட்டனுப்புகிறாரா பார்க்கலாம் என்று எண்ணுவாள். எப்படியோ ஒருவாறு முடிவு செய்து தன் குடிசைக்குச் சென்றவள் திரும்பி வெளியே கிளம்பி வாசலை நோக்கிப் போகலாம் என்ற எண்ணத்துடன் தலையை வாரிக்கொண்டு புடவைத்தலைப்பைச் சரிசெய்து கொண்டு இருக்கும் போதே 'தங்கம்!, என்ற குரலைக்கேட்டாள். ஆகா! அவள் உள்ளம் புல்லரித்தது. அதே குரல்! எந்தக் குரலைக் கேட்க அவள் படாதபாடு பட்டாளோ அதே இன்பக்குரல்; எந்தக் குரலில் கிளம்பிய காரணத்தால் நாராசம் போன்ற வார்த்தைகள் கூட அவள் கோபத்தை எழுப்பச் சக்தியற்றனவாகி நின்றனவோ அதே சங்குக் குரல்; எந்தக் குரலின் கற்பனை கூட அவள் உள்ளத்தில் இன்ப ஊற்றையும் அன்பு மேகத்தையும், கிளப்புமோ அந்தச் சங்கீதக்குரல். அவள் வாய் ரெங்கநாதா! என்றது. ஆனால் உடனே அடக் கிக்கொண்டு வாசலில் வரத் திரும் பினாள். சுவாமிகள் வாயிற்படியண்டை வந்து விட்டார். பின்னால் பல சிஷ்யர்கள் நின்றிருந் தனர். கண்களில் நீர்பெருக, உடல் காற்றில் பட்ட இலைபோல் ஆட, தங்கம் அப்படியே விழுந்தாள்.

சுவாமிகள் தடுத்து நிறுத்தி, 'இந்த அனுவசிய பதட்டங்கள் எல்லாம் தகாது. வா, புதிய ஒரு மூலிகையையும் வேரையும் கொண்டு வந்திருக் கிறேன். நடலாம் வா,... அது இருக்கட்டும் உன் உடம்பு நன்றாய்த் தேவலையா?' என்று கேட்டார்.

மனப்பயிற்சியில் முதல்பாடம் கிடைத்தது. அதைச் சிரத்தையுடன் ஏற்றுக்கொண்டாள் அவள். எழுந்து அவருடன் போகத் தயாரானாள். போகும்போதே பேசிக்கொண்டே போயினர்..

**தங்கம்:** உடம்பு தேவலை. உங்கள் பச்சிலைகளில் ஜீவனி சக்தி இருக்கிறது.

**சுவாமி:** மூலிகை மட்டும் அல்ல...

**தங்கம்:** ஆம் தங்கள் தவ வலிமையும்...

**சுவாமி:** பாரத தேசத்தின் பூமி; இதில் வாழ்ந்த ரிஷி முனி யோகிகள் தவப்பயன் என்றுசொல்...

**தங்கம்:** சரி, இதைத் தேடி எடுக்கத் தவம் வேண்டாமா?

**சுவாமி:** அது சரி. நீ ஏதாவது ஆராய்ச்சி ஆரம்பித்தாயா?

**தங்கம்:** இன்னம் ஒன்றும் ஆரம்பிக்கவில்லை.

**சுவாமி:** தெரியும். நீங்கள் எல்லாம் ஆராய்ச்சிப் பொருளைவிட, சாதனக் கருவிகளை அதிகம் மதிக்கிற படிப்பு முறையில் பயின்றவர்கள்.

**தங்கம்:** அதை எல்லாம் மாற்றிக்கொள்ளத் தான் இங்கே வந்தேன்...

**சுவாமி:** அஹங்காரம்! நீ மாற்றிக்கொண்டு பயனடையலாம் என்று எண்ணாதே, எவ்விதம் மாற்றிக்கொண்டால் உனக்கு மனித தேகம் கிடைத்ததன் பயன்; கொடுத்தவனுக்குச் செலுத்தவேண்டிய நன்றி; மக்களுக்கு நீ செலுத்தவேண்டிய கடமை இவைகள் எல் லாம் சிறந்த முறையில் பணியாற்றப்படும் என்று எண்."

தங்கம் பதில் பேசவில்லை. இரண்டாம் பாடம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

**சுவாமி:** யோசிக்காதே; நாளைக்கே இங்கே ஒரு சோதனைச்சாலை நிறுவப் பெறப்போகிறது. நீ என்ன வேண்டுமோ அதை எல்லாம் தயார் செய்துகொள்ளலாம். முதலில் ஒரு லட்சம் ரூபாய் உன்னிடம் நாளையே தரப்பெறும்.

**தங்கம்:** (விம்மி,) 'பெரிய சோதனையல்லவா?'

**சுவாமி:** ஆத்ம சோதனையின்முன் எதுவும் பெரிய சோதனை இல்லை. ஆனால் ஒரு அடிப்படை. விஞ்ஞானம் மனிதசக்தியைவிடச் சக்தி வாய்ந்தது என்று எண்ணிவிடக்கூடாது. மனித சக்தி ஆத்ம சக்தியும் அருள் ஒளியும் இல்லாமல் கவைக்கு உதவாது என்று அறிந்துகொள்ளவேண்டும். எல்லாவற்றையும்விட மேலாக நாம் பெரிய ஒரு நற்சக்தியின் ஆயுதம் மட்டுமே என்று நம்பவேண்டும். என்ன?

**தங்கம்:** மன்னிக்கவேண்டும். குழியில் கிடந்த என்னை ஓரேயடியாக மலைமேல் ஏறச் சொல்கிறீர்கள்.

**சுவாமி:** பயப்படாதே. நீ படித்தவள்...

**தங்கம்:** பாபி...

**சுவாமி:** யார் பாபி? நீ எதற்காகப் பாபி என்று சொல்கிறாய்? உடல் அனுபவித்த இன்பத்தின் காரணமாக நாம் ஏற்படுத்திய விதியை மீறியதற்காகவா... என் குருநாதர் அப்படி வருந்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்...நீ..

**தங்கம்:** சுவாமி...

**சுவாமி:** சரி, அந்தப் பேச்சு வேண்டாமென்றால் வேண்டாம்...

**தங்கம்:** ஆம். என்னை இட்டுச் செல்லவேண்டிய பொறுப்பு தங்களுடையது. நான் காட்டிய இடம் எல்லாம் வருகிறேன். இனி என்னை நான் நம்ப முடியாது!

**சுவாமி:** சரி, நாளையே உனக்குச் சோதனைக்கு வேண்டிய கருவிகளுக்கெல்லாம் ஏற்பாடு செய். வியாதிக்கு இங்கே உபயோகப்படும் பச்சிலை மூலிகைகள் எல்லாவற்றையும் உங்கள் முறைப்படி பரிசோதி...

'சரி இடம் வந்துவிட்டது. இனி இதை நடும் வேலையைப் பார்க்கலாம்......என்று சொல்லி, சுவாமிகள் தாமே கையில் மண் வெட்டியை வாங்கி அங்கே வெட்டினார்.

அவர் மேலும் வெட்டிக்கொண்டே சொன்னார்.

'நம்முடைய சாஸ்திரத்தில் மூலிகைகளின் சக்தியைப் பற்றிப் பலவாறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கொல்லையில் அது வளரும் மூலை, அது நடப்பட்ட நேரம், அதன் அண்டை அயலிலுள்ள செடிகளின் தன்மை, நட்டவரின் மனப்பாங்கு அவைகளுக்குத் தக்கவாறு அதன் சக்தி மாறுமாம். அதற்குத் தக்கவாறு அளவையும் வேளையையும் மருந்துகொடுப்பவர்கள் நிர்ணயிக்கவேண்டும். இதெல்லாம் எதனால் அவசியம் என்று கண்டுபிடிக்கவேண்டும் என்றுதான் நான்



நீ இங்கே வரச் சம்மதித்தேன். இது ஒரு ஆயுள் வேலை. இடம் மாறுவதாலோ, ஆள் மாறுவதாலோ அதில் என்ன மாறுதல் ஏற்படுகிறது என்று விஞ்ஞானம் கண்டுபிடிக்கவேண்டும். நம் சாஸ்திரங்கள் 'ஏற்படுகின்றன! அந்தந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன!' என்றுதான் சொல்கின்றன. அதுவும் அதே முறையில் மேலே நாம் முன்னேறாதபடியால் சாஸ்திரம் அரைகுறையாக நின்றுவிட்டது, ஆகவே நீ கண்டுபிடி.

தங்கம் கெட்டிக்காரப் பெண். ஒரு கோடி காட்டியவுடன் தானே மனதில் ஒரு திட்டம் போட்டுக்கொண்டாள். தன் வாழ்வு பயனடைந்துவிட்டது என்று நிச்சயித்துவிட்டாள்.

செடி நட்டுவிட்டு வரும்போது சுவாமிகள் இது T. B. என்ற க்ஷய நோயை நிவர்த்திக்க வந்திருக்கிற மூலிகை. வேரின் வேகம் பூச்சிகளைக் கொன்றுவிடும். மூலிகையின் சாறு எலும்பை வலுப்படுத்தும். அதனுடன் மற்ற அநேக மூலிகைகளைத் தேவைக்குத் தக்கபடி சேர்க்க லாம்... என்று சொல்லிய பிறகு தங்கம் மட்டும் தனித்து வருவதை அறிந்த சுவாமிகள்,

'இன்று போலீஸ்காரன் வந்தானு?' என்ருர்.

'நேற்று வந்தார்கள்?'

'என்ன சொன்னுய்?'

'உண்மையைச் சொல்லவில்லை!' என்று சற்று விழித்தாள்.

'சரி. இப்பொழுதும் நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். ஏதோ தப்பித்துக்கொள்ளும் வகையில் சொல்லிவிட்டாயல்லவா?'

'ஆம், அந்தப் பாதகனைப் போலீஸ்காரர்கள் தொடரமாட்டார்கள்!' என்று சொன்னவள் தான் சுவாமிகளிடம் ஏற்பட்ட ஒரு ஆத்மீகத்தினல் கொஞ்சம் எல்லை மீறித் தன் சொந்தவாழ்க்கையின் ஒரு அந்தரங்கமான பக்கத்தின் முதல் வரியை வாசித்துவிட்டோம்' என்று அறிந்து பரபரப்புடன் அந்தப் பக்கத்தைப் புரட்ட அவள் ஆசைப்பட்டாள். சுவாமிகள் புத்தகத்தையே மூடிவிட்டார்.

'நீயாக ஆசைப் படாதவரை, உன் விஷயங்களை ஒருவரிடமும் சொல்லவேண்டாம். மறந்தேவிட்டாலும் நல்லதே. இனிச் செய்ய வேண்டிய வேலையில் முற்றிலும் ஈடுபட்டுவிடு.' என்று சொல்லி விட்டார்.

இதற்குள் சிகித்ஸாலயத்துகு வந்து விடவே சுவாமி தம் இடத்தில் சென்று அமர்ந்தார்.

## 9. கிழக்கும் மேற்கும்

தங்கம் மெதுவாக வேலையில் ஈடுபட்டாள். பணம் எங்கெங்கிருந்தோ வந்து கொண்டிருந்தது. அந்தச் சிகித்ஸாலயம் தேசம் முழுவதும் பெயர் பெற்றுவிட்டபடியால் அரசாங்கத்தின் கவனமும் அதற்குக் கிடைத்தது. தங்கம் தனக்கு உதவியாக B Sc படித்த இரண்டு பெண்களையும் அழைத்துக் கொண்டிருந்தாள். மக்களின் ஊழியத்தையே அவர்கள் பிரதானமாகக் கருதி வந்திருந்தபடியால் அவர்களுக்குப் பணமோகம் பிறக்கவில்லை. சொந்த அலங்காரங்களை அவர்கள்வெறுத்தனர். இயற்கை யன்னையின் மடியிலே வளர்ந்த படியாலும் அவர்கள் தேகநலமும் சிறந்து விளங்கியபடியாலும் உள்ளமுகும் உடல் வனப்பும் பெற்று வளர்ந்தனர்.

தங்கம் சோதனைச்சாலையை மட்டும் கவனித்து, தன் நேரத்தைப் போக்காமல் சிகித்ஸாலயத்திலும் அடிக்கடி வந்து மூலிகைகளின் உபயோகங்களையும் அறிந்து கொண்டாள். மூலிகைகளைச் சோதனைக்குள்ளாக்கி அவைகளின் குணங்களையும் மற்றப்படி அலோபதிக் என்ற ஆங்கில வைத்திய முறையில் கையாளப்படும் மருந்துகளின் குணங்களையும் ஒத்திட்டுப் பார்ப்பது; சில மூலிகைகளுக்கு மேலும் சில குணங்களைக் கூட்டியோ குறைத்தோ செய்ய முடியுமா என்று ஆராய்ச்சி செய்வதுஇவைதான்அவள் வேலைகள். ஆராய்ச்சிச் செலவுதான் அதிகமே தவிர ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட முடிவுகள் எல்லாம் மிகவும் சுலபமானவையாகவே இருந்தன. சோதனை மூலம் அவர்கள் மூலிகைச் சிகித்ஸை முறையை மாற்ற முயற்சி செய்யவில்லை. மூலிகையின் தன்மைகளை நன்கு ஆராய்ந்து, இடமாற்றம், கால மாற்றம் சூழ்நிலை மாற்றம், நீர்மாற்றம், கூடவளரும் செடிகளின் மாற்றம் இவைகளின் மூலம் மூலிகைகளை அதிகப் பலம் கொண்டதாக வளரும்படி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியைத்தான் அவர்கள் நடத்தினுர்கள். ஒரே செடியைத் தம் தோட்டத்திலும் நட்டு வளர்த்து அதையே வேறு சிலர் வீட்டிலிருந்து எடுத்து வந்தும் பரிசோதித்தனர். செடி தயாரிப்பவர் மனத்துக்கும் அதன் சக்திக்கும்கூடச் சம்பந்தம் இருப்பதை அவர்கள் ஆராய்ந்தறிந்தனர்.

இந்த விதமாக அவர்கள் சோதனையையும் சிகித்சையையும் முன்னேற்றி வந்தனர். பல மூலிகைகள் இணைப்புப் பிறவியினல் சக்தி கொண்டனவாகத் தயாராயின. பல மூலிகைகள் தங்கள் கெட்ட சக்தியை இழந்து நல்ல சக்தியை அதிகரித்துக் கொண்டன.

இப்பொழுது அந்தச் சோதனைச் சாலையும் சிகித்சாலயமும் சேர்ந்து கான்ஸர், குஷ்டம் இரண்டுக்கும் புது மருந்து கண்டுபிடிக்கவும், T. B க்குக் கண்டுபிடித்திருக்கும் மருந்திலுள்ள குறைபாடுகளை நீக்கவும் முயன்று கொண்டிருந்தனர்.

ஒரு நாள் காலை சுவாமிகள் வழக்கப்படி நாலுமணிக்கு எழுந்திருந்தார். ஒரு மணி நேரம் யோகத்தில் அமர்ந்துவிட்டு எழுந்து மூலிகைத் தோட்டத்தைச் சுற்றி வரச்சென்ருர். மணி ஆறு இருக்கும் பல பல என்று பொழுது விடிந்து கொண்டு இருந்தது.

கொஞ்ச தூரம் போனவுடன் சோதனைச் சாலையின் விளக்கு எரிவதைக்கண்டார். உடனே எதையோ நினைத்தவராகச் சோதனைச் சாலைக்குச் சென்ருர்.

மற்ற இரண்டு பெண்களும் எழுந்து பல்துலக்கிக்கொண்டிருந்தனர். சுவாமிகளைக் கண்டதும் மரியாதை காட்ட, அவர்களை விட்டு விட்டு அவர் உள்ளே சென்ருர். அங்கே

படிப்பறையில் மேஜைமேல் தலையை வைத்துக் கொண்டு தங்கம் படுத்திருப்பதை அறிந்தார். திரும்பி விடுவோமா என்று எண்ணியவர் மீண்டும் திரும்பி, தங்கம்! என்று அழைத்தார். தங்கம் தலையைத்தூக்கினாள். கண்கள் சிவந்து இருந்தன. கன்னங்களில் நீர் வழிந்து இருந்தது. எழுந்தவள்; சுவாமி! என்று அலறிக்கொண்டே அவர்கள் காலில் விழப்போனாள். சுவாமிகள் நெருங்கி அவளைத் தாங்கிப் பிடித்து, தங்கம் 'நீ கோழை' என்றார்.

பிறகு ஏதோ நினைத்து, 'சரி. நீ என்ன படித்துக் கொண்டிருக்கிறாய்' என்றார்.



'சுவிட்ஸர்லந்தில் கான்ஸருக்கு ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறார்களாம். அதைப் படித்துக்கொண்டிருந்தேன். அதையும் நம்முடைய 'சல்யவிநோதினி'யையும் ஒத்திட்டு நேற்றுப் பார்த்தேன். தவிர சில குணங்களும் இருக்கின்றனவாகத் தெரிகின்றது. அதை இன்று சோதனை செய்வதாக உத்தேசம்' என்றாள்.

'சரி நீ அதை எல்லாம் ஒன்றும் இன்று செய்ய வேண்டாம். ஒரு புது ஔஷதியைப்பற்றி இன்று தெரிய வந்திருக்கிறது. ரத்தவர்த்தினி என்ற ஔஷதி வெகு நாளாகக் கண்ணில் தட்டுப் படாமல் இருந்தது. நேற்று எங்கோ ஒரு குன்றின் உச்சியில் இருப்பதாக ஒரு ஆள் வந்து சொன்னான். நீயும் இன்று வருவதானால் வரலாம். வருவதாயிருந்தால் தயாராக இரு. அமிர்தத்தையும் கூட அழைத்துக் கொள். ஆனந்தனும் வருவான்! என்று சொல்லிவிட்டு அவர் வெளியேறும்போது, சரியாக எட்டு மணிக்குக் கார் வந்துவிடும் என்று துரிதப்படுத்திவிட்டு வெளியே வந்தார். எதிரே அமிர்தம் வந்துகொண்டிருந்தாள். 'அமிர்தம் 'கூடவா' என்று சைகை காட்டி அழைத்துச் சென்று கொஞ்ச தூரம் சென்றது' ம்அமிர்தம், நேற்று இரவு இங்கு யாராகிலும் வந்திருந்தார்களா?' என்றார்.

அமிர்தம் சற்று யோசித்தாள்.

'தங்கம் சொல்லவேண்டாம் என்று சொல்லியிருந்தால் சொல்லவேண்டாம். அப்படிச்சொல்லவில்லை என்றால் நீ பயமில்லாமல் சொல்லலாம். ஏன் என்றால் தங்கமே இன்று அதை எல்லாம் என்னிடம் சொல்வாள். நீயும் கூட இருப்பாய். என்றாலும் ஒரு காரணத்துக்காக முந்திக் கேட்டுக்கொள்கிறேன்.' என்றார் சுவாமிகள்.

அமிர்தம்: 'ஆமாம் வந்திருந்தார் யாரோ ஒருவர்.'

'அவரை எப்படி வரவேற்றாள்?'

'மிகவும் கடுமையாக?'

'பிறகு!'

'என்றாலும் ஏதோ காரணத்தால் அவரிடம் பயப்படுகிறாள்?'

'பிறகு என்ன நடந்தது?'

'தெரியவில்லை. அவர்கள் சென்று அறைக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். காதில் விழவில்லை.'

சுவாமிகள் அமிர்தத்தின் முகத்தை ஊடுருவிப் பார்த்தார். படித்த பெண் பிறர் விஷயத்தில் தலையிடக்கூடாது என்ற எண்ணத்தினால் அவள் உண்மையாகவே கவனிக்கவில்லை என்ற விஷயம் நன்கு பிரதிபலிக்கவே அவர், சரி நேரே தங்கத்தினிடம் சென்று அவளுக்கு உதவியாக இரு. அவள் கேட்டால் நீ ஒன்றும் மறைக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

சுற்றிவிட்டு ஏழரை மணிக்குச் சுவாமிகள் சிகித்ஸாலயம் வாசலுக்கு வந்தார். ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரின் ஆள் வந்திருந்தான். அவன் ஒரு கடிதம் கொடுத்தான். அதை நித்தியானந்தம் பிரித்துப் பார்த்து வாசித்துவிட்டு, 'டைரெக்டர் பப்ளிக் ஹெல்த் இன்று ஒன்பது மணிக்கு இங்கே வருவதாகச் சொல்லியிருக்கிறார்' என்றார். 'சரி, நம்முடைய பயணம் அதற்காக நில்லாது. அவர் வந்துவிட்டுப் பார்த்துவிட்டுப் போகட்டும். ஆனந்தம் நீ தங்கிவிடு. அமிர்தமும் இருக்கட்டும். தங்கம் வராதுபோனால் பரவாயில்லை. எதற்கும் அவர்களையே கேட்கலாம், என்று சொல்லி ஆனந்தத்தை அழைத்துக்கொண்டு மீண்டும் அங்கே செல்லத் தொடங்கினார். போகு முன் நித்தியானந்தத்திடம் சொல்லி இன்று வரலாம், வந்தால் யார் இருந்து வரவேற்பார்கள் என்ற விஷயத்தை

எழுதிவிடட்டும். என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார். அதற்குள்ளாகவே மீனாக்ஷி ஓடி வந்து சுவாமிகளை நமஸ்கரித்தாள். ஆனந்தன் என்ன என்றார்.

'தங்கம் மயக்கமாய் விழுந்திருக்கிறார்.' என்றாள். சுவாமிகள் ஆனந்தத்திடம் மூர்ச்சாகாதினி என்ற பச்சிலையை எடுத்துவரச்சொல்லித் தாம் எடுத்துக்கொண்டார். இருவரும் சென்றனர்.

தங்கம் அந்தப் பச்சிலை கசக்கியதை மோந்தவுடன் விழித்துக்கொண்டாள். சுவாமிகள் நின்றிருப்பதை அறிந்த அவள் பரபரப்புடன் எழுந்திருப்பதைப் பார்த்து, சுவாமிகள் 'தங்கம் இன்னம் உன் மனம் திடம் அடையவில்லையா? எல்லாம் இன்று சரியாகிவிடும் வா நீ' என்று சொல்லிவிட்டுத் தம் காரியக்கிரமத்தில் ஏற்பட்ட மாறுதலைச் சொல்லி, நீ வர இஷ்டமில்லாவிட்டால் அமிர்தம் கூட வரலாம். யோசித்து வை. என்றதுமே, தங்கம் நான் வருகிறேன் என்றாள். 'அப்படியானால் அமிர்தம் இங்கே இருக்கவேண்டியிருக்கும். மீனாக்ஷி கூட வரலாம்!' என்று விட்டுத் திரும்பிவிட்டார்.

அமிர்தத்துக்குக் கொஞ்சம் வருத்தம்தான். அவர்களுடன் கூடப்போக முடியாதது ஒன்று; தங்கத்தின் ரகசியம் தெரிய வழியில்லாமல் போய்விடுமே என்று மற்றொன்று. இருந்தாலும் சுவாமிகள் விருப்பத்துக்கு மாறாக அவள் நினைக்கக்கூட விரும்பவில்லை.

ஆனால் அவள் இஷ்டமும் வீண் போகவில்லை. கிளம்பும் சமயத்தில் மாகாணப்பொதுச் சுகாதார அதிகாரி சுவாமிகளைத் தரிசிப்பதுதான் முக்கியமாதலால் இரண்டு நாள் கழித்து வரலாம் என்று ஏற்பாடு செய்து கொள்வதாக ஜில்லா அதிகாரி எழுதிவிட்டார். அதனால் ஏற்கனவே திட்டமிட்டபடி சுவாமிகள் ஆனந்தன் அமிர்தம் தங்கம் நால்வரும் டிரைவர் காரை ஓட்ட அதில் ஏறிச் சென்றனர்.

(தொடரும்)


## ஜம்மியின் "லிவர்க்யூர்"

**குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டிகளுக்கு**

**பிரதி மாதாந்தர விஜயம்**

நோயாளிகளின் சௌகரியத்தை முன்னிட்டு எங்கள் டாக்டர் கீழே குறித்த ஊர்களுக்கு 1953 அக்டோபரிலிருந்து **பிரதி மாதமும் அந்தந்த ஊருக்கு எதிரே குறித்த தேதியில்** விஜயம் செய்வதால், அவரிடம் ஆலோசனை பெறலாம்.

**ஆலோசனை நேரம்: முற்பகல் 9லிருந்து 11 வரை பிற்பகல் 3லிருந்து 5 வரை மட்டும்**

காலை & மாலை: 9 முதல் 11 மணி வரையும் 3 முதல் 5 மணி வரையும்

| இடம் | தேதி | | விலாசம் |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | 17 | (காலை & மாலை) | ராஜா சத்திரம் |
| பட்டுக்கோட்டை | 18 | (முற்பகல்) | Mr. V. ஜகதீச அய்யர் புஸ்தக வியாபாரம், பெரியதெரு. |
| திருத்துறைபூண்டி | 18 | (பிற்பகல்) | Mr. T. V. சந்திரசேகரம் பிள்ளை மருந்துக்கடை. |
| மன்னார்குடி | 19 | (காலை & மாலை) | M/s. மீனா கிளினிக், காந்திரோடு. |
| திருவாரூர் | 20 | (காலை & மாலை) | M/s. சுப்பையா மெடிகல் ஹால் அல்லது M/s. மெடிகல் எம்போரியம் விஜயபுரத்தில் விசாரிக்கவும். |
| நாகபட்டினம் | 21 | (முற்பகல்) | M/s. S. T. சௌந்தரராஜ பிள்ளை & ஸன்ஸ், கெமிட்ஸ்ட்ஸ். |
| நன்னிலம் | 21 | (பிற்பகல்) | M/s. G. S. ராஜன் & R. R. சுவாமி ஜெனரல் மர்ச்சென்ட்ஸ். |
| மாயூரம் டவுன் | 22 | (காலை & மாலை) | M/s. ராமகிருஷ்ண வைத்யசாலா, கிருஷ்ணராயர் சந்து. |
| சீர்காழி | 23 | (முற்பகல்) | Dr. R. சபேச அய்யர் டிஸ்பென்ஸரி. |
| சிதம்பரம் | 24 | (காலை & மாலை) | M/s. ஸ்ரீ நடராஜா டிஸ்பென்ஸரி. |

## ஜம்மி வெங்கட்டரமணய்யா & ஸன்ஸ்

**மதராஸ்—4, கும்பகோணம் — திருச்சிராப்பள்ளி**

# செலவில்லாச் சீதள விளக்கு

**அ. ராம்கோபால்**

மனிதனின் சுகவாழ்வுக்கு மின்சாரம், அக்னி, ஒளி முதலியவை இன்றியமையாத சாதனங்களாக இப்பொழுது அமைந்துள்ளன, இவையெல்லாம் நமக்கு ஒருவேளை நவீன சாதனங்களாக இருக்கலாம். ஆனால் பிராணிகளின் உலகுக்கு இவை புதியவைகளில்லை. அநேக ஜீவ ஜந்துக்களின் உடலில் சூளையைப்போன்று உஷ்ணம் மிகுதியாக உண்டு. ஒளி வீசும் பிராணி வகைகளும், மின்சாரம் உற்பத்தி செய்யும் உயிர் வகைகளும்கூட அநேகம் உண்டு. ஆனால் அவை நம்மைப்போல் ஒளி, மின்சாரம், கனல் முதலியவைகளை உற்பத்தி செய்வதில்லை. அவை உற்பத்தி செய்யும் முறைகள் நம் முறைகளுக்கு முற்றிலும் மாறானவை. ஆனால் அவற்றைப் பின்பற்றி மனிதன் தனக்கு வேண்டிய அச்சக்திகளைப் பெறமுடியுமா? அப்படி முடியுமானால் அது எப்படிச் சாத்தியமாகும் என்பதை இன்றைய விஞ்ஞான உலகம் ஆராய்ந்தறிய முற்பட்டிருக்கிறது.

பால் கொடுக்கும் பிராணிகள். பட்சியினங்கள் இரண்டுக்கும் தேக உஷ்ணம் எப்பொழுதும் வெளிக்காற்றில் உள்ள வெப்ப நிலையைவிட கூடுதலாகவே இருக்கிறது. இவற்றின் உடலுக்குள் மிகுதியான வெப்பம் அடங்கி இருப்பதோடு தேக வெப்ப நிலையை ஒரே சீராக வைத்துக் கொள்ளும் சக்தியுமடங்கி இருக்கிறது. மின்மினிப் பூச்சிகள் யுக யுகாந்தரமாக ஒளி வீசிப் பறப்பதை நாமறிவோம். கடல் நீரில் மின்சாரம் உற்பத்திசெய்யும் எத்தனையோ மீன்வகைகள் உண்டு. இவற்றின் உடலில் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு சாதாரண மின்சார பல்புகளை எரியவிடலாம், மின்சார மணிகளை இயக்கலாம் என இத் துறையில் ஆராய்ச்சிகள் நடத்திய பல அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பிராணிகள் உற்பத்தி செய்யும் ஒளியை, 'பிராணி ஒளி' (**Bioluminescence**) எனக் கூறுவார்கள். இது சாதாரணமாக நாம் பெறும் உஷ்ண ஒளியைப் (**Incandescence**) போல் இல்லாமல் குளிர் ஒளியாக இருப்பதால், இதை, 'சீதள ஒளி' (**Luminescence**) வகையில் சேர்க்கலாம்.

மழைக் காலத்தில் இரவு நேரங்களில் கிராமப் பகுதிகளில் பிரயாணம் செய்து அனுபவமுள்ளவர்கள் அங்கே வயல்வெளிகளில் பல இடங்களில் மின்மினிகள் கூட்டம் கூட்டமாகக் குழுமிக் கிடப்பதையும், அவை குழுமியுள்ள இடங்கள் பிரகாசமாக இருப்பதையும் பார்த்திருக்கலாம். இரவு நேரங்களில் கப்பல் பிரயாணம் செய்தவர்கள் கப்பலைச் சுற்றி எங்கும் காரிருள் சூழ்ந்து கிடப்பதையும், அக்காரிருளிடையே கடல்நீர் சில இடங்களில் ஒளி வீசிப் பளிச்சிடுவதையும் பார்த்திருக்கலாம். இதற்குக் காரணம் என்ன?

கடல் நீர் பளிச்சிடுவதற்குப் பலர் பலவிதமான காரணங்கள் கூற முற்பட்டனர். கடல் நீரில் இறந்து படும் பல ஜந்துக்கள் அழுக ஆரம்பிக்கும்போது அவற்றிலிருந்து வெளிப்படும் உஷ்ணம் இவ்விதம் ஒளியாகத்தோன்றுவதாகச் சிலர் கருதினர். கடல் அலைகள் ஒன்றோடொன்று மோதுவதால் அங்கே மின் சக்தி தோன்றுவதாகவும் இம் மின் சக்திகள் காரணமாகவே அங்கு இவ் ஒளி தோன்றுவதாகவும், பகல் நேரத்தில் சூரிய ஒளியின் காரணமாக இவ்வொளி நம் கண்களுக்குத் தெரிவதில்லை என்றும் இன்னும் சிலர் கருதினர். கடல் நீரில் பாஸ்பரஸ் சத்து கரைந்திருக்கிறது. இதன் காரணமாகத்தான் இரவில் அவ்வொளி தோன்றுகிறது என வேறு சிலர் கூறினர். பகல் நேரத்தில் கடல்நீர் சூரிய ஒளியைத் தன்னிடம் கிரகித்து வைத்துக்கொண்டு இரவு நேரத்தில் அதை வெளியே விடுகிறது என வேறு சிலர் கூறினர். ஆனால் உண்மைக்குப் பொருந்தாத இக் கூற்றுகள் எல்லாம் அதிக நாள் நிலைக்க முடியவில்லை. கி. பி. 1810-ல் மேக்கார்டனி என்னும் அறிஞர் இம் மர்மத்தைப்பற்றி ஆராய்ந்து அவ்வொளி சமுத்திர ஜந்துக்களின் உடலிலிருந்து வெளிப்படும் வெளிச்சத்தால் தோன்றுகிறது என வெளிப்படுத்தினார். இவர் கூற்றே உண்மை எனப் பின் நடந்த ஆராய்ச்சிகளும் உறுதிப்படுத்தி உள்ளன.

கடல் ஜந்துக்களில் ஸ்பஞ்சுகள் (**Sponges**) சொறி மீன்கள் (**Jelly fishes**), கூம் ஜெல்லிகள் (**Comb jellies**) ஹைட்ராய்டுகள், (**Hydroids**). கடல் பென்கள் (**Sea Pens**)

டைனோ பிலாக லெட்சுகள் (Dinoflag--ellates), ரேடியோலேரியா (Radiolaria), கடற் புழுக்கள் (Marine Worms,) பிரிட்டில் ஸ்டார்ஸ் (Brittle Stars) மொலஸ்க்குள் (Molluscs), ஸ்ரிம்புகள் (Shrimps), கடல் நண்டுகள் (Crabs), இங்கிகடம்பான் மீன்கள் (Cuttle Fishes) ஸ்க்விட்கள் (Squids) முதலியவை ஒளி வீசும் இனங்களில் முக்கியமானவை.

ஜப்பானின் கரையருகே ஸ்க்விட் வகையைச் சேர்ந்த ஒரு மீனிருக்கிறது. அதை அங்கே "ஹோடாருயிதா" எனச் சொல்லுவார்கள். இம்மீனின் தலைப்புறம் இரண்டு பக்கமும் இரண்டு மீசைகள் (Tentacles) இருக்கும். இம்மீசைகளின் நுனியில் மின் மினியைப்போல் வெளிச்சங்கள் தோன்றும். தன் இச்சைப்படி வேண்டிய பக்கம் இம்மீசைகளைத் திருப்பி அப்பக்கமாக வெளிச்சத்தை வீசும் சக்தியை இவை பெற்றிருக்கின்றன. இதனால் இவற்றிற்கு "மின்மினிஸ்க்விட்" (Firefly Squid) என வெள்ளையர் பெயரிட்டிருக்கின்றனர். கடல் நீரின் அடித்தளத்தில் வசிக்கும் "ஈத்ரோப்ரோரா எப்பலகென்ஸ்" (Aethroprora effelegens) என்னும் ஒரு வகை மீனின் தலையில் முன் பக்கம் ரயில்வே இஞ்சின்களுக்கு முகப்பு விளக்கு (Search-Light) இருப்பதுபோல் வெளிச்சமிருக்கிறது. இதைத் தவிர உடலின் மற்றப் பகுதிகளிலும் இதற்குச் சிறுசிறு வெளிச்சங்களிருக்கின்றன. கடல் பேனா எனப்படும் "ஸீ பென்" கடல் மட்டத்திலிருந்து 50 அடிக்குள் உள்ள ஆழக்குறைவான கடல் தரை (Sea-floor)யில் மணலிலோ அல்லது சேற்றிலோதான் தங்கி இருக்கும். ஆகையால் இவை தங்கி உள்ள இடத்தின் மேல் உள்ள கடல் பரப்பு இரவு நேரங்களில் ஒளி வீசிப் பிரகாசமாக இருக்கும்.

கடல் மீன்களைத் தவிர தரையில் வாழும் பூரான்கள், நிலப் புழுக்கள் முதலியவையும் ஒளி வீசும் ஜீவ ஜந்துக்களின் இனத்தைச் சேர்ந்தவையே. தென் அமெரிக்காவில் மோட்டார் பூச்சி (Automobile bug) என ஒரு வகைப்பூச்சி இருக்கிறது. இப்பூச்சியின் முன்புறம் கார்களின் முகப்பு விளக்கைப் போல் வெண்மையான வெளிச்சமும் பின்புறம் அபாய விளக்கைப்போல் சிகப்பு வெளிச்சமும் தெரியும். இதனாலேயே இதற்கு மோட்டார் பூச்சி எனப் பெயர் வைத்துவிட்டனர் வெள்ளையர். க்யூபா தீவில் இரவில் ஒளி வீசும் ஒரு வகை வண்டுகள் (Luminousbeetles) இருக்கின்றன.

இவற்றைத் தவிர தாவர இனங்களிலும் ஒரு வகை ஒளி வீசும் சில தாவரங்கள் உண்டு. மலைக் காடுகளில் உள்ள நெருப்பு அல்லது தீ மரம் இவ்வகையைச் சேர்ந்தது. தாவரங்கள் இரவில் ஒளி வீச இரண்டு காரணங்கள் உண்டு. ஒருவகைப் பூஞ்சாணங்களும் (Fungi) ஒரு வகை நுண்ணிய கிருமிகளும் (Bacterias) தான் இதற்குக்காரணங்கள். இரவில் நெருப்பு அல்லது தீமரங்கள் ஒளிவீசக் காரணமாக இருப்பது அம்மரங்களைப் பற்றியுள்ள ஒருவகைப் பூஞ்சாணங்களே. "ரெப்ரிஜரேடர்" என்னும் குளிர்ப் பெட்டிகளில் வைத்தெடுத்த மாமிசம், மீன் முதலியவைகளும், மனித உடலில் தோன்றும் புண்களைச் சுற்றித் தோன்றும் வீக்கங்களும் பளபள எனத் தோன்றுவதற்குக் காரணம் அவற்றைப்பற்றியுள்ள "பாக்டீரியா" கிருமிகளே.

இவ்விதம் பல உயிரினங்கள் ஒளி வீசும் சக்தியைப் பெற்றிருப்பதால் அவைகளுக்கு ஏற்படும் நன்மை என்ன? கடலின் அடிப்பகுதி ஒளியற்றுக் கும்மிருட்டாக இருக்கும். அங்கே தன்னைச் சுற்றியுள்ள மித்ரு சத்ருக்களை அறிந்துகொள்ளவும், தன் உணவுக்குப் பயன்படக்கூடியவைகளைப் பற்றிக்கொள்ளவும் இவ்வொளி பயன்படலாம். சில எதிரிகளைப் பயமுறுத்தி விரட்டியடிக்கவும் பயன்படலாம், தன் உணவுக்குப் பயன்படும் சிலவகைப் பூச்சி புழுக்களைத் தன் பக்கமாகக் கவரவும் பயன் படலாம். தன் இனத்தைச் சேர்ந்த பெண்ணை ஆணும், ஆணைப் பெண்ணும் கவர்ச்சி செய்யவும் இவ்வொளி பயன் படலாம். ஆனால் இவையெல்லாம் வெறும் யூகங்களே அன்றி வேறில்லை. உண்மையான பயன்கள் என்ன என்ன என்பது இன்னும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. மின்மினிப் பூச்சிகள் பற்பல வகையாக மின்னும் சக்தி பெற்றிருக்கின்றன. ஒவ்வொன்றும் மின்னும் வேகம், ஒரு மின்னலுக்கும் அடுத்த மின்னலுக்கும் இடையே உள்ள நேரம், மின்னும் நேரம் இவைகளைக்கொண்டு ஒரு பூச்சி மற்றப் பூச்சி ஆணாபெண்ணா என்பதைச்சுலபமாக அறிந்து கொள்கின்றது. ஒன்றுக்கொன்று காதல் மொழிகள் பேசி, தன்னிடம் அழைக்கவும் செய்கின்றன என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் தெளிவாகி இருக்கிறது. இன்னும் தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடத்தினால் கூடிய விரைவில் பிராணி ஒளியின் காரணம்

பற்றி மற்றும் பல உண்மைகள் தெரிய வரலாம்.

ஜீவ ஜந்துக்கள் எவ்விதம் ஒளி வீசும் சக்தியைப் பெறுகின்றன? இது மற்றொரு முக்கியமான கேள்வி. இதைப்பற்றி, கி. பி. 1767-ல் ராபர்ட் பாய்ல் (Robert Boyle) என்பவர் முதன் முதலாகப் பல ஆராய்ச்சிகள் நடத்தினார். பிராணி ஒளி பொதுவாகப் பாஸ்பரஸ் ஒளியைப் போன்றே இருந்தாலும் அதற்குக் காரணம் பாஸ்பரஸ் அல்ல. பிராணிகளின் உடலில் உள்ள ஏதோ ஒரு பொருளோடு (base) பிராண வாயு சேர்க்கையால் (Oxidation) தான் இவ்வொளி உண்டாகிறது என அவர் கண்டறிந்தார். இதன் பிறகு கி. பி. 1794-ல் ஸ்பாலன் ஜானி (Spallanzani) என்னும் இத்தாலிய விஞ்ஞானி ஒருவர் பிராணிகள் ஒளி வீசப் பிராண வாயு மட்டுமன்றி, தண்ணீரும் அவசியம் எனக் கண்டறிந்தார். தண்ணீரில் ஒளி வீசும் மீன் வகைகளை வெளியே எடுத்து உயிரோடு அவை இருக்கும்போதே வேண்டிய பிராணவாயு கொடுத்துப் பார்த்ததில் அவை எவ்வித ஒளியும் வீசவில்லை. மின்மினிப் பூச்சிகள் மழைக்காலத்திலும், நீர்நிலைகளை அடுத்துமே மிகுதியாகக் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதுமட்டுமல்ல, பிராணிகள் ஒளிவீசுவது அவற்றின் வாழ்வோடு எவ்விதமும் சம்பந்தப்பட்ட செய்கை (living function) அல்ல. சாதாரண ஒரு ரசாயனச் செய்கையே (Chemical function) என்பதையும் ஸ்பாலன் ஜானி கண்டறிந்தார்.

உண்மையில் பிராணிகளில் ஒளி உற்பத்திக்குப் பிராணவாயுவும் தண்ணீரும் மாத்திரம் இருந்தால் போதாது. வேறு இரண்டு பொருள்களும் வேண்டும். எனக் கி. பி. 1887-ல் டுபாய் (Dubois) என்னும் பிரஞ்சு விஞ்ஞானி ஒருவர் கண்டறிந்தார். பிராணிகளில் ஒளி வீசக் காரணமாக இருக்கும் பொருளைப் பிழிந்தெடுத்து, ரசாயனக் கூறுபாடு செய்து அதில் இரண்டு முக்கிய பொருள்கள் அடங்கி இருப்பதாக அவர் கண்டறிந்தார். இதில் ஒரு பொருள் 'லூசிபெரின்' (Luciferin) என்பது. இரண்டு பொருள்களில் இதுவே அதிக முக்கியமானது. இந்த 'லூசிபெரி'னைச் சாதாரண பாஷையில் 'போட்டோஜென்' (Photogen) எனவும் கூறுவார்கள். இவ் லூசிபெரினோடு பிராணவாயு கலந்தாலே ஒளி உற்பத்தியாகிறது. இப்படி லூசிபெரினோடு பிராணவாயு கலந்து வெளிச்சம் தோன்ற உதவும் (Catalyst) பொருளே மற்றது. இதற்கு 'லூசிப்ரேஸ்' (Lucifrase) எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. லூசிபெரின், லூசிப்ரேஸ் இரண்டையும் சுலபமாகப் பிரித்தெடுத்துத் தனித்தனிப் பொருளாக ஆக்கிவிடலாம். இவற்றைக்கொண்டு வெளிச்சம் உற்பத்திசெய்து சோதனைகளும் நடத்தலாம். விஞ்ஞானிகள் இன்று இந்த அளவுக்குத்தான் வெற்றிகண்டிருக்கிறார்கள். லூசிபெரினோ அல்லது லூசிப்ரேசோ எப்பொருள்களால் ஆகியிருக்கிறது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை. கண்டறிய ஆராய்ச்சிகள் இப்பொழுது நடந்துகொண்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு பொருளோடு பிராணவாயு ஒன்றுபடக் கலந்தால் அங்கே கரியமிலவாயு தோன்றும். ஆனால் லூசி பெரினோடு பிராணவாயு கலக்கும்போது இப்படித் தோன்றுவதில்லை. நம் உடம்பிலுள்ள இரத்தத்தோடு பிராணவாயு கலக்கும் போதும் இதே மாதிரிதான் நடக்கிறது. பிராணவாயு இரத்தத்தில் உள்ள ஹிமோகுலோபின் (Haemoglobin) அணுக்களோடு சம்பந்தப்பட்டு அவற்றை ஆக்ஸி ஹிமோகுலோபின் Oxy-Haemoglobin) அணுக்களாக மாற்றுகின்றன. இங்கே ஹிமோகுலோபினோடு பிராணவாயு கலக்கும்போது கரியமிலவாயு தோன்றுவதில்லை. பிராணவாயு கலந்த ஆக்ஸி ஹிமோகுலோபின் அணுக்கள் தசை உறுப்புக்களை (Tissues) சென்றடைந்ததும்மீண்டும்தனித் தனியே பிராணவாயுவாகவும் ஹிமோகுலோபினாகவும் பிரிந்து விடுகின்றன.

இதே போல்தான் லூசிபெரினோடு பிராணவாயு கலந்ததும் அது ஆக்சி லூசிபெரினாக (oxy-lusiferin) மாறுகிறது. அப்படி அது ஆக்சி லூசிபெரினாக மாறி உள்ள நிலையில்தான் நமக்கு வெளிச்சம் தோன்றுகிறது. பிறகு அது தனித்தனியாகப் பிராணவாயுவாகவும் லூசிபெரினாகவும் பிரியும்போது அவ்வெளிச்சம் மறைந்து விடுகிறது. ஒளி வீசும் பிராணிகளின் உறுப்புகளில் உள்ள லூசி பெரினோடு பிராணவாயு கலப்பதும் பிரிவதும் இயற்கையின் நியதிப்படி மாறி மாறி நடக்கிறது. இதனாலேயே நமக்கு வெளிச்சமும் மறைந்து மறைந்து தோன்றுகிறது. பிராணவாயுவை லூசிபெரினிலிருந்து பிரியாமல் எப்பொழுதும் நிரந்தரமாக அதோடு கலந்து, ஆக்சி லூசிபெரினாகவே இருக்கும்படி செய்ய முடியுமானால் வெளிச்சத்தையும் மறையாமல்

நிலையாக இருக்கச் செய்துவிடலாம். இதில் மற்றொரு ரசமான விஷயமும் உண்டு. லூசி பெரினாடு பிராணவாயு சேர்க்கையால் அது எரிவதுமில்லை; குறைந்து போவதுமில்லை; என்றும் குறையாமல் அமர நிலையில் இருந்து கொண்டு ஒளிவீசிக் கொண்டே இருக்கும்.

தற்காலத்தில் நாம் உபயோகித்து வரும் எல்லா வகை விளக்குகளும், அது விளக்கெண்ணெயோ மற்றத் தாவர எண்ணெயோ ஊற்றி எரிக்கும் அகல்விளக்காயிருந்தாலும் சரி, மண்எண்ணெய் விளக்காய் இருந்தாலும் சரி, பெட்ரோமாக்ஸ் விள்க்காக இருந்தாலும் சரி, மெழுகுவர்த்தி விளக்காயிருந்தாலும் சரி, மின்சார விளக்காக இருந்தாலும சரி, வேறு எவ்வித விளக்காக இருந்தாலும் சரி, அவை எல்லாம் உஷ்ண மிகுதியின் காரணமாக ஒளி வீசும் விளக்குகளே ( **Incandescence lights** ). உதாரணமாக மின்சார விளக்குகளை எடுத்துக்கொள்ளுவோம். பல்புகளில் உள்ள நுண்ணிய சுருள் கம்பியை மின்சாரத்தின் உதவியால் உஷ்ணப்படுத்துகிறோம். வெப்பம் மிகுதியால் அது ஒளி வீசத் தொடங்குகிறது. இதனால்தான் நமக்கு மின்சார வெளிச்சம் கிடைக்கிறது. கம்பியைச் சுமாராக உஷ்ணப்படுத்தினால் நமக்குச் சிகப்பொளிதான் கிடைக்கும். இன்னும் அதிகமாக உஷ்ணப்படுத்தினால் மஞ்சள் ஒளி கிடைக்கும். மிகுதியாக உஷ்ணப்படுத்தினால் மஞ்சள் ஒளி வெள்ளை ஒளியாக மாறிவிடும். அதாவது கம்பியை நாம் எவ்வளவுக்கு உஷ்ணப்படுத்துகிறோமோ அவ்வளவுக்குத்தான் ஒளி கிடைக்கும். இது மட்டுமல்ல. உஷ்ண ஒளிகள் எல்லாவற்றிலும் 100-க்கு 98 பங்கு உஷ்ணமும் 2 பங்கே சுத்தமான ஒளியும் அடங்கியிருப்பதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். இதனால் மூன்று விதக் குறைகள் இவ்வித ஒளியில் அடங்கி இருப்பதாகக் கூறலாம். இவ்வொளிகளில் ஒளியை விட உஷ்ணமே மிகுதியாக இருப்பதால் இவை மனிதர் கண்களுக்கு மட்டுமன்றி உடல் நலத்துக்கும் கெடுதல் செய்யக்கூடியவை. இது முதலாவது முக்கியக் குறை. 2 பங்கு சுத்தமான ஒளி பெற அனாவசியமாக 100 பங்கு உஷ்ணம் உற்பத்தி செய்ய வேண்டி இருக்கிறது. இது இரண்டாவது குறை. நாம் வெளிச்சத்தைப் பெறத் தேவையான உஷ்ணத்தைப் பெறத் தொடர்ந்து சிரமப்படுவதோடு செலவழித்துக்கொண்டேயும் இருக்க வேண்டி இருக்கிறது. இது மூன்றாவது குறை. பிராணி ஒளியில் இக்குறைகள் ஏதுமில்லை. ஆகையால் நாம் லூசி பெரினைச் செயற்கை முறையில் உற்பத்தி செய்து அதன் மூலம் சீதள ஒளி பெற வழி கண்டுவிட்டால் நம் உடல் நலத்துக்கேற்ற ஒளியைத் தொடர்ச்சியான செலவோ சிரமமோ இல்லாமல் பெறலாம். ஒளி உற்பத்திக்காக வீணாக விரயமாகிக் கொண்டு வரும் நம் பணமும் அரசாங்கப் பணமும் மிச்சமாகி, வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்பட வசதியும் ஏற்படும்.

இதை மனதிற் கொண்டே உலகில் இன்று பல விஞ்ஞானிகள் செயற்கை முறையில் லூசி பெரின் உற்பத்தி செய்ய வழி துறைகளை ஆராய்ந்தறிய முற்பட்டிருக்கின்றனர். இந் நன்முயற்சியில் அவர்கள் வெற்றி காணும் நன்னாள் வெகு தூரத்திலில்லை என்றே மேல் நாடுகளில் இவ்வாராய்ச்சி முன்னேறும் வேகத்தைப் பார்க்கும்போது தோன்றுகிறது.


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | | மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | பை. | ரூ. | அ. | பை. |
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.



"எனக்குத் தெரியும்...
லக்ஸ் டாய்லட் சோப் உங்கள்
சருமத்தையும் எழிலோங்கச்
செய்யுமென்று." இவ்வாறு கூறுகிறார்
டி.ஆர். ராஜகுமாரி
டி. ஆர்.
ராஜகுமாரி
கூறுவதாவது:
"இந்த சுத்தமான,
வெண்மையான சோப்
என் சருமத்திற்கு அளிக்
கும் நறுமணத்தை நான்
மிகவும் விரும்புகிறேன்.
சோபைமிக்க சரும அழகைப்
பெற நான் செய்வதுபோல்
நீங்களும் செய்யுங்கள். உங்கள்
சருமத்திற்கு லக்ஸ் டாய்லட்
சோப்பின் தினசரி பாதுகாப்பை
அளியுங்கள்."
லக்ஸ் டாய்லட்
சோப்
சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்
LUX
TOILET SOAP
வெண்மையானது, சுத்தமானது, நறுமணம் கொண்டது
LTS. 387-X30 TM

# நிலா அடுப்பு

**என் .சுப்பிரமணியம்**

காந்திமதிக்குக் கரியும் விறகும் வாங்கிக் கொடுத்த பணத்தை நான் எண்ணிக் கொண்டிருந்தேன்; அதாவது செலவான பணத்திற்குரிய கணக்கை மனதில் பார்த்துக்கொண்டிருந்தவேளை, வண்டிக்காரன் வந்தான். விறகு வண்டிக்காரனையும் கரிமூட்டை விற்கும் 'அம்மணி'யையும் கண்டால் எனக்கு மேனகை கண்ட விசுவாமித்திரர் குணம்வரும். அத்தனை வெறுப்பு. கிட்டத்தட்ட என் வருமானத்தைக் கரியாக்கிய பெருமை இந்த இரு வியாபாரிகளையே சாரும். கரியும், விறகும் விராட்டியும் வீட்டைப் புகைமண்டல மயமாக்கிக் கண்ணீர் அருவி ஓடச்செய்துகொண்டே இருக்கும். காந்திமதி செய்த தப்போ, அல்லது ஈரமுள்ள நெஞ்சுடைய அந்த வியாபாரிகள் செய்யும் தந்திரமோ நான் எப்போதும் கஷ்டப்படுகிறவன். எனக்குக் கண்ணாடி வாங்கித் தந்த பெருமையும் இவர்களையே சாரும்.

இன்று உலகிலேயே சூரிய அடுப்பு ஒருவனுக்குத் தேவைப்பட்டால் அது நானாகத்தான் இருக்கமுடியும். அத்தனை இம்சைகள் அடைந்துள்ள எனக்குச் சூரிய அடுப்பு கண்டுபிடித்த நாள்முதலாய் ஆவலோடு அதை எதிர்பார்த்து இருக்கிறேன். சூரியனும் இயற்கையும் வஞ்சனை செய்யாமல் எல்லோருக்கும் ஒன்று போலத் தருமம் கொடுமை செய்வதாகச் சொல்லுவார்கள்; ஆனால் எங்கள் வீட்டில் அடிக்கும் வெயில் பக்கத்து வீட்டில் கூட அடிப்பதில்லை என்று சூரிய அடுப்பு சாட்சியாகக்கூட நான் சொல்ல முடியும். சூரிய அடுப்புப் பற்றிய விபரங்கள் வெளிவந்த நாள் முதலாய் என் வீட்டுக்கு அது எப்போது கிடைக்கும் என்று தவங்கிடந்தும் இன்னும், என் வீட்டுக்கு வந்தபாடாக இல்லை.

சூரிய அடுப்பு மட்டும் வந்துவிட்டால், அன்றைய தினம் எங்கள் வீட்டில் புகை இருக்காது; மனப்புகைச்சல் இருக்காது; பணப் புகைச்சல் இருக்காது; சூரிய அடுப்புள்ளவர்கள் சர்க்காருக்கு வரி செலுத்தவேண்டும் என்ற சட்டம் வராவிட்டால் அந்த அடுப்பைப்போல மனித குலத்திற்குச் சேவை செய்யும் சிக்கனச் சேவகன் அல்லது சேவகி—காந்திமதி அடுப்பை பெண்பால் என்பதாகக் குறிக்கவேண்டுமென்கிறாள்—இருக்கமுடியாது. இன்று அடிபிடி செய்து விறகுக் கட்டைகளைப் பிளக்கவும் அடுக்கிய கரி மூட்டைகள் கண்ணில் படாமல் இருக்கப் பெரியவீட்டை அதிக வாடகை கொடுத்து வைத்துக்கொள்ளும் சிரமமும் நமக்குக் கிடையாது. இனி வீடு பார்க்கப்போனால் காற்றோட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சூரிய ஒளியோட்டம் இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். விறகு கரி மூட்டைகளை வைத்துக்கொண்டு இன்று தங்கவிலை பவுன் விலை சொல்லும் கடைக்காரர்கள் நாளை என்ன செய்வார்களோ? அரசாங்கத்தில் வேலையில்லாத விறகு டிப்போகாரர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதோடு நிற்பார்களா? அல்லது அவர்களுக்கே சூரிய அடுப்பு விற்பனை உரிமை கொடுத்து ஆதரிப்பார்களா? ஐயோ!. என்னை நம்பி .மட்டும் ஆறுகடைகள் இருக்கிறபோது அவர்கள் நிலைமையை எண்ணச் சற்று வருத்தமாகத்தான் இருக்கிறது. எரி பொருள்கள் இனி இனாமாக வழங்கப்பட்டாலும் ஆச்சர்யப் படமாட்டேன். எரிபொருளை வாங்கி அழுத நாம் அவர்கள் பரிதாபகரமான நிலைகண்டு அழுவதில் தவறு இருக்கமுடியாது.

காந்திமதி, 'இவ்வாறு இயற்கை வீணாவதைச் சரியாகப்பயன் படுத்திக்கொள்ளும் அறிவும் ஆற்றலும் இப்போதாவது வந்துவிட்டதே. இனி பெண்கள் விடுதலை பெறுங்காலம் வந்துவிட்டது. சூரிய அடுப்பு பெண்கள் விடுதலையின் ஒளி வட்டம்.' என்று பெருமையாகச் சொன்னாள். எனக்கு அதிலுள்ள ஆச்சர்யம் அதிசயத்தை விட அது வந்தால் நடக்கப்போகும் வாழ்க்கை முறைபற்றிய மனக் கஷ்டம் அதிகமாயிற்று.

இப்போதுள்ள பட்டணத்துவீடுகளில் காற்றுத் தேவன் நுழைய இடங்கொடுக்காமல் வீடு கட்டியிருக்கும்போது, இனி சூரியன் எட்டிப் பார்க்கச் சமையல் கட்டுகளை இடித்துக் கட்டியாகவேண்டும். மாடியில் குடியிருப்பவர்கள் சமையல் கட்டுக்கு நேராகக் கீழே குடியிருப்பவர்கள் சமையல் கட்டிருக்குமே. அப்படியானால் மாடியில் இருப்பவர்கள் காலி செய்வதா? கீழே குடியிருப்பவர்கள் காலி செய்வதா? இது சின்னப் பிரச்னை. அடுத்தபடியாக, சமையல் கட்டுகள் என்பவை சிற்றம்பல ரகசியமாக ஒதுக்கமாக இருந்தவை, பெரும்பாலும் நடுத்தெரு விஷயமாக மாறவேண்டும். பெரிய வீதிகளில் உட்கார்ந்து ஆப்பம், இட்லி, தோசை தயாரிப்பது இன்று ஒரு சிலரின் உரிமையாக இருப்பது, சூரிய அடுப்பு வந்துவிட்டால் எல்லோரும் வெயில்நாட்டு மன்னர்கள் அல்லது மன்னிகள் ஆகவேண்டும். 'பொங்கல் அன்று வீட்டுக்கு முன்னால் வரிசை வரிசையாக அடுப்புகள் எரிவது

ஏதோ ஒருநாள் திறந்தவெளியில் கொண்டாடும் விழா. இதை அன்றாடம் கொண்டாடும்படி நேர்ந்துவிட்டால், யுகம்யுகமாக 'பொங்கலோ பொங்கல்!' 'பொங்கலோ பொங்கலோ' என்று சிறப்பாகக் கொண்டாடியதின் பெருமைக்கும் முற்றுப்புள்ளி வருவதை நாம் எதிர்பார்க்க வேண்டும்.

வீட்டுக்குள் வெயில்படாமல் சமையல் செய்து முடித்தவர்கள் இனி திறந்த வெயிலில் வேகாத வெயிலில் நிஜமாகவே வெந்து, தாமும் அரிசியுமாக யுத்தம் செய்வதை எண்ணிப்பார்க்கும் போது சற்றுப் பயமாக இருக்கிறது. வெயில் அடுப்பு சூரியகாந்தி பூவைப்போன்று சூரியன் நோக்குமிடமெல்லாம் நோக்கிப்போகும் விசையமைப்பு உள்ளதாக இருக்கவேண்டும். அல்லவென்றால் காலையடுப்பு, மத்தியான அடுப்பு, மாலையடுப்பு என்பதாகத் தேவைப்படும். சூரியன் திசைமாற்றத்திற்கு ஒப்பாக, அடுப்பை அமைத்துக்கொடுத்துவிட்டாலும், நாம் சமைப்பது என்ன நமக்கு அடுத்த வீட்டில் சமைப்பது என்ன என்பது இதுநாள்வரை வரட்டு ஜம்பங்களாக இருந்தன. மேலும் இந்த வரட்டு ஜம்பங்கள் வளர வாய்ப்புத்தருமா? குட்டு வெளிப்பட்டு எல்லோரும் என்ன சமைக்கிறார்கள் என்று பரஸ்பரம் தெரிந்துகொள்வதோடு முக்கியமாகப் பெண்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதும் வரும். 'என்ன சமையல் என்று எதிர் வீட்டுக்காரர்கள் கேட்கவேண்டியதேயில்லை. சாப்பிடும் உணவுவகைகள் பற்றிப் பொய்சொல்லவும் முடியாது. தேவைக்கு அதிகமாகச் சமைப்பவர்கள், அல்லது தேவையைச் செய்யமுடியாதவர்கள் இரண்டுபேர் பாடும் வெகு கஷ்டம். நம்முடைய நாகரிகத்திலேயே முக்கியம் நாம் சாப்பிட்டதை மறைப்பதும், சாப்பிடாததை வெளிப்படுத்துவதுமாக இருக்கும் போது, மனக்கஷ்டங்கள் எவ்வளவு கோடி கோடியாக ஏற்படும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் நாம் வெயில் உள்ளபோதே வேகவைத்துக் கொள்ளவேண்டும் என்று அறியும் சக்தியை யடைகிறோம். ஆனால் வெயில் எப்போது வரும் என்பதை மழைக் காலங்களில் தெரிந்துகொள்வதும் அதுபற்றிய வானிலை விபரங்கள் சொல்லப்படுவதும் ஆரம்பமாகும். இன்ன இடங்களில் இத்தனை டிகிரி உஷ்ணம் எரிக்கும் என்ற விபரங்கள் ஆங்காங்கே அறிவிக்கப்பட்டாலொழிய மழைநாளிலும் சரி, வெயில் காலத்திலும் சரி, நமக்குத் திருப்தி தராது. மழையின் அறிவிப்புகளைக் கேட்டு நாம் ஏமாறுவது போதாது என்று, வெயிலின் அறிவிப்பைக் கேட்டு ஏமாறப் பழகிக்கொள்ளவேண்டும்!

இன்னும் சொல்லப்போனால், சமையல் என்ன செய்கிறோம் என்பதை நடுத்தெருவில் போவோர்

SANKAR IC BRAND

# சங்கர் பிராண்ட்

**போர்ட்லண்ட் ஸிமெண்ட்**

**திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது**

**உறுதியும், அழகும் அமைந்த கட்டிட திட்டங்களுக்கு இன்றியமையாதது.**

தயாரிப்பவர்:

**இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்**

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:-
**11/12, ஸெகண்ட் லைன்பீச், மதராஸ்.**

தொழிற்சாலை:-
**சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா.**

நாடெங்கும் IC ஸ்டாகிஸ்டுகள் மூலம் வினியோகிக்கப்படுகிறது.

வருவோர் எல்லோரும் பார்த்துத்தான் தீரவேண்டும். தெருவில் மனிதருடன் போகும் பிராணிகளும் இதைக் காணச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அயலார், தெருவார், இவர்கள் தவிர்த்து நமது வீட்டுக்கு வருகின்ற பந்துக்கள் நம் வீட்டுக்குள் நுழையும்போதே, வாசலில் உள்ள சூரிய அடுப்பில் என்ன வேகவைக்கிறோம் என்று கண்டுகொள்வார்கள். சூடு ஆறிய பதமாக இருந்தால், பதார்த்தத்தை எடுத்து ருசி பார்ப்பார்கள். இதில் ஒரு சிரமம் என்னவென்றால், வீட்டில் இருப்பதை, விருந்தாளிக்கு ஒளித்துவிட முடியாது. கண்முன் கண்டதை அவருக்குப் போட்டே ஆகவேண்டும்.

பதார்த்தங்கள் வெந்தும் வேகாமலும் இருக்கும் காலத்து எரிபொருள்கள் விற்பனையாளர்கள் மீது குறைசொன்னதைப் போன்று இங்கே சொல்லவும் முடியாது. சூரிய அடுப்பிலே வேக வைப்பதில் சிக்கனம் வேண்டாம். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். எத்தனை அண்டா அண்டாவாக வேண்டுமானாலும் வெந்நீர்போட்டுக் குளிக்கலாம். ஆனால் வெந்நீர் தேவையுள்ள மாதங்களில் மட்டும் சூரியன் வெளியே வர 144 போட்டுப் பார்க்கவேண்டும். இன்று மழையில்லாதபோது, செயற்கை மழையை உற்பத்தி செய்யப்பனிக்கட்டிகளை மேக மண்டலத்துள் தூவலாம் என்று சொல்கிற கதையை, பிற்காலத்தில் 2953-ஆம் வருஷம்சூரிய ஒளியை மழைக்காக மேகத்துள்ளிருந்து விடுவிக்க, விறகுக்கட்டைகள் வீசியெறியப்படலாம், விராட்டிகள் வைக்கப்பட்ட ஹோமங்கள் நடத்தப்படலாம். அல்லது சூரிய விடுதலையைக் கோரி யுனைடெட் நேஷன்ஸ் சபை ஏதாவது கமிட்டிகள் நடத்தலாம். சூரியன் மேகமண்டலத்துள் அடைபட்டுக்கொண்டால், எரியாத அடுப்பை ஊதிப் பற்றவைத்த மாதிரி குழல்கொண்டு ஊத முடியுமா? சூரிய அடுப்பு வந்தபின் இன்னும் என்னென்ன பிரச்னைகள் வரப்போகின்றனவோ?

இன்றைய விஞ்ஞான உலகம், இயற்கைவீணாக்கும் சக்திகளையெல்லாம் சேகரித்து அதைப்பயன் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது. குளிர் சேமிப்புப் பெட்டிகள் இன்று இருப்பன போல (ரெபிரிஜரேட்டர்) நாளை வெயில் சேமிப்புப் பெட்டிகள் (ஹிட்டரேட்டர்) வரலாம். இன்று இரண்டு நெருப்புக்குச்சி கடன் கேட்கும் பெண். 'இந்தாம்மா ஒரு கரண்டி வெயில் சேமிப்புக்கொடு'' என்று வாங்க வரலாம். எல்லாவற்றையும் விட, சூரிய அடுப்புகள் வீடுகளுக்கு வந்தாலும் வராவிட்டாலும், ஓட்டல்களுக்கு அவசியம் வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். சில ஓட்டலில் பக்ஷணங்கள் தயாராகும் இடங்களில் வதிகிற சுத்தம், சரக்குக் கலப்படங்கள் சாப்பிடுகிறவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால், சாப்பிடப் போகிறவர்கள் போகும்போதே தயாராகும் சாமான்கள் தயாரிப்பவர் உடல் நலம் பார்த்து விட்டால், நன்றாக இருந்தால் தான் உள்ளே போவார்கள். இல்லாது போனால், சுத்தமாக உள்ள இடத்திற்கே போய் நிற்பார்.

வெயிலை வாழ்க்கைக்குப் பயன் செய்வது போன்று, நிலாவொளியைப் பயன் செய்து கொடுக்கப்போவதும் விரைவில் வரலாம். நிலவின் தண்கதிர்கள் செய்யும் மாயத்தைப் பிறர் சொல்லிப் புரிந்துகொள்ள வேண்டியதில்லை நாம். வருங்காலத்தில் பெண்களுக்குக் கல்யாணம் செய்யும்போது, 'ஐயா மாப்பிள்ளை அவர்களே நூதன மாடல் நிலாப் பெட்டி உங்களுக்குப் பரிசாகத் தருகிறேன். அதைத் தாங்கள் அமாவாசையன்று கூட ஏற்றிக்கொண்டால் பௌர்ணமியின் காந்த சக்தியை எங்கும் வீசி உண்டாக்கும்' என்று பெருமையுடன் சொல்லுவார்கள் என்றும் எதிர்பார்க்கலாம். நிலாப் பெட்டி வாங்கித் தராத மாமனார்கள் மீது மாப்பிள்ளைகள் வழக்காடுவார்கள். கதாசிரியர்கள் கதைப்பார்கள்.

எந்தக் கண்டுபிடிப்புமே முதலில் வாழ்க்கைக்கு என்றாகும்; ஆனால் நிலா அடுப்பு—தப்பு வேறு கண்யமான மனமயக்கமான காவ்ய ரஸ வார்த்தை போட்டுக்கொள்ளுங்கள்—கண்டுபிடித்தால் நம் நாட்டு விஞ்ஞானிகள், சினிமா உலகம் இன்று செய்யும் சேவையைவிடப் பெரிய சேவை செய்தவர்கள் ஆவார்கள். வருங்காலத்திய கதாசிரியர்களும், "நிலா வெள்ளி உருகி ஓடிக்கொண்டிருந்தபோது, காதலர்கள்.........என்று எழுதாமல்," அவர்கள் பக்கத்தில் நிலா சேமிப்புக் குளுகுளுவென வீசிக்கொண்டிருந்தது என்று எழுதலாம்.

மேலும், நிலா சேமிப்பு...நிலா சேமிப்பு... ஆஹா என்ற சொல்வந்ததுமே எனக்கு மேலே என்ன சொல்லிச் செல்வது என்று தெரியவில்லை. ஹே. காந்திமதி நீயும் நிலா முகமும் வா......... பெண்ணே !

வாழ்க சூரிய அடுப்பு; விரைவில் வருக நிலா பாட்டரி அல்லது காதல் பத்தி, அல்லது......... சந்திரிகாந்தம்.


தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...
லைப்பாயின்
பாதுகாக்கும்
நுரையினுல்!
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவருமல் ஸ்நானம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
LIFEBUOY SOAP
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து தினமும் உங்களைக்காப்பாற்றுகிறது
L. 230-50 TM

# விஞ்ஞானத் துணுக்குகள்

**லக்ஷ்மீகாந்தன்**

### மின்னலாற் பிறந்தோம்

உலகத்தில் உயிர்கள் எவ்வாறு தோன்றின என்பதற்கு ஒவ்வொரு மதத்திலும் கதைகள் வழங்குகின்றன. ஓரே உயிரணுவால் ஆன எளிய உயிர் பரிணாம முறையில் முன்னேறி மனிதனையும், திமிங்கிலத்தையும் ஒத்த சிக்கல் நிறைந்ததும், அளவிற் பெரியதுமான பெரிய விலங்காக மாறியது என்று விஞ்ஞானம் கூறுகிறது. ஆதிகாலத்தில், புவி முழுவதும் பரவி இருந்த நீரில் மிதந்த உயிரற்ற பொருள்களிலிருந்து முதல் உயிர் எவ்வாறு தோன்றியது என விளக்கப் பல கருத்துக்கள் வழங்குகின்றன. இப்போது புதிதான கருத்தொன்றை அமெரிக்க விஞ்ஞானியொருவர் வெளியிட்டிருக்கிறார். இயற்கையில் பிரம்மாண்டமான அளவில் தோன்றும் மின்சார விளைவான மின்னலே முதல் உயிரின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று என அவர் கருதுகிறார். உயிர்களே இல்லாத அக்காலத்தில் மெதேன் நவச்சாரம், ஹைடிரஜன் போன்ற எளிய அமைப்புள்ள வாயுக்கள் சில காற்று மண்டலத்தில் இருந்தன. இவற்றினிடையே நிகழ்ந்த மின்வெட்டினால் இவைகளும், ஏராளமாக இருந்த தண்ணீரும் ஒன்று கூடிச் சிக்கலான ரசாயனப் பொருள்களாக மாறின. இவ்வாறு தோன்றிய பொருள்களுள் ஒன்று தானாகவே பிரிந்து பல்கும் திறன் கொண்டதாயிற்று. ஆகையால் இது மற்றப் பொருள்களை ஏற்று, வளர்ந்து, பிரிந்து பெருகியது. இதுவே உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் மூதாதையான முதல் உயிர். ஆகையால் நாம் மின்னலாற் பிறந்தோம் என்பது தவறாகாது.

### சோம்பேறிகளுக்கேற்ற கோதுமை!

வயலில் ஏதாவதொரு பயிரை ஒருமுறை விதைத்துவிட்டு, அதன் பின்னர் அறுவடை சமயம் வரை அந்தப் பக்கமே தலைகாட்டாமல் இருந்து, பயிரை அறுவடை செய்துகொண்டு வந்த பின்னரும், அது தானாகவே மீண்டும் வளர்ந்து ஆண்டு தோறும் அறுவடைக்குத் தயாராக உள்ளவாறு இருந்துவிட்டால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்? 'பெருமாள் கோவிலில் பிரசாதம் கொடுக்கிறார்கள்' என்று கேள்விப்பட்ட சோம்பேறியைப் போன்றவர்களுக்கு இத்தகைய பயிர் எவ்வளவு உதவியாக இருக்கும்? இத்தகைய தாவரங்கள் பல இயற்கையில் உள்ளன. பல களைகளும், புல்வகைகளும் இத்தகையவை. சாதாரணக் கோதுமையையும், நிரந்தரமாக வளரும் காட்டுப்புல் ஒன்றையும் சேருமாறு செய்து ஒரு கலப்பினத்தைப் பெறலாம்; இந்தக் கலப்புப் பயிரை ஒருமுறை விதைத்துவிட்டால் ஒரு விதமான கவனமும் செலுத்தாது ஆண்டுதோறும் இதை அறுவடை செய்யலாம் என்று கூறப்படுகிறது. இத்தகைய பயிரினம் ஒன்றைத் தாங்கள் தோற்றுவித்திருப்பதாகவும், இந்தக் கோதுமை வகை கால்நடைகளுக்கு நல்ல உணவாகிறது என்றும் ரஷ்ய விவசாய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

### தேனீக்களின் பாஷை

மொழிவாரி ராஜ்யப் பிரச்னை தடபுடல் படும் இக்காலத்தில் தேனீக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளத் தனிப்பட்டதொரு 'மொழி'யைக் கையாளுகின்றன என்பது ரசமானதொரு உண்மை. நடனத்தை வாயிலாகக் கொண்டு உணர்ச்சிகளையும், சொல்ல வேண்டியதையும் கூறும் வித்தை மனிதனுக்குத்தான் தெரியும் என்பதில்லை. எளிய உயிரான தேனீக்களும் இத்தகைய முறையைக் கையாண்டே ஒன்றிற்கொன்று 'பேசி'க்கொள்கின்றன. ஓரிடத்தில் உணவு உள்ளது என்று கண்ட தேனீ தனது கூண்டிற்குத் திரும்பி வந்து ஏற்றவாறு நடனமாடுகிறது. இந்த நடனத்திலிருந்தும், அது சூரியனை நோக்கித் திரும்பியிருக்கும் வகையிலிருந்தும் மற்றத் தேனீக்கள் உணவு எத்திசையில், எவ்வளவு தொலைவில் உள்ளது என்ற எல்லா விவரங்களையும் அறிந்தும் கொள்கின்றன. வாசனைப் புலனும் தேனீக்களின் மொழியின் முக்கியமான அமிசமாக உள்ளது. நம்மைவிடப் பலநூறு

மிடங்கு கூர்மையான வாசனைப் புலன் உணர்ச்சியுள்ள தேனீக்கள் மற்றத் தேனீக்களின் உடலிலிருந்தும், கூண்டிலிருந்தும், உணவு வகைகளிலிருந்தும் தனிப்பட்ட மணங்களை உணர்ந்தறிந்து அவற்றைப் பற்றிய விவரங்களை அறிகின்றன. கூண்டிலுள்ள தேனீக்களிற் சில உணவு தேடி வெளியே சென்றிருக்கும்போது அவை கூண்டிற்குத் திரும்ப வழி காட்ட, மற்றவை தம் சிறகுகளால் விசிறிக் கூண்டின் மணம் அவற்றை அடைய உதவுகின்றன. இதைப் போலவே இனிய உணவைக் கண்டு பிடித்த தேனீ தன் சகாக்களுக்கு அதை அறிவிக்கத் தனது சிறகுகளினால் விசிறி, மணம் கூண்டை நோக்கிப் பரவச் செய்கிறது. மணமே தேனீக்களின் 'மொழி' என்றால் அவற்றினிடையேயும் மொழிவாரி ராஜ்ய உணர்ச்சி பெரிதும் உண்டு என்று சொல்ல வேண்டும்! ஒரு தேனீ தனது கூண்டின் தோழர்களையும், மற்றவைகளையும், மணத்தினால் பிரித்தறிகிறது. தவறுதலாக அயல் மணமுள்ள தேனீ ஒன்று ஒரு கூண்டிற்குள் வந்துவிட்டால் அவை அனைத்தும் உடனே ஒன்றுகூடி அந்த ஈயைக் கொன்றுவிடுகின்றன. தேனீக்களின் மொழி வெறிக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

## சூடேறும் உலகம்

'இயற்கையின் சமன்பாடு' (**Balance of Nature**) என்பது பரிணாமக் கொள்கையின் முக்கியமான கருத்துக்களுள் ஒன்று. விஷ ஜந்துக்களான தேளைப் படைத்த இயற்கை அதன் தொல்லை வரம்பு கடந்து போகாதிருக்க அதற்குப் பகையான பல்லியையும் படைத்திருக்கிறது. ஏதாவதொரு காரணத்தால் பல்லிகளின் எண்ணிக்கை குறைந்தால், இந்தச் சமனிலை கெட்டுத் தேளின் தொல்லை அதிகமாகிவிடும். மானிட நாகரிகத்தின் முன்னேற்றத்தால் பலவகைகளில் இயற்கைச் சமனிலை பாதிக்கப்பட்டு. இதனால் பல புதிய பிரச்னைகள் தோன்றுகின்றன. எந்திர நாகரிகத்தின் வளர்ச்சியினால் புவியின் வானிலையே காலப் போக்கில் மாறிவிடும் என்று அண்மையில் ஒரு விஞ்ஞானி கண்டறிந்திருக்கிறார். பொருள்கள் எரியும் போது காற்றிலுள்ள பிராண வாயுவை ஏற்றுக் கரியமில வாயுவாக மாற்றுகின்றன.


ஆரோக்யப்ரதாயினி




ஜீவாம்ருதம் உபயோகிப்பதனால் பலஹீனர்களுக்குப் பலமும், துர்ப்பலமுடையோர்க்கு—உற்சாகமும், நித்திரையற்றவர்க்கு—சுக நித்திரையும், நரம்புத் தளர்ச்சியுற்றவர்க்கு—நரம்புப் பலமும், ஜீரண சக்தியற்றவர்க்கு—நல்ல பசியையும், ரத்தஹீனர்களுக்கு—நல்ல சிவந்த ரத்தமும், ஞாபகஹீனர்களுக்கு—மிகுந்த ஞாபக சக்தியும், வாட்டமுற்றவர்களுக்கு—மிகுந்த முகக்காந்தியும் முதலிய எவ்வளவோ நற்குணங்களையளிக்கவல்லது.

ஸ்திரீ, புருஷர், பால்யர், வயோதிகர் முதலிய யாவராலும் எக்காலத்திலும் எந் நிலைமையிலும் உபயோகிக்கத் தக்கது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்

ஜீவாம்ருதம்

தேகாரோக்யத்துக்கும் பல விருத்திக்கும் சிறந்தது.

ஆயுர்வேதாசிரமம் லிமிடெட்

மதராஸ்—17

தொழிலியல் இயக்கத்தால் மட்டும் ஆண்டிற்கு ஆறு கோடி டன் கரியமில வாயு காற்று மண்டலத்தை அடைகிறது. இவ்வாறு புவியைச் சூழும் கரியமில வாயு ஒரு போர்வை போல் இயங்குகிறது. சூரியனது கதிர்கள் பூமியை அடைந்து அதைச் சூடேற்ற அவ்வாயு அனுமதிக்கிறது; ஆனால் அந்த வெப்பத்தில் பெரும் பகுதி வெளியேறுவதைத் தடை செய்கிறது. இதனால் புவி நாளுக்கு நாள் சூடேறி வருகிறது. காற்றால் நிகழும் சலன ஓட்டங்களால் நீராவி பரவுவதையும் கரியமில வாயு தடை செய்வதால் காலப்போக்கில் புவியின் வானிலை வறண்டதாகவும் ஆகிறது. இவ்வகைகளில் புவியின் வானிலை மனித வாழ்க்கைக்குத் தகுதியற்றதாக மெல்ல மாறுவது தொழில் வளர்ச்சிக்காக மானிடன் இயற்கைக்கு அளிக்கும் நஷ்ட ஈடு எனலாம்!

## மாதரை அணி செய்யும் தவிடு

மாதருக்கு அழகு செய்யும் பணியில் சாதாரண அரிசித் தவிடு ஈடுபட முடியும் என்பது நம்ப முடியாததொன்று. ஆனால் ரசாயனம் எதைத்தான் சாதிக்க முடியாது? அரிசித் தவிட்டிலிருந்து ஒருவகை எண்ணெயைப் பிரித்தெடுக்கலாம். இந்த எண்ணெய் பல விசேஷப் பண்புகள் கொண்டதாகையால் முகப்பசை, சவர்க்காரம் போன்ற அலங்காரப் பொருள்களைத் தயாரிக்க மிகவும் ஏற்றது. தவிட்டெண்ணெயைக்கொண்ட அலங்காரப் பொருள்கள் தோலுக்கு மென்மையையும், பளபளப்பையும் தருகின்றன. எந்திரங்களுக்கு உதவிடும் பொருள்களிலும் (Lubricants) இந்த எண்ணெய் பயன்படுகிறது.

வேறொரு வகையிலும் தவிட்டெண்ணெய் மாதருக்கு உதவி புரியக்கூடும். இந்த எண்ணெய் உணவு வகைகளை வறுக்கவும் பயன்படுகிறது. மற்ற எண்ணெய்களை விட இது அதிக காலம் சிக்குப் பிடிக்காமல் இருப்பதால் இந்த எண்ணெயில் தயாரித்த பொருள்கள் பல நாட்கள் கெடாமல் இருக்கும்.

## நஞ்சை விழுங்கும் கரையான்

மரத்தைமட்டு மல்லாது காரீயத்தையும், காங்கிரீட்டையும் கரையான்கள் அரித்து விடுகின்றன. இந்த அபாரத் திறமைக்குக் கரையான்களின் வயிற்றிலுள்ள நுண்மங்கள் (Bacteria) காரணமாகும். கரையான் உட்கொள்ளும் எத்தகைய பொருளையும் சிதைத்து அவை ஜீரணமாக இந்த நுண்மங்கள் உதவுகின்றன. ஆகையால் நஞ்சுகளால் இந்த நுண்மங்களைக் கொன்றுவிட்டால் கரையான் பட்டினியால் மடிந்துவிடும். பாஷாணம் என்ற பெயருள்ள ஆர்சனிக்கு (Arsenic) மனிதருக்கும், விலங்குகளுக்கும் கொடிய நஞ்சாகும். கரையான் அரிக்கும் இடங்களில் இதைத் தடவினால் அதன் வயிற்றிலுள்ள நுண்மங்களை இது கொன்று கரையானை அழிக்கும். ஆனால் சில சமயங்களில் இந்த நுண்மங்கள் இக்கொடிய நஞ்சையும் எதிர்க்கும் திறனைப் பெற்றுவிடுகின்றன. இப்போது கரையான் பாஷாணத்தை எவ்வளவு விழுங்கினாலும் மடிவதில்லை. மானிட வாழ்க்கைக்கு இடர் விளைக்கும் உயிர்வகைகளின் ஆயுள் மிகக் கெட்டியானது!

உயிருள்ள மரங்களை அழித்து உண்ணவும் கரையான் ஒரு வித்தையைப் பயில்கிறது. மரத்தைச் சிதைத்து மட்கச் செய்யும் சில பூஞ்சைகளை அது தன்னுடன் கொண்டு செல்கிறது. இப் பூஞ்சைகள் மரத்தை அழித்துக் கரையானுக்கு உணவு தருகின்றன!

## இலைவழியே உரம்

கோதுமையைப் போன்ற தானியப் பயிர்களுக்கு நைட்ரஜனைக் கொண்ட உரங்களை இடுவதால் பயிர் செழித்து வளர்வதோடு தானியத்தின் தரமும் உயர்கிறது. நைட்ரஜன் உரம் பெற்ற தானியத்தில் புரதச் சத்து (Protein) அதிகமாக இருக்கும். நிலத்தில் பண்ணை எருவையோ, ரசாயன உரத்தையோ இட்டு அதைப் பயிர்கள் ஏற்குமாறு செய்வதைவிடத் துரிதமான முறையொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில், உரத்தை நீரில் கரைத்து நுண்ணிய துளிகளாக இலைகளின் மேல் தெளிக்கிறார்கள். இவ்வாறு செய்வதால் பயிர் மிகத் துரிதமாக அப்பொருளை ஏற்று வளர்கிறது. இம்முறையினால் கோதுமையிலுள்ள புரதச் சத்து 9 சத விகிதத்திலிருந்து 17 சத விகிதமாக உயருகிறது என்று கண்டிருக்கிறார்கள்.



# கட்டிடத் தொழிலாளி

ஹிந்தி மூல ஆசிரியர் **K. A. அப்பாஸ்** — தமிழாக்கம் **D. ராஜன்**

புந்து! ஒரு கட்டிடத் தொழிலாளி. இன்று அவன் என்றுமிலாத மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தான். அவனுடைய ஒரே மகன் இப்ராஹிமுக்குக் கலியாணமாகி விட்டது. மருமகளை வீட்டிற்கழைக்கப் போகிறான். அவனுடைய இருள் சூழ்ந்த இல்லம் மருமகளின் வருகையினால் ஒளி வீசும்! அவள் காலடி வைத்த வேளை அவனுடைய மறைந்த பாக்கியம், பிரகாசிக்கலாமல்லவா! ஒருவேளை அவனுக்கு மறுபடியும், தொழில் கிடைத்தாலும் கிடைக்கும்.

இன்று அவன் என்றுமில்லாத மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தான். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இன்று அவனுடைய சுருக்கம் நிறைந்த முகத்திலே புன்னகைக் கோடு பூத்துப் பொலிவுடன் நெளிகிறது. இன்று அவனுக்கு 'ஹூக்கா'ப் புகையில் புது மணம் புலப்பட்டது!

தன், தகரக் குடிசைக்கெதிரே, மர நிழலிலே அமர்ந்து, சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தான். செக்கர் வானம், ரோஜா நிறம் படிந்த வண்ண ஓவியமாகக் காணப்பட்டது. வான விளிம்பிலே சூழ்ந்துள்ள நீலமேகங்களைப் பார்த்தான். சிவந்த ரோஜாநிற வானம். அதன் விளிம்பிலே நீல

நிறம்! ஆம்; இன்று அவன் மருமகளுக்கு, அதே நிறத்தில்தான் சாயம் தோய்த்த மேலாடை வாங்கியிருந்தான். மேலாடை வட்டமான மல் துணிதான் ஆனால் நேர்த்தியாகச் சாயந்தோய்த்திருந்தது. நூல் துணி-பைஜாமாவும் ஜப்பான் போலிப் பட்டுச் சட்டையும் கைகளுக்கு ஒரு ஜோடி வெள்ளிக் காப்பும்தான் மருமகளுக்கு வாங்கினான். அவனுடைய சக்திக்குமேல் செய்யமுடியுமா? பாவம், வேலையின்றியிருக்கிறான். இன்று அவனுக்கும் வேலையிருந்தால், தொழில் செய்ய வாய்ப்பிருந்தால் இப்படி மட்டமான காப்புகளையா, மருமகளுக்கு வாங்கித் தந்திருப்பான்? அதிகமாக இல்லாவிட்டாலும் சற்று உயர்ந்த துணி-பைஜாமாவும், பனாரஸ் பட்டு மேலாக்கும், தங்க ஜிமிக்கியும், தங்க வளையல்களும், வெள்ளிக்கொலுசும் வாங்கிப் போட்டிருப்பான். அதுவும் ஒரே பிள்ளை! இன்று அவனுடைய அன்னை உயிருடனிருந்தால்...

சூரியன் அஸ்தமித்தது. புந்துவின் முகத்தில் மலர்ந்த புன்னகையும், இருளில் மங்கி மறைந்தது. அவனுடைய மனைவி இறந்து இன்றுடன் பன்னிரண்டாண்டுகள் உருண்டோடிவிட்டன. அவள் நினைவு வரும்பொழுதெல்லாம் புந்துவின் கண்கள் கண்ணீர்க் குளங்களாகிவிடும். 'எவ்வளவு ஆசை தெரியுமா அவளுக்கு? மகனுக்கு, மணம் செய்துபார்த்துவிட்டு கண்ணை மூட வேண்டுமென்று, கொள்ளை ஆசை அவளுக்கு!

'ஒண்ணே ஒண்ணு! கண்ணே கண்ணு' என்று மகனைக் கொஞ்சுவாளே! இன்று அவள் மகனை மணக் கோலத்தில் கண்டு மகிழக் கொடுத்து வைக்கவில்லையே! என்று புந்து ஏங்கினான்.

சற்று நேரம் சிந்தனையில் சிக்கியிருந்தான். மற்றக் குடிசைகளில் விளக்கேற்றுவதைப் பார்த்தான். அப்பொழுதுதான் அவனுடைய குடிசை இருட்டியிருக்கிறதென்பதை உணர்ந்தான். "மகன் மனைவியுடன் வந்து விடுவான். வீட்டில் விளக்கேற்றாவிட்டால் அபசகுனமாகவன்றோ இருக்கும்." என்று எண்ணி இலுப்பை எண்ணெய் விளக்கை ஏற்றினான். வீட்டை இன்று நன்றாகச் சுத்தம் செய்திருந்தான். வீடா? நாலா புறங்களிலும் ஈர மண் சுவர். 12 அடி உயரத்தில் தகரக்கூரை போட்டிருந்தது. வெய்யில் தகிக்கும், மழையில் ஒழுகும். குளிரில் விறைக்க வேண்டும். இம்மாதிரியான குடிசைகளிலேதான் புந்துவின் அக்கம் பக்கத்தார் வாழ்ந்து வந்தனர். அவர்களும் கட்டிடத் தொழிலாளிகள்தான்! அவர்கள் வசித்த இடம் புது டில்லியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் ஒரு மலையடிவாரத்தி லிருந்தது. ஐந்தாண்டுகளுக்கு முன்புதான் அவர்கள் எட்டாவது டில்லியைக் கட்டி முடித்தனர். நகரம் நிர்மாணிக்கப்பட்டவுடனேயே, அவர்கள் வேலையை இழந்து விட்டனர். பட்டினி கிடக்க நேர்ந்தது!

புந்து பரம்பரைக் கட்டிடத்தொழிலாளி; தொழில்திறமை மிக்கவன். அவனுடைய முன்னோர்கள்தான் டில்லிச் செங்கோட்டையையும் ஜாமாமசூதியையும் கட்டினர். புந்துவும், வைஸிராய் மாளிகையையும் அஸெம்பிளிச் சேம்பரையும், கட்டியிருக்கிறான்! ஆனால் அவனுக்கு இப்பொழுது காறை, சுண்ணாம்பு எடுத்துக்கொடுக்கும், 'சித்தாள்' வேலைகூடக் கிடைக்கவில்லை! வானைமுத்தமிடும், வண்ண மாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கட்டினான் அன்று! இன்று பசியால் வயிற்றை இறுக்கிக்கட்டிக்கொண்டு கூலிவேலைக்குத் தவிக்கிறான்; அன்று உயர்ந்த கட்டிடங்களைக் கட்டினான்! இன்று தாழ்ந்த குடிசையிலே கூழுக்குத் தவிக்கிறான் கட்டிடத் தொழிலாளி! யுத்தகாலமாதலால் இரும்பு, மரம் ஸிமெண்ட், முதலிய சாமான்களின் விலை விஷம் போல் ஏறிவிட்டது. புந்துவின் மகன் ஒரு கட்டிடக் கண்ட்ராக்டரிம், ஒரு கூலியாகச் சேர்ந்தான். அந்தக் குறைந்த சம்பளத்தில்தான் காலம் ஓடிக்கொண்டிருந்தது. முதல் முதலில் புந்துவின் மகன் இந்த வேலையை ஒத்துக்கொண்டபொழுது அவனுடைய மனம் புண்பட்டது. 'பரம்பரைக் கட்டிடத் தொழிலாளியின் மகனுக்கா இந்தவேலை?' என்று தவித்தான்.

மாதம் 10 ரூபாய் சம்பளம்! இரண்டு வேளைச் சாப்பாடு இலவசம்! வேறு வழியின்றிச் சம்மதித்தான். இதைவிட அதிகம், இப்பொழுது கொத்து வேலையாட்களுக்குக் கிடைப்பது அரிது. ஆனால் கட்டிடத் தொழிலாளி என்றுமே, கட்டிடத் தொழிலாளிதான். அவன் சிற்பி! தன் கலையிலே நிபுணன். தன் சிந்தனை—மூளை, கை—கால்களுக்கு அவனே எஜமானன். விரும்புமிடத்திலெல்லாம் வேலை செய்யலாம். வேலை செய்ய மனமிருக்கும்பொழுதெல்லாம் செய்யலாம், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம். அவன் யாருக்கும் வேலைக்காரனல்ல. யாருமவனை அதிகாரம் செய்யமுடியாது! அவன் கட்டிடக் கலைஞன்! கொத்து வேலை செய்யும் சிற்பி! புந்துவுக்குத்தான் 'பரம்பரைக் கொத்தன்' என்ற பெருமை என்றுமே உண்டு. அவனுடைய வேலை எவ்வளவு முக்கியமானது தெரியுமா! சற்றுப் பிசகி விட்டாலும் சுவர் கோணிவிடும். கட்டிடத்தைப் பார்க்கச் சகிக்காது! அவனைப் போன்ற கட்டிடத் தொழிலாளிகள் தான் இஞ்ஜினியர்கள். நீலக்கோட்டில், வரையும் படங்களை எழில் மிக்க கம்பீரமான கட்டிடங்களாகக் கட்டுகிறார்கள். அவர்கள் செங்கலைக்கொண்டு சுண்ணாம்பு குழைத்துத் தாஜ் மஹாலைப்போன்ற அழகுச் சின்னத்தையும், குதுப்மினார் போன்ற, கோபுரத்தையும் கம்பீரமான கட்டிடங்களையுங் கட்டி 'மாயாஜால' சிருஷ்டிகளை உண்டாக்கியவர்கள்தான்.

சிற்பவேலைத் தொழிலாளர்கள் கைவண்ணத்தைக் காட்டுகின்றனர். சித்திரம் தீட்டுபவர்கள் வர்ணக்குழம்பை நிரப்பி எழிலோவியந் தீட்டுகின்

றனர். ஈடில்லாச் சித்திரங்கள் கருத்தையுங் கண்களையுங் கவரும். கற்சிற்பிகள் கற்சிலைகளில் ஜீவனூட்டுகின்றனர். பாடகர்கள் வீணையின் தந்திகளை மீட்டிச் சபையோரின் இதயங்களிலே இன்பநாத அலைகளை எழுப்புகின்றனர்! இம் மாதிரியே கட்டிடத் தொழிலாளி தூண்களையும், 'வளைவுகளை'யும், சுவர்களைம், வாசற்படிகளையும், கதவுகளையும், ஜன்னல்களையும், வலைக் கண்களையும், கூண்டுகளையும், கோபுரங்களையும், ஸ்தூபிகளையுங், கலசங்களையும், சிருஷ்டித்து 'அழகை' நிர்மாணிக்கின்றனர். இத்தகைய தொழிலாளியின் மகன் இன்று நாள் முழுவதும் பண்பற்ற ஒரு அடிமுட்டாள்—கண்டிராக்டரிடம் வேலை செய்ய நேர்ந்துவிட்டதே!

புந்து பொருளாதாரப் பிரச்னைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாதவன். அரசியலில் சிரத்தையும் கிடையாது. ஏழு கடல்களுக்கப்பாலுள்ள பரங்கிகளுக்காகவே ஏன் புது டில்லி அமைக்கப்பட்டதென்பதையுமறியவில்லை. அவனுடைய வருத்தமெல்லாம் தற்சமயம் கட்டிடத் தொழிலாளிகளை மதிப்பதில்லையென்பதுதான். அவனைப் போன்ற திறமை மிக்க தொழிலாளி ஏன் வேலையின்றித் தவிக்கவேண்டும்? இதன் காரணந்தானென்ன? இதுதான் அவன் கேள்வி.

வாசற்படிக்கு வெளியில் இருமும் சப்தம் கேட்டது.

'அடே புந்து! மருமகள் வந்துவிட்டாளா?'

'வா, சித்தப்பா கைருத்தீன் வா! அவளை யழைக்கப் போயிருக்கிறான் இப்ராஹீம்! வர சமயந்தான்.'

ஷாஜஹானின் எல்லாக் கட்டிடங்களுக்கும் அவர்தான் அஸ்திவாரக் கல் நாட்டியவர் என்று எல்லோரும் ஏகமனதாகக் கூறுவார்கள். சாச்சாகைருத்தீன்! என்று எல்லோரு மழைப்பார்கள் அவரை. அவர்தான் கோலை யூன்றியவாறு வந்தார். கட்டிடத் தொழிலாளிகளுக்கெல்லாம் அவரே முதியவர். அவரே தம் தொழில் வர்க்கத்தின்-தலைவர். அவரே அவர்களின் வழிகாட்டி!

'சரி ரொம்ப நல்லது! மருமகள் வந்தால் உனக்குச் சாப்பாட்டுக் கவலை தீர்ந்துவிடும். ரொம்பக் கவனிச்சுக் கொள்வாள். ஆனால் புந்து.........' இதைச் சொல்லித் தயங்கினார்.

'சொல்லேன்!'

'என்ன சொல்லட்டும்! நீ ராத்திரி எங்கே தூங்கப் போகிறேன்னுதான் கேட்க வந்தேன்.'

'எங்கேயா?' அவன் ஜாடையைப் புரிந்து கொண்டான். இன்றுதான் மகன் தன் மனைவியுடன் முதலிரவைக் கழிக்கப் போகிறான்! அதுவும் 12 அடியுள்ள ஒரே ஒரு அறைதான் அந்த வீடு! 'இன்றைக்காவது அவர்கள் ஏகாந்தமாக இருக்கவேண்டும்' என்றான் புந்து.

'கவலை வேண்டாம். என் வீட்டிலே படுத்துக்கோ!' என்று ஒரு மாதிரியாகச் சிரித்தவாறு கிளம்பினார் கைருத்தீன். அதிகமாகப் பரிவுகாட்டப் பயந்தவர்மாதிரி யிருந்தது அவருடைய செய்கை.

'அவர் வீட்டிற்குப் போகவேகூடாது!' என்று புந்து மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

'சொந்தக்காரனுகள் கேலி செய்வானுகள். எங்காவது படுத்துக்கொள்கிறேன்.' என்று எண்ணி, கொடியில் உலர்ந்திருந்த காடாப் போர்வையைத் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினான். பனி தீவிரமாக வீசியது. 'எங்காவது தலைசாய்க்க இடங்கிடைத்தால் இதைப் போர்த்திக்கொண்டு தூங்குவேன். இந்த ஒரு இரவு தானே இப்படி?' என்று எண்ணினான்.

மகன், மருமகளையழைத்து வந்தான். அவள் எதிரே புந்துகொடுத்த ஆடைகளையும், நகைகளையுமணிந்து தன் முகத்திரையை இழுத்து விட்டபடி நின்றாள். புதுப்பெண், அவளிடம் என்ன பேசுவதென்றே விளங்கவில்லை!

'வந்தீர்களா?' என்று அவர்களுடைய மவுனத்தைக்கலைக்கச் சும்மா கேட்டு வைத்தான். பதிலை எதிர்பார்த்தவாறு 'நல்லது நீங்கள் இளைப்பாறுங்கள். நான் எங்காவது போய் தூங்குகிறேன்.' என்று குடிசையை விட்டுப் போனான்.

இது புதுடில்லி! பல மைல்கள்வரை பரவிப் பாங்காய்ப் பளிச்சிட்டது. புந்துவிற்கு மலைப் பாங்கான இடத்திலிருந்து பார்க்க, கறுப்புச் சலவைக்கல் தரைமீது எந்தக்கட்டிடத் தொழிலாளியோ வைரக்கற்களால் இழைத்து விட்டானோ! என்று புதுடில்லியில் தோற்றம் புலப்பட்டது!

'இத்தனை பெரிய நகரத்தில்' அவன் எண்ணினான்—ஒரு மனிதனுக்கு இரவைக்கழிக்க இடமா கிடைக்காது? அறைகளில்லாவிட்டால் வெளிமுற்றத்திலாவது படுப்பேன்.' புந்து புதுடில்லி முழுவதையுமே, அறிவான். அந்த நகரை, அவனுடைய கைகள் நிர்மாணிக்க வில்லையா? ஒவ்வொரு கட்டிடத்தையுமறிவான். இதுதான் 'வைஸ்ரீகல் லாட்ஜ்' லாட்ஸாகிப் தங்கும் மாளிகை! அதில் அநேக நூறு அறைகளுண்டு. ஒவ்வொன்று புந்துவின் வீட்டைப்போலப் பத்து வீடுகள் கொள்ளும். சலவைக்கற்களால் கட்டிய குளிக்குமறைகள் டஜன் கணக்கிலிருக்கின்றன. அவைகளும் பெரிய அறைகள் தான்! தரையா! 'வழ வழ'வென்றிருக்கும். வெறுந்தரையில்கூட சோறுதின்னலாமே! நடன

மாடப் பெரிய அறை; சுற்றும் நிலைக் கண்ணாடி தான்! மரத்தால் செய்யப்பட்ட தரையில் 'பாலிஷ்' பூசியிருப்பதைப் பார்த்தால் கண்ணாடி தோற்றுவிடும்! அங்குத்தானே, துரைகளும்—துரைசானிகளும் ஆடுகின்றனர்.'

ஆனால் இன்று வைஸிராய் மாளிகையில் இருள் மண்டியிருக்கிறது. சரி! நினைவிற்கு வந்து விட்டது! 'கிறிஸ்மஸ்' விடுமுறையில் வைஸிராய் லாட்டய்யா கல்கத்தாவிற்குப் போவாரில்லையா? இதனால்தான் இத்தனை பெரிய மாளிகை காலியாகக் கிடக்கிறது, நூற்றுக்கணக்கான—அறைகளும் அவற்றைவிடப் பெரிய குளிக்குமறைகளும். பல மைல்கள் விரிந்த முற்றங்களும், கண்ணாடித்தரை, நடன—அறைகளும் ஏன்? எல்லாமே, காலியாகத்தான் கிடக்கின்றன. மாளிகையின் வேலையாட்கள் தங்கும் சாப்பாட்டுச் சாமான்களிருக்கும் அறையில் கூடவா கட்டிடத் தொழிலாளி புந்துவிற்கு, ஒண்ட இடங் கிடைக்காது? மாளிகையின் பிரதான வாசற்படியினருகில் 'மரக்கூண்டைப் போன்ற, அறை காணப்பட்டது.

'ஒரு வேளை காலியாகக்கிடக்குமோ! இங்காவது தங்கலாமே' என்று எண்ணினான். போன உடனேயே ஒரு நீட்ட மீசைக்காரச் சேவகன் வந்து அவனை அதட்டினான்—யார்? இன்னும் சற்று அருகில் வந்து அடதடியா! இங்கே என்ன மோப்பம் பிடிக்கிறே! லாட்டய்யாவின், மாளிகையில் கன்னம் வைக்க எண்ணமா? என்று சீறினான். புந்து அங்கிருந்து மெதுவாக நழுவினான். 'நம்ம மரியாதை நம்மோடே!' என்று.

இதுதான் புதுடில்லி! எங்கும் பரவிக்கிடக்கும் சாலைகள், அகன்ற சுத்தமான சாலைகள்! புந்து வீட்டுத்தரை மாதிரியா இருக்கும்! மின்சார ஒளிவெள்ளத்தில் இரவு பகலோ! என்ற வியப்பையூட்டியது. ஆனால் மின்சார விளக்கொளியில், சூடோ, வெப்பமோ கிடையாது. இருந்தால் தன் நடுங்கும் உடம்பை, விளக்கினடியில் நிறுத்திக் கைகளை நீட்டியாவது குளிர்காயலாமே! 'தபாலாஃபீஸ் மணி டண் டண்' என்று பத்துத்தடவைகள் ஒலித்துவிட்டு ஓய்ந்தது. குளிரில் குலைநடுங்கியது. புந்து வேகமாக நடந்தான். அப்படியாவது உடம்பில் சூடேற்றிக்கொள்ளலாமல்லவா!

குளிர்ந்த காற்றோ கடுமையாக வீசியது. உடலில் உள்ள எலும்புகளையே துளைத்து விட்டது மாதிரிதானிருந்தது. பனிக்காற்று ஈட்டிபோல அவனுடைய உடலை ஊடுருவியதை உணர்ந்தான்.

அவனுடைய மூளையிலே வைஸிராய்—மாளிகை சுழன்றது. ஆம், ஒரு மனிதன் வாழும் மாளிகை தான்! வைஸிராயும் ஒரு மனிதன்தானே! அவன் ஒருவனுக்கு மாத்திரம் அநேக நூறு அறைகள் எதற்கு? ஒவ்வொரு அறையுமெப்படியிருக்கிறது. தெரியுமா? கட்டிடத் தொழிலாளிகளின் ஊரே கொள்ளுமே! இத்தனையும் ஒரு மனிதனுக்கு! அந்தக் கட்டிடங்களையெல்லாம் கட்டிய கொத்தன் புந்துவிற்கு ஒரு இரவைக் கழிக்க இடமில்லையா? அவனுடைய ஆயுளிலே முதல் தடவையாக இத்தகைய புரட்சிக் கேள்வி மூளையில் வட்டமிட்டது. "ஏன்? ஏன்? ஏன்?" என்று.

இவ்வாறு சிந்தித்தவாறு டில்லியில் உள்ள எல்லாச் சாலைகளையும் கடந்துவிட்டான். ஆனால் எங்குமே தலையை மறைத்துக்கொள்ள ஓரிடமுமில்லை!

சாலைகளின் ஒளி வெள்ளத்தைத்தாண்டிவிட்டான். புந்து திடீரென்று சற்றுத் தயங்கினான்., இதுஎன்ன? கம்பீரமான கட்டிடம்! நிலா வெளிச்சத்தில் 'பளபள'வென்று மின்னுகிறதே!' ஆம் இப்பொழுது அவனுக்கு அது ஹுமாயூன்—கல்லறை' யென்பது விளங்கிவிட்டது. எங்காவது இதன் வாசற்படியில் படுத்து உறங்கலாமேஎன்று நினைத்தான். சோர்வடைந்த கால்களிலே சற்றுத் தெம்பு வந்தது. வேகமாக அடிவைத்துக் கோரியைச் சமீபித்தான். வாசற்படியில் கால்வைப்பதற்கு முன்பே உறுமல் கேட்டது! 'அடே நீ யார்டா...? படவா! போகிறீயா இல்லையா? இல்லாவிட்டால் ஒரு உதை உதைக்கட்டுமா?, என்றான் காவல்காரன்! அவனிடம் தர்க்கம் செய்யவோ 'முகஸ்துதி' செய்யவோ புந்துவிடம் இப்பொழுது சற்றும் வலுவில்லை. வெறுங்கையுடன் திரும்பினான். இப்பொழுதவன் மூளையில் இருமடங்கு குழப்பமேற்பட்டது. பாதுஷா செத்தால்கூட அவனுடைய உயிரற்ற எலும்புகளுக்கு இவ்வளவு பெரிய கட்டிடமா? இந்த ஹுமாயூனின்,கல்லறையைக் கட்டியது யார்? என் மூதாதைகளே! இங்கே இன்று நாயைப்போல் விரட்டப்படுகிறேன். இதெல்லாம் ஏன்? எதனால்? என் உயிருள்ள எலும்புகளுக்குப் புகலிடமில்லையா? வைஸிராய் மாளிகை.........முந்நூறு—நானூறு அறைகள்......டீ அருந்த அறை வேறு........ ஸிகரெட் பிடிக்க வேறு அறை......மதுவருந்த தனியறை......ஒரு பாதுஷாவிற்கு: அதுவும் அவனிறந்து, அநேக நூறு ஆண்டுகள் மறைந்து விட்டன...... அவனுடைய கல்லறைக்கும் ஒரு கட்டிடம் வேண்டியிருக்கிறது! கட்டிடத் தொழிலாளி புந்துவிற்கில்லையா? இதெல்லாம் ஏன்? ஏன்? எதனால்? அவன் தலை சுற்றுகிறது. அவனுடைய சோர்வடைந்த கால்கள் நடக்க மறுத்துவிட்டன. சாலையினோரத்திலே போர்வையைப் போர்த்திக்கொண்டு படுத்தான். தூக்கம் தூக்கு மரத்தில்கூட, வந்துகொண்டுதானிருக்கும்: குளிரின் ஈட்டிகள்—உடலை ஊடுருவிக்கொண்டிருந்தன. ஆனால் புந்து தூங்கிவிட்டான்.

காலை, சூரியன் வான முகட்டிலே முளைத்தான். சூரியன் ஒளியை வீசிப் புது டில்லி மீது படிந்திருந்த பனித்திரையை அகற்றினான். ஒளித்திரள் வைஸிராய் மாளிகையின் மீது படிந்தது; ஆனால், அதனால் அந்தக் கற்சுவர்களைத் துளைத்துச் செல்ல முடியவில்லை. ஒரு பக்கம் வைஸிராய் மாளிகையின் சாய்ந்த நிழல் கரும்பூதத்தைப் போல் ஊர்ந்து ஊர்ந்து குளிரில் விறைத்துக் கிடந்த புந்துவின் சவத்தை மிதித்துக்கொண்டே முன்னேறியது. ●



# டால்டா வனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது

எல்லா இடங்களிலுமுள்ள ஸ்திரீகள் கூறுவதாவது

*"டால்டாவையே வாங்குங்கள், அதனுல் நீங்கள் பணத்தை மிச்சப்படுத் துவதோடு ருசிமிக்க ஆகாரங்களையும் தயாரிக்கலாம்!"*




புத்திசாலியான குடும்பஸ்திரீகள் ஒவ்வொரு தடவையும் டால்டா வாங்குகிறுர்கள். டாக்டர்கள் நமது தினசரி உணவில் கொழுப்பு அவசியம் தேவை என்று கூறுகிறுர்கள். இதற்கு டால்டாவைத் தேர்ந்தெடுங்கள். அதன் விலை சரசமாயிருக்கிறது. சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா எவ்வளவு காலம் நீடித்திருக்கிறது என்பதையும் அது உபயோகித்து எவ்வளவு அற்புதமான சாப்பாடு தயாரிக்கலாம் என்பதையும் நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். இன்றே ஒரு டால்டா டின் வாங்குங்கள்.

**சமையல் செலவை எப்படிக் குறைப்பது?**
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ், தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

# டால்டா

**10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது**




HVM. 192-J.52 TM

# வான வெளியினிலே




‘கிருஷ்ணன் பாலா’

கண்ணனின் பிஞ்சு மனம் வேதனையால் வாடியிருந்தது. வெறித்து வெட்ட வெளியையே பார்த்துக்கொண்டிருந்ததாலோ அல்லது துக்கத்தால் தானோ, அவன் கண்களில் நீர் ததும்பியது. அவனுக்குப் படிப்பதில் ஆசையே இல்லை என்று அவன் அப்பா—டாக்டர் சதாசிவம்—அடிக்கடி சொல்லிக்காட்டிக்கொண்டே இருப்பார். தொழிலில் அவர் வைத்தியரானாலும், இலக்கியச் சுவையிலே ஆழ்ந்திருப்பவர். ரணங்களைக் கட்டுவதிலும், புத்தகங்களிலுமே ஈடுபட்டிருந்த அவர், தம் மகனைக் கண்டபோதெல்லாம், ஏதோ அபூர்வ ஜந்துவைப் பார்ப்பதுபோல் அவனைப் பார்த்து, ‘இப்படிக் குறும்பாடாக இருக்கிறாயேடா! புத்தகங்களைப் படிக்கவே மாட்டேன் என்கிறாயே! ‘டிக்கன்ஸ்’, ‘ஷெல்லி’, பாரதியார்... ஆஹாஹா! இவர்களையெல்லாம் படித்துத்தான் பாரேன்’ என்பார். இந்தப் பத்து வயதிலேயே அவன் எல்லாவற்றையும் படித்துவிடவேண்டும் என்று இருந்தது அவருக்கு. ஆனால் இந்த உரைகள் எல்லாம் கண்ணன் மனதில் பதிவதே கிடையாது. பாடங்களைப் படிக்கும் நேரம்போக மீதிப்போதெல்லாம் அவன் ஓடியாடித் திரிந்துகொண்டே இருப்பான்...

பேச்சரவம் கேட்டுக் கண்ணன் திரும்பிப் பார்த்தான். அவன் அப்பாவும், அவரது நண்பர் புரபஸர் பரமானந்தமும் வருகின்றனர். இந்தப் ‘புரபஸர் மாமா’ ரொம்பப் படித்தவராம். அப்பா சொல்கிறார். அவரது அறையிலே, தரைமட்டத்திலிருந்து மேல்விட்டம் வரை புத்தகச் சுவர் வைத்தாற்போல் அல்லவா இருக்கிறது? அதோ இருவரும் அப்பாவின் அறைக்குள் நுழைந்துவிட்டனர். இனி மணிக் கணக்காக ஒரே பேச்சுத்தான்!

டாக்டர், புரபஸரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். ‘இந்தப் பாரதியார் இருக்கார் பாருங்கோ! அவரது வர்ணனைக்கும், ‘ஷெல்லி’யின் வர்ணனைக்கும் எத்தனை ஒற்றுமை இருக்கிறது என்கிறீர்கள்! கண்ணன் மாதிரி இருப்பதிலிருந்தே எனக்கு இதிலெல்லாம் ஒரே மோகம் ஸார்...’

கண்ணன் என்றவுடன், புரபஸர் ‘கண்ணன் எங்கே காணோம்?’ என்றார். உடனே ‘கண்ணா’ என்று வெடித்தெழுந்தது டாக்டரின் குரல். வேண்டா வெறுப்புடன் கண்ணன் வந்தான். அவனை அப்படியே ‘இலக்கியக் கடலில்’ மூழ்கடிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்களென்று தோன்றியது. கண்ணன், ஒரு மணி நேரத்துக்குத் தான் கேட்டறியாத பெயர்களைப் பற்றியும், வார்த்தைகளைப்பற்றியும் கேட்டுக்கொண்

டிருக்க வேண்டியதாயிற்று. வீட்டுக்குப் போகும் போது புரபஸர் சொன்னார்:—'அடே கண்ணா, நாளைக்கு வீட்டுக்கு வா, பாரதியார் வசன நூலும், 'டிக்கன்ஸ்' நாவல்கள் இரண்டும் தருகிறேன்... உனக்குப் புரியும்...வீண்போது போக்காதே. உன் வயதில் நாங்கள் எத்தனை படித்தோம் தெரியுமா?...'

அன்று இரவு கண்ணனுக்கு உணவு சரியாகச் செல்லவில்லை. சாப்பிட்டவுடன் தினமும் அவனுக்குத் தூக்கம் கண்ணைச்சுழற்றிக் கொண்டுவரும். இன்றோ, படுக்கையில் படுத்துக்கொண்டு, உத்தரத்தைப் பார்த்த படியே எண்ணுவதெல்லாம் எண்ணினான் அவன். 'அப்பாதான் கம்பனையும், 'ஷெல்லி'யை யும் கட்டிக்கொண்டு அழுகிறார். நம்மையும் எதற்குத் தொல்லைப்படுத்த வேண்டும்? அதோடு நின்றாலும் பரவாயில்லை. இதெல்லாம் படிக்காவிட்டால் பெரிய இழிவு என்பது போல், தன்னை ஏன் அவர் பாச்சையைப் பார்ப்பது போல் பார்க்கவேண்டும்? அத்துடன் அந்த ஏளனச்சிரிப்பு வேறு...' கண்ணனுக்குக் கண்ணீர் பொத்துக்கொண்டு வந்தது. நனைந்த தலையணையின் மீது கன்னங்களில் உவர்க் கோட்டுடன் அவன் தூங்கிப்போனான்...

கண்ணன் கனவு கண்டான். தொடர்பில் லாத பற்பல காட்சிகள்...கடைசிக் காட்சியில், அவன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு புத்தகக்குவியலுக்கிடையே தவித்துக்கொண் டிருக்கிறான். வாவென்று கூவியழைக்கும் விளையாட்டு மைதானத்தையும், ஆற்றுப் படுகையையும் நினைத்துக்கொண்டே அவன் படிக் கிறான். அவன் தந்தை கையில் பிரம்புடன் நின்றுகொண்டு கவனிக்கிறார். புரபஸர் மாமா வேறு கிட்டே நின்றுகொண்டு நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார். திடீரென்று மீசைவைத்த ஆசாமி ஒருவர் உள்ளே நுழைந்து கண்ணனைத் தூக்கிக்கொண்டு வெகு வேகமாக ஓடுகிறார். போகும் போதே அவர் 'இந்தப் புத்தகங் களையெல்லாம் நீ ஏன் கட்டிக்கொண்டு அழு கிறாய்? நீயே புத்தகம் எழுதும்படி எளிதில் நான் செய்கிறேன்...வருகிறாயா? உன் தெருவின் கோடியிலே சூரிய உதயத்தின் போது ஒரு ரதம் புறப்படும்..வா' என்கிறார்.கண்ணன் தலையசைக் கிறான்... ரதம் புறப்படும்; தானும் புத்தகம் எழுதலாம்! அதைப்படிக்கும்படி அப்பாவைக் கட்டாயப் படுத்தலாம்!...கண்ணன் திடீரென்று விழித்துக்கொண்டு மணியைப் பார்த்தான். ஐந்து அடித்து ஐந்து நிமிஷம். மார்கழிப் பனி கடுமையாக இருந்தது. அந்த அதிசயத் தேரைப் பார்க்கலாம் என்ற எண்ணம் உந்தித் தள்ள, அவன் மெதுவாக வெளியே சென்றான். 'என்ன பைத்தியக்காரச் செயல்' என்று ஒருபுறம் தோன்றினாலும், அவன் கால்கள் நடந்தன. இதோ தெருக்கோடி வந்துவிட்டது. என்ன விந்தை! ரதம் அதோ காத்துக்கொண் டிருக்கிறதே! இரண்டு கரிய குதிரைகள் பூட்டப் பட்ட ரதம் கம்பீரமாக நின்றது. சாரதி தன் ஆசனத்தில் உட்கார்ந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான். ஆனால், அத்தனை பெரிய ரதத்தில், இதுவரை யாருமே ஏறவில்லை. கண்ணனது கண்கள் விரிந்தன. குரலில் ஓர் கரகரப்பை வரவழைத்துக்கொண்டு "ரதம் எப்போது புறப்படும்" என்று கேட்டான். "இன்னும் பத்து நிமிஷங்களில்" என்று பதில் கிடைத்தது.

'எங்கே போகிறது?'

'கவலைப்படாதே தம்பி, இனிமையான இடத் துக்கு உன்னை அழைத்துப் போகிறேன்'.

சாரதியின் கம்பீரமான குரல் கண்ணனுக்குத் துணிவூட்டியது. ஏறி உட்கார்ந்து கொண்டான். குதிரைகள் பாய்ச்சலில் கிளம்பின. ஒரு கண நேரம் கண்ணன் பயந்து நடுங்கினான். அவன் இதுவரை காரிலும், ரயிலிலும் தவிர வேறு எதிலும் பிரயாணம் செய்ததில்லை. இந்த வாக னம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வாடைக் காற்று விர்ரென்று முகத்தில் பட்டது. முண்டாசு கட்டிக்கொண்டு, பெரிய மீசை வைத்துக்கொண்டு நெற்றியில் காலணா அகலத் துக்குக் குங்குமப் பொட்டு இட்டுக்கொண்டு கம்பீரமாகக் குதிரைகளைச் செலுத்தும் சாரதி யையும், கண்ணனையும் தவிர, ரதத்தில் ஒரு வருமே இல்லை! இந்தத் தனிமையும், குளிரும் கண்ணனுக்குப் பிடிக்கவில்லை. மெத்தென்ற தன் படுக்கையையும், சூடான 'பெட் காப்பி' யையும் நினைத்துக் கொண்டான். அரை நிமி ஷந்தான் இந்த வேதனை. மெதுவாக அவன் சாரதியுடன் பேச்சுக் கொடுத்தான்.

'டிரைவர்! உன் பெயர் என்ன?'

'டிரைவர்!! ஹாஹா! ரத டிரைவர்!... நல்ல பெயர்; சபாஷ், பாண்டியா!

'என் பெயர் சுப்பிரமணியன்; பாரதி என்று கூடச் சொல்லுவார்கள்'

'என்னது! எங்கள் அப்பா உங்களைப்பற்றி அடிக்கடி பேசுகிறார். அவரா நீங்கள்? அதிருக் கட்டும்,... உங்களுக்கு இந்த டிரைவர்' வேலை தானா எப்போதும்?

'நல்ல கேள்வி கேட்டாய்! நான் உனக்காகத் தான் குதிரையோட்டுகிறேன்.

'நான் ஒரு டாக்டர்...'

'டாக்டரா! எங்கப்பாவும் ஒரு டாக்டர்தான்... எங்க 'புரபஸர் மாமா' வேறு மாதிரி டாக்டர். புத்தகங்களை ரொம்பரொம்ப படித்தால் டாக்டர் பட்டம் தருவார்களாமே! ஆனால், அவருக்கு மருந்து தரத் தெரியாது...' சாரதி சிரித்தார்.

'கண்ணு! எனக்கும் உடல் வியாதிக்கு மருந்து தெரியாது. உள்ளத்தைப் பீடிக்கும் அழுக்கு களைத்தான் 'ஆபரேஷன்' செய்ய முயன்றேன்...'

கண்ணன் வெளியிலே பார்த்தான். ரதம் கடு வேகமாக மேலே சென்றுகொண்டிருந்தது. இரு புறங்களிலும் மேகக்கூட்டங்கள். ஒரு வீட்டை யாவது சாலையையாவது காணோம்! இரண்டுமணி நேரம் சென்றபிறகு கூடவா 'அந்த இடம்' வர வில்லை?... 'படார்' என்ற இடிச் சத்தம் அவனைத் தன் நிலைக்குக் கொண்டுவந்தது. கண்ணன் தன் வீட்டைப்பற்றி நினைத்துக்கொண்டான். அவன் காப்பிசாப்பிட வீட்டில் இருக்கமாட்டான். எல்லா ரும் தேடுவார்கள்! இந்த இடிச் சத்தம் வீட்டில் கூடக்கேட்குமல்லவா?' இடி இடிப்பதைப் பக்கத் தில் இருந்து பார்த்தேன், என்று அம்மாவிடம் சொல்லலாம்...

'தம்பீ! பயமா?' என்றார் சாரதி. பயமா! இங்கே பயப்பட என்ன இருக்கிறது?' என்று சிரித்தான் கண்ணன். 'சபாஷ், பாண்டியா! தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்' என்றார் பாரதியார். மேகங்கள் திடீரென்று விலகின. சத்தம் குறைந்து குறைந்து தேய்ந்தது. அந்தத் தேய்விலே மற்றோர் ஒலி பிறந்து வளர்ந்து, பின் னர் மறைந்தது. ரதத்தின் பாதையிலிருந்து அற்புதமான ஒரு வானவில், அதி வேகமாகப் பின் சென்று மேகங்களில் மறைந்தது. திடீரென்று குதிரைகள் நின்றன. சாரதியும் குதித்தார். கண்ணனும் இறங்கி முன்னால் பார்த்தான். என்ன அழகு! எதிரில் இருந்த கட்டிடங்கள் எல்லாம் குளிர்ந்த இனிய பொன்னொளி வீசின. இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்த ஓர் இனிய ஒலி. உயிருக்குள்ளே இன்னிசை மழையை வீசிக்கொண்டேயிருந்தது. அங்கே இருந்த எல்லாமே மோகினித்தன்மை கொண்டு விளங்கின.

'தம்பீ! எப்படி இருக்கிறது எங்கள் உலகம்? என்றார்' பாரதியார்.

'சொன்னால் கேலி பண்ணக்கூடாது.'

'பயத்தை விடு பாண்டியா! கண்டதைச் சொல்லடா சிங்கம்!'

'மாரிக் காலத்தில், மழை இல்லாத மாலே வேளையில், ஆற்றங்கரையில் நின்றுகொண்டு சூரியன் மறைவதைப் பார்த்திருக்கிறேன். மறையும் சூரியனின் கிரணங்கள் மெல்லிய மேகங்களின் மீதும், இடையிடையே தெரியும் வான வெளிகள் மீதும் வாரி இறைக்கும் வர்ண வேறுபாடுகளைக் கண்டு ஆனந்தப் பட்டிருக்கிறேன். அதே மாதிரி இருக்கிறது இங்கேயும்."

'சபாஷ்! பாண்டியா, நீ கவிக் குஞ்சுதான். நீ எதற்காகப் பிறர் புஸ்தகங்களைக் கட்டிக் கொண்டு அழவேணும்? வா, மற்றவர்களையும் பார்க்கலாம்.'

* * *

கண்ணன் அவமானத்தால் தலை தொங்கிப் போய் இருந்தான். 'தேருமில்லை, ரதமு மில்லை, வானவில்லும் இல்லை!...ஏதாவது கனவு கண்டுவிட்டு உளறுதே!' என்று அவன் அப்பா இரைந்துகொண்டிருந்தார். அழுது அழுது கண்ணன் கண்கள் குவளை போலச் சிவந்திருந்தன. மூக்கு நுனியும், உதடுகளும், ஏமாற்றத்தாலும், துயரத்தாலும் துடித்துக் கொண்டிருந்தன. அவன் வானவெளியிலே எத் தனை காட்சிகளைக் கண்டான்! அந்தப் பாரதியார் அவனை வெண்மையாக நீண்ட தாடி உள்ள மனிதரிடம் அழைத்துப் போனார். அந்த மனிதரை எல்லாரும் தாகூர் என்று அழைத்தார்கள். அவரது துல்லியமான நீண்ட வெண்பட்டு அங்கி எத்தனை மிருதுவாக இருந்தது? அதைவிட இனிமையாக இருந்தது அவர் பேச்சு. தன்னைப்போன்ற சிறுவர்களை வைத்துக்கொண்டே அவர் பல கதைகளை எழுதினாராமே! அவரது இளம் கதா நாயகர் களில் ஒருவனை ஃபதீக்கை (Phatik)க் கண்ணன் கண்டான். அவனுடன் பல விளையாட்டுகள் விளையாடினான். அந்தக் கடற் கரையின் ஓரத்திலே எத்தனையோ ஸ்திரீ புருஷர்கள் உலவிக்கொண்டே பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். 'இவர்கள் எல்லாம் என்னுடைய சிருஷ்டிகள்' என்றார் வயதான மனிதர் ஒருவர். அவர்தான் காளிதாஸர் என்பவர் என்றார் பாரதியார்.

அலைகடலின் ஓரத்திலே நின்றுகொண்டிருந்த ஒரு வெள்ளைக்கார வாலிபர் ஆகாயத்தில் அலைந்து கொண்டிருந்த மேகங்களைப் பார்த்துவிட்டுக் 'கீழே மிதக்கும் படகுகளுக்கு வானக்கண்ணாடி யில் தோன்றும் சாயைகளைப் போல் அல்லவா இவை மிதந்து செல்கின்றன!' என்று வாய் விட்டுச் சொன்னார். அவர் கண்ணனைக் கண்ட தும் 'புதிய கவிஞனு நீ! வா வா!' என்று சொல்லி அவனை அணைத்துக் கொண்டார். 'இவர்தான் என் ஆதர்ச புருஷர் ஷெல்லி என்பவர். தமிழ் நன்றாகக் கற்றுக்கொண்டுவிட்டார்' என்றார் பாரதியார். அவர்கள் எத்தனை அழகாக, மதுர மாகப் பாடினார்கள்! பேசினார்கள்! கடைசியில் கண்ணன் 'நான் இன்று திரும்பிப்போய் இவற் றைப்பற்றி எல்லாரிடமும் சொல்லிவிட்டு நாளை வருவேன்' என்றான். ஏனோ அவர்கள் இதைக் கேட்டவுடன் 'ஒரு மாதிரி' சிரித்தார்கள். வரும் போது கண்ணன் ரதத்தில் வரவில்லை. ஒரு அழகிய யுவதி அவனைக் கொண்டுவந்து தெருக் கோடியில் விட்டுவிட்டுச் சென்றாள். திடீரென்று அவன் கண்முன் அப்பா காணப்பட்டார். அவரிடம் நடந்ததைச் சொன்னான் அவன். அவர் சத்தம்போட ஆரம்பித்தார். 'கண்ட இடங்களில் பகலில் சுற்றிவிட்டு, இரவில் எதையாவது நினைத்துக்கொண்டு படுத்துக் கொள்வது...கனவு கண்டாயோ, என்னவோ? நடுத் தூக்கத்தில் எழுந்து எங்கோ போய்விட்டுத்

திரும்பி வந்து உளறுகிறாயா?' என்றார். கண்ணன், தான் கண்டதெல்லாம் கனவாக இருக்க முடியாது என்றான். 'பேத்தல்' என்றார் அவன் அப்பா. அவன் அம்மாவுக்கோ, ஒரே குழப்பம்: கவலை. இந்த நிலையில்தான் புரப்ஸர் பரமானந்தம் வந்து சேர்ந்தார்.

'வாருங்கள், புரபஸர் ஸார்! இந்தப் பயலுக்கு 'ஸோம்னும்பலிஸம்' (தூக்கத்தில்நடக்கும்வியாதி போலிருக்கிறது. தூங்கிக்கொண்டே எழுந்து எங்கோ போய்விட்டு அப்படியே வந்து உட்கார்ந்து, விழித்துக்கொண்டு, 'பாரதி, ஷெல்லி, தாகூர் எல்லாரையும் பார்த்தேன்' என்கிறான். அவர்கள் இவனுடன் பேசினார்களாம். பெண்கள் ஹாரத்தி எடுத்தார்களாம் இந்த மஹாராஜாவுக்கு' என்றார்.

'உம்...உம்...இந்தமாதிரி கற்பனை பாரதியாருடைய 'ஞான ரதம்' என்ற புஸ்தகத்தில் இருக்கிறது. ஆனால்...இவன் அதைப் படித்ததில்லையே!... இருக்கட்டும்... கண்ணா! நீ பார்த்த உலகத்தில் என்னென்ன இருந்தது?'

'புரபஸர் மாமா! நீங்கள்தான் நல்லவர்...... அந்த உலகம் பூராவும் பாடுகின்ற குயில்கள், தேவதாரு மரங்கள். மான்கள், சௌந்தரிய புருஷர்கள்...'

'ஆஹா! அப்புறம், நீ என்னிடம் சொன்னாயே, அந்தக் கவிதையையும் சொல்லிவிடு. பேத்தல் பூர்த்தியாகிவிடும்...இது ஏதோ ஒரு 'காம்ப்ளெக்ஸ்' ஸார்...' என்று கேலியுடன் கவலையும் தொனிக்கச் சொல்லிவிட்டு அவன் அப்பா அறையை விட்டுப் போனார். அங்கே புரபஸரும் கண்ணனும் மட்டும்தான் இருந்தார்கள்...

'என்ன கவிதை? நீ எழுதினதா? நீ பார்த்த இடத்தைப்பற்றியா?' என்று புரபஸர் கேட்டார்.

'ஆமாம்...என் மனதில் தோன்றியது...அவர்கள் எல்லாரும்கூடக் கேட்டார்கள்...'

'தயங்காமல் சொல், உன் கவிதையை'–அவர் குரலில் ஏளனம் தொனித்தது.

'............வானத்துத் தேவர்

செண்டு புடைத்திடுகின்றார்—என்ன

'தெய்வீகக் காட்சியைக் கண்முன்பு கண்டேன்!'

'என்ன! இது நீ எழுதினதா?'




குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

'எழுதவில்லை. என்மனதில் தோன்றிற்று. இன்னும் என்ன வெல்லாமோ தோன்றியது. இங்கே வந்த பிறகு சொல்ல வரவில்லை.'

'என்ன இது? ஆச்சரியமாக இருக்கிறது! இது பாரதியார் கவிதை அல்லவா? நீ படித்த தில்லை அதை...எப்படி உன் மனதில் அதே வார்த்தைகள் தோன்றின'

'எனக்கு அதெல்லாம் தெரியாது...நான் அந்த இடத்திலே இருந்த போது ஒரே சந்தோஷமாக இருந்தது. நான் அங்கே, அப்பா, அம்மா, நீங்கள், எல்லாரையும் அழைத்துக்கொண்டு போகலாம் என்றிருந் தேன்...பார்த்ததை அப்பாவிடம் சொன்னால் திட்டுகிறார்கள். இனி நான் தனியாகக்கூட அங்கே போகமுடியாது போலிருக்கிறது...' கண்ணனின் குரல் கம்மியது. அவன் தயங்கித் தயங்கித் தொடர்ந்து சொன்னான்:—'நான் அவர்களிடமெல்லாம் உங்களைப்பற்றிச் சொன் னேன். நீங்கள் எத்தனை படித்தவர் என்று சொன்னேன். அதற்குத் தாகூர், 'அப்படி யென்றால் அவர், நீ சொல்வதைக் காது கொடுத்துக் கேட்கமாட்டார்; உன்னை நம்பமட்டார்' என்று சொன்னார்'

'என்ன! என்னைப்பற்றியா சொன்னாய்?'— புரபஸர் திடுக்கிட்டுக்கேட்டார்.

'ஆமாம்'

'சரி... உன் அப்பாவுக்குத் தெரியாமல் அங்கே போய் வரலாம். இன்றைக்குச் சாயந் திரம் உன் ரதம் கிளம்புமா? நான் உன்னோடு வருகிறேன்.'

'ஓ! நான் வரச்சொல்லியிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டுக் கண்ணன் துள்ளிக் குதித்துக் கொண்டே அறையைச் சுற்றிச்சுற்றி ஓடினான்.

'பாவம்! இது ஓர் 'காம்ப்ளெக்ஸ்' தான். எங் கேயோ இந்தப் பாட்டைக் கேட்டிருக்கிறான். அத்துடன் அவர்களது புத்தகங்களைப் படிக்கும் படி நாம் தூண்டுவதும் சேர்ந்து கொள்ளவே இம்மாதிரி கனவு கண்டிருக்கிறான்... அவனை அனுசரித்துப்போய், அவன் சொல்வதை நம்பு வதைப்போல் பாசாங்கு செய்தால்தான். அது நாளடைவில் நீங்கும்' என்று நினைத்த படியே புரபஸர் தம் வீடு சென்றார். கண்ணன் மனமோ களிக்கூத்தாடியது. 'நேற்றே சரியாகத் தூங்க வில்லை. இன்று மத்தியானம் ஒரு தூக்கம் போட்டால், இன்று இரவு கண் விழிக்கச் சரி யாக இருக்கும்' என்று அவன் தனக்குள் சொல் லிக்கொண்டான்.

* * *

சொன்னால் சொன்னபடி அன்று மாலை ஆறு மணிக்குப் புரபஸர் வந்தார். கண்ணனின் அப்பா ஏதோ 'கேஸ்' என்று சொல்லிக்கொண்டு நாலு மணிக்கே போய்விட் டார். அவன் அம்மா 'கிளப்'புக்குப் போய் விட் டாள். அதனால் தனியே அவருடன் கிளம்பக் கண்ணனுக்கு அதிகச் சிரமம் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் தெருமுனைக்கு வந்தபோது மார்கழி இருட்டு நன்றாக உலகைப் போர்த்தி விட்டது. 'அட!' அதோ ஒரு ரதம் இருக்கிறதே!, என்று கூவி விட்டார் புரபஸர். கண்ணன் கை களைக் கொட்டிக்கொண்டு அவருக்கு முன் குதித் தோடிச் சென்றான். இது அவன் சென்ற ரதம் அல்ல. வேறொன்று. இதன் சாரதியும் வேறு ஆசாமி. இவர் தாடி வைத்திருந்தார். புரபஸர் கனவில் நடப்பதைப்போல் நடந்து சென்று ரதத்தில் ஏறிக்கொண்டார். சாரதியைப் பார்த் ததும் அவர் உடல் சற்றே நடுங்கியது.

'புரபஸர் மாமா! இவர் நேற்று இருந்த ஆள் அல்ல. வேறு யாரோ தெரியவில்லை...'

'உச்' இரையாதே!... நேற்று உன் அப்பா விடம் கொடுத்தேனல்லவா, தோல் 'பைண்ட்' செய்த புத்தகம்? அதை எழுதினவர் இவர்தான். இவருக்குப் பன்னிரண்டு பாஷைகள் தெரியும். வ. வெ. சு. ஐயர் என்று பெயர்...'

'அப்படியா, நாம் இன்று அந்தச் சிறுவன் லைபீகைப் பார்க்கலாமா? அங்கே இன்னொரு பாட்டியம்மா சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லு கிறாள். அவளையும் பார்க்கவேண்டும்...'

'நேற்று அவர்களுடன் தான் முழுக்க முழுக்கப் பேசிக்கொண்டிருந்தாயா?'

'இல்லையே...பாரதியார் என்னை எல்லாருக்கும் அறிமுகப்படுத்தினார்...நான் ஓடி விளையாடக் கூடச் செய்தேன். எனக்கு ஒரு பலமுள்ள ஆசாமி தேகப்பயிற்சி சொல்லிக் கொடுத்தார்..'

'அவர் பெயர் என்ன?'

'கட்டபொம்மன் என்று சொன்னார்கள். பாரதி மட்டும் அவரைப் 'பலே பாண்டியன்' என்று கூப்பிடுகிறார். ஷெல்லி என்பவர் கூட அவரை மிகவும் போற்றுகிறார். அவர் சுதந்திர புருஷராமே? அப்படியென்றால் என்ன மாமா?'

'சே! தொண தொணவென்று பேசாதே; உன் நேரத்தை நீ வீணாகப் போக்கிவிட்டாய். இத்தனை கவிஞர்களுடனும் நீ வீண் பேச்சுப் பேசிக்கொண்டிருந்து விட்டாய். படித்த, பண்புள்ள புரபஸர் ஒருவர் உன் நிலையில் இருந்திருந்தால் எப்படி நடந்து கொண்டிருப் பார் தெரியுமா?........' புரபஸர் பெருமூச்சு விட்டார்.

'எனக்கு அதெல்லாம் தெரியாது, புரபஸர் மாமா,...நீங்கள் பண்புள்ள, படித்த ஆசிரியர்... அப்படித்தான் நான் அவர்களிடம் சொன்னேன்.'



# நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் நன்ருகத்தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.




## ரெக்ஸோனு

## கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 100-50 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.

'நீ அவர்கள் முன்னிலையில் கண்டபடி பேசிக் கொண்டிருந்தால் **எனக்கு** அவமானமாக இருக்கும். நீ ஓடக்கூடாது; கண்ட கேள்வி களைக் கேட்கக்கூடாது.'

கண்ணன் மனம் ஒரு சிறிது புண்பட்டது. 'இவர் முதலில் நான் சொன்னதையெல்லாம் நம்ப மறுத்துவிட்டார். இப்போதோ, எனக்கு அவர்களிடம் நடந்து கொள்ளும் முறை தெரியவில்லை என்கிறார்...ஆனால் ஒன்று; நான் சொன்னதெல்லாம் பிதற்றல் அல்லவென்று தெரிந்துகொள்ளுவார். இவர் வந்து சொன்னால் அப்பாவும் நம்புவார்' என்று எண்ணிக் கொண்டான் அவன். வெளியே மழை நின்று விட்டது. வானத்தில் சந்திரன் தோன்றித் தன் அமுத கிரணங்களை இந்த ரதத்துக் குள்ளேயும் வாரி இறைத்தான்.

'இதோ, கொஞ்ச நேரத்தில் நாம் அந்த வானவில்லைப் பார்க்கலாம்' என்றான் கண்ணன் குதூகலத்துடன்.

'சே சே! கொஞ்ச நேரம் என்னைச் சும்மா விடு. நான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். உன்னைப்போன்ற சிறு பயலுடன் இங்கே வர வேண்டியிருக்கிறதே என்று வருத்தமாக இருக்கிறது எனக்கு' என்றார் புரபஸர்.

இதற்கிடையே கண்ணன் ஒரு தீர்மானம் செய்துகொண்டான். 'இனி புரபஸர் ஏதாவது கேட்டாலன்றி வாயைத் திறக்கக்கூடாது. அந்த உலகத்திலே உள்ள மக்களிடம்கூட முன் மாதிரி கும்மாளம் அடிக்கக்கூடாது. கண்ணியமாகப் புரபஸர் சொல்கிறபடி நடந்துகொள்ள வேண்டும்.' அவன் தனக்குள்ளேயே மற்றோர் கேள்வி யையும் கேட்டுக்கொண்டான். 'இந்தப் புரபஸர் ஆராய்ச்சி எல்லாம் செய்து, எல்லாக் கவிதைகளி லும், புத்தகங்களிலும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறாராமே? அப்படியென்றால் இவர், அவற்றை எழுதியவர்களையே நேரில் கண்டால் என்ன பேசுவார்? ஒருகால் சண்டை முற்றி அடிதடி ஏற்பட்டுவிடுமோ...?'

ரதம் சென்றுகொண்டே இருந்தது. முன்பு கண்ட அதே இடங்கள்! கண்ணன் செய்து கொண்ட தீர்மானம் காற்றோடு போயிற்று. உணர்ச்சி மிகுதியில் அவன் கத்தினான். 'அதோ அதே மலைகள்; பள்ளத்தாக்கு! அடடா! என்ன அழகு! புரபஸர் மாமா, பாருங்கள்.' புரபஸர் திடுக்கிட்டுப் பார்த்தார். 'என்ன எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே? இங்கு வந்து கூடவா கனவு காண்கிறாய்? தூங்கிவிட்டாயா என்ன?' என்றார். கண்ணன் வாயை மூடிக்கொண்டு வெளியே பார்த்தான். ரதத்தின் சக்கரங்கள் ஒரு மிகப் பெரிய, மிக அழகான, ஒளி வீசும் வானவில்லின்மேல் ஏறின. ஆனால் அவன் ஒன்றும் சொல்லவில்லை. புரபஸர் கோபித்துக்கொண்டால்? ஆனால் அவனையும் அறியாமல் அவன் வாய் ஒரு பாட்டை இசைத்தது. புரபஸர் மீண்டும் திடுக்கிட்டுக் கேட்டார் 'என்ன இது? இதே போன்ற கருத்தை வைத்துக்கொண்டு 'கீட்ஸ்' அல்லவா—அருமையாகப் பாடியிருக்கிறார்? உனக்கு எப்படித் தோன்றியது இந்தக் கருத்து?' எனக்குத் தெரியாது மாமா! எனக்கு ஏதோ மனதில் தோன்றியது. பாடிப்பார்த்தேன். அவ்வளவு தான்' என்று பதில் சொன்னான் பையன். ரதத்துக்குள் மீண்டும் மௌனம் நிலவியது. புரபஸர் வெளியே எட்டிப் பார்த்துத் திடீரென்று பேயறைந்தவர்போல் காணப்பட்டார். ஏதோ ஒரு மன வேதனையை அவர் கண்கள் உணர்த்தின.

'அவர்கள் எல்லாரும் தூங்கிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ? உங்களைப் பார்த்தால் அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். நீங்கள் எத்தனை படித்தவர் என்று நான் சொன்னேனுக்கும்' என்றான் கண்ணன். புரபஸர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ரதத்தின் வேகம் குறைந்தது, அது நிற்கும் இடத்தைச் சமீபித்துவிட்டது என்பதைக் குறிப்பிட்டது. 'நான் வந்துவிட்டேன்! புரபஸர் மாமாவும் என்னுடன் வந்திருக்கிறார். நான் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறேன்' என்று கண்ணன் குரல் கொடுத்தான். யாரும் பதில் சொல்ல வில்லை. இதற்குள் ரதம் நின்று விட்டது. சாரதி கீழே குதித்தார். 'ஐயரே! ரதம் ஓட்டும் தொழில் எப்படி?' என்று கேட்டு இடி முழக்கம்போலச் சிரித்தார் ஒருவர். அவர் பாரதியாகத்தான் இருக்கும் என்று புரபஸர் தீர்மானித்தார். கண்ணனைப் பின்பற்றி அவரும் கீழே குதித்தார். அவர் முகம் சோபையிழந்திருந்ததாகக் கண்ணனுக்குத் தோன்றியது. 'நாம் இப்போது எங்கே போகலாம்?' என்று பொதுவாகக் கேட்டார் புரபஸர்.

'யம சந்நிதானத்துக்கு' என்றார் ஐயர்.

புரபஸர் நடுங்கினார். 'என்ன ஐயா! ஆற்காட்டு நவாப் பயந்த பயம் பயப்படுகிறீரே! இந்த உலகத்திலே இன்பம், தர்மம், சத்தியம், சாந்தம் எல்லாம் ஒருங்கே இருக்கும். சந்தேகத்துக்கும், பொறாமைக்கும், வீண்பெருமைக்கும், பொய்ம்மைக்கும் இடம் இல்லை. அறத்துக்கு ஏன் அஞ்சுகிறீர்? அந்தப் பையன் எத்தனை துணிவுடன் வந்தான்! சிறுவர்களிடம் வணங்குதற்குரிய எளிமை இருக்கிறது ஐயா' என்றார் பாரதியார்.

புரபஸரோ மேலும் நடுங்கினார். கண்ணன் பரபரப்புடன் 'புரபஸர் மாமா! அதோ பாரும் தாகூர் வருகிறார். அவரை உங்களுக்குத்தானே என்னைவிட நன்றாகத் தெரியும்? பேசுங்கள்..... ஏதாவது பேசுங்கள்!.... ஏன் சும்மா இருக்கிறீர்கள்?' என்றான். அவன் குரல் தழுதழுத்தது.

'எனக்கு ஒன்றுமே தெரியவில்லை! என்னை என் வீட்டுக்குக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்' என்று பரிதாபமாகச் சொன்னார் புரபஸர்.

'எப்படித் தெரியும் ஐயா! ஹ்ருதயத்திலே ஒளி இருந்தால்தான் இங்கே பார்க்க முடியும். நீங்கள் எல்லாம் உங்களைப்பற்றிப் பிரமாதமாக எண்ணிக்கொண்டு, வறட்டு ஆராய்ச்சி செய்து அதையே இந்த இளம் பிள்ளைக்கும் புகட்டப் பார்க்கிறீர்கள். இவனது உண்மையான உள்ளத்தை அலட்சியம் செய்து எப்போதும் புண்படுத்துகிறீர்கள்' என்று மெல்லச் சொன்னார் அங்கே வந்த தாகூர்.

புரபஸர் அங்குமிங்கும் பரபரப்புடன் பார்த்தார். கீழே குனிந்து நோக்கினார். ஒரு பெரிய படிகமலை தெரிந்தது. 'அதோ அதோ தெரிகிறது என் வீடு... என் ஊர்...' என்று பேய்க் கூச்சலிட்டுக்கொண்டே அவர் கீழே குதித்துவிட்டார். கண் மூடித்திறக்கும் நேரத்திற்குள் அவர் உடல் நீரைக் கிழித்துக்கொண்டு செல்வதுபோல அந்த மலையைப் பிளந்துகொண்டு ஊடுருவிச் சென்று மறைந்தது.

கண்ணன் ஒரு கணம் அயர்ந்து நின்றுவிட்டான். மறுகணம் அவன் கூவி அழத் தொடங்கினான். 'புரபஸர் மாமா' நீங்கள் எங்கே போய் விட்டீர்கள்? உங்களுக்காகக் காத்து நிற்கும் இவர்களுடன் நீங்கள் பேசவில்லையா? நீங்கள் படித்துள்ள புத்தகங்களை எழுதினவர்கள் எல்லாரும் இங்கே இருக்கிறார்களே, பார்க்கவில்லையா? நீங்கள் ஏன் போய்விட்டீர்கள்? இதோ உங்களுக்குத் தெரிந்தவர்கள் உங்களுக்கு மாலை போட வருகிறார்கள்! என்று கத்தினான்.

அமரர் அனைவரும் வந்து கூடினார்கள். 'எங்கள் புரபஸர் மாமாவைக் கூப்பிடக்கூடாதா? ஏதேதோ சொல்லி அவரைத் தள்ளிவிட்டு விட்டீர்களே? ஏன் அப்படி? நான் அவருக்கும் இந்தக் காட்சிகளைக் காட்டவேண்டும் என்று தானே வந்தேன்?' என்று விம்மினான் சிறுவன். 'அது எங்கள் தவறு அல்ல அப்பா! அவருடைய மனத்துக்கு இங்கே நிற்பதற்கு வேண்டிய ஒளி, பலம், இல்லை' என்றார் ஐயர். 'அது எனக்குத் தெரியாது... அவர் அநியாயமாக விழுந்து விட்டார்' என்று கண்ணன் மேலும் விம்மினான்.

'இந்தப் பையன் மனம்தான் உண்மையான கவிஞன் உள்ளம். அது எத்தனையோ மென்மையானது. ஆனால் சில சமயங்களில் அசைக்க முடியாத வஜ்ரத்தன்மை பூண்டு விடுகிறது. அதில் எத்தனை அநுதாபம்! எத்தனை பிரகாசம்!' என்று சொன்னார் அங்கே இருந்த கிழவர். 'வாரும் தமிழ்த்தாத்தாவே' என்று அவருக்கு முகமன் கூறினார் பாரதியார்.

'நமஸ்தே பால! த்வமேவப் பிரத்யக்ஷம் பிரும்மாஸ்மி' என்று சொன்னார் காளிதாஸர்.

'பாலனே, உன்னை வணங்குகிறோம். நீதான் கண்கண்ட பிரும்மம்' என்று தமிழ்க் கொடி நாட்டினார் பாரதி.

'உன் உள்ளத்தில் உள்ள உண்மை ஒளியும், எளிமையும், இரக்கமும், என்றும் நிலைத்திருக்கட்டும்' என்று சொல்லி அவனுக்கு மாலை சூட்ட வந்தனர் அமரர்கள்.

'எனக்கு வேண்டாம்; நீங்கள் எத்தனை பெரியவர்கள்? நான் எவ்வளவு சின்னப் பையன்...! நான் போய் நீங்கள் சொல்லியிருப்பதையெல்லாம் புத்தகங்களில் படிக்கிறேன். எனக்கு முதலில் எங்கள் 'புரபஸர் மாமா'வைப் பார்க்க வேண்டும். அவர் ஊருக்குப் போயிருப்பாரோ



என்னமோ? அவரை நான்தான் வற்புறுத்தி அழைத்து வந்தேன்—அவரைப் பார்க்க வேண்டும்...வருகிறேன்...நமஸ்காரம்' என்றான் கண்ணன். அவன் கண்களில் வெம்பனி சொரிந்தது.

* * *

'ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? பகலில் படுத்தவன் எத்தனை தரம் எழுப்பியும் எழுந்திருக்காமல், இரவு பன்னிரண்டாகிறது இன்னமும் தூங்குகிறாயே? என்ன செய்கிறது உனக்கு? ஏன் அப்படி அலறினாய்' என்றார் கண்ணனின் அப்பா கவலையுடன்.

கண்ணன் 'நடந்தை'தை எல்லாம் சொன்னான். விவரமாக, ஒன்று விடாமல் சொன்னான். 'அப்பா! அவர்கள் எத்தனை பெரியவர்கள்? ஆனால் எத்தனை அன்புடன், எளிமையாகப் பேசுகிறார்கள் என்னுடன்! இனி அவர்கள் எழுதினதையெல்லாம் ஆசையோடு படிப்பேன் அப்பா!...ஆனால், ஏனோ தெரியவில்லை. அவர்கள் ஏதோ சொல்லி நம்ம 'புரபஸர் மாமா'வைக் கீழே விழும்படி செய்துவிட்டார்கள். நாளைக் காலையில் அவர் வீட்டுக்கு முதலில் போய் அவரைப் பார்க்கவேண்டும்....என்றான். அவன் முகத்தில் பெருமிதம், துயரம், ஆனந்தம் எல்லாம் காணப்பட்டன. கண்ணனின் அப்பா தம் பிள்ளையை இரக்கத்துடன், கவலையுடனும் சற்றுக் கோபத்துடனும் பார்த்தார். பிறகு 'பாபம்,' 'ஹல்லூஸினேஷன்' '(மனப்பிராந்தி)' என்றார். ஆனால் இதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் கண்ணன் திரும்பிப் படுத்துக் கொண்டு தூங்கிப்போனான். சற்று நேரம் கழித்து அவன் அப்பாவும் தூக்கத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் காலையில் அவருக்குப் புரபஸர் வீட்டு வேலையாள் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தான். அதைப் பார்த்ததும் அவர் முகம் வெளிறியது. அதில் கண்டிருந்த செய்தி இதுதான்:—'நேற்று இரவு புரபஸர் சீக்கிரம் தூங்கி விட்டார். சுமார் 12 மணிக்கு அவர் அறையில் 'தடால்' என்று சத்தம் கேட்டுப் போய்ப் பார்த்தால், அவர் கட்டிலிலிருந்து கீழே விழுந்திருந்தார். தொட்டுப் பார்த்தால் மூச்சு இல்லை. முகம் பேயறைந்தாற் போல மாறியிருந்தது...

'சரிதான், அவருக்கு வழக்கமாக வரும் மாரடைப்பு நேற்று இரவு யமனாக வந்துவிட்டது' என்று முணுமுணுத்தார் டாக்டர். விஷயத்தை அறிந்த கண்ணன், தான் புரபஸரை 'வான வெளி'க்கு அழைத்துப் போனதால்தான் அவர் அங்கிருந்து விழுந்து இறந்தார் என்று சொல்லி அழுதான்.

புரபஸர் பரமானந்தத்தின் ஈமக்கிரியைகள் அன்று பல பிரமுகர்கள், பல பண்டிதர்கள் புடைசூழ, அமர்க்களமாக நடந்தேறின.

கண்ணன் அன்றுமுதல் இலக்கியம் படிக்கத் தொடங்கினான்.

---


# பர்த் "ஸ்டேபிரைட்"

## எவர்ஸில்வர் ஸ்டீல் பாத்திரங்கள்

★

### சுகாதாரத்திற்கு உகந்தவை

✱ ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகள் அனைத்திற்கும் அவசியமானது.

✱ கல்யாணங்களுடன் மற்றும் எல்லாவித விசேஷங்களுடன் சீர்வரிசையாகவும் வெகுமதியாகவும் கொடுப்பதற்கு மிகவும் கண்யமானவை.

✱ நீடித்த உழைப்பு, உறுதி, நம்பிக்கை, விலை மலிவு முதலிய சகல அம்சங்களுடன் மொத்தத்திலும் சில்லறையிலும் கிடைக்கும்.

✱ உபயோகத்தில் கறுக்காதவை, கைக்காதவை, உடையாதவை.

★

## எம். ஏ. எத்திராஜுலு நாயுடு

7/4, ஈவினிங் பஜார் (போன் 4106) மதராஸ்

# வன ரோஜா

மொழிபெயர்ப்பு: தி. சேஷாத்திரி





மூலம்:
கௌசில்யா – அலகாபாத்

அவள் கோபம்கொண்ட பாம்பு போல் உள்ளே ஓடினாள். உடுத்தியிருந்த புது உடைகளைக் களைந்து எறிந்தாள். பழைய கந்தலையும் கிழிசலையும் எடுத்துச் சுற்றிக்கொண்டாள். பின் கதவு வழியாக ஓடி மறைந்துவிட்டாள்.

ஆம், நல்ல உடைகளைக் களையும்போது அவள் ஒரு நிமிஷம் தயங்கியதுண்டு. மீண்டும் தன் பழைய கந்தலை எடுத்துச் சுற்றிக்கொண்ட போதும் தயங்கினாள். ஆனால் ஒரு வேகம்; கண்ணை மூடிக்கொண்டு களைத்த கால்களையும் உடைந்த உடலையும் கூட விரட்டுவதுபோன்ற அந்த வேகம் அவளைத் தூண்டிற்று; நிற்கவிடாமல் தூண்டிற்று. அவள் ஓடிவிட்டாள்.

அவள் யார்?

அவளுக்குத் தெரியாது. எப்பொழுது எங்கே பிறந்தாள் என்றும் தெரியாது. ஞாபகம் தெரிந்தது முதல் அவள் தன் சின்னம்மாவுடன் சுற்றிக்கொண்டிருக்கிறாள்—வீடு வீடாய், வாசல் வாசலாய்! அதுவே அவள் சிறிய தாயாரா இல்லையா? சந்தேகம்தான்.

அவள் தான் கவனித்துக்கொண்டிருக்கும் போதே வளர்ந்தாள்; பெண்ணானாள்—யுவதியானாள். ஆனால் எல்லாம் ஒரே பாலைமயம். வாழ்க்கை எங்கேயும் நான்கு பச்சை கிடையாது. குடிநீர்ச் சுனை காணோம். மேலே கொளுத்தும் சூரியன்; காலடியில் கருக்கும் சுடுமணல். அவள் உள்ளம் உடல்...ரோமம் ரோமமாகப் பற்றி எரிந்தது. இந்தச் சூடு, இந்த விஷக்காற்று, வாழ்க்கைக்கொடி கசங்கிற்று, கருகிற்று—ஒரு நாள் இப்படியே கண்ணை மூடவேண்டியதுதான்.

அந்தச் சமயத்தில்தான் ஒருநாள் அவள் சின்னம்மா அவளைப் பட்டணத்துக்கு வெளியே தயாராகிவரும் புது ஊருக்கு அழைத்துச் சென்றாள். புது ஊர் குடித்தவன் கனவைப்போல அங்கங்கே வீடுகளும் காலி மனையுமாய், செங்கல் அடுக்கும் சுண்ணாம்புக் குவியலுமாய்த் தோற்றம் தந்தது.

இதற்கு முன் ஓரிரு முறை அங்கே வந்திருக்கின்றனர். ஆனால் அப்பொழுதெல்லாம் விட இப்பொழுது அங்கே அதிக நடமாட்டம் இருந்தது. மின்சார விளக்குகள், கழிவு நீர் ஏற்பாடுகள்—எல்லாம் ஊருக்கு உயிரையும் உயிருக்கு அழகையும் தந்து கொண்டிருந்தன.

அங்கே குடியிருந்தவர்களுள் ஒரு கவியும் இருந்தான். பருமனில்லாத அழகிய உடற்கட்டு, கோதுமை நிறம், பெரிய சுருண்ட மயிர்க் கற்றைகள், மதர்த்த கண்கள் அவைகளைக் காப்பாற்றும் மூக்குக் கண்ணாடி அவன் அவர்களுக்குத் தவறாமல் ஏதாவது பிச்சை கொடுத்து வந்தான்.

அன்று கவி மிகவும் பசுமையில் இருந்தான். உள்ளம் மழைக் காலக் குளத்தைப்போல நிரம்பி

அலை அடித்துக்கொண்டிருந்தது. அன்று அவன் அவர்களை விசாரித்தான்—என்ன சௌக்கியமா? என்று.

பெண்ணின் சின்னம்மா இந்தக் கேள்விக்குக் காத்திருந்தவள் போல் ஆரம்பித்தாள்.

'பிச்சைக்காரிக்கு என்ன சுகம் சாமி! சம்பாதிக்கிறவரு சுரமாப் படுத்துக்கிட்டாரு—நாங்கள் இப்படி பிச்சை வாங்கிக்கிட்டுத் திரியறோம்! ஊரும் புதுசுங்க—யார்தான் வேலை கொடுப்பாங்க!'

கவியின் முகம் வெயில் காலக் குட்டை போலச் சுண்டிவிட்டது. உள்ள உவகை வெண் மேகம் சிதறுவது போல் சிதறி மறைந்து விட்டது. மனது தயவினால் நிரம்ப அவன் ஒரு ரூபாயை எடுத்து அவர்களிடம் கொடுத்தான். ரூபாயைக் கொடுக்கும்போது ஏனோ அவனுடைய கண்கள் அந்தப் பெண்ணுடைய முகத்தில் தங்க ஆசை கொண்டன. ஆனால் விளையாட்டில் லயிக்க விரும்பும் பையனை உபாத்தியாயர் குரல் வெளியேற்றுவது போல் ஏதோ ஒன்று அவன் கண்களை அகற்றிவிட்டது.

அந்தப் பறந்த பார்வையே அவள் உள்ளத்தைத் தொட்டு எழுப்பிவிட்டது. எவ்வளவோ பேர் பார்த்திருக்கிறார்கள் அவளை; எவ்வளவோ முறை பார்த்திருக்கிறார்கள் அவளை. அந்தப் பார்வைகளில் இந்த ஈரம், இந்த இன்பம் இருந்ததாக அவள் கண்டதில்லை. தங்கு தடை, சங்கோசம் தயக்கமின்றி முகத்திலிருந்து கால்வரை நின்று நின்று சுவைக்கும் அந்தப் பார்வைகள் எங்கே? பின்னால் வருபவருக்கு இடம் கொடுக்க நகரும் டிக்கட் வாங்கிய பிரயாணி போல் ஒதுங்கிய இந்தப் பார்வை எங்கே? ஆணவமும் ஆசையும் கொண்டு நாக்கு நீட்டியலையும் நாயொத்த அந்தப் பார்வைக்கும், வீணாசையோ ஆணவமோ அற்ற இந்த அமுதப்பார்வைக்கும் எவ்வளவு மாறுபாடு? அந்தப் பெண்ணின் கண்கள் நன்றியால் நிறைந்தன.



அவளுக்குச் சிற்றப்பனும் இல்லை, அவன் வியாதியாயுமில்லை. சின்னம்மா இப்படிக் கதை கட்டிப் பழகியவள். அவள் கட்டும் கதைகளுக்கு ஓர் எல்லையே கிடையாது. ஆளுக்குத் தகுந்த ஒரு கதை, தனியான கதை—பூகம்பத்தில் வீடு விழுந்த கதை; பஞ்சத்தால் பரதவித்த கதை, பலமாதிரி கதைகள். வெள்ளத்தில் கொள்ளைபோன கதை, கணவன் வியாதியானது, கணவன் காலன்வசமானது, கேட்டுக்கேட்டு அவளே ஆச்சரியப்பட்டிருக்கிறாள். சிலசமயம் அவள் அந்தக் கதைகளுக்கு உண்மைத் தோற்றம் தரும்வகையில் சாக்ஷியும் சொல்லியிருக்கிறாள்.

ஆனால் கவியின் வீட்டுக்கு வரும் போது மட்டும் அந்தப் பெண் பின்னாலேயே நிற்பாள். சின்னம்மா பிச்சை கேட்பாள், கேள்விகளுக்குப் பதில்சொல்வாள், கதைப்பாள்; கேட்டுக் கொண்டே நிற்பாள் பெண். சிலசமயம் தானே பேசவேண்டும் என்று அவள் ஆசைப் பட்டதும் உண்டு. ஆனால் ஏனோ அவளால் பேசமட்டும் முடிந்ததில்லை.

ஒரு நாள் கவி ஒரு வேண்டுகோள் விடுத்தான்—இதோபார். நீயாவது இந்தப் பெண்ணாவது தினம் வந்து ஏதோ கொஞ்சம் வேலை செய்யுங்களேன்; கூட்டிப்பெருக்கி, வேஷ்டி துவைத்துப்போட்டால் போதும். எனக்கும் உபகாரமாயிருக்கும். உங்களுக்கும்......என்று சொல்லி நிறுத்தி மீண்டும் சொன்னான்.

'உனக்கு ஒரு கால் வீட்டுக்காரரைப் பார்த்துக் கொள்ளவேண்டியிருக்கும். இந்தப் பெண்ணைத் தான் வரச்சொல் முடியுமானால்'. சின்னம்மாவுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது.

'எல்லாம் உங்கள் தயவு சுவாமி. இந்தக் குட்டியையே அனுப்பி வைக்கிறேன். நானே வருவேன். நீங்கள் சொன்னாற்போல அவரு உடம்பு நல்லாயில்லை பாருங்கள்! எல்லாம் உங்கள் புண்ணியம் தான் சாமி! உங்களுக்குச் செய்யறத்துக்கு என்ன?'

எவ்வளவோ முறை உலகிலேயே இல்லாத ஒரு சிற்றப்பாவின் பொய் வியாதியின் கதையைக் கேட்டு அந்தப் பெண் ஆத்திரப்பட்டிருக்கிறாள். ஏனோ இன்று மாத்திரம் அந்தக் கதை அவளுக்கு ஆனந்தமாய் இருந்தது' அந்த ஆனந்தம் அவள் உடலில் பரவுவதைப் பார்த்துப் பூரித்துப் போகு முன்னமேயே சின்னம்மா, 'ஏ ராஜாத்தி, இங்கேவா!' என்று அழைத்து அடிவேரையே அறுத்து விட்டாள்.

ராஜாத்தி முகத்தில் வெட்கம் படர்ந்தது. கண்கள் தலை குனிந்தன. நடக்கும்போது உடலில் ஒரு ஆட்டம் ஏற்பட்டது.

ராஜாத்திக்கு இது தான் முதல் தடவை

இந்த அனுபவம்—அவள் தனக்குள் இந்த மாதிரி ஒரு விசித்ர அனுபவம் ஒளிந்திருந்ததை இன்று தான் அறிந்தாள்.

'ராஜாத்தி, தினம் வந்து இந்த ஐயாவுக்குக் கொஞ்சம் நேரம் வேலை செய். நான் வர முடியாது. நீயே வருகிறாயா? போ இன்றே. ஆரம்பித்துக்கொள் வேலையை.'

எட்டணாவை வாங்கிக்கொண்டு ஆசீர்வாதத்தை எல்லாம் கூட்டி எடுத்து அந்தக் கவி மேல் கொட்டிவிட்டு, சின்னம்மா போய் விட்டாள். ராஜாத்தியும் விளக்குமாற்றை எடுத்துக்கொண்டு கூட்டிக் குப்பையைச் சேர்க்க ஆரம்பித்தாள். அவள் உள்ளமும் மனத்தின் மூலையிலுள்ள பல வண்ணம் தெரியாத எண்ணங்களையும் உருத்தெரியாத உணர்ச்சிகளையும் கூட்டிச் சேர்த்துக் குவித்துக்கொண்டிருந்தது.

கவி நாள் பூராவும் படிப்பான்; நாள் பூராவும் கவிகள் கட்டுவான். கவி கட்டும்போது அவன் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டான். வேலை செய்யும்போதே ராஜாத்தி அவனைப் பார்ப்பாள். பாட்டு எழுதி அதை அவன் உரத்த குரலில் எடுத்துப் பாடுவான். அந்தச் சமயம் வெற்றியின் கனி அவன் உதடுகளில் புன்னகையாக மாறித் தவழும். ராஜாத்தி அதைப் பார்ப்பாள். அவள் உள்ளத்தில் ஏதோ ஒன்று எதையோ ஒன்றை எடுத்து, எதையோ ஒன்றை எழுதிவைக்கும், அவள் உள்ளம் நெகிழ்ந்து இடம் கொடுக்கும். ஒன்றும் புரியாது. ஆனால் பாட்டுக்கு உள்ளம் படாத பாடுபடும். அவள் இதயத்தில் ஏதோ ஒரு பகுதி அர்த்தமில்லாமல் முணகும். சில சமயம் கவி அவளைப் பார்த்தும் விடுவான். அந்தச் சமயம் ராஜாத்தியின் முகத்தை உள்ளிருந்தோ வெளியே ஆகாயத்திலிருந்தோ வந்து ஒரு செம்மை கவிந்துகொள்ளும்!

ஜனவரி மாதம் வந்தது. மழை இல்லை. ஒரு வறட்டுப் பனி கவிந்தது. அது கவிக்குத் தொந்தரவை விளைவித்தது. ஏதோ சளிக்கட்டுடன் கவி படுத்துவிட்டான்.

'இதோ பார் வனரோஜா! சற்று 'போனை' எடுத்து மூன்று ஆறு ஒன்பது நம்பர் டாக்டருக்குச் சொல்!' என்று உத்தரவிட்டான் கவி. அவன் அவளை வனரோஜா என்று தான் அழைத்துவந்தான்.

டாக்டர் வந்தார். முகத்தில் சற்றுக் கலவரக் குறியுடனேயே, ஐயோ 'இது நிமோனியா வாயிற்றே. ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமே!' என்றார். அவர் என்ன செய்ய முடியும். மருந்தை அனுப்பிவைத்தார்.

ராஜாத்தி, அதுதான் வனரோஜா, நாள் பூராவும் கவியின் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருந்தாள். இரவைப் பகலாக மாற்றினாள். நிமிஷங்களை எல்லாம் கவலையாக மாற்றினாள். உடலை யந்திரமாக ஆக்கிக்கொண்டாள். உள்ளத்தைப் பிரார்த்தனையால் நிரப்பிக்கொண்டாள். கவியைப் பற்றிய கவலையைத் தவிர வேறொன்றையும் எண்ணாதவளாய் வனரோஜா வாடினாள்.

இந்தக் கவி யார்? அவருக்கு உற்றார் உறவினர் ஒருவரும் இல்லையா? இவர் ஏன் தனியாகவே இருந்து காலம் கழிக்கிறார்...என்றெல்லாம் பல கேள்விகள் அவள் உள்ளத்தில் எழும். சரிதான். அவரும் நம்மைப்போல்தான் போலிருக்கிறது.



நாம் பிச்சை எடுத்து வாழ்கிறோம். அவருக்கு எங்கிருந்து தான் பணம் வருகிறதோ என்று சமாதானம் செய்து கொள்வாள்.

இந்தக் கவி எவ்வளவு நல்லவர். இவ்வளவு நாளாக அவள் தனிமையில் தானே இருக்கிறாள். ஒரு கணமாவது கவி அசட்டுத்தனமாக நடந்து கொண்டது கிடையாது. கவிதை எழுதுவதைத் தவிர வேறு ஒன்றும் அறிய மாட்டார் போலும். ஏதோ அலுவலில் களைத்த உள்ளம் தனியே இருக்க விரும்பி வந்தார் போலும்! அவள் அவனுக்கு ஏற்பட்ட குறையை எல்லாம் நிவர்த்தி செய்ய விரும்பினாள்.

சின்னம்மா அந்த மாதத்துச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டாள். இறைமும் கிடைத்தது. ஆனாலும் ராஜாத்தி தனக்கென்று ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. அவள் உடையைக் கிழிசலும் அழுக்கும் போட்டிப் போட்டுக் கொண்டு ஆக்ரமித்துக் கொண்டிருந்தன. அவளுக்கு வேறு புடவை வேண்டியிருந்தது. அவள் வாங்கிக்கொள்ளவில்லை. தன் சாப்பாடு, தன் உடை, தூக்கம் எதையாவது அவள் கவனித்தால் தானே!

ஒன்றரை மாதம் சென்று கவி எழுந்தான். ராஜாத்தியைக் கவனித்தான். அவள் பல நாளாகக் கண் விழித்தவள்; கவலைப்பட்டவள். உடல் வெளுத்துக் கண்கள் குழி விழுந்து இளைத்து விட்டாள். ஆனாலும் கவி எழுந்து விட்டான் என்றதால் ஏற்பட்ட ஆனந்தம் அவளைத் தாங்கி நின்றது.

அவள் வீட்டுக்குக் கிளம்பினாள்.

கவி தடுத்து நிறுத்தினான். 'வனரோஜா! நீ இல்லாவிட்டால் நான் பிழைத்திருக்கமாட்டேன் நான் உனக்கு என்ன பதில் செய்யப் போகிறேன்...!'

ராஜாத்தியின் உதடுகளை ஒரு புன்சிரிப்பு ஏற்றுக்கொண்டது. கண்களை ஒரு தெளிவில்லாத பாவம் கௌவிக்கொண்டது. அவள், 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் எழுந்தது போதாதா?' என்று எப்படியோ சொல்லி விட்டாள்.

அன்று சின்னம்மா வந்தாள். 'எனக்கு இன்னும் உடம்பு சரியாகவில்லை. அதற்குள்ளாகவா ராஜாத்தியை அழைத்துப்போகிறாய்?' என்றான் கவி. சின்னம்மா—'அது என்ன சாமி! அப்படிக் கேட்கிறே. எவ்வளவு நாள் வேண்டுமானாலும் ராஜாத்தி இங்கே இருக்கட்டுமே!' என்றாள் அவள்.

அன்று கவி அவளிடம் நாற்பது ரூபாய்களைக் கொடுத்தான். 'ராஜாத்திக்குப் புதுப்புடவையும் ரவிக்கையும் வாங்கித்தா!' என்று கேட்டுக் கொண்டான். பிறகு தான் வேறு அவளுக்கு நல்ல துணி வரவழைத்துக் கொடுத்தான்.

ராஜாத்தி வந்து ரொம்ப நாளாகிவிட்டது. கவிக்கு ஊழியம் செய்யாமல் அவள் இருக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டாள். அவனுக்கும் அவள் இல்லாது போனால் வாழ்வு சிதறிவிடும் என்ற நிலை வந்துவிட்டது.

மாதம் ஒருமுறை கவிக்கு முந்நூறு ரூபாய் மணியார்டர் வந்தது. எங்கிருந்துதான் வந்ததோ? யார் அனுப்பினார்களோ? அவள் அறியாள். கேட்கவும் அவள் துணியவில்லை. பெரிய பேச்சு, அவளுக்கு எதற்கு?

நாளாக நாளாக அவள் கவியினுடைய பல தேவைகளைப் பூர்த்தி செய்யக் கற்றுக் கொண்டாள். ஏற்கனவே தொட்டால் என்ன ஆகுமோ என்ற பயத்தை ஊட்டிய பொருள்கள் எல்லாம் இன்று அவள் எடுத்து ஆண்டு பழகிய பொருள்களாகிவிட்டன. சம்பளத்தை எல்லாம் அவள் தன் சின்னம்மாவிடம் கொடுத்துவிட்டுக் கொஞ்சம் சேர்க்கவும் ஆரம்பித்தாள். ஐம்பது ரூபாய்கள்வரை சேர்த்தும் விட்டாள். நாளாக நாளாக ஒரு புறம் சங்கோஜம் தீர்ந்து பழக்கம் ஏற்பட்டு, சந்தோஷம் அதிகரித்து வந்தது. பாசி நீங்கிய நீர்போல் மனம் தெளிந்து, சூடுண்ட பால்போல் உவகை பொங்கி வந்த போதிலும் ஏதோ ஒரு வேதனை கலக்குவதை அறிந்தாள். பாசி நீங்கிய குளத்தில் தாமரை படரவில்லை! நீர்வற்றிய பாலில் இனிமை ஏறவில்லை. இது ஏன்? அவளே அறியமாட்டாள்.

இப்பொழுது எல்லாம் இரவுகளில் அவளுக்குத் தூக்கம் வருவதில்லை. கவியின் அறையில் நேரம் சென்றும் விளக்கு எரிவதைக் கவனிப்பாள். விளக்கு அணையும், கண்ணை மூடுவாள். ஆனால் தூக்கம் மட்டும் வராது. எங்கிருந்தோ எரியும் ஒரு உஷ்ணம் நெருங்கிவரும். அவள் உடல் உள்ளம் எல்லாம் பற்றி எரியும். என்ன அவளே சூட்டுப் பிழம்பாக மாறி எரிய ஆரம்பித்து விடுவாளா?

சிலசமயம் அவள் உள்ளத்துக்குக் கவியுடைய காலடி மெதுவாகக் கேட்கும். திடுக்கிட்டு எழுவாள்; கவியை எதற்காகவோ எதிர்பார்ப்பாள். பிடியில் அடங்காத ஒரு ஆவல் எகிறிக் குதிக்கும். அவிக்க முடியாத ஒரு சூடு உள்ளத்தைப்பற்றி எரிக்கும். கவி வந்தால் அணைந்திருக்குமோ என்னவோ, கவி வரமாட்டான்.

அன்று நடக்காதது, நடந்தது. மாலை நேரம். பௌர்ணமி தினம். சந்திரன் காதலில் விளைந்த குழந்தை போல் அழகு பெற்று மேலேறிக்கொண்டிருந்தான். மரங்கள் கிளைகளின் இடுக்கின்மூலம் அவனைப் பார்த்து மனம் பொங்கிக்கொண்டிருந்தன.

கவி வனரோஜாவின் அறை வாசலுக்கு வந்தான். வனரோஜாவைக் கூப்பிடவும் கூப்பிட்டானே! வனரோஜா! வருகிறாயா? யமுனைக் கரைக்குப் போய் வரலாம். போக வேண்டும் போலிருக்கிறது!'

ராஜாத்தியின் உள்ளத்தில் சங்கீதம் ஆனந்தராகம் பாடிற்று. உதடு அதைப் புன்னகையாக மாற்றி ஏற்றது. அறையின் சுவர்களே அந்தச் சங்கீதத்தில் மெய்மறந்து நின்றன.

இரவு நேரம். யமுனையின் குளிர்ந்த கரை. அதன் உள்ளத்தில் சந்திரனுடைய பிரதிபிம்பமும் அதைச் சூழ்ந்த நிலாவொளியும் பாயல் பிரித்துப் படுத்திருந்தன. ராஜாத்தி மனம் புது மணப் பெண்போல் எதையோ எதிர்பார்த்துக் கனிந்து கொண்டிருந்தது. ஆனால் கவியோ எங்கோ தன்னை இழந்து விட்டான். சந்திரன், அவன் நிலவு, அவன் ஒளியைத் தன் உள்ளத்து ஒளிக்க முயன்று ஏமாந்து ஓடும் யமுனை எதிலோ அவன் உள்ளம் மாட்டிக்கொண்டு விட்டது.



ராஜாத்தி தூக்கம் இன்றிக் கழித்த இரவின் முடிவில் தளரும் உள்ளம்போல் துவண்டாள். அந்தச் சமயம் கவி திரும்பினான் அவள் பக்கம். கொடி மீண்டும் பசுத்தது.

ஆனால் கொட்டும் மழையைக் கொடியின் வேர் எதிர்பார்க்க, கொடியின் நுனியில் ஒரு தூற்றல் மட்டுமே விழுந்தது.

'வனரோஜா! உனக்குப் பாட வருமா?'

ராஜாத்தி சற்றுநேரம் மௌனமாக இருந்தாள். குளிர்ந்த காற்று அடிக்க, குயில் கூவ, உள்ளம் கதவு திறந்து பாவாடை விரித்து ஏங்கி எதிர்பார்க்க............அவள் ஆத்திரப்பட்டாள். ஆனால் அதை மறைத்து,

'பாடவா? நான் என்ன கண்டேன்...?' என்றாள்.

'பரவாயில்லை பாடு.........!'

அவள் மீராவின் பாடல் ஒன்றைப் பாடினாள். பிச்சைக்காரர்கள் கூட மீரா சூர்தாஸ் போன்ற பக்தர்களின் பாடல்களை வரப் பண்ணிப் பாடும் பண்பாடு படைத்த நாடுதானே இது! இப்பொழுது தான் கர்ண கடூரமான சினிமாப் பாடல்கள், விஷம் கக்கும் அரசியல் பாடல்கள், பொறி தெறிக்கும் சமூகப் பாடல்கள்—நாடு போன பாடு தான் என்னே!

அவள் பல பாடல்கள் பாடினாள். 'என் மனதை அறிய மாட்டாயா!' என்ற பொருள் தரும் பாடல்களிலும் பல பாடினாள். கவி பாட்டைக் கேட்டான். பாட்டிலே தன்னை மறந்தான்.

நேரம் கழிந்தது. இரவும் ராஜாத்தியைப் போல் ஏங்கித் தேய்ந்தது.

கவி அவளை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

வந்து படுத்தாள் ராஜாத்தி. உடல் களைத்திருந்தது. தூக்கம் வரவில்லை. உள்ளத்தை ஒரு ஏமாற்றம், சங்கடம், உணர்வின் எரிச்சல் நம நம என்று அரித்து எடுத்தன. தூக்கம் வரவில்லை. தொண்டை வறண்டது. மண்டை இடித்தது.

மறு நாள் கவி சொன்னான்:

வனரோஜா! பார்த்தாயா! நான் இயற்றியிருக்கும் கவிதையை!

டீத் தட்டை மேஜையின் மேல் வைத்துவிட்டு ராஜாத்தி தலையைத் தூக்கினாள். கவியின் மனதில் அவள் உள்ளத்திலிருந்து ஓடி ஒளிந்த ஆனந்தம் எல்லாம் பரவிப் பாய்ந்து கொண்டிருந்தது. அவள் உள்ளம் சூனியமாயிருந்தது. அதை அறியாத கவி தன் கவிதையை வாசிக்க ஆரம்பித்தான்.

கவிதையா அது.

இரவின் அழகு, அலையின் நிருத்தியம், ஆற்றின் கரை, சந்திரன், சந்திரவதனியின் அருகே இருப்பதால் ஏற்படும் போதை எல்லாவற்றிற்கும் கவிதை என்ற ஆசீர்வாத வரத்தினால் அமரத்தன்மை தந்திருந்தான் கவி. ஏதோ பெரிய உண்மையைக் கண்டவன் போல் அவன் பாடினான். அவள் அந்தப்

பாண்டத்தைத் தட்டிக் கொட்டிப் பார்த்தாள். உள்ளே ஒன்றுமில்லை. அவள் பாணியில் அரிசி தேடத் தடவி, ஒன்றையும் காணுத ஏழைக் குடுத்தனக்காரி போல விழித்தாள்.

அவன் நிறைந்த உள்ளம் எதிராளியின் உள்ளத்தில் சூனியத்தைக் கவனிக்க இயல வில்லை. அவன் சொன்னுன்:

வனரோஜா! நான் உன் மேல் தான் இந்தக் கவிதை எழுதியிருக்கிறேன். நீ என்னிடமே இருந்துவிடு. எனக்குக் கவிதைத்தேவி அருள் புரிந்து விடுவாள்.! உன்னைப் பார்த்தாலே கவிதை பேசத் தொடங்கி விடுகிருள்.

ராஜாத்தி விழித்தாள்—பல்லைக் கடித்துக் கொண்டு 'அதற்குத்தானு என்னை இங்கே விடாமல் வைத்துக்கொண்டீர்கள்?' என்று கேட்டாள்.

அவனுக்கும் அந்தக் கேள்வியின் கருத்துப் புரியவில்லை. அவளுக்கும் கவியின் மனேதத்து வம் புரியவில்லை.

கவி கீழுலகத்துக்கு இறங்கினுன்—கேள்விக்கு மட்டும் பதில் தெரியவில்லை.

'சரி, டீயைக்குடி. குளிர்ந்துவிட்டது!' என் ருள்.

இதோ வந்தேன்! என்று போனவள்தான் வனரோஜா.

பதினைந்து நிமிஷம் சென்றும் திரும்பி வர வில்லையென்று கண்டவுடன் கவி உள்ளே சென்ருன்.

அங்கே ராஜாத்தியின் புதுப்புடவை இருந் தது. அதன் பக்கத்தில் ஐம்பது ரூபாய்கள் அவள் உள்ளம்போல் சிதறிக்கிடந்தன.

ஆனல் அவன் வனரோஜாவை மட்டும் காணேம்!




இலவசம்

எங்களுடைய ரிஜிஸ்டர் நெம்பர் 501 **கருமயிர் கூந்தல் தைலம்** எந்தவித மான கூந்தலையும் கரு நிறமாக்கும். என்றும் கருநிறமாகவளர, சக்தியைக் கொடுக்கும். மயிர் உதிர்வதை நிறுத்தும். நீண்ட கூந்தலையும் சுருள் கூந்தலையும் கொடுக்கும். ஒரு புட்டி விலை ரூ 2–8–0. ஒரு மண்டலத்துக்கு வேண்டிய மூன்று புட்டி வாங்குவோருக்கு மொத்த விலை ரூ. 6–8–0 இந்த தைலத்தைப் பிரஸித்தம் பண்ணுவதற்காக ஒரு புட்டி வாங்குவோருக்கு ஒரு கைகடிகாரமும் புதுத் தங்கத்தில்செய்த ஒரு மோதிரமும் இனமாகக் கொடுக்கப்படும். கை கடிகாரத்தின் அழகுக்கும், உறுதி உழைப்புக்கும் 15 வருடம் காரண்டி கொடுக்கப்படும். 3 புட்டி வாங்குவோருக்குக் கடிகாரம் 6, மோதிரம் 6 இலவசம். பிடிக்காவிட்டால் பணம் வாபஸ் செய்வோம். இன்றைக்கே ஆங்கிலத்தில்எழுதி வி. பி. மூலமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**இது உங்களுடையது!**



**இந்த ரேடியோ பாட் டரி அல்லது எலக்டிரி சிடி இல்லாமல் சுத்த மாய் கணீரென்று கேட் கும். எங்கள் கம்பெனி பிரபல மடைவதற்காகக் குறைந்தவிலையில்கொடுக் கிறேம். நெ. 555 விலை ரூ. 5/-ஸ்பெஷல் நெ. 666 ரூ. 7–8–0 ஸ்பெஷல் டிலக்ஸ் நெ. 777. 9/8 போஸ் டேஜ் ரூ.2–8–0 முழுத்தொகை முன்பணம் அனுப்பு வர்களுக்குப் பாக்கிங் போஸ்டேஜ் இனம்.**

**ரூ. 5-க்கு 15 ஜுவல் கைக்கடிகாரம்.**



**15 ஜுவல் கைக்கடிகாரமும் அழ கிற்கும், உறுதிக்கும், 15 வருட உத்தரவாதமுள்ள ஒரு பௌண்டன் பேனவும் ரூ. 5-க்கு தேவையா? உடனே எழுதுக**

**INDO BRITISH COMMERCIAL COMPANY, (C.M K.) HALKA No. 22 MEERUT (U.P)**


Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# 14 நாட்களில் மக்ளீன்ஸ் உதவியால் அதிக வெண்மையான பற்கள்



**இந்த 14-தின பரீக்ஷையை செய்து பாருங்கள்**

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை எவ்விதம் பற்களை அதிக வெண்மையாக்குகிறது என்பதை, நீங்களும் உபயோகித்து உணருங்கள். இதை உறுதியாகக் கொள்ளுங்கள்—பிரதிதினமும்—தினசரி இருமுறை உங்கள் பற்களை நன்ருக மக்ளீன் செய்யுங்கள். ஆரம்பமுதலே, மக்ளீனிலுள்ள விசேஷ பொருள்கள், மிருதுவாகவும், அபாயமில்லாமலும், உங்கள் பற்களில் உள்ள அவலட்சணமான கறைகளை போக்கி, அவைகள் இயற்கையான ஒளி வீசச்செய்வதைக் காண்பீர். 14 நாட்களுக்குள் — அல்லது அதற்கும் குறைவாகவே கூட—நீங்கள் பெருமைப் படக்கூடிய பற்களை அடைவீர்கள் — மக்ளீன் வெண்மையான பற்கள், ஆரோக்கியமான பற்கள்.

**க்ளோரோபில் சேர்ந்ததும் கிடைக்கும்.**

பற்களை வெண்மையாக்குவதில் உலகில் மிகச் சிறந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை – இயற்கை அளிக்கும் துர்க்கந்த நாசினியான க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

**MACLEANS**
peroxide **TOOTH PASTE**




MTY. 28-TAM

## மக்ளீன்ஸ்
### பெராக்ஸைட் பற்பசை
*பற்களை அதிக வெண்மையாக்குகிறது*

வியாபார விவரங்களுக்கு
ஜே. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்.
தபால் பெட்டி 6527, பம்பாய் 26. தபால் பெட்டி 387, கல்கத்தா.
தபால் பெட்டி 1370, சென்னை.




The Cauveri Colour Press, Kumbakonam.